# உலகத்
# தமிழிலக்கிய வரலாறு

(தொன்மை முதல் கி.பி.500 வரை)

முனைவர் தமிழண்ணல்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# உலகத் தமிழிலக்கிய வரலாறு

(தொன்மை முதல் கி.பி. 500 வரை)

முனைவர் தமிழண்ணல்

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம், தரமணி
சென்னை - 600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Ulaga-t-tamiḻilakkiya varalāṟu (upto 500 AD) |
| Author | : | Dr. Thamizhannal<br>Prof. & Head (Rtd.)<br>Madurai Kamarajar University<br>Madurai |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai - 600 113.<br>Ph: 22542992 |
| Publication No. | : | 489 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2004 |
| No. of Copies | : | 2000 |
| Paper Used | : | 18.6 TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | xvi + 174 |
| Price | : | Rs. 45/- (Rupees Forty five only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Chennai - 600 004 |
| Subject | : | History of Tamil Literature |

செ. செம்மலை
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

# வாழ்த்துரை

கடந்த 25 நூற்றாண்டுகட்கும் மேலாக உலகில் உயிர்த்துடிப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மிகப்பழமையான மொழி எனப் பிரித்தானியக் கலைக்களஞ்சியத்தால் பாராட்டப் பட்ட பெருமை வாய்ந்தது நம் தாய்மொழியாம் தமிழ்மொழி. உண்மையில் 25 நூற்றாண்டுக்கால இலக்கிய வரலாற்றுச் சிறப்புடையது தமிழ். அதாவது தொல்காப்பியர் காலமாகக் கருதப்படும் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு இதன் வரலாற்றுத் தொடக்கமாக உள்ளது. ஒரு மொழியின் இலக்கிய வரலாறு என்பது அதன் பெருமையை, காலந்தோறும் அம்மொழியின் வளர்ச்சியை, அதனைப் பேசும் மக்களின் மேன்மையை, தனித்துவத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டுவது.

முழுமையான இலக்கிய வரலாறுகள் பல தமிழ் மொழியில் தோன்றியுள்ளன; இன்னும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அவை தமிழகத்தை மட்டுமே மையமிட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் மொழிபற்றிக் கூறும்போது '**தமிழ் உள்ளூர் மொழி அன்று; உலக மொழி**' என்று கூறித் தாய்மொழியாம் தமிழுக்குச் சிறப்புச் சேர்த்ததற்கு ஒப்பத் தமிழ்மொழி பேசும் தமிழர்கள் உலகம் முழுவதும் பரவியுள்ளனர். அவர்கள், குறிப்பாக இலங்கை, சிங்கப்பூர், மலேசிய நாடுகளின் சிறந்த படைப்பாளராகவும், திறனாய்வாளராகவும் புகழ்பெற்றுள்ளனர். அண்டை நாடுகளில் வாழும் நமது குடும்பத்தினரின் படைப்புகளையும் உட்கொண்டு மதிப்பிடும் பொழுதுதான் தமிழ்மொழியின், இலக்கியத்தின் முழுமையான வளர்ச்சி வரலாறு வெளிப்படும்.

'உலகத் தமிழிலக்கிய வரலாற்றை' முழுமையாக உருவாக்கும் இப்பணி செம்மையாக நிறைவேறத் தமிழக, அயலகத் தமிழ் வல்லுநர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடு தேவை என உணரப்பட்டது. தமிழ் வளர்ச்சிப் பணிக்கு ஆக்கப்பூர்வமான

திட்டங்களை முன்னின்று செயல்படுத்திவரும் தமிழக அரசு, இப்பணியைச் சிறப்புற நிறைவேற்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்தான் ஏற்புடையது எனக் கருதி அதனிடம் ஒப்படைத்தது.

'உலகத் தமிழிலக்கிய வரலாறு' எண்ணியபடி முழு வீச்சில் நிறைவேற, அண்டைப் பகுதித் தமிழ் வளத்தை அவர்களைக் கொண்டே எழுதவைக்க வேண்டும் என்ற கருத்து உருவாகியது. அதன்படி தமிழகம் சார்ந்தவற்றைத் தமிழக வல்லுநர்களும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் தமிழிலக்கிய வரலாற்றை அவ்வப்பகுதி அறிஞர்களும் எழுதும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை உரிய இடங்களில் முறைப்படி இணைக்கப்பட்டு இன்று 'உலகத் தமிழிலக்கிய வரலாறாக' உங்கள் கைகளில் தவழ்கிறது. மொத்தம் ஆறு தொகுதிகளாக வெளியிடப்படும் இந்நூல் தமிழ் ஆர்வலர்க்கும், மாணாக்கர்க்கும் மிகச் சிறந்த கையேடாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

புதியபுதிய பார்வைகளில், ஆய்வாளர் தேவையறிந்து புது நூல்களைப் படைப்பதில் எப்பொழுதும் முன்னிற்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இப்பொழுது 'உலகத் தமிழிலக்கிய வரலாறு' படைத்துச் சாதனை புரிந்துள்ளது.

இது போன்ற சிறந்த செயன்மைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் **மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு நன்றியறிதலைப் பதிவு செய்கிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு என் நல்வாழ்த்துகள்.

3/5/04

சென்னை 600 009
நாள் : 31·5·2004

செ. செம்மலை

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - *600 113*

# அணிந்துரை

இலக்கியம் ஒருநாட்டின் சுயசரிதை என்பர் திறனாய்வாளர் அட்சன். இலக்கியம் ஒரு சமுதாயப்படைப்பாக எண்ணப்பெறுதலின் மக்கள் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரு சமுதாயத்தின் பண்பாடு, வாழ்வியல், தகவுகள், நம்பிக்கைகள், வரலாறு என்பனவற்றை அறிந்துகொள்ளுதற்கு இலக்கியம் அடிப்படை ஆவணம் ஆகும்.

தமிழிலக்கியம் உலக இலக்கியங்களுடன் ஒப்பவைத்து எண்ணும் அளவிற்குக் கருத்துவளமும் கற்பனைத்திறமும் வாய்ந்தது. உலகத்தமிழ் என்ற கோட்பாடு அண்மைக் காலத்தில் அறிஞர்களிடையே வளர்ந்து வந்துள்ளது. தமிழ் வழங்கும் நிலப்பகுதியைத், "தமிழ்கூறும் நல்லுலகம்" என்று தொல்காப்பியப் பாயிரம் சுட்டுகின்றது. தமிழகத்தின் அகப்பாட்டெல்லை, புறப்பாட்டெல்லைகளை இளம்பூரணர் பாயிர உரையில் தெளிவுறுத்தியுள்ளார். இந்தியநாட்டில் தமிழகம் மட்டுமன்றி வேற்றுமாநிலங்களில் விளங்கும் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் தமிழ் கற்பிக்கப்படுவதுடன், தமிழியல் ஆய்வுகளும் அறிஞர்களால் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. தமிழகத்திற்கு அடுத்த நிலையில் அண்டை நாடாகிய இலங்கையில் இலக்கியப் படைப்புகள், பதிப்புகள், ஆய்வுகள் நன்முறையில் நடைபெற்றுவருதல் இங்குக் குறிப்பிடத்தக்கது. தமிழர்கள் பரவலாக வாழும் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகக்கல்வி வரை தமிழ் பயிலப் பெறுதலுடன் தமிழியல் ஆய்வுகள் நிகழ்த்தப்பெற்று வருகின்றன. உருசியா, சப்பான், ஐரோப்பா, அமெரிக்கா முதலிய உலக நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழிக்குத் தனி இருக்கைகள் விளங்குவதுடன் தமிழியல் ஆய்வுகள் சிறப்பாக நடைபெற்று வருதல் சுட்டத்தக்கது. இந்நிலையில், இந்திய மொழிகளில் தமிழ்மொழிக்குத்தான் முதன்முதல் உலகளாவிய நிலையில் மாநாட்டுக் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன என்ற உண்மையும் எண்ணற்பாலது.

எனவே, உலகத்தமிழ் எல்லை கடந்து ஞாலப்பொதுமை வாய்ந்ததாய் யாவராலும் விரும்பிப் பயிலப்பெறும் தகுதியும் வளமும் வாய்த்துள்ளமை எண்ணி மகிழத்தக்கது. இச்சூழலில், "உலகத்தமிழிலக்கிய வரலாறு" துறைவல்ல பேராசிரியர்களைக்கொண்டு பலதொகுதிகளாக எழுதி வெளியிடுதல் வேண்டும் என்ற திட்டத்திற்கு அரசு நல்கை வழங்கியது;

இத்திட்டத்தினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இவ்வரிசையில் தொன்மை முதல் கி.பி. 500 வரை என்ற காலப்பகுதிக்குரிய இலக்கிய வரலாற்றை இந்நூலில் காணலாம். அரசியல், சமுதாயம் என்ற பின்புலத்துடன் (Back-ground) திறனாய்வு நோக்கில் இவ்வரலாறு சிறப்பாக எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. முன்னுரை உள்ளிட்ட 14 இயல்களில் அமைந்துள்ள இந்நூலில் பல்வேறு கருத்துகள் ஆய்வு நோக்கில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. கால வரிசையில் பழந்தமிழ் இலக்கிய வரலாற்று நிலை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. சங்க முற்காலம், இந்தியத் தமிழகம், தமிழும் தொன்மையும், தமிழும் தமிழ் இலக்கியமும், தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், முத்தொள்ளாயிரம், வச்சிரநந்தியின் திரமிள சங்கம் என்ற இயல்களில் இலக்கிய வரலாற்றுத் தரவுகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. சீரிய ஆய்வு நோக்கில் இவ் உலகத் தமிழிலக்கிய வரலாற்றை எழுதியவர் பேராசிரியர் முனைவர் தமிழண்ணல் அவர்கள். தேர்ந்த தமிழ்ப்புலமையும், தோய்ந்த தமிழ் ஆர்வமும் மிக்கவர். மரபிலக்கணம் மற்றும் சங்க இலக்கியப் பெருங்கடலைக் கரைகண்டு உணர்ந்தவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வல்லவர். இலக்கியம், இலக்கணம், மொழியியல், திறனாய்வு, மொழிபெயர்ப்பு, ஒப்பீட்டாய்வு முதலிய பல துறைகளில் தெளிந்த அறிவும், ஆழ்ந்த ஆய்வு நோக்கும் பெற்றுப் பற்பல ஆராய்ச்சி நூல்களை உலகிற்கு அளித்தவர். இவருக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் உருவாவதற்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து ஊக்கம் அளித்த தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும், இத்திட்டச் செயலாக்கத்திற்குத் துணைநின்று ஆதரவு அளித்த வல்லுநர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப., அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப., அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளிஅச்சுக்கோப்புச் செய்த நிறுவன கணிப்பொறியாளர் திரு. ஸ். கோபிநாத்திற்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் அச்சகத்தார்க்கும் என் பாராட்டுகள்.

சென்னை இயக்குநர்

*13-4-2004*

# பொது முன்னுரை

தமிழ்ப் பயில்வின் இன்றைய உலகளாவிய நிலை, தமிழின் வளர்ச்சியிலும் பரப்பலிலும் ஈடுபாடு கொண்டுள்ள அரசு நிறுவனங்கள் மீதும், தமிழியல் அறிஞர்கள் மீதும் ஒரு பெரும் பொறுப்பைச் சுமத்துகின்றது.

உலகளாவிய நிலையில் பல்வேறு நாடுகளில், தம் மொழித் தொடர்பும், பண்பாட்டு அடையாளமும் அறாது வாழும், தமிழ் ஆர்வலர்கள், தமிழ் வழிப் படிப்போர், நமது பண்பாட்டின் ஆணிவேரான இலக்கியப் பாரம்பரியத்தைத் தமது மொழியிலேயே வாசித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவது தமிழ், தமிழியல் வளர்ச்சிக்கான நிறுவனங்களின் கடமையாகிறது.

இத்துறையில் தமிழில், இப்பொழுதுள்ள பெரும்பாலான ஆக்கங்கள், இடைநிலை மாணவத் தேவைகளையும், ஆய்வுத் தேவைகளையும் மனங்கொண்டு எழுதப்பட்டுள்ளனவாக அமைந்துள்ளன. தமிழிலக்கிய வளர்ச்சியினைத் தமிழர் உணர்வுமுறையினதும், சிந்தனைப் போராட்டங்களினதும் ஒட்டுமொத்தமான வெளிப்பாடாக அவை அமையவில்லை.

தமிழ்நாட்டிலும், தமிழ் பயிலும் நாடுகளிலும் தமிழர் வாழும் நாடுகளிலும் வாழும் தமிழ் நிலை ஆர்வலர்களின் இத்தேவையை நிறைவேற்றும் நோக்குடன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் ஆதரவுடனும், வழிகாட்டலுடனும் இதற்கான செயல்திட்டம் ஒன்றை மேற்கொண்டது.

உலகில் தமிழிலக்கியம் தோன்றும் இடங்களிலெல்லாம் காணப்படும் இலக்கிய வளர்ச்சியை, ஒரு பதிகை வட்டத்துக்குள்ளே கொண்டு வந்து, தமிழ் மக்கள் சகலரினதும் ஒட்டுமொத்தமான இலக்கிய வெளிப்பாட்டின் தொகுதியாக அதனை ஒருங்கமைத்து வெளியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன் காரணமாகத் தமிழகத்தில் மாத்திரமல்லாமல், இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும் தமிழ்க் கல்வி பயிலும் நாடுகளான இலங்கை, மலேசியா, சிங்கப்பூரிலும் இன்று தமிழன்

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தமிழிலக்கிய வெளிப்பாடு நடந்தேறியுள்ள முறைமையினை ஒழுங்குபடுத்தித் தொகுதிப் படுத்துவதற்கென முதலில் ஒரு பதிப்பாசிரியர் குழு நியமிக்கப்பெற்றது.

அக்குழு தமிழிலக்கிய வரலாற்றை எவ்வாறு ஒருங்கமைத்துக் கொள்வது என்பது பற்றியும், அதற்கான கால வகுப்புப் பற்றியும், ஒவ்வொரு காலப்பிரிவிலும் எவ்வெப்பெயர்கள் எவ்வாறு எடுத்து நோக்கப்படல் வேண்டுமென்பது பற்றியும் ஒவ்வொரு காலப்பிரிவுக்கும் யார் யார் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் என்பது பற்றியும், ஒவ்வொரு காலப்பிரிவுகளுள்ளும் வரும் தலைப்புகள் ஒவ்வொன்றையும் யார், யார் எழுதவேண்டும் என்பது பற்றியும் தீர்மானித்தது.

இதன்படிக்குக் கால வகுப்பும், பொறுப்பும் பின்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டது.

காலப்பிரிவு பொறுப்பாசிரியர்

தொடக்கம் முதல் கி.பி.*5*ஆம் நூற்றாண்டு வரை
- முனைவர் தமிழண்ணல்

கி.பி.*6* முதல் கி.பி.*9*ஆம் நூற்றாண்டு வரை
- முனைவர் சோ.ந. கந்தசாமி

கி.பி.*10* முதல் கி.பி.*13*ஆம் நூற்றாண்டு வரை
- முனைவர் அ.அ. மணவாளன்

கி.பி.*14* முதல் கி.பி.*16*ஆம் நூற்றாண்டு வரை
- முனைவர் இ. சுந்தரமூர்த்தி

கி.பி.*17* முதல் கி.பி.*1850* வரை
- முனைவர் இரா. இளவரசு

கி.பி.*1851* முதல் கி.பி.*2000* வரை
- முனைவர் ச. சிவகாமி

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் இலக்கிய வளர்ச்சிகளைத் தொகுப்பித்து வழங்கும் பொறுப்பு பேராசிரியர் கா. சிவத்தம்பிக்கு ஒப்படைக்கப்பெற்றது.

திட்டப்பணிப் பொறுப்பாளராக முனைவர் ச. சிவகாமி நியமிக்கப் பெற்றார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர் முனைவர் சசு. இராமர் இளங்கோவும் தமிழக அரசின், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்

முனைவர் ம. இராசேந்திரனும் திட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப் பெற்றனர்.

பதிப்பாசிரியர்களாக

முனைவர் தமிழண்ணல்
முனைவர் கா. சிவத்தம்பி
முனைவர் சோ.ந. கந்தசாமி
முனைவர் இ. சுந்தரமூர்த்தி
முனைவர் அ.அ. மணவாளன்
முனைவர் இரா. இளவரசு

ஆகியோர் நியமிக்கப்பெற்றனர்.

*27.2.2000* முதல் மூன்று நாட்கள் *29.2.2000* வரை இப்பணிக்கான ஒருங்குசேரல் ஒழுங்கு செய்யப்பெற்றது. தமிழகத்திலும், இலங்கை, சிங்கப்பூர், மலேசியாவைச் சார்ந்த பல்கலைக்கழகங்களிலிருந்தும் புலமையாளர்கள் வரவழைக்கப்பெற்று, எழுதுமுறை பற்றிய பல்வேறு விடயங்கள் நுண்ணிதாக ஆராயப்பெற்றன. பேராசிரியர் தமிழண்ணல் ஒருங்கு சேர்கையை வழி நடத்தினார். அதன் இறுதியில் எழுது பணியைத் தொடங்கி ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பு பொறுப்பாளர்களுக்கு வழங்கப் பெற்றது.

அந்நிலையில், எழுதப்பெறும் இலக்கிய வரலாறு ஒரு தொகுதிக்குள் அடங்குவதாயின் நன்றாக அமையும் என்ற கருத்து ஏற்கப்பட்டிருந்தது.

பின்னர், எழுத்துப்பணி தொடங்கியதும், ஒவ்வொரு காலப் பிரிவினதும் முழுமையானத் தமிழ் உயிர்ப்பினையும், அவ்வப்பிரிவுகள் பற்றிய ஒட்டுமொத்தமான பார்வையையும் கொண்டு வர வேண்டு மென்பது பதிப்பாசிரியர் குழுநிலையிலே ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் காரணமாக முன்னர்க் கருத்திற்கொண்டிருந்த அளவிறுக்கத்தைத் தளர்த்துவதென்றும் முடிவு செய்யப்பெற்றது.

இந்த அடிப்படையில் பணி தொடரப் பெற்று, இப்பொழுது இறுதி நிலையை அடைந்துள்ளது.

இந்நிலையில் ஒவ்வொரு காலப்பகுதியும் ஏறத்தாழ *250-300* பக்கங்களுக்கான தரவுகளையும் விளக்கங்களையும் கொண்டிருப்பது தெரிந்தது. தமிழகத்தின் ஆறு காலப் பிரிவுகளுக்கும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூரின் இலக்கிய வரலாற்றுப் பதிவுக்கும், இந்நிலையில் *1500-1700* பக்கங்கள் தேவைப்படும் என்பது புலனாயிற்று.

எழுதப்படுபவை மேலோட்டமான சுருக்கங்களாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காகவும், வழங்கப்படும் வரலாறு தமிழ்ப் பாரம்பரியத்தின் ஓட்டத்தினை உணர்த்துவதாக அமையவேண்டும் என்பதற்காகவும், நூல் முழுமையையும், ஒரேயொரு தொகுதியாக வெளியிடுவதன் பொருத்தப்பாடு பற்றி மிகவும் விரிவாக நோக்கப்பெற்றது. ஏறத்தாழ *1500* பக்கங்கள் கொண்ட ஒரே தொகுதியாக நூலை அமைக்கும்பொழுது, அதன் அமைப்பும், தன்மையும் அதனைக் கலைக்களஞ்சியப் பாங்குக்குள்ளாக்கி, முதனிலை நோக்கமான அறிமுக உந்துதல் ஓரங்கட்டப்பட்டு விடுமோ எனும் அச்சமும் தெரிவிக்கப்பட்டது.

இப்பின்புலத்தில் உன்னிப்பான, சீர்தூக்கு நோக்கினிறுதியில், எழுதப் பெற்றுள்ள முழுவதையும் ஒரு பெரும் நூலாக வெளியிட்டு அந்நூலின் பெருக்கம் தமிழார்வலர்களைப் பின் தள்ள இடமளிக்காது, இவ்வெளியீட்டை ஒரு தொடராகக் கொண்டு ஆறு தொகுதிகளாக வழங்குவது, ஆக்கியோர் புலமைப் பணிக்கும், வாசகனுக்கும் ஒரு சேர மதிப்பளிப்பதாக அமையுமெனக் கருதியும், நூல் வெளியீட்டில் பொருளியல் சிக்கனத்திற்கு உதவுவதாக இருக்குமெனக் கருதியும், இத்தொடரைப் பின்வரும் தொகுதிகளாக வெளியிடுவது இப்பொழுதுள்ள சூழலிற் பொருத்தமுடைத்தாக இருக்குமெனப் பதிப்பாசிரியர் குழு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்குப் பரிந்துரை செய்தது.

தொகுதி *1* - தொடக்கம் முதல் கி.பி. *500* வரை

தொகுதி *2* - கி.பி.*501* முதல் கி.பி. *900* வரை

தொகுதி *3* - கி.பி.*901* முதல் *1300* வரை

தொகுதி *4* - கி.பி.*1301* முதல் *1600* வரை

தொகுதி *5* - கி.பி.*1601* முதல் கி.பி.*1850* வரை

தொகுதி *6* - கி.பி.*1851* முதல் கி.பி.*2000* வரை

(அவ்வவ் காலப்பகுதியுள் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் தமிழிலக்கியங்களும் அடங்கும்)

ஒவ்வொரு காலப்பிரிவுக்குமுரிய எழுத்துருவின் உள்ளடக்கத்துக்கும் அமைப்பிற்கும் அவ்வப்பொறுப்பாசிரியரே பொறுப்பாவர்.

**கா. சிவத்தம்பி**

## நூன் முகம்

தமிழ் இலக்கிய வரலாற்றைத் தொல்பழங்காலந்தொட்டு ஆராய்வதென்பது, தமிழர் வரலாற்றையும் அம்மக்கள் வளர்த்த பண்பாட்டு நாகரிக வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் - குறிப்பாக அதன் மேனாள் இயக்குநர் ச.சு. இராமர் இளங்கோவும் பேரறிஞர் கா. சிவத்தம்பி உள்ளிட்ட பதிப்புக் குழுவினரும் - தொன்மைக் காலந்தொட்டு கி.பி.5ஆம் நூற்றாண்டு வரையிலான முதற்பகுதிப் பணியை என்னிடம் ஒப்படைத்தபோது, அதனை மிக எளிதானது என்றே எண்ணினேன்.

இப்பகுதி ஆயிரக்கணக்கான பக்கங்களில் - பல மடலங்களாக விரித்தெழுதக்கூடியது, விளக்கியெழுத வேண்டியது என்பதை, அதற்கான நூல்களைப் படிக்கத் தொடங்கிய பிறகுதான் உணர்ந்தேன். இந்நூலுள், இத்தொன்மைக்கால வரலாற்றைத் தொட்டுக்காட்டியுள்ளேன். எதிர்காலத்தில் இவ் ஆய்வு பன்முகமாய் விரிந்து, பரந்தும் ஆழ்ந்தும் படித்தும் எழுதப்பட வேண்டும் என்பது என் வேணவா.

தமிழர் வரலாறு கற்காலங்கள், உலோக காலங்கள் தொட்டு வளர்ந்து வந்ததைத் தொல்காப்பியம், சங்க நூல்கள் வழி உற்று உணரலாம். 'அரவுரியன்ன அவிர்நூற் கலிங்கம்' பற்றிப் பலபடப் பேசும் சங்க நூல்கள் தழையுடை பற்றியும் கூறுகின்றன. 'மடலேறுதல்' எனும் கொடூர வழக்கம், ஓர் அச்சுறுத்தலாகவே வரும் பாடல்களைக் கொண்ட சங்க இலக்கியத்திற்கு முன்பு 'ஏறிய மடற்றிறம்' என அப்பழக்கம் நடைமுறையில் இருந்ததைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. 'இடுக ஒன்றோ, சுடுக ஒன்றோ' என இடுகாடும் சுடுகாடும் வந்துவிட்ட நிலையில், முதுமக்கட்தாழி வழக்கமும் தொடர்ந்திருந்துளது.

'மானுடவியற் கல்வி' பிற நாடுகளில் வளர்ந்துள்ள அளவு, இங்கு அக்கறை காட்டப்படவில்லை. பண்பாட்டு மானுடவியலை, உலகளாவிய நிலையில் பழுதறக் கற்பார், சங்கப் பனுவல்களையும் கற்று ஒப்பிடுங்காலை, பல உண்மைகள் மேலும் விளக்கமுறும்.

'தென் குமரி வட பெருங்கல், குணகுட கடலா எல்லை' என்பன போன்ற பல பாடல்கள், தமிழ்ப் புலவர்கள் இந்தியாவை ஒரே நாடாகக் கண்டமையைத் தெளிவுறுத்துகின்றன. இமயமலை பற்றிய நேரடி அனுபவ

முத்திரைகளும் வடநாடு பற்றிய குறிப்புக்களும் 'மரபுக்குக்' கட்டுப்பட்டுப் பாடிய, சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. "These facts can only prove that people speaking dialects allied to Tamil once inhabited the whole of India" என்ற, திரு. பி.டி.எஸ். கூற்றை, எளிதில் மறுக்குமாறில்லை.

நடுவுநிலை சாலப் பொருந்த எழுதிப் போகும் பேரறிஞர் சீனிவாசர் வேத காலத்தைக் கி.மு. மூவாயிரத்தை ஒட்டியது என்பார். தொல்காப்பியத்தைத் தமிழ் முதல்நூல் எனவும் அதிலுள்ள பொருளதிகாரத்தை நன்கு கற்று அதன் ஆதாரங்களுடன் தமது நூலை யாத்திருப்பதாகவும் கூறும் இவர், வடமொழி நூல்களனைத்தையும் முழுவதும் கற்றுத் துறைபோயிருந்ததையும் உறுதிபடக் கூறுகிறார். மேனாட்டறிஞர்கள் மாக்டோனால்டு, கெய்த் போன்ற பலர், தமிழிலக்கிய அறிவின்மையால் வடமொழிப் புலமை ஒன்றேகொண்டு, தவறான முடிபுகட்கு வந்ததைப் பல இடங்களில் சுட்டிக் காட்டுகிறார்.

தொல்காப்பியத்தைப் பற்றி அவர் குறிக்கும் முதற்செய்தி இது : "That book directly aims at describing the literary conventions of the literature that preceded its composition, and I have treated those conventions as representing the actual customs and manners of the people who lived for a millennium or two preceding its date"

வி. கனகசபைப் பிள்ளை தொடங்கி பிடி. சீனிவாச அய்யங்கார், வி. இராமச்சந்திர தீட்சிதர், டி.ஆர். சேஷ அய்யங்கார், இரா. இராகவ அய்யங்கார் போல்வார்தம் நூல்கள் தொடக்க காலத்தன. அவர்களில் சிலர் வடமொழியையும் முற்றுறக்கற்ற பேரறிவாளர்கள். ஆங்கிலப் புலமையும் ஆய்வு நெறிமுறையும் அறிந்தவர்கள். அவர்கள் கூறியுள்ள பல நடு நிலையான கருத்துக்கள் மீண்டும் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப் பட்டாலன்றி, தொன்மை இலக்கிய வரலாற்றைத் தெளிவுபட எழுதுதல் இயலாது. அதனுடன் சங்க நூல்களை எழுத்தெண்ணிக் கற்றிருக்கவும் வேண்டும்.

மேற்கண்டவற்றைக் கற்று நாம் பெறக்கூடிய முடிபுகளை இந்நூல் ஓரளவு சுருங்கச் சொல்லி, எதிர்கால ஆய்வுகளுக்குத் தூண்டுகோலாகிறது.

சங்க காலத்திற்கு முன்பே, வடநாட்டிலும் தமிழர்கள் வாழ்ந்த போதே வடமொழி, ஆரியக்கலப்பு ஏற்பட்டுவிட்டது. இங்ஙனம் கலப்புற்றவரே தென்னாட்டிற்கு, நடுநாட்டுத் 'தூய ஆரியர்களால்' விரட்டப்பட்டனர். தென்னாட்டிற்குத் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே அவர்கள் குடியேறியும், வேள்விகளில் அளவு கடந்த ஆசை கொண்ட தமிழ் வேந்தர்களால் குடியேற்றப்பட்டும் இங்கு வந்து, கலப்புற்றுத் தமிழரோடு தமிழராயினர். இருந்தும் தமது வடமொழிச் சடங்குகளையும் தனிமையையும் விடாது காத்துவந்தனர். சங்க இலக்கியத்தில் அந்தணப் புலவர்கள் பலர், அருந்தமிழ் வாணர்களாக விளங்குகின்றனர். குமரிக்கண்டம் கடலில் மூழ்கிய போதும் தென் தமிழர்கள் வடக்கே குடியேற்றப்பட்டனர். தமிழர்களின்

தரைவழி வாணிகம், இன்றைய ஆந்திர நாட்டு இராயல சீமைப் பாலைவழியைக் கடந்துபோய், வடநாட்டுடன் தொடர்புபட வைத்ததையே அகப்பாடல்கள் அனைத்தும் புனைகின்றன.

கபிலர், பாலைக் கவுதமனார், தாமப்பல் கண்ணனார் என்றினைய அந்தணப் புலவர் பலர் சங்ககாலப் பெரும் புலவர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் தமிழைக் கற்றுத் தமிழ்ப் புலவர்களோடு புலவர்களாயும் தமிழிசை, கலைகளைக் கற்றுப் பாணரோடு பாணராயும், வானியல், கணிதம், அன்றைய அறிவியல் வல்ல அறிவர், ஆசான்மார், கணியர், கலைஞர்களோடு கலந்து அவர்களின் நுட்பத் திறன்களைக் கற்று அவர்களோடு இணைந்தும் இங்குள்ள மகளிரை மணந்து குருதிக் கலப்புற்றும் வாழ்ந்தனர். மெல்ல மெல்ல இவர்கள், முன்பு பாணர் புலவர் என இவ்வாறு அரசர்கட்கு அணியமாயிருந்தவர்களையெல்லாம் கீழிறக்கிவிட்டுத் தாமே தமிழ் மன்னர்களுக்கெல்லாம் மிகுந்த அணுக்கர்களாக ஆக்கிக்கொண்டனர். முற்கூறிய கலைகள், அக்கால அறிவியல் யாவற்றையும் கற்றுத் தாமே முன்னதாக அறிந்தவர் போலவும் ஆக்கிக்கொண்டனர்.

வேதாந்தவழி வருணாசிரம வைதிகத்தை விடாது போற்றிக் கொண்டே, தமிழகத்தில் இவர்கள் 'தமிழராகவே' வாழ்ந்தமைக்குக் காரணம் 'தம்மை' மேன்மைப்படுத்திக் கொள்ளவும், வடமொழி வழிச் சடங்குகளைப் புகுத்தி வருமானம் தேடி வாழவும் பயன்பட்டதே ஆகும். தொழில் வடமொழியானதே தவிர, தமிழராகவே வாழ்ந்தனர்.

நிலந்தருதிருவின் நெடியோன் செந்நீர்ப் பைம்பொன் வயிரியர்க்கு ஈந்தான். (வயிரியர்-ஆடல் பாடல் வல்லுநர், பாணர்) ஆனால் தொடர்ந்து வந்த தமிழ் வேந்தர்கள், 'அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுகினர். 'ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப் பூவும் பொன்னும் சொரிந்தனர்'. ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழறிவித்ததாகக் கூறப்படும் கபிலர், "கழல் புனை திருந்தடிக் காரி நின்னாடே, அழல் புறந்தரூஉம் அந்தணரதுவே" என்று பாடுகிறார்.

மிக ஆழ்ந்து நோக்கினால், சங்க காலத் தொடக்கம் என இன்று நாம் கருதும் கி.மு. ஆயிரம் ஆண்டுக்கு முன்பே, வடநாட்டிலும் பிறகு தென்னாட்டிலும் இக் 'கலப்புத்' தன்மை ஏற்பட்டுவிட்டது. வடமொழிப் புராணங்களில் மேன்மையுடைய சிபி கதை, மாவலி கதை போல்வன மிகப் பல தமிழரிடமிருந்து பெற்றனவே. தமிழரும் வடமொழிப் புராணங்களில், புதுமை வேட்கையுடன் ஈடுபட்டனர். ஆயினும் வடவர் எவ்வாறு தங்களுடைய தனிமையை விட்டுக்கொடாமலே இங்குத் 'தமிழராய்' வாழ்ந்தனரோ, அதே அளவு முயற்சியுடன் தமிழ்ப்புலவர்களும் கலைஞர்களும் தங்கள் தனித்தன்மைகளை விட்டுக்கொடாது பேணிக் காத்துவந்தனர்.

இடைக்காலத்தும் ‘திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேறவும்’, ‘கோதில் செழுந்தமிழ் வழக்கே, அயல்வழக்கை வெல்லவும்’ தமிழர்கள் வாழ்ந்ததைச் சேக்கிழார் குறிப்பிடுவதை மிகக் கூர்ந்து நோக்கவேண்டும்.

இத்தகைய சங்க முற்கால, சங்க காலப் பின்னணி முழுவதையும் நன்கு விளங்கிக்கொண்டு, தொல்காப்பியம் தொட்டுச் சங்க இலக்கியம் திருக்குறள் இரட்டைக் காப்பியம் வரை, ஆழ்ந்து நோக்கினால் இவை அனைத்தும் தமிழன் தன் பண்பாட்டை, நாகரிகத்தை, அடையாளத்தை, தனக்கேயுரிய கலைச் செல்வ வளத்தைக் காத்துக்கொள்ளவென்று திட்டமிட்டு எழுதப்பட்டவை, தொகுக்கப்பட்டவை எனும் உண்மை புலனாகிறது.

**‘தமிழ்க் காப்பு’** முயற்சியே, தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்கமாக உளது. இயற்கைச் சீற்றம், உட்பகை, புறப் பண்பாட்டுத் தாக்கம், மொழிகளின் படையெடுப்பு இவற்றிலிருந்து விடுபட்டுத் தம்மைக் காத்துக் கொள்ளும் முயற்சியே, தமிழரின் வரலாறாகத் தொடங்குகிறது.

இத் **‘தற்காப்பு முயற்சியே’** களப்பிர, பல்லவ, மொகலாய, நாயக்க, இராட்டிரகூட, மகாராட்டிர, ஐரோப்பிய காலம் வரை தொடர்கிறது. நிலஎல்லை சுருங்கிற்று; பேசும் மக்கள் தொகை சுருங்கிற்று; ஆயினும் குறிப்பிட்ட எல்லைக்குள் தமிழ் இன்றும் நிலைபெற்றிருப்பதற்கு, மேலே சுட்டிய தொன்மைக்கால இலக்கிய இலக்கணங்களும் புலவர்களும் அவர்களைப் போற்றிய தமிழ் மக்களுமே அடித்தளமாயினர். இமயம் வரை தமிழ் மன்னர்கள் வென்ற வீரம், வேள்வி வேட்கையில் கரைந்து போனது. இச்சூழலில், காலந்தோறும் தமிழைக் காத்தவர்கள் என்று கணித்துப் பார்த்தால், பெரும்பாலும் தமிழ்ப் புலவர்களையே சுட்டிக்காட்ட வேண்டியுளது. புற நாகரிக அடிமைகளாய் அன்றைய மன்னர்கள் மூழ்கிப் போய்விடாமல், அவர்களைத் தமிழின்பாலும் தமிழ்ப் பண்பாட்டின்பாலும் ஈர்த்த பெருமையும் தமிழ்ப் புலவர்களிடமே காணப்படுகிறது.

சங்க காலமும் ஒரு ‘தற்காப்பு’ முயற்சிக் காலம்; இடைக்காலமும் ஒரு ‘தற்காப்பு முயற்சிக்’ காலம் என வரலாறு படிக்கும் நமக்கு, இன்றும் ஒரு ‘தற்காப்பு முயற்சிக்’ காலமாக இருப்பது, ‘வரலாறு திரும்ப வரும்’ என்ற பழமொழியையே நினைப்பூட்டுகிறது. முன்னைய முயற்சிகளில் வெற்றிபெற்ற தமிழ், இனியும் வெற்றி பெற வேண்டுமேல், அக்காலகட்டங்களில் நடைபெற்ற தமிழ் மொழி இலக்கிய எதிர்நீச்சல் வரலாறுகள் முழுமையாய், ஒவ்வொரு தமிழனுக்கும் உணர்த்தப்பட வேண்டும். இவ்வகையில் அமைந்ததே இத்தொன்மை இலக்கிய வரலாறு.

**தமிழண்ணல்**

# உள்ளே


| | | |
|---|---|---|
| | வாழ்த்துரை | |
| | அணிந்துரை | |
| | பொது முன்னுரை | |
| | நூன்முகம் | |
| 1. | முன்னுரை | 1 |
| 2. | தமிழிலக்கியத் தொன்மை - ஒரு நடுநிலைப் பார்வை | 4 |
| 3. | நினைவில் வைக்கவேண்டிய சில நெறிமுறைகள் | 7 |
| 4. | சங்க முற்காலம் | 19 |
| 5. | இந்தியத் தமிழகம் | 26 |
| 6. | தமிழகமும் தமிழ் மக்களும் | 37 |
| 7. | தமிழும் தமிழிலக்கியமும் | 53 |
| 8. | தொல்காப்பியம் | 64 |
| 9. | சங்க இலக்கியம் | 86 |
| 10. | திருக்குறள் | 139 |
| 11. | சிலப்பதிகாரம் | 147 |
| 12. | மணிமேகலை | 154 |
| 13. | பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் முத்தொள்ளாயிரமும் | 161 |
| 14. | வச்சிரநந்தியின் 'திரமிள சங்கம்' | 167 |
| | பார்வை நூல்கள் | 174 |

# 1. முன்னுரை

தமிழ்மொழியின் தொன்மையும், மிக முற்பட்ட காலத்திலேயே அதன் பண்பட்ட முதிர்ந்த நிலையும் உலக அறிஞர்களால் உணரப்பட்டு வருகின்றன.

தமிழர்களின் தொல் பழங்கால நிலையும் கற்காலம் உலோக காலந்தொட்டு வளர்ந்த நிலையும் தொல்லியல் ஆய்வாலும் பண்பாட்டு மானுடவியல் அறிவாலும் நன்கு வெளிப்படுத்தப் பெற்றுள்ளன. பழந்தமிழிலக்கிய அகச் சான்றுகளால் தெரியவரும் சங்க காலத் தமிழர் வாழ்வும் வரலாறும் ஆய்வாளர்களால் நன்கு கோடிட்டுக் காட்டப்பெற்றுள்ளன.

எனினும் தமிழ் இலக்கியச் செழுமையும் தமிழிலக்கியக் கொள்கைகளும் அவற்றிற்குரிய அளவு, முழுமையாய் ஆராய்ந்து உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்று கூற இயலாது. அவை சில இன்று உலக அறிஞர்களால் ஓரளவு மொழிபெயர்க்கப்பட்டும், தமிழ் இலக்கியக் கொள்கைகள் சில ஆராயப்பட்டுமுள்ளன என்பது உண்மையே. ஆயினும் மாக்ஸ்முல்லர் தொடங்கி, ஐரோப்பிய அறிஞர்களால் சமற்கிருத மொழியும் இலக்கியமும் அறியப்பட்டு, ஆராயப்பட்டு உலகிடை விளங்கித் தோன்றிய அளவு, அதற்கு எவ்வகையிலும் குறைவுபடாத செழுமையும் சீர்மையுமுடைய தமிழிலக்கியப் பெருமை, உலகினரால் முழுமைபெற உணரப்படவும் இல்லை; உணர்த்தப்படவுமில்லை.

பேரறிஞர் கால்டுவெல் திராவிட மொழிகள் பற்றி ஆராயும் முன், வடமொழியும் அதன் சார்பான நாகரிகமுமே இந்தியா என்ற எண்ணம் மேலோங்கியிருந்தது. வடமொழி கற்ற எமனோ, பர்ரோ இருவரும் தொகுத்த 'திராவிட மொழிகளின் வேர்ச்சொல்' அகராதி, (T. Burrow and M.B. Emeneau; A Dravidian Etymological Dictionary) திராவிட மொழிகள் பாரதம் முழுவதும் பரவியிருந்ததைச் சான்றுகளுடன் உணர்த்தியது. வீரமாமுனிவர் முதலாக இன்றுவரை தமிழின் சிறப்பும் இலக்கிய வளமும் உலக அறிஞர்களால் உணரப்பட்டு ஓரளவு வெளிப்படுத்தப்பட்டன. கமில் சுவலபில், ஜார்ஜ் ஹார்ட், தக்ககசி என விரல்விட்டு எண்ணக் கூடிய சிலராலும் ஏ.கே. இராமானுசம் அவர்களாலும் சங்க இலக்கியத்தின் சில பகுதிகள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் பெற்றன. எனினும் சங்க இலக்கியம் முழுமைபெற, அதன் உள்ளார்ந்த நிலையில் உலகிற்குத் தரப்படவில்லை.

ஜி.யு. போப்பையர் முதலான சிலரைத் திருக்குறளும் பக்தி இலக்கியமும் பிற்கால நூல்கள் சிலவும் கவர்ந்தன; அவர்களால் போற்றப்பட்டன; மொழியாக்கம் பெற்றன; ஆராயப்பட்டன.

ஆயினும் தொல்காப்பியம் இதுகாறும் அதன் சிறப்பனைத்தும் விளங்குமாறு உலகிற்குத் தரப்படவுமில்லை; தமிழர்களால் உணரப்படவுமில்லை. தொல்காப்பியத்தைப் பதிப்பித்தவர்கள் தவிர, கணக்காயர் ச.சோ. பாரதியார்; க. வெள்ளைவாரணர், இளவழகனார், சி. இலக்குவனார், வ.சுப. மாணிக்கம் போலும் சிலரே தொல்காப்பிய ஆய்வில் தோய்ந்தனர். மொழியியல் நோக்கில் வ.அய். சுப்பிரமணியம், ச. அகத்தியலிங்கம், பொற்கோ, செ.வை. சண்முகம் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைத் தாமும் செய்து, பிறர்க்கும் வழிகாட்டியுள்ளனர்.

எனினும் தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் திருக்குறளும் சிலப்பதிகாரம் மணிமேக்லை என்னும் இரட்டைக் காப்பியமும் **இன்னும் ஆழமாகவும் திட்ப நுட்பத்துடனும் நடுநிலைப் பார்வையுடனும்** கற்கப்பட்டு உலகப் பெருமொழிகள் பலவற்றிலும் தரப்படவேண்டும். அப்போதுதான் தமிழரின் இன அடையாளமும் பண்பாட்டு நாகரிக முகவரியும் தமிழர் உலகிற்கு வழங்கிய கொடை இதுவென்பதும் முற்றும் வெளிப்படும்.

இன்றைய இந்திய வரலாற்றின் ஆய்வுத் தொடக்கம் வடநாடும் கங்கைக் கரையுமாய் அமைந்ததால் வடமொழியும் அம்மொழிசார் இலக்கியம் நாகரிகம் பண்பாடும் ஆகியவையே அனைவராலும் பெரிதாக மதிக்கப்பெற்றன. இந்திய நாகரிகமே அதனுள் அடங்கிப் போயிற்று எனவும் தமிழும் வடமொழியிலிருந்து கடன்பெற்று வளர்ந்த மொழியே எனவும் நம்பும் நிலை மேலோங்கியது. தொடக்க காலத் தமிழ் ஆய்வாளர்களும் அதற்கு விலக்கல்லர். அவ்வாறு எண்ணுவதே நடுவுநிலை என வாதிடுபவர்கள் இன்றும் உளர்.

ஆயினும் இந்நோக்கிலிருந்து தப்பி, 'நேர்கொண்ட பார்வை' யுள்ளவராகவும், சமற்கிருத மொழியைப் பழுதறக் கற்ற முழுதுணர் பேரறிவாளராகவும் காணப்படுபவர், பி.டி. சீனிவாச அய்யங்கார் எனலாம். அவருடைய 'தமிழர் வரலாறு' (History of the Tamils - From the Earliest Times to 600 A.D.) என்னும் ஆங்கில நூல் நெறிமுறைக்குட்பட்ட தமிழிலக்கிய வரலாற்றை எழுதப் பலவகையில் துணை செய்கிறது. ஆயினும் இன்றுள்ள அளவு தொல்காப்பிய ஆய்வும் சங்க இலக்கியப் பயிற்சியும் அன்று இல்லை. பெரிதும் இடைக்கால உரையாசிரியர்களின் போக்கில்தான், அவை கற்கப்பெற்றன.

'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' எனும் நூலை எழுதிய வி. கனகசபைப்பிள்ளை தொடங்கி, எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், இரா. இராகவய்யங்கார், வி.கோ. சூரியநாராயண சாத்திரியார்

(பரிதிமாற் கலைஞர்), மயிலை சீனி வேங்கடசாமி, மா. இராசமாணிக்கனார் போல்வார்தம் நூல்கள் நேர்மையுடன், வரலாற்றை அணுகப் பல புதிய வெளிச்சங்களை நல்குவனவாகும். கா. அப்பாத்துரையாரின் 'தென்னாட்டுப் போர்க்களங்களும்' தி.வை. சதாசிவ பண்டாரத்தாரின் நூல்களும் தமிழ் இலக்கியத்தின் தொன்மை வரலாற்றை அறியத் துணை செய்கின்றன. இவற்றின் அடிப்படையில் நடுவுநிலை போற்றும் தெளிவுடன் எழுதப்பெற்றது மு. வரதராசனாரின் 'தமிழ் இலக்கிய வரலாறு' (சாகித்திய அக்காதெமி) எனில் மிகையாகாது. *1999*இல், ஹெப்சிபா சேசுதாசன், 'சாலமன் காலத்திலிருந்து' ஒரு கணிப்பு என ஆங்கிலத்தில் எழுதிய (Count Down from Solomon) நூலும் தமிழ் இலக்கியச் செல்வத்தை உலகிற்கு அறிமுகப்படுத்த உதவும் தகுதிவாய்ந்த நூலெனலாம். க. கைலாசபதி ஆங்கிலத்தில் எழுதிய 'தமிழ் வீரயுகப் பாட்டு' (Tamil Heroic Poetry) எனும் நூல், சங்கத் தொகைநூல் ஆய்விற்குப் புத்தொளிப் பார்வை ஒன்றைத் தருகிறது. தவத்திரு தனிநாயக அடிகளாரும், ஏ.கே. இராமானுசரும் சங்கப்பாடல்களை முழுதுணர்ந்து கற்று அவற்றின் சிறப்புக் கூறுகள் சிலவற்றை யேனும் தெளிவுறத் தந்து ஆங்கில மொழியாக்கம் செய்து வழிகாட்டியுள்ளனர்.

## 2. தமிழிலக்கியத் தொன்மை — ஒரு நடுநிலைப் பார்வை

ஓங்கலிடை வந்து
உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கு ஒலிநீர் ஞாலத்து இருள் அகற்றும் - ஆங்கவற்றுள்
மின்நேர் தனிஆழி
வெங்கதிர் ஒன்று ஏனையது
தன்நேர் இலாத தமிழ்

உலகின் தனிப்பெருங்கோளாகிய ஞாயிற்றிலிருந்து சிதறிப் பல கோள்கள் உருவாயின என்பர். எனினும் அப்பெருங்கோள் அன்றும் இன்றும் என்றும் நின்று நிலவும் பெருமையுடையது. நம் அக இருள் நீக்கும் தமிழாம் ஞாயிற்றுக்கும் இது பொருந்தும். தமிழிலிருந்து கிளைத்த மொழிகள் பலவாயினும் அது இன்றும் இளமை குன்றாது விளங்குகிறது; என்றும் விளங்கும். 'என்றும் உள தென்தமிழ்' என்ற கம்பர் வாக்கு பொய்க்காது. 'வாழ்க நிரந்தரம், வாழ்க தமிழ் மொழி' என்ற பாரதி வாக்கும் நிலைக்கும். 'ஹெப்சிபா ஜேசுதாசனின்' ஆங்கில நூலுக்கு முன்னுரை வழங்கிய செருமன் மொழிப் பேராசிரியர் செலின் மாத்தியூ தமிழ் இலக்கியத் தொன்மையைப் போற்றி எழுதியுள்ளார்.

> "ஏறத்தாழ நான்கு பரம்பரையின் படைப்பாக இன்று கிடைக்கும் சங்க இலக்கியம் திகழ்கிறது. அதிலும் வியப்பு என்ன வென்றால், கிறித்தவ ஊழியின் இரண்டாம் நூற்றாண்டாகிய, அத்துணைத் தொடக்க காலத்திலேயே, இத்துணைச் செம்மை நிறைந்த இலக்கியமாக அது விளங்குவதுதான். (**And the wonder of it is that such perfection was achieved as early as the second century of the Christian Era**) ஆங்கில இலக்கியத் தொடக்கம் பதினான்காம் நூற்றாண்டு. செருமன் இலக்கியம் எட்டாம் நூற்றாண்டில் தொடங்கியதுதான். எனவே தொன்மை நோக்கிப் பார்க்கும்பொழுது தமிழ் கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம், பெர்சியன் மற்றும் எபிரேய இலக்கியங்களுடன் சமமாக வைத்து எண்ணத்தக்கதாகும். (**In point of antiquity Tamil can therefore be ranked to Greek, Latin, Sanskrit, persian and Hebrew literatures**)'

மேற்கண்ட நூலில், தமிழ்ச் சங்க இலக்கியத் தொன்மையை கி.மு. ஆயிரம் முதல் தொடங்கியதாகக் கருதும் திருமதி சேசுதாசன், 'எல்லையற்ற வளமான

அவ்விலக்கியச் செல்வத்தில், மிகச் சில பகுதிகளே நமக்குக் கிடைத்துள்ளன எனவும், அதன் மிகப் பெரும் பகுதி இழக்கப்பட்டு விட்டது எனவும்' கூறியுள்ளவை கருதற்பாலன.

தமிழ் இலக்கியத்தின் தோற்றம் கி.மு. ஆயிரம் ஆண்டினை ஒட்டிய கால எல்லையை உடையது என்பார் பி.டி. சீனிவாச அய்யங்கார். "மரபுவழிப் பாடல்களின் முற்பட்டது, பாணர்கள் பாடிய இயற்கை நெறிப் பாடல்கள். இவ்வியற்கை நெறிப் பாடல்கள் வளர்ந்து புலவர்களின் மரபுவழிப் பாடல்களாகத் திருந்திய வடிவில் பெறுவதற்கு ஐந்து நூற்றாண்டுகளாவது ஆகியிருக்கும். இத்தகைய பண்பட்ட இலக்கியத்தைத் தோற்றுவிக்குமாறு வளர்ந்த தமிழ் மொழியின் கூர்தலற வளர்ச்சியும் அப்பரிணாம வளர்ச்சியைக் காட்டி வெளிப்படுத்தும் இலக்கிய வளர்ச்சியும் ஏற்படப் பல காலப்பகுதிகள் கடந்திருக்கும். இவ்வகையில் நோக்கும்போது, தமிழர்களின் நாகரிகத் தொன்மை கிறித்துவிற்குச் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாதல் வேண்டுமென்று நாம் முடிவு செய்யலாம்." இவ்வாறு கூறும் இப்பேரறிஞர் தமிழ், வடமொழி, ஆங்கிலம் மூன்றிலும் முழு ஆளுமையுள்ள புலமை உடையவர். தொல்காப்பியம் சங்கத் தொகைப் பாடல்கட்கு முற்பட்டது என்பதையும், அந்நூல் குறிப்பிடும் அதற்கு முந்தைய நூல்களும் மிகப் பெரிய அளவிலான இலக்கிய, இலக்கணச் செல்வங்களும் மறைந்து போயின என்பதையும் அவர் தெளிவுபடுத்துகின்றார். தொல்காப்பியர் குறிப்பிடும் பல இலக்கண, இலக்கிய விதிகளுக்குச் சங்க நூல்களிலிருந்து எடுத்துக்காட்டுத் தர முடியாமல் பிற்காலக் காட்டுக்களை உரையாசிரியர்கள் தருவதையும், அல்லது 'இவற்றுக்கான உதாரணங்களை நீங்களே தேடிக் கண்டு கொள்ளுங்கள்' (வந்தவழிக் கண்டு கொள்க) என விட்டுவிடுவதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட தமிழிலக்கியம், பாணர் பொருநர் போல்வாரால், நாட்டுப்புறப் பாடல்களாக, இயற்கையாகவும் மிக இயல்பாகவும் உள்ளதை உள்ளவாறும் பாடப் பெற்றிருக்க வேண்டும் என்று அவர் விளக்குதல் மிகப் பொருத்தமாகவுளது. பின்னர் வந்த புலவர்கள் அவ்வியற்கை நெறிப் பாடல்களின் வழியைப் பின்பற்றி, அதனையே மரபாகக் கொண்டு பாடியுள்ளமையால், சங்கப் பாடல்களில் புனைவுகளை விட, நடப்பியல் மிகுந்திருப்பதையும் அவர் விளக்குகின்றார்.[2]

அவர் தமது நூலின் முன்னுரையில் குறிப்பிடுவது போல், 'காலவரிசை என்பது (Chronology) வரலாற்றின் கண்கள் என்றால், தொன்மைக்கால இந்திய வரலாறு எப்பொழுதும் பார்வையற்றதாகவே உளது' என்று கூறலாம். ஆனால் மக்கள் வாழ்வின் பரிணாம வளர்ச்சியை வரலாறாகக் கருதக்கூடிய அறிஞர்கள் மெய்ம்மையாய் நடந்த நிகழ்ச்சிகளின் நிரல்படு வரிசையைப் பற்றிய அறிவைக் கொண்டு மனநிறைவடையலாம். இதற்குக் காலக் கணிதப்படியான 'தேதிகள்', மிக அரிதாகவே தேவைப்படும். பழந்தமிழர் வரலாற்றின் நிலையும் இதுவே.

காலவரிசை பற்றிய தெளிவான சான்றுகள் கிடைக்காததால், தமிழர் வரலாற்றில் கருத்து வேறுபாடு உண்டாக நிரம்ப வாய்ப்புளதாயிற்று. தமிழர்கள் தம்மைத் தாமே சூத்திரர் என்றும் 'தஸ்யூக்கள்' என்றும் கூறிக் கொள்வதில் பெருமை கொண்ட காலம் உண்டு. அதுபோலவே 'வடமொழி'ச் சார்புடைய கருத்துக்களே தொடக்கம் முதல் நம்பப்பட்டு வந்ததால், தமிழின் சார்பான எதனை எவர் கூறினாலும் இது தமிழ்ப்பற்றால் கூறப்படுவதென்றும், நடுவுநிலைமை தவறியதென்றும் இழித்தும் பழித்தும் எண்ணி, நகையாடுவார் பலருளர்.

> "வடமொழி தமிழ்நாட்டில் வெகுநாள்காறும் இயங்கியும், அதற்குத் தமிழ்மொழியைத் தன் வழியிலே திருப்பிக் கொள்ளுதற்குற்ற ஆற்றலில்லாது போயிற்று. வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களையுணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர்...... நால்வகைச் சாதி முறையை மெல்லமெல்ல நாட்டிவிட்டனர்....... இன்னும் அவர்தம் புந்தி நலங்காட்டித் தமிழரசர்களிடம் அமைச்சர்களெனவும் மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமைந்து கொண்டனர்; தமிழர்களிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழிபெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும், வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர்."

இவ்வாறு பரிதிமாற் கலைஞர், தமது 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.[3]

ஆங்கிலத்தில் சேக்சிபியரையும் மில்டனையும் படிக்கும் போது, 'அகரமுதலி' தேவைப்படுகிறதல்லவா? நமக்கு இன்று கிடைத்துள்ள தொல்காப்பியம் தொட்டுப் பழந்தமிழ் நூல்கள், அருஞ்சொற்களுக்கு மட்டும் அகர முதலி வைத்துப் படிக்கக் கூடியனவே. இவற்றில் பல பகுதிகள் ஐம்பது அறுபது விழுக்காடு, ஓரளவு தமிழ்ப் புலமையுடையார்க்கும் விளங்கவே செய்கின்றன. இத்தொடர்ச்சியை இன்றும் இனியும் போற்ற வேண்டுமென்பது தவறாகாது. முற்கால இச்செவ்வியல் இலக்கியத்தின் தாக்கம் இன்றுவரை உளது. காலப்போக்கில், நூற்றாண்டுகள் தோறும் தோன்றிய மாற்றங்களுக்கும் வேறுபாடுகளுக்குமிடையே, நூலிழைபோலத் தமிழர் மரபு ஊடுருவி வந்துள்ளமை நன்கு ஆழ உணரத்தக்கதாகும்.

# 3. நினைவில் வைக்கவேண்டிய சில நெறிமுறைகள்

தமிழர்கள் காலவரிசைப்படியான வரலாறு பற்றியும் சான்று மூலங்களைத் தொகுத்துக் காத்தல் பற்றியும் அக்கறை கொள்ளவில்லை. தமிழுக்கே உயிர் தந்த பேரறிஞர்களின் இயற்பெயர்களைக்கூட அவர்கள் பதிவு செய்திலர். தம்மின் மூத்தவர்களைப் பெயர் சொல்லி அழைத்தல் தவறென்ற கருத்து இன்றும் நிலவுகிறது. அதனால் குடிப்பெயராலும் சிறப்புப் பெயராலும் அழைத்து அவையே இன்று பெரிதும் அறியப்படுகின்றன. சங்கப் பாடல்களைத் தொகுத்தபோது புலவர் சிலருக்கு அவ்வப் பாடலில் வரும் சிறப்புத் தொடரொன்றே பெயராகச் சூட்டப் பெற்றுள்ளது.

வரலாற்றைப் பதிவு செய்யாமை, அவர்களது இயல்பாகிப் போனது. தமிழர் தம் மனப்பான்மை உலகளாவிய 'மனிதத்தில்' பொதுப்பட இருந்த அளவு, தங்கள் வரலாற்றுக்கான மூலங்களை நிலைநிறுத்துவதில் ஈடுபாடு காட்டவில்லை. அதனால் கிரேக்க, உரோமானியர்களைப் போலத் துல்லியமான வரலாற்றுச் சான்றாதாரங்களோ, காலப்பதிவுகளோ அவர்களால் தேடிவைக்கப்படவில்லை. 'நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர் முறைவழிப்படும்' என்பதற்கு ஒப்ப, உயிரினக் கூர்தலற வளர்ச்சியாகக் கருதி, வரலாற்றை - நாம் நினைப்பதுபோன்ற ஒன்றாகக் கருதாமல், கைவிட்டு விட்டனர்.

குறைவற, நிறைவுறும் செல்வத்தைத் தேடிவைத்துள்ளனர். ஆனால் அதுபற்றிய வரல்+ஆற்றைத் தராது போயினர். குன்றுபோல் 'செல்வம்' குவிந்திருக்கிறது; ஆனால் அது பற்றிய 'காலக் கணக்கையும்', 'மூலக் கணக்கையும்' ஐயமற, நிலைபெறுத்தமாட்டாமல் தமிழர்கள் வாதங்களிலேயே காலங்களைக் கழிக்க வேண்டியுளது. இது நிறையா, குறையா என்பதிலேகூடக் கருத்துவேறுபட வாய்ப்புளது. காலமும் மூலமும் தெரிந்திருந்தாலும், ஓங்கி உலகளந்த இந்த மொழியின் இலக்கியச் செல்வம் அவர்களால் தரப்படாது போயிருந்தால், அவற்றால் பயன் ஏது?

பழந்தமிழிலக்கியத்தின் அருமையும் பெருமையும் பற்றிய கால வரலாறு கேள்விக்குறியாகவே நீடித்தாலும், அவை உலகினரால் வியப்புக்குறியாகவே நோக்கப்படுகின்றன!

தொல்காப்பியத்தை எழுதியதால் தொல்காப்பியன் எனப் பெயர் வந்ததா? தொல்காப்பியன் எழுதியதால் 'தொல்காப்பியம்' ஆனதா? தமிழுக்கு 'மொழி முதல்வன்' எனக் கூறத்தக்கவர்க்கே இதுதான் கதி!

தமிழ்ப் பண்பாட்டைப் பிழிந்து தந்து, 'தமிழ் மறை' எனுமாறு ஒரு நூலைப் படைத்துத் தந்த திருவள்ளுவர்க்கும் இதே கதிதான். 'வள்ளுவர்' என்பது குடிப்பெயரா? செய்த தொழிலால் ஏற்பட்டதா? இயற்பெயரா? ஆராய்ச்சிதான் நீள்கிறது.

'இளங்கோ' என்பதும் அடிகளின் இயற்பெயராகத் தோன்றவில்லையே?

பெயர்களைக்கூடக் 'குறியீடாக்கி' விட்டது போல, இவர்கள் வரலாற்றையும் ஒரு 'குறியீடாக்கி' மட்டும் தந்துள்ளனர்.

சங்கம் என ஒன்றோ, மூன்றோ இருந்தனவா? தொல்காப்பியம் தொட்டுச் சங்க நூல்களிடையே, 'ஒரு குடும்பச்' சாயல் 'ஓரினச் சாயல்' புலப்படுகின்றனவே; இவற்றின் கால வரிசை யாவை? சங்க கால மன்னர்களையும் புலவர்களையும் அவர்கள் பாடிய பாடல்களையும் காலவரிசைப்படுத்த இயலுமா? முயற்சிகளுக்குத்தான் முடிவில்லை.

இசை, கூத்து (நாடகம்), கோயிற்கலை, ஓவியக்கலை, சிற்பக் கலை, கட்டிடக்கலை (மனையடி நூலுட்பட), வானியல், கணியம் (சோதிடம்), மெய்யியல் (தத்துவங்கள்), சமயம் (சிவனியம், சைவசித்தாந்தம், மாலியம் போல்வன), தமிழ் நாட்டுத் தொன்மங்கள் (புராணக் கூறுகள்), பழக்க வழக்கங்கள், சடங்குகள், மொழியின் வேரும் விழுதுகளும், இலக்கியப் படைப்பாக்கமும் கொள்கைகளும் திறனாய்வும் என இவை யாவும் தென்னாட்டில் மட்டுமே, தனித்தன்மைகளுடன் காணப்பட்டு, வடக்கே போகப் போகச் சிறிது சிறிதாகக் குறைந்தும் அறவே வேற்றுமைப்பட்டும் போகின்றன. இவற்றில் தமிழகத்தில் மட்டுமே காணப்படுவன பெரும்பான்மையன. ஆயினும் அவை காணப்படும் இடத்திற்குத் தானே உரிமைப்பட முடியும் எனக் கூறிமுடியாவாறு, அவை பல 'பிற மொழிமயமாக்கப்'பட்டு, மயக்கத்தைத் தருகின்றன. இவை தமிழர்தம் உடைமைகளே எனக் கூறவும் விளக்கவும் ஆய்வுகளே தொடர்கின்றன.

இவற்றால் தமிழில் வரலாறு என்பது சான்றாதாரங்களோடு, ஐயமற நிறுவுவது என்பதற்குப் பதிலாகப் பெரிதும் 'யூகிப்பது' - 'உய்த்துணர்வது' என்றாகிப் போனது. ஒரு விதை ஊன்றப்பட்டு, அது முளைவிட்டு வளர்ந்து கன்றாகி, செடியாகி, மரமாகிக் கிளைவிட்டு, விழுது பரப்பிப் பூத்துக் காய்த்துக் கனிந்து மீண்டும், மீண்டும் விதை ஈன்று பல்குவது போன்ற ஒரு 'கூர்தலற முறை' (Evolution) வளர்ச்சியையே வரலாறு என்று நம்ப வேண்டியுளது. கையிலடித்துச் சொல்வதுபோல் சான்று மூலங்களை அடுக்கிக் காட்ட வழியில்லை. அதாவது வரலாறு வழி **அறிவது** ஒரு நெறியென்றால், இயற்கைக் கூர்தலறவழி **உணர்வதும்** ஒரு நெறியே என நம்பினாலன்றிப் பயனில்லை.

இதற்குத் தொல்காப்பியம் சங்க இலக்கியம் திருக்குறள் இரட்டைக் காப்பியங்கள் ஆகியவற்றை, ஒவ்வோரடியும் அணுவும் புலனாகுமாறு, அத்துணை ஆழமாய்க் கற்று, அதன் திட்ப நுட்பங்களை முழுமைபெற உணர்ந்த பேரறிவு வேண்டும். கிரேக்க இலக்கியத்தைக் கற்று, அதன் பல்வேறு துறைகளை அலசி ஆராய்ந்து, அவ் ஒரே துறையில் நூல்கள் பல படைத்துள்ள சி.எம். பௌரா (C.M. Bowra) போன்ற அறிஞர்கள் தோன்றவேண்டும். வாழ்நாள் முழுவதையும் இவ் ஒரு துறைக்கே ஒப்படைக்கக் கூடிய நுண்மாண் நுழைபுலமுடையரால் மட்டுமே, இக்கூர்தலற நெறியில், காலவரிசை வரலாற்றையும் கண்டு நிறுவ இயலும். இன்றைய நிலையில் பல்வேறு அறிஞர்களால் ஆய்வுகள் தொடர்கின்றன. காலம் இதற்கு விடை பகருமென்பது உறுதி.

பழந்தமிழிலக்கியங்களில், நான்கு அல்லது ஐந்து பரம்பரைக்குள் தோன்றியன எனச் சங்கப் பாடல்களை மதிப்பிடலாம். தொல்காப்பியம் சில நூற்றாண்டுகள் முற்பட்டதாகவும் திருக்குறளும் இரட்டைக் காப்பியங்களும் சங்கப் பரம்பரையைச் சார்ந்தனவாகவுமே தோற்றமளிக்கின்றன. மூதறிஞர் வ. சுப. மாணிக்கம் தமது 'இரட்டைக் காப்பியங்கள்' பதிப்பின் ஆய்வுரையில், அவற்றிடையேயுள்ள ஒற்றுமைத் தடங்களை நிரல்படக் காட்டியுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டதும் க. வெள்ளைவாரணர் எழுதியதுமான 'தொல்காப்பியம்' எனும் இலக்கிய வரலாற்றுநூல், திருக்குறளுக்கும் சங்க இலக்கியத்திற்கும் முற்பட்டது என்பது மட்டுமல்லாமல் அவற்றுக்கு வழிகாட்டியாகவும் அமைந்தது 'தொல்காப்பியம்' எனப் பல்வேறு அகச்சான்றுகள் காட்டியுள்ளார். 'திருக்குறள்' சங்க காலச் சூழலில் எழுந்த, தமிழ்ப் பண்பாட்டுப் பிழிவாகத் தமிழர் திருமறை என எழுந்த ஒரு நூலென்பதைச் சங்க இலக்கியப் பாடல்களோடு ஒப்பிட்டுக் கற்று அறியலாம். தொடர்ந்துவரும் ஒரு மரபு வழிப்பட்டதால், இவை அனைத்தினிடையே, ஒருமை இழை ஒன்று ஊடாடுகிறது. வேற்றுமைகளும் உள எனினும் ஒற்றுமைகளே கூடுதலாக உள. பழந்தமிழிலக்கியங்களைப் பழுதறவும் முழுமை பெறவும் கல்லாதார், கருத்துக் கூற முற்படுதல் நடுவுநிலைமை ஆகாது. இதுவரை தமிழிலக்கிய வரலாறு எழுதிய பலருக்குச் சங்க நூற்பயிற்சி போதிய அளவு அமைந்திலது. முன்பொருவர் சொல்லி வைத்ததையே, திரும்பச் சொல்லும் 'கிளிப் பிள்ளை' நிலைதான் நீடிக்கிறது.

பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் மொழிக்கட்டமைப்பும் சொற்செறிவும் அறிவுடையாரை வியப்பில் ஆழ்த்துகின்றன. சங்கப் பாடல்களில் காணப்படும் தொடரமைப்பு, ஒவ்வோரடியும் சிற்சில தொடர்களும் கூட முழுமைபெற்ற பா என அமையும் பாங்கு முதிர்ந்த வளர்ச்சிநிலையின் வெளிப்பாடாகும். பத்துப்பாட்டுப் போன்ற நீண்ட பாடல்கள் கூட, எழுவாய் பயனிலைகளுடனும் உள் வாக்கியத் தொடர்களுடனும் கூடி, ஒரு முழுமைபெற்ற நீண்ட கலவை வாக்கியம் (Complex Sentence) போன்ற

கட்டமைப்புடன் திகழ்வது, பாடல் புனைவதில் ஒரு தேர்ந்த நிலையாகும். இதனைத் தவத்திரு தனிநாயக அடிகளார், தமது ஆங்கில நூலில் அழகுற எடுத்துக்காட்டுகிறார்.[4]

சங்கப்பாடல்களில் காணப்படும் படைப்புக்கலை நுட்பங்கள் மிகப்பலவாகும். அவை அனைத்தும் தோண்டித் துருவி ஆராய்ந்து வெளிப்படுத்தப்பட்டன என்று கூறவியலாது. தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாடுகள் நிகரற்றவை. அரிஸ்டாடிலின் 'கவிதையியல்', பரதமுனிவரின் 'நாட்டிய சாத்திரம்' பற்றி எல்லாம் நூற்றுக்கணக்கில் ஆய்வுகள் எழுதப்பட்டு, உலகெங்கும் பரவியுள்ளன. தொல்காப்பியரின் மெய்ப்பாடு, உள்ளுறை, இறைச்சி, உவமை, நோக்கு, முன்னம், பயன், எச்சம், வண்ணம், வனப்பு, புலனெறி வழக்கு, எழுவகை யாப்பு, அடிக்கோட்பாடு, பாவடிவம், உறுப்புப் பார்வைக் கோட்பாடு, அகமும் புறமும், கூற்றும் துறையும், பொருள்கோள், வண்ணச்சினைச் சொல் என்பன ஒவ்வொன்றும் பலநூறு பக்கங்கள் விரித்தெழுதத்தக்கன; பல்வேறு அறிஞர்கள் வெவ்வேறு அணுகுமுறைகளால் உண்மையறிய முயலத்தக்கன, உலகிற்குத் தமிழர் அளித்த இலக்கியக் கொள்கைகள் இவையென அறிவுறுத்தத்தக்கன; அரிஸ்டாடிலையும் பரதமுனிவரையும் ஆனந்த வர்த்தனரையும் அபிநவ குப்தரையும் படித்தவர்கள் இவற்றை ஒப்பிட்டு நோக்கி அதிசயிக்கத்தக்கன. இத்துணை வளமான மொழியும் இலக்கியக் கலையும் தோன்ற, ஈராயிரம் ஆண்டுகளாவது ஆகியிருக்கும் என்பார் பி.டி. சீனிவாச அய்யங்கார்.[5] கலைக் கதிர் பொங்கல் மலர் ஒன்றில் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் எழுதிய 'சங்க இலக்கியப் புதுமை' என்ற கட்டுரையும், வ.சுப. மாணிக்கனாரின் 'தொல்காப்பியப் புதுமை' 'தொல்காப்பியக் கடல்' நூல்களும் படித்துணரத்தக்கன. இன்றைய ஆய்வாளர்கள் பலர் இத்திசை நோக்கித் திரும்பியுள்ளமையால், இனி வரும் காலத்தில், இவ்வகை ஆய்வுகள் தலைமையிடம் பெறுமென்பதுறுதி.

மனிதகுலத்தின் தொடக்க காலம் வீரயுகம். பேச்சு மொழி மட்டுமே இருந்தால், மக்களிடையே 'வாய்மொழிப் பாடல்கள்' சில நூற்றாண்டுகள் வளர்ச்சி பெற்றிருந்தன. உடல்வலிமையும் வீரமும் ஒருவரை ஒருவர் வென்றும் கொன்றும் வாழும் பழக்கத்தை மிகுவித்து, மக்கள் தொழிலே அதுவாக இருந்த காலம் அது. நாகரிகம் முதிராத விலங்கு வாழ்க்கையிலிருந்து, மாந்தர் படிப்படியாக நாகரிக நிலை நோக்கி வளர்ந்தனர். இவ் வீரயுகம் பற்றி சி.எம். பௌரா உட்படப் பலர் மிக விரிவாக ஆராய்ந்துள்ளனர். சங்க இலக்கியத்தில் 'வீரயுகச்' சாயல்கள் இருப்பதை க. கைலாசபதி சான்றுகளுடன் ஆராய்ந்துள்ளார்.

சங்க இலக்கியம் வீரயுகத்திலிருந்து, வளர்ந்து நாகரிக நிலையை அடைந்து கொண்டிருந்த ஒரு மாந்தரினத்தையே நமக்கு இனங்காட்டுகிறது. மரபுவழிவந்த வீரயுகச் சாயல்கள் அதில் நிரம்பவுள்ளன. புறத்திணை, துறை,

வரலாற்று நிகழ்வுகளைப் படிக்கும்பொழுது, நமக்கு வீரயுகத் தொடர்ச்சி புலனாகிறது. எனினும் தொல்பழங்கால வீரயுக நிலைகளிலிருந்து, சிறந்த நாகரிக நிலை நோக்கி வளர்ந்தோங்கிக் கொண்டிருந்த மக்கட்சமுதாயப் பின்புலத்தைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு அப்பாலும் ஆளுமை கொள்ளும் சிந்தனை வளம் அதில் தென்படுகிறது. அவ்விலக்கியம் காட்டும் மனித மன நுண்ணுணர்வுப் படிப்பிடிப்புக்கள் ஒப்பற்ற மானுட விழுமியங்களை என்றென்றும் நிலைபெற்றவற்றை (Eternal Human values) உணர்த்துகின்றன. தொல்காப்பியத்தை ஆழ்ந்து பயிலும்பொழுது, ஒரு தொல்பழங்குடித் தன்மை வாய்ந்த மக்கள் மன்பதையை, வளர்ந்துவரும் நாகரிக நிலைநோக்கிச் செலுத்தவல்ல இலக்கியப் படைப்புகளுக்கு வழி காட்ட முயல்வது போல் தோன்றுகிறது. இவை பலவும், இவற்றைத் தோற்றுவித்த மொழியும் மக்களினமும் பல ஆயிரம் ஆண்டுத் தொன்மையில் வளர்ந்தவை என்பதை மெய்ப்பிக்கப் போதாவா? காலப் பதிவு செய்யாத, புறவடிவச் சான்றுப் பட்டயங்களைக் காட்சிப்படுத்தாத ஒரு நாகரிகத்தின் வரலாற்றை, 'இலக்கியம்' என்னும் முதன்மையான அகச் சான்றுகளை வைத்து உணர்தலாகாதா? காலம் பின்னோக்கி வளரவளர, அம்முற்காலம் பற்றிய கல்வெட்டு, செப்புப் பட்டயம், நாணயங்கள், தோண்டி எடுக்கப்படும் தொல்பொருள்கள் போல்வன மேலும்மேலும் கண்டுபிடிக்கப் பட்டு வருவது, இக்கருத்துக்களை எண்பிக்க உதவும்.

பல பழந்தமிழ் நூல்கள் வெளிப்படா நிலையிலும் அவை பற்றிய கல்வி ஆழப்படாத காலத்தும் தமிழாய்வாளர்கள் கூறிய, தமிழிலக்கியம் பற்றிய கருத்துக்களும் கால ஆய்வு முடிவுகளும் மறுஆய்வுக்கு உரியவை ஆவது இயற்கையே. 'தம்மில் தம் மக்கள் அறிவுடையராதல்' போல்வது அது; முன்னையோரை அவமதிப்பதாகாது.

வைதிகத்தையும் வருணாசிரமத்தையும் முற்றிலும் மறுத்தெழுதப்பட்ட திருக்குறளை, வடமொழி நூல்களின் வழிப்பட்டதென முதலில் நினைத்தமை எத்துணைப் பேதைமை? அதனைப் பக்தி இலக்கியக் காலத்தின் தொடக்கத்திற்குத் தள்ளுதல், மொழி நடை, யாப்புவளர்ச்சி, கருத்தமைதி மாற்றம், மரபு வேறுபாடு, சொற்கோவை ஆகியவற்றை மனங்கொள்ளாதார் கூறிய முடிபன்றோ? எனவே 'கூர்தலற வளர்ச்சியை', இலக்கியத்தின் அகச் சான்றுகளுடன் பொருத்திப் பார்க்கும் 'கருதுகோள்' நிலைதான் இன்றுளது. இவை படிப்படியாகப் புறச்சான்றுகளால் மெய்ப்பிக்கப்பட்டு வருகின்றன.

அடுத்ததாக, வரலாறு பல அடுக்குகள் (Layers) கொண்டது என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். தொல்பொருளாய்வில் நிலத்தைத் தோண்டித் துருவிப் பார்ப்பது போன்றது அது. ஏனெனில் பழைமைகள் ஒன்றின் கீழ் ஒன்றாப் புதைபுண்டிருக்கும். மேலே தெரிவது மட்டும் உண்மையாகி விடாது. இன்றைய தில்லியில் காண்பன அனைத்தும் மொகலாயர் தம் நினைவுச்

சின்னங்களே. இவற்றைமட்டும் பார்த்து முடிவுகட்டுவதானால், பாரதம் 'இசுலாமியர் நாடு' என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கும்.

சங்கமுற்காலம், சங்ககாலம், சங்கப்பிற்காலம் இவை பழைய அடுக்குகள். வடமொழிவாணர் குருதிக் கலப்புற்றுத் தமிழரொடு கலந்து அந்தணரான காலமது. வடநாட்டிலிருந்த 'ஆரியர்கள்' இவ்வந்தணர்களை தஸ்யூக்களொடு தஸ்யூக்களாகக் கருதினர்; பிரும்ம ராட்சதர்கள் என எள்ளி நகையாடினர். இங்குவந்து, தமிழகப் பெண்களை மணந்து, தமிழர்களாகவே வளர்ந்தாலும் - வாழ்ந்தாலும் தமது 'சம்பிரதாய மரபுச்சடங்குகளையும்', 'வேதம் ஓதுவதையும், இவர்களில் சிலர் தொடர்ந்து கடைப்பிடித்தனர். இவர்களை வடநாட்டவர்களும் தம்மவராகக்கொள்ளவில்லை; இவர்கள் தமிழரோடு தமிழராகியும் சில பழைய பழக்கவழக்கங்களை வருமானம் கருதிக் கைவிடவில்லை. இங்ஙனம் இன்றளவும் இவ்விரண்டுங்கெட்ட நிலையே நீடிக்கிறது. இதை, பி.டி.சீனிவாச அய்யங்காரின் 'தமிழர் வரலாறு' பற்றிய ஆங்கிலநூலின்வழி மிக விரிவாக அறியலாம்.

வைதிக பௌத்த சமண சமய நுழைவுகள் பண்பாட்டுப் படையெடுப்பு களாகவும் மொழி ஆதிக்க நிலைகளாகவும் வளரத் தொடங்கிய சங்கப் பிற்காலம், பிறகு அடுத்த தளமாக மாறியது. இக் காலத்தும் 'தமிழ்மயமாகும்' போக்கே இருந்ததன்றி, வடமொழி ஆதிக்கம் செலுத்தவில்லை.

தொடர்ந்துவந்த களப்பிரர், பல்லவர் ஆட்சிக்காலம், தமிழர் வரலாற்றில், பெரும் வீழ்ச்சியை விளைவித்தகால 'அடுக்கு' ஆகும். எல்லாவற்றையும் 'தமிழ்மயமாக்கும்' ஆளுமை நிலைமாறியது. பிறமொழிகள்- பாலி, கிரந்தம், சமற்கிருதம் - தொடர்ந்து ஆட்சிமொழிகளாயின. எல்லாம் வடமொழிமயமாக்கப்பட்டன. பெயர்கள், நூல்கள், கலைகள், மெய்யியல் என அனைத்தும் வடமொழியிலிருந்தே வந்தனபோல ஆக்கப்பட்ட காலம் அது. அஃது ஓர் ஐந்து நூற்றாண்டுத்தனி வரலாறு; சங்க காலத் 'தன்னாட்சிக்குப்' பிறகு தமிழர்கள் பிறர்க்கு அடிமைப்பட்ட காலவரலாறு.

மீண்டும் சோழப்பேரரசு எழுந்த காலம் தமிழின் பொற்காலம். எனினும் ஆங்கிலேயர் போனபின்பும், நாம் ஆங்கிலத்தை விடமுடியாது தவிப்பதுபோல, வடமொழி தமிழர்களை நன்கு பற்றிக்கொண்டுவிட்டது. வடமொழியே கலைமொழி, சமயமொழி, உயர்மொழி எனும் மனநிலைகள் தமிழரிடையே ஊடுருவி நின்றன. தமிழர்களே வடமொழியைப் போற்றி வளர்த்தனர். அரிய கலைகள், செய்திகள் யாவற்றையும் வடமொழியில் எழுதிவைக்கத் தமிழர்களும் காரணமாயினர். இருப்பினும் ப்ழந்தமிழ்நூல்கள் திரும்பப் படிக்கப் பெற்றன; புதுவாழ்வு பெற்றன; வடமொழிச் சார்பொடும், சார்புநீக்கியும் உரைகளும் விளக்கங்களும் எழுந்தன. பழந்தமிழ் நூல்கள் இக்காலத்தே புத்துயிர் பெற்றன. இக் காலத்தெழுந்த காப்பியங்கள் முன்னைய தொடர்ச்சியைக் காத்து, மரபை மீட்டுப் புத்தாக்கம் செய்துதந்தன.

இவ்வரலாற்று அடுக்குகள் பற்றிய தெளிவான அறிவு இருந்தாலன்றி, "தமிழில் என்ன இருக்கிறது? எல்லாம் வடமொழியிலிருந்து தமிழ் கடன்பெற்றவையே" என்றுதான் சொல்லத் தோன்றும். இலக்கணக் கொத்து' நூலை எழுதிய சுவாமிநாத தேசிகர் எனும் சமற்கிருத அறிஞர்போல, "ஐந்து எழுத்தால் ஒரு பாடையும் ஆம் என்று, அறையவும் நாணுவர் அறிவுடையோரே" என்று பாடத்தான் தோன்றும். (எ, ஒ; ற,ன,ழ எனும் ஐந்து தமிழ்ச் சிறப்பெழுத்துக்கள் தவிரத் தமிழுக்குவேறு எதுவுமே இல்லை என அவர் எண்ணியதற்கு அன்றையச் சூழ்நிலைகளே காரணமாகும்.)

தமிழிலக்கிய வரலாறு, தமிழர் பண்பாட்டு வரலாறுகளில் நாம் நினைவிற் கொள்ள வேண்டிய ஒன்று, தமிழர்தம் 'வாய்மொழி மரபு' பற்றியதாகும். தொல்காப்பியர் உலக வழக்கு எனப்படும் வாய்மொழி மரபுப் பாடல்கள், நாடகம், இலக்கியம் போன்றவற்றுக்கும் கோட்பாடுகள் வகுத்துள்ளார். பழமொழி, விடுகதை, 'உரைக்கப்படும் கதைகள் எனும் மூன்றும் அவர் கூறும் ஏழுவகை யாப்பில் (இலக்கிய வகையில்) அடங்கிய வாய்மொழி வகைகளாகும். அவர் கூறியுள்ள வண்ணமும் வனப்பும் வாய்மொழிக்கும் ஏட்டு வழக்கிற்கும் பொதுவானதாகும். ஹோமர் படிப்பவர்களுக்காக எழுதவில்லை; கேட்பவர்களுக்காகப் பாடினார் என்பர். சங்கப் பாடல்களுக்கும் இது பொருந்தும்.

தமிழ்க் கலைகள் பல வாய்மொழி மரபாகவும் குலவழித் தொழில் பற்றிய தொடர்ச்சியாகவும் இருந்து மறைந்தன. இன்றும் கோயிற்கலை, தச்சுத் தொழில், கட்டிடவேலை, சித்தமருத்துவம் போல்வன பல குலவழிக் கல்வியாகப் பயிற்சி தரப் பெற்றுத் தொடர்கின்றன. அவை ஏட்டில் எழுதாமலே, பரம்பரைக்குத் தொடர்ந்து செல்லும்போது சொற்கலப்பும் அவ்வக் காலத் தாக்கமும் உடையவாய்த்தம் தனித் தன்மையை, தமிழ்த்தன்மையை இழக்கின்றன. குயவர்முதல் கைவினைஞர்களது தொழிற்கலைச் சொற்களைத் தொகுத்தால், அவ்வத் தொழில் பற்றிய கல்வியும் தெரியவரும். தமிழர்களிடம் இருந்த வானநூல், கணியம் (சோதிடம்), மனையடிநூல், கட்டிடக் கலை, கோயிற்கலை, சிற்பக் கலை, இசைக் கலை, கூத்து, நாடகம், நாட்டியம், மருத்துவம், மெய்யியல் பலவும் எழுதப்பட்டவை குறைவு; வாய்மொழி மரபாகவே காலக் கோட்பட்டவை மிகுதி. இவற்றைச் சமற்கிருதத்தில் எழுதிவைத்துக் கொண்டு, இடைக்காலத்தில் 'எல்லாம் வடமொழியிலிருந்து வந்தவை' என எண்ணவைத்தனர். தமிழ் மூல ஏடுகளை, ஆடிப் பெருக்கில் போட்டால் 'புண்ணியம்' என்றனர்,. 'சொக்கப்பனை' கொளுத்தினால் 'மோட்சம்' வாய்க்கும் என்றனர். கடலுக்கும் கரையானுக்கும் போனவைபோக, எஞ்சியவை இவ்வாறு திட்டமிட்டு அழிக்கப்பட்டன. இது பற்றிப் பரிதிமாற் கலைஞர் தந்துள்ள குறிப்பை முன்னரே கண்டோம்.

நம் இலக்கிய, இலக்கண நூல்களும் கூட இவ்வாறு ஒன்றிரண்டு ஏடுகளில் எழுதப்பட்டாலும், பலரும் வாய்மொழியாகவே கேட்டுப் பயின்றனர்.

பவணந்தி முனிவர் நன்னூலில் 'பாடம் கேட்டலின் வரலாறு' பற்றியே கூறுகிறார். இலக்கிய, இலக்கண உரைகளும் இங்ஙனம் பாடம் சொல்லிவந்த பரம்பரைப்படி, ஒருவர் கேட்டு மற்றவர்க்குச் சொல்லி வந்தவையே. இறையனார் அகப் பொருளுரை இங்ஙனம் பத்துத் தலைமுறைக்குப் பாடமாகச் சொல்லப்பட்டு வந்து இறுதியில் எழுதப்பட்டதை, அந்நூலில் வரும் செய்தியால் அறியலாம்.

மூன்றாவதாக நாம் மனங்கொள வேண்டியது 'சமற்கிருத மயமாக்குதல்' என்பதாகும். அதனால் சிலர் 'சங்கம்' எனும் பெயரே தமிழாக இல்லையே; பிறகு எவ்வாறு சங்கம் இருந்திருக்கும் என விவாதிப்பர். 'தொலைப் பார்வை' முன்னோக்கியும் வேண்டும், பின்னே நோக்கியும் உண்மை அறியவேண்டும். எதனையும் *(1)* வடமொழிப் பெயர்ப்படுத்துதல் *(2)* வடமொழி மூலப்படுத்துதல் *(3)* வடமொழி வண்ணப்படுத்துதல் என மூன்று வகை முயற்சிகள் திட்டமிட்டு நடத்தப்பட்டன. வண்ணப்படுத்தலிலும் உள் வண்ணப்படுத்தல், வெளி வண்ணப்படுத்தல், உட்கலப்பு வண்ணப்படுத்தல் என மூன்று நிலைகளை உண்டாக்கினர். இவை தனி ஆய்வுக்குரியன. எனினும் தமிழிலக்கிய வரலாறு பற்றிச் சிந்திக்கும் பொழுது, சங்கம் பற்றிய பெயர்களே வடமொழிமயமாக இருப்பதுகொண்டு தவறான முடிவுகளுக்கு வரநேரும்.

பேராசிரியர் மு.வ. அவர்கள் 'தமிழ் இலக்கிய வரலாறு' எனும் நூலில் குறிப்பிடுவன, இவண் நினைவுகூர்தற்குரியன. "சொற்களைப் பொறுத்த அளவிலும் இவ்வாறே அவர்கள் தவறாக நடந்துகொண்டார்கள். தமிழ்மொழியில் நெடுங்காலமாக இருந்துவந்த அடிப்படைச் சொற்களாகிய நீர், மீன் முதலியனவும் வடமொழியின் வேர்ச்சொற்களிலிருந்தே அமைந்தவை என்று பொருத்தம் இல்லாத விளக்கங்கள் கூறினார்கள். இந்த நாட்டில் மிகப்பழங்காலம் முதல் இருந்துவந்த தமிழிலிருந்து வடமொழி பல சொற்களைக் கடன் வாங்கியிருக்கக் கூடும் என்று எண்ணிப் பார்க்கவும் மறுத்துவிட்டு, தமிழில் உள்ள பல சொற்களும் வடமொழியிலிருந்து கடன்வாங்கப்பட்டவை என்ற கருத்தைப் பரப்பினார்கள். தமிழறிஞர்கள் அந்தக் கருத்துகளைக் கேட்டுத் தலைகுனிந்து நின்றார்கள். ஐரோப்பாவிலிருந்து கால்டுவெல் *(Caldwell)* முதலான மொழித்துறை அறிஞர்கள் வந்து, அவர்களின் கருத்துகள் உண்மை அல்ல என்று ஆங்கிலத்தில் நூல்கள் எழுதி உண்மையை வெளிப்படுத்திய பிறகே, தமிழறிஞர்களின் உள்ளத்தில் புதிய நம்பிக்கை பிறந்தது. இந்த நூற்றாண்டில் பர்ரோ *(Burrow)* முதலான ஆங்கிலேய அறிஞர்கள் மேலும் தொடர்ந்து ஆராய்ச்சிகள் செய்து வடமொழி அறிஞர்களின் ஒருதலைச் சார்பான கொள்கைகளைப் பொய்ப்படுத்தும் வரையில் அந்தப் பழைய போக்கு இருந்து வந்தது. முதுகுன்றம் முதலான பழைய ஊர்களின் தமிழ்ப்பெயர்களை விருத்தாசலம் முதலான வட சொற்களாக மாற்றிவிட்டுப் பிறகு,

வடமொழியிலிருந்தே தமிழ்ப் பெயர்கள் வைக்கப்பட்டன என வாதாடினார்கள். கோயில் தெய்வங்களுக்கு இருந்துவந்த தமிழ்ப் பெயர்களையும் அவ்வாறே மாற்றினார்கள், பழைய பக்திப் பாடல்களில் இருந்துவந்த தமிழ்ப் பெயர்களும் அவ்வாறு கோயில்களில் வடமொழியாக மாற்றப்பட்டன. சங்க இலக்கியத்தில் காணப்படும் ஆர்க்காடு என்ற ஊர்ப் பெயரை வட மொழியில் மொழிபெயர்த்தபோது, சொல்லின் சரியான பொருள் உணராமல் ஆறுகாடு என்று கருதி ஷடாரண்யம் எனத் தவறாக மொழிபெயர்த்தார்கள். அவற்றிற்கு ஏற்றபடி பிற்காலத்தில் கதைகளும் எழுதினார்கள். ஆனால் அப்படி மொழிபெயர்க்கப்பட்ட சில பெயர்கள் நிலைக்கவில்லை. பாலாற்றை க்ஷீரநதி என்றார்கள். ஆனால் மக்களிடையே வடமொழிப் பெயர் நிலைக்கவில்லை. தமிழ்ச் சொல்லே நின்றது. இவ்வாறு வீணாக வடமொழி அறிஞர்கள் ஒரு பகையுணர்ச்சிக்கு வித்திட்டார்கள்"

பல நூற்றாண்டுகளாக நடந்த 'சமற்கிருதமயமாக்கும்' முயற்சி பற்றித் தனி ஆய்வுகள் செய்யவேண்டும். இங்கு இதை எடுத்துக்காட்டக் காரணம், இற்றைத் தமிழறிஞர்கள் பலருக்குத் தமிழ்ப்புலமையும் போதிய அளவு இன்றி, வடமொழி அறிமுகமுமின்றி, இடைக்காலத் தவறுகளையே உண்மையெனக்கொண்டு, நூல்கள் பல எழுதிவருகின்றனர், இதனால் எதிர்காலத்தில் தமிழிலக்கியம், பண்பாட்டு வரலாறுகளை எழுதுபவர்கள், இவற்றை நினைவிற்கொண்டாலன்றி, வரலாறு பொய்ப்பட்டுப்போக நேரும் என்பதாலேயாம்.

சங்கப் பாடல்களில் இசை, நாட்டியம், கூத்து, வானியல், கணியம், சிற்பம், ஓவியம், மெய்யியல் அனைய பலவற்றுக்கான நல்ல தமிழ்க் கலைச் சொற்கள் ஆயிரக்கணக்கில் காணப்படுகின்றன. இவற்றை மீட்டுருவாக்கம் செய்ய, சங்க இலக்கியப் புலமையும் வடமொழி மயமாக்கியதை அறியத்தக்க வடமொழிப் புலமையும் வேண்டும்.

'தமிழ் இலக்கிய வரலாறு' எழுதப் புகுவார், மேலும் நினைவில் வைக்கவேண்டிய ஒன்று, தமிழ் இருவகை வழக்கு மொழி என்பதாகும். இன்றும் எழுத்து வழக்கில் ஏறாத, பேச்சு வழக்கில் மட்டும் உரியனவாகக் கருதப்படும் சொற்கோவை (முழுமையான சொற்கள்) ஒரு நூறாயிரத்திற்கு மேலும் இருக்கும். தொழிற்கலைச் சொற்கள், வட்டார வழக்குகள், உறவுப் பெயர்கள், ஊர்ப் பெயர்கள், மக்கட் பெயர்கள், பொருட்பெயர்கள், உழவு வேளாண்துறைப் பெயர்கள் என இவை பலவகைப்படும்.

இப்பேச்சு வழக்குக்கும் ஏட்டு வழக்குக்கும் இடைவெளி கூடுவதுண்டு; குறைவதுண்டு. இவை இணைந்தும் பிணைந்தும் கூடியும் ஊடியும் வாழ்வதுபோன்ற நிலையின எனினும் இவ்விருவகை வழக்கும் தத்தம் தனித்தன்மைகளை இழக்காமலே தொடர்ந்து வாழ்ந்து வருகின்றன. இதனை ஏட்டுவழக்காகவே மாற்றுவது கொடுமை என்றால், முற்றிலும் பேச்சு

வழக்காக மொழியை மாற்ற முயல்வது கொலைப் பாதகமாகும். சில சமயம் ஏட்டுவழக்குச் சொல் பேச்சு வழக்கில் ஏறும்; மாறும்; திரிபுறும். சில சமயம் பேச்சு வழக்குச் சொல் ஏட்டுவழக்கில் ஏறும். சில வினை விகுதிகள், சொல்லுருபுகள் இலக்கியத்துள் புகுந்து, இலக்கணமுடையதுபோல் ஆகிவிடும்.

இயல்பு வழக்கு தகுதிவழக்கு எனவும் எழுத்துப்போலி எனவும் மரூஉ (மருவின் பாத்திய என்பது தொல்காப்பியம்) எனவும் திசைச் சொல் எனவும் இவற்றிற்கு இலக்கணத்தில் இடமளிக்கப்பட்டதுண்டு.

'யானை' வழங்கியபொழுதே 'ஆனை' எனப் பேச்சில் இருந்திருக்கும். 'யான்' புலவரிடையே வழங்கிய போது, மக்கள் 'நான்' எனப் பேசியிருப்பர். ஞெகிழ்ந்தது நெகிழ்ந்ததாக ஆகியிருப்பது இயல்பே. இவை படைப்பாளி எளிமை கருதி எழுத நினைக்கும்போது ஏட்டில் ஏறிவிடலாம். யாப்பு வடிவத்தைப் பொறுத்தும் இஃது அமையும். சிறுகதை எழுதுவதற்கும் நாடகம் புனையும்போதும் ஆய்வுக்கட்டுரை வரையுங்காலும் நாளிதழ்ச் செய்தி வழங்குங்காலும் மொழிநடை, சொல்லாட்சி, உருபுகள் இவற்றில் இவ்விருவகை வழக்கின் ஊடுருவல்கள் தென்படும். இதனால் இவற்றில் ஒன்று முற்காலத்ததும் மற்றொன்று பிற்காலத்ததும் ஆகிவிடா. மறைமலையடிகளும் திருவிகவும் சமகாலத்தவரேயாயினும், ஒரு நூற்றாண்டு கழித்து ஆராய்பவர் மொழிநடையை மட்டும் வைத்து, ஒருவர் முற்காலத்தவர் மற்றவர் பிற்காலத்தவர் என்று கூறுவதற்கு ஒப்பாகும். ஒரே படைப்பாளியாயினும் தேசியக்கவி பாரதி கும்மிப்பாட்டில் பாயுது, பிறக்குது என்று பாடுகிறார்; மணிக்குளத்து விநாயகர் நான்மணி மாலையில் செறிவுடைய சொற்களைச் செப்பமுற ஆள்கிறார். யாப்பு, படைக்கப்படும் பொருள் அல்லது செய்தியால் வரும் வேறுபாடுகள் இவை. இவ்விருவகை வழக்கின் நுட்பங்கள் தனி இலக்கணமாக எழுதப்படவேண்டும்.

இங்கு, இவ்வுண்மையை நினைவிற்கொண்டு ஆராய்ந்தாலன்றி, நூல்களின் கால ஆய்வுகள் பாழ்படும் என்பது மட்டும் வலியுறுத்தப்படுகிறது. கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படையின் கால ஆய்வுகள் தடுமாறியதற்கு, இவ்வழக்குகள் மனங்கொளப் படாமையே அடிப்படையாகும்.

சங்கப் பாடல்கள் 'உள்ளதை உள்ளவாறு பாடும்' இயல்புடைய, நாடோடிப் பாடல்களின் வழிப்பட்டவை. அதைத் தொடர்ந்து பாடிய புலவர்களும், நிகழ்வுகளைச் சுட்டும் பொழுது, கற்பனையாக எதையும் புகுத்தியோ, கட்டுக் கதையாகப் புனைந்தோ பாடியதாகத் தோன்றவில்லை. அவர்கள் பாடியுள்ள இயற்கை வண்ணனைகளில் காலவழு, இடவழு எதுவும் இல்லை. கொன்றை பூப்பது கார்காலம்; உளுந்து விளைந்து முதிர்வது பனிக்காலம்; மா பூத்துக் காய்ப்பது இளவேனிற்காலம் என இவ்வாறு கூறப்படுவன எதுவும் இன்றளவும் மாறவில்லை. மதுரையில் கண்ணகி

கோவலனுக்குத் தன் கையறி மடைமையின்' என்ன சமைத்தாள்? சிலப்பதிகாரத்தில், அப்பருவத்தில் கிடைக்கும் காய்கறிகளே இடம் பெறக் காரணமென்ன? இவற்றை அறிய வெற்றுப் புலமை பயன்டாது; உலகியலறிவும் வேண்டும். சங்கப் புலவர்கள் பாரதம், இராமாயணம், நந்தர்கள், மோரியர்கள் பற்றிக் குறிப்பனவும் இமயமலைச்சாரல், கங்கைச் சமவெளி, வடநாட்டிற்குப் பயணம் செய்துபோகும் பாலைநிலப் பெருவழி பற்றி விவரிப்பனவுமான எதனையும் கற்பனை, கட்டுக்கதை என எண்ணுவதும் மறுப்பதும் நடுவுநிலை ஆகாது. நிகழ்ந்தவற்றை மாற்றியோ, நிகழாதவற்றைப் புனைந்தோ பாடும் பழக்கமும் மரபும் சங்க காலப் புலவர்களிடம் இல்லை என்பதை அறிஞர்கள் தெளிவுற எடுத்துக் கூறுகின்றனர்.

இனிப் புராணமரபுக் கூறுகள் எனப்படும் தொன்மம் பற்றியும்எண்ணிப் பார்க்கவேண்டும். தல புராணம் மற்றும் வடமொழிப் புராணங்கள் பல புலவர்கள் அல்லது குருக்கள்மார் கட்டிக் கூறிய பொய்ம்மைக் கதைகள். அல்லாமல் ஓர் அதிசய நிகழ்ச்சியோ, அதிர்ச்சிதரும் நிகழ்ச்சியோ நடந்து, அது மக்களிடையே கை கால்சேர்த்துப் பேசப்பட்டுப் பெருவழக்காகி நாட்டுப்புறக் கதைகளாக மாறும். சில வரலாற்று நிகழ்வுகள் காப்பியப் புனைவுகளாக வளரும். இவை பொதுமக்களும் அறிந்தவையாய், அனைவராலும் பேசப்படுபவையாய் உலகவழக்கில் உலாவரும். சங்க இலக்கியத்தில் வரும் தாக்கணங்கு, கொல்லிப்பாவை, புத்தேள்நாடு போல்பவை பல இவ்வாறு உருவாயினவே. முச்சங்கங்கள் பற்றிய வரலாறு, காலப் பழைமையால், பழங்கதையாய் (Folk-tale), வரலாற்றுப் புனைகதையாய் (Legends), புராணம் எனப்படும். தொன்மக் கதையாய் (Myth) மாறி வளர்ந்த ஒன்று. இது ஒரு மூலத்திலிருந்து கிளைத்த புனைவேதவிர, முற்றிலும் பொய்யெனல் தகாது.

இத்தகைய தொன்மங்களை 'மறைமுக உண்மைகள்' (Indirect truth) என்பர் ஒப்பியலார்.

ஒரே ஊர்ப் பெயர், அல்லது ஓர் ஆட்பெயர் பலருக்கும் இட்டு வழங்கப் படுதல் ஒரு மரபு. ஒரு குடிவழி வந்த பரம்பரையில் பலருக்கு ஒரே பெயர் இடப்படுதல் தமிழர் வழக்கம். பட்டினத்தார் என்ற பெயர் ஒரு குடிவழியில் வந்த இருவர் அல்லது மூவர்க்கு இட்டு வழங்கியதாகக் கருத இடமுளது.

ஔவையார் என்ற பெயரும் இயற்பெயரன்று. இன்று 'அம்மையார்' என்று சொல்வது போன்றது அது. 'இன்ன ஔவையார்' என இயற்பெயருடன் சேர்த்துவழங்கிப் பிறகு இயற்பெயரை விட்டுவிட்டனர். புகழ் பெற்ற பெண்பாற் புலவர்களில் இருவர் அல்லது மூவர் கருத்து-உணர்வு-பண்புவழி ஒற்றுமையுடைமை கண்டு அவ்வாறு அழைக்கப்பட்டனராதல் வேண்டும். ஊர்ப் பெயர்களும் அவ்வாறேயாம். புலம் பெயர்ந்தவர்கள், தாம் முன்பு வாழ்ந்த ஊர்ப் பெயர்களைப் புதியனவாய்க் குடியேறிய ஊர்களுக்கு

இட்டுவழங்குவதுண்டு. அமெரிக்கா முழுவதும் தேடினால், ஐரோப்பிய ஊர்ப்பெயர்கள் பல, அவ்வாறே வழங்குவனவும் சிறிது மாற்றி வழங்குவனவும் எனப்பலவுள. 'பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கமும்' கடல்கொண்டபின் தெற்கே போந்தவர்கள் தாம் குடியேறிய இடத்தில் ஓர் ஆற்றைப் பஃறுளி' ஆறு என முற்பட்டபெயரால் அழைத்திருக்க வேண்டும். தென்பகுதியில் ஓடும் 'பறளி' ஆறே பஃறுளி ஆறு என்றும் எனவே குமரிக்கண்ட வரலாறே பொய்யென்றும் விவாதித்தல் தவறாகும்.

இவை அனைத்தையும் மனங்கொண்டு, சங்க இலக்கிய வரலாற்றையும் ஆராய்ந்து மிக விரிவாக எழுதவேண்டும். இங்கு சுருக்கமாகவும் தெளிவாகவும் அக்கால வரலாற்றுத் திருப்புமுனைகளும் வளர்ச்சிப் போக்குகளும் (Trends and tendencies) தொகுத்து எழுதப்படுகின்றன.

தமிழின வரலாற்றை எழுதியவர்கள் பழைய கற்காலம் தொட்டு, பல ஆயிரம் ஆண்டு வளர்ச்சிகளைத் தொல்லியல் ஆய்வுகள் வழியாகவும் பழங்காலப் பண்பாட்டு மானுடவியல் (Cultural Anthropology) ஆய்வுநெறிகளின்படியும் விளக்கமாக எழுதியுள்ளனர். தொன்மைத் தமிழ் இலக்கிய வரலாற்றை, இங்குச் சங்கமுற்காலம், தொடங்கி எழுதுவது பொருத்தமுடையதாகும்.

# 4. சங்க முற்காலம்

தொல்காப்பியம் காலத்தால் முற்பட்டதாயினும், மிகப்பலவான அகச் சான்றுகளையுடைய சங்கப் பாடல்களை, மையமிட்டு எழுதுவது தெளிவுதரும்.

சங்க இலக்கியத்தை நாம் இரண்டு பார்வையில் நோக்க வேண்டும். இதுகாறும் இவ்வுண்மையை மனங்கொண்டு, சங்கப் பாடல்களை அணுகாமையால் தவறுதலான முடிபுகளுக்கு வரநேர்ந்தது.

சங்கப் பாடல்களைப் பாடியவர்கள், கடல் கொண்ட தென்னாட்டில் தோன்றி அழிந்துபோன பழைய மரபைக் காப்பதற்கென்று பாடியவையே, மிகப் பலவாகும். ஐங்குறுநூறு ஐந்து புலவர்களால், ஐந்து திணைகளுக்கும் பத்துப் பத்துக்களடங்கிய நூறுநூறு பாடல்கள் கொண்டது. பதிற்றுப்பத்து, ஏறத்தாழச் சமகாலத்தில் வாழ்ந்த, இரண்டு, மூன்று பரம்பரைகளுக்குட்பட்ட சேரமன்னர்களைப் பத்துப்பத்துப் பாடல்கள் எனத் திட்டமிட்டுப் பாடப்பெற்றவற்றின் தொகுப்பாகும். கலித்தொகை மதுரையில் பாண்டியனது அவையத்தில் *(சங்கத்தில்)* திட்டமிட்டு, ஒரு கவியரங்கிற்கு இன்று தலைப்புத் தந்து பாடுவதுபோலப் பாடப்பெற்றுள்ளது. அன்று 'மரபுக் கட்டுப்பாடு' மிகுதி. அன்றைய பாடல்களிடையே நடை ஒப்புமை, சொல்லாட்சி ஒப்புமை, பாடுபொருள் ஒப்புமைகட்கு, இக்கட்டுப்பாட்டு மனப்பான்மையே காரணம். இப்பண்பு அன்று பிறவியியல்பாக இருந்ததை, இன்று சிலரால் உணர்வது கடினம். மரபினிடையே தனித்தன்மை, தனி ஆளுமை, தனித்திறனும் மிளிர்வதை, மிகநுட்பமாகத் தேடியே பிரித்தறிய முடியும். அகநானூற்றில் ஒரு பத்துப் பாடல்களில் இரண்டும் எட்டும் குறிஞ்சி*;* நான்கு என எண்ணிட்டு வருவன எல்லாம் *(14, 24, 34)* முல்லை*;* ஆறு எனும் எண்ணிட்டு வருவன எல்லாம் *(16, 26, 36)* மருதம்*;* பத்துக்கள் எல்லாம் *(10,20,30)* நெய்தல்*;* ஏனைய ஒற்றைப்பட வருவன எல்லாம் *(1,3,5,7,9)* பாலை. இவ்வாறு தொகுக்கும் போது, கிடைத்த பாடல்கள் மிகச்சரியாக இதற்கேற்ப இருந்திருக்க இயலுமா*?* குறைந்த எண்ணிக்கையாக இருந்ததை, மேலும் சில பாடி நிறைவு செய்திருக்க வேண்டும்*;* கூடுதல் எண்ணிக்கை இருந்திருப்பின் சிலவற்றை விட்டிருக்க வேண்டும்.

குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு மூன்றும் அடிவரையறைப்படி தொகுக்கப் பெற்றிருப்பதை நோக்கும்போது, ஒரு திட்டமிடல் பின்னணி இருந்ததை மறுப்பதற்கில்லை. நான்கு முதல் எட்டடி வரையுள்ள பாடல்கள் குறுந்தொகை*;* ஒன்பது முதல் பன்னிரண்டு அடியளவுடையன நற்றிணை*;*

பதின்மூன்று முதல் முப்பத்தோர் அடிகளையுடையன அகநானூறு. இவற்றை நோக்கும் போது, ஆயிரக்கணக்கான அகப்பாடல்களை எடுத்து வைத்துக் கொண்டு, இவ்வாறு வகைப்படுத்தினரோ அல்லது ஒருவர் தொகுத்ததைப் பார்த்து அடுத்துவந்தவர் அதே மரபைப் பின்பற்றித் தொகுத்தனரோ எனும் ஐயங்கள் எழுகின்றன. நானூறு நானூறாகத் தொகுக்க வேண்டிய கட்டாயம் என்ன? ஏதோ பழம் மரபைக் காக்கவே, மரபுக் கட்டுப்பாட்டுடன் பாடிய இவற்றை, ஒருவழித் தொகுத்து என்றும் நிலைபெறுமாறு செய்த முயற்சியின் விளைவு இது என உணரவேண்டியுள்ளது. புறநானூறு ஒன்றுதான் முழுவதும் அவ்வப்போது பாடிய பாடல்களின் தொகுப்பாகப் படுகிறது. அதுவும் நானூறு பாடல்கள் மட்டும்தானா கிடைத்திருக்கும்?

கலித்தொகைபோல, பரிபாடலும் மதுரையை மையப்படுத்தி, மதுரையிலிருந்து பாடப்பெற்றுள்ளது. கலியும் பரிபாடலும் அகக்காதல் பாடல்களைப் பாட உகந்தவை எனும் தொல்காப்பியர் கூற்று, அவர் கால நிலையைக் காட்டுவது; நாட்டுப்புறப் பாடல்களின் நேர்வடிவம் அது. நாடோடிப் பாடல்களை அவ்வாறே பாடுவது வேறு; அவற்றை முழுவதும் இலக்கிய வடிவப்படுத்துவது வேறு. இவ்விரு பாடல்களின் 'இயற்கையாய் எழுந்த' முன்னையவை வாய்மொழியாய் இருந்து மறைந்தன. இவை குழுப்பாடல்கள்; ஆடலுடன் பாடுதற்குரியவை. உரையாடல்கள் உள்ளவை; வாய்மொழியின் நேர் வழிவந்தவை. பாரதியார் கும்மி, காவடிச் சிந்து போலும் நாடோடிப் பாடல்களுக்கு இலக்கிய வடிவம் தந்தது போன்ற முயற்சியின் விளைவுகள். எங்ஙனம் நோக்கினாலும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஒரு தொடர்ச்சிக்குட்பட்ட, ஏறத்தாழச் சமகால, புலமைச்சான்றோர் குழுவாம் அவையங்களால், அதுவும் தென்னாட்டில் பாண்டியர் தலைநகரங்களில் இருந்தவர்களால் திட்டமிட்டுத் தொகுக்கப்பட்டன என்பதை மறுப்பதற்கில்லை. 'புணர் கூட்டுண்ட' எனத் திரும்பத் திரும்ப வரும் தொடர், புலவர்களை அழைத்துப்பாட வைத்துக் கூடியிருந்து சுவைத்து மகிழ்ந்ததை உறுதிப் படுத்துகிறது. இத்தகைய திட்டமிடல், புலவர்கள் குழுக்களாகச் சேர்ந்திருந்தே செய்திருக்க இயலும். இஃதொன்றே 'அவையங்கள்' அன்று இருந்தன என்பதை நினைப்பூட்டப் போதுமான சான்றாகும்.

பாண்டிய நாடுதான் கடல்கோள்களால் அலக்கழிக்கப் பெற்றது; சேர நாட்டிலும் இந்த நிலை இருந்தது. தொடர்ந்து ஏற்பட்ட நில அரிப்புகளால் மக்களும் உடைமைகளும் கடலால் கொள்ளப்பட்டதோடு, இலக்கியச் செல்வங்களும் பறிபோயின. இதனால் புலவர்களைக் கூட்டித் தமிழ் இலக்கியக் கருவூலங்களை அரங்கேற்றியும் தொகுத்தும் காக்கும் முயற்சி இயல்பாகப் பாண்டிய நாட்டில் பரிணமித்தது.

ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தும் சேரநாட்டில் தொகுக்கப்பெற்றன. ஏனையவை பாண்டியர் அவையத்தில் தொகுக்கப்பெற்றன. இயற்கைச்

சீற்றமாம் கடல்கோள்கள், கடலரிப்புகளால் இழந்தவற்றை ஈடுசெய்யும் காப்புணர்ச்சியே இதற்குக் காரணமாகும். முச்சங்கங்கள் பற்றிய செவிவழிச்செய்திகள், புராணக்கதைகள் கூட, தொடர்ந்து நடந்த கடல்கோள்களினால் ஏற்பட்ட வரலாற்றின் அடிக்கருத்திலிருந்து முகிழ்த்தவையேயாம்.

இத்தகைய, 'திட்டமிடுதல்', 'பழைமையைக் காத்தல்', 'மரபுகள் அழிந்து மறைந்துவிடாமல் ஒரு தொடர்ச்சியைத் தர அரிதின் முயலுதல்' என்பவற்றின் விளைவாகவே தொல்காப்பியமும் சங்கப் பாடல்களும் திருக்குறளும் சிலப்பதிகாரமும் காட்சியளிக்கின்றன. இவற்றில் 'சமகால வெளிப்பாடு உடையவை', 'பழைமையைக் காக்க மரபுதழுவி எழுதியவை' என இருவகைப் பட்ட படைப்புக்களைக் கண்டறிந்து, இனம்பிரித்து, உண்மை அறியவேண்டும்.

சங்ககாலப் பின்னணி பற்றி முழுமையாய் அறிந்தாலன்றி, இவை தெளிவுபடா.

தமிழ் இலக்கியம் எழுத்துமொழி தோன்றாத, வாய்மொழி மரபு மட்டுமே நிலவிய வீரயுகம் தொட்டுத் தொடர்வது. ஆசிரியமும் வெண்பாவும் இலக்கிய வடிவம் பெறுதலில், முந்திக் கொண்டமையால், செவ்வியல் சார்பும் செறிவும் மிக்கனவாயின. கலிப்பா, பரிபாடல், வரிப்பாடல் போல்வன, இலக்கிய வடிவம் பெற்றாலும் கும்மியும் சிந்துவும் போல, நாட்டுப்புறத் தன்மை மேலோங்கி நிற்பன. அதனால் அவற்றில் புராணக் கூறுகள், நாட்டுப்புற வழக்குகள், உலக வழக்குச் சொற்கள் மிகுந்து காணப்படும். அவை சங்க காலத்தின், சமகால அல்லது நிகழ்கால எதிரொலிகள். அவை பிற்காலத்தன ஆகா.

புறநானூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடல் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியது. அதைப் பலர் பிற்காலத்து எழுதிச் சேர்க்கப் பெற்றதென்பர். பெருந்தேவனார், சிவபெருமானுடன் தொடர்புடைய கொன்றைமாலை, வெள்ளேறு, கறைமிடறு, அந்தணர் பரவுதல், பெண்ணுரு, பிறைநுதல், தவக்கோலம் ஆகியவற்றைப் பாடுவதால், அப்பாடல் பிற்காலத்தது என்பது அவர்கள் கருத்து.

**ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ**
**ஒருகணை கொண்டு மூஎயில் உடற்றிப்**
**பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த**
**கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்**
**பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல**
**வேந்துமேம் பட்ட பூந்தார் மாற!** (புறம் *55*)

இப்பாடல் பாண்டியன் நன்மாறனை மதுரை மருதனிளநாகனார் பாடியது.

**ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை**
**மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்**

கடல்வளர் புரிவளை புரையும் மேனி
அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடி யோனும்
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்
மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய்யோனும் என
ஞாலம் காக்கும் கால முன்பில்
தோலா நல்லிசை நால்வ ருள்ளும்
கூற்றுஒத் தீயே மாற்றரும் சீற்றம்
வலிஒத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே இகழுநர் அடுநனை
முருகொத்தீயே முன்னியது முடித்தலின் *(புறம் 56)*

இப்பாடல் அப் பாண்டியனை, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும *(புறம் 91)*

இது ஔவையார் அதியமானைப் பாடியது. மேலும் சிவபெருமானைப் பற்றி அந்தணர் பரவுதல் *(புறம். 15)*, மழுவாள் நெடியோன் *(மதுரைக். 455)*, ஆலமர் செல்வற்கு *(சிறுபாண். 97)*, நீள் நிமிர்சடை *(புறம். 166)*, தொல்முதுகடவுள் *(மதுரைக். 42)*, என வருவனவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். கடவுள் வாழ்த்தாகவே வருமிடம் வேறு, வேறு ஓர் இடத்தில் உவமையாக, இடைப்பிற வரலாக வருவது வேறு; புலவர் வே. அண்ணாமலை தொகுத்த 'சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம்' நூலையும் வைத்துக் கொண்டு, திருமுருகாற்றுப்படை, பரிபாடல், கலித்தொகையில் வரும் தொன்மங்களை ஏனைய சங்கத் தொகைநூல்களுடன் ஒப்பிட்டுப் படிக்க வேண்டும். பரிபாடல் முழுவதும் கடவுள் வாழ்த்தாகிய இசைப்பாடல்களின் தொகுப்பாதலால், புராணச் செய்திகள் மிக்கு வருகின்றன. சங்க கால நிலையை நேரே 'பிரதிபலிப்பது' அது. ஏனையவை மரபுத் தொடர்ச்சியைக் காக்க, மரபுக் கட்டுப்பாட்டுடனான பாடுபொருள் *(அகம், புறம்)* பற்றியன. ஆதலால் அவை பழைய மரபைப் 'பிரதிபலிப்பன' வாகின்றன.

**சங்கப் பாடல்கள் உணர்த்தும் பழம்பெரும் சமுதாய மரபுகள்**

சங்கப் பாடல்கள் பழைய கற்காலம் தொட்டு, உலோக காலம் வரையிலான வரலாற்றுக்கு முற்பட்ட காலச்சுவடுகளைப் பல இடத்தும் வெளிப்படுத்துகின்றன. தழையுடை பற்றியது முற்காலத்தை நினைவூட்டுகிறது. தலைவன் தன் நிலத்தில் விளைந்த பூக்கள், தளிர்களை உடையாகத் தொடுத்துத் தலைவிக்குப் பரிசிலாகத் தருவான். அதை அவள்

ஏற்றுக் கொண்டால், காதலுக்கு இசைந்தனள் என்பது குறிப்பு. குறுந்தொகை முதற்பாடலில் செங்காந்தட்பூக்களாலாகிய தழையுடையைத் தலைவன் கொண்டுதர, அதை ஏற்காத தோழி, 'எங்களிடமும் குருதி போன்ற நிறமுடைய செங்காந்தட்பூக்கள் குலைகுலையாகப் பூத்துள்ளன' என்று மறுக்கின்றாள். 'தண்தழைக் கடைசியர்' என்று *(புறம் 61)* உழவர் மகளிர், தழையுடை உடுத்தமை கூறப்படுகிறது. இதை 'ஒருவகை உடை' என்றும் 'அஃது ஆம்பல் முதலிய மலர்களினாலேனும் தளிர்களினாலேனும் விரவிய இவ்விரண்டினாலேனும் ஆக்கப்படுவது' என்றும் விளக்குவார் உ.வே.சா. தமது அடிக்குறிப்பில். "இனிய நீர் நிறைந்த சுனையில் பூத்த குவளையின் முகை அவிழ்ந்ததும் புறஇதழை ஒடித்ததும் முழுப் பூவுமானவற்றால் தொடுத்த தழையுடையை அணிந்த அல்குலையுடைய குறிஞ்சி மகளிர்" பற்றிப் புறப்பாடல் ஒன்று கூறுகிறது *(16)*.

சங்க காலம் நாகரிகம் முதிர்ந்த காலம் என்று கூறுகிறோம். 'பொன்னும் துகிரும் முத்தும், மன்னிய மாமலை பயந்த காமரு மணியும்' அணிகலன்களாகத் தொடுத்துச் செய்யப்பட்ட காலம் *(புறம். 218)*.

'கொட்டைக் கரைய பட்டுடை' *(பொருநர் 155)*

'பாம்புரியன்ன கலிங்கம்' *(புறம். 383, 397)*

'ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம்' *(பெரும்பாண் 469)*

'அரவுரியன்ன அறுவை' *(பொருநர் 83)*

இங்ஙனம் உடை பற்றி வரும் குறிப்புக்கள் மிகப்பல. ஆயினும் தழையுடை நாட்டுப்புற மக்களிடையே, காதல் வாழ்வின் குறியீடாகத் தொடர்ந்தமையும் காணப்படுகிறது. இதுபோலவே வெறியாடல், மடலேறுதல், மரங்களில் தெய்வம் உறைவதாக வழிபடுதல், பரதவர் சுறாமீனின் கொம்பை நட்டு வழிபடுதல், முதுமக்கட்தாழி, நடுகல்வழிபாடு எனத் தொன்றுதொட்டு வரும் பல பழக்க வழக்கங்கள் சங்கப்பாடல்களில் காணப்படுகின்றன.

புறத்திணை, துறைகள் பல நமக்கு வீரயுகத்தையே நினைப்பூட்டுகின்றன. தொகைநிலை, இருவரும் தபுநிலை, நூழிலாட்டு, களவேள்வி, களவாழ்த்து முதலியன, கலிங்கத்துப் பரணிக் காலம் வரை நீள்கின்றன.

**சங்கப்பாடல்களில் மரபுகளும் மாற்றங்களும்**

சங்கப்பாடல்கள் மரபுகளைக் காப்பதற்கென்றே தொடங்கப்பட்டதால், அவை தம் காலத்தைப் 'பிரதிபலிப்பதை' விடத் தமக்கு முற்பட்ட காலத்தையே வெளிப்படுத்துகின்றன. மேலும் பாடுவதற்கு எடுத்தாளும் பொருளிலும் மரபு, சுவை, கற்பனை கருதிய வேறுபாடுகள் உள.

இன்று எழுதப்படும் கதை, நாடகம், திரைப்படம்யாவும் காதல் கதைகளையே எடுத்தாள்கின்றன. சமுதாயத்தில் எண்பது விழுக்காடு,

பெற்றோர் முடித்துவைக்கும் திருமணங்களே நடந்தாலும் விறுவிறுப்பும் சுவையும் கருதிக் காதல் கதைப்புனைவுகளே பேரிடம் பெறுகின்றன. சங்க இலக்கியக் கற்பனையான, இனிய, உயரிய, செவ்விய சமுதாயப் புனைவினிடையே, அக்கால உண்மைச்சமுதாய நிலை ஒன்று வேறுபட இருப்பதை நாம் உய்த்துணர வேண்டும். அதாவது சங்கப்பாடல்கள் தம் காலத்தை வெளிப்படுத்துவனவும் தம் காலத்திற்கு முற்பட்ட காலத்தை வெளிப்படுத்துவனவுமென இரு கூறுடையன. ஒரு பாடலில் ஒரு கூற்று, ஒரு துறைதான் அமைதல் மரபு. ஆனால் குறிஞ்சிப்பாட்டில் பல்வேறு துறைகள் அமைந்து, அறத்தொடு நிற்றலைத் தலைமையாகக் கொண்டு முடிகிறது. அகப் பாடலில் புறச்செய்தி உவமையாக வரலாம் என்ற மரபைச் சாதகமாக்கிக் கொண்டு, பட்டினப் பாலை, ஆறு அடிகள் தவிர எஞ்சியயாவும் காவிரிப்பூம்பட்டினம் பற்றியே புனைகிறது. மதுரைக் காஞ்சியிலும் காஞ்சித்திணைச் செய்திகுறைவே. நெடுநல்வாடையை அகப்பாடலாகவே எழுதிய நக்கீரர், 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்' என்ற ஓரடியால், அப்பாடல் பாண்டியனைப் பற்றியதென்ற குறிப்பைச் சொல்லாமல் சொல்லிவிடுகிறார். பரிபாடல் அகமும் புறமும் கலந்த பக்திப் பாடலாக இருப்பது, சமகால எதிரொலியாகும். ஏனைய தொகை நூல்கள் ஒன்று அகம்பற்றியன; அல்லது புறம் பற்றியன. அவற்றில் காணப்படும் முதுமுதல்வன் *(சிவன்)*, மாயோன் *(திருமால்)*, சேயோன் *(முருகன்)*, கொற்றவை, அவுணர், கணியம், நான்மறை, நான்முகன், வேள்வி முதலான செய்திகளைப் பார்த்துப் பரிபாடலுடன் ஒப்பிட்டால், பக்திக்கெனவே பாடியதால் ஏற்பட்ட கூடுதல் தொன்மங்கள், அக்கால வழக்கிலிருந்தனவே எனும் உண்மை தெளிவுபடும்.[8]

அன்றைய களவு வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றங்களை, அகப்பாடல்கள் மிக நுட்பமாகவும் நாகரிகமாகவும் வெளிப்படுத்துகின்றன. சில பாடல்களில் வெளிப்படையாக வரும் 'காதல் தோல்வி' பற்றிய கருப் பொருள்கள், அடிக்குறிப்பால் மறைக்கப்படுகின்றன அல்லது நாகரிகமாக மாற்றியுணர வழிவகுக்கின்றன. அதற்குப் படைப்புக் கலை மனிதநேயத்தைப் பேண வேண்டும் என்ற கருத்து மேலோங்கி இருந்ததே காரணமாகும்.

கலிப்பாக்களில் வரும் தாழிசைகள் நாடோடிப் பாடல்பாங்கில் தலைமை சான்றன. சிலம்பில்வரும் கானல்வரி, ஊசல்வரி, கந்துகவரிகள் இத்தகையன. இவ் யாப்பு வடிவம் இசையுடன் பலர்கூடி ஆடிப்பாடுவதை நினைப்பூட்டுவதால், பாடும் உரிப்பொருட் செய்திகளும் சிறிது வெளிப்படையாய் அமைகின்றன. நெய்தற்கலியில் *142* முதல் *147* வரையுள்ள பாடல்கள் நச்சினார்க்கினியரால் 'பெருந்திணைக்' குறிப்புடையன என விரிவாக விளக்கப்படுகின்றன. இப்பாடல்களில் தலைவி, தன்னைக் கைவிட்டுப் போன தலைவனை நினைந்து, தெருவெல்லாம் அலைந்து அரற்றி அழுகின்ற காட்சி, கண்ணகி மதுரைத் தெருக்களில் புலம்பியழுத காட்சியைவிட மிகக் கொடுமையாக வுளது. 'களவொழுக்கத் தோல்வியிது' என எண்ணிப் பாடலைப் படிக்கும்

நமக்குச் 'சுரிதகம்' எனப்படும் இறுதிப்பகுதி 'சுபம்' என முடிகிறது. தலைவனும் வந்தனன் தலைவியும் துயர்தீர்ந்து மகிழ்ந்தனள் என முடியும்போது, நல்லந்துவனார் அக்காலப் படைப்புக்கலையில் மனிதநேயம் அமைய வேண்டுமென எண்ணியே இவ்வாறு முடித்துள்ளார் என்று எண்ணத் தோன்றுகிறது. தொடக்க காலத் தமிழ்த் திரைப்படங்கள் முழுவதும் அழுகையும் கண்ணீருமாய்ச் சோகப்படலமாய் ஓடி, இறுதியில் 'சுபம்' என, நன்முடிவுடன் முடியும். இதையே இந்நெய்தற்கலிப் பாடல்கள் நினைப்பூட்டுகின்றன.

குறிஞ்சிப் பாட்டில், கபிலர்,

> **கொடுப்பின் நன்குடைமையும் குடிநிரலுடைமையும்**
> **வண்ணமும் துணையும் பொரீஇ எண்ணாது**
> **எமியேம் துணிந்த ஏமம்சால் அருவினை** *(30-32)*

என்று தோழி தாயிடம் கூறுவதாகப் பாடுகிறார். இது பெரியோர்கள் பார்த்து, முடிவுசெய்யும் திருமணங்களும் அன்று மிகுதியாக நடைபெறத் தொடங்கிவிட்டன என்றும், சுவை மிகுதி கருதியே இன்றுபோல் அன்றும் காதற்பாடல்களே படைக்கப்பட்டன என்றும் கருத இடம் தருகிறது. 'பெண்ணைக் கொடுத்தால் பிற்காலத்தில் அவள் வாழ்வு நன்றாக இருக்க வேண்டும்; குடிநிலை வசதி வாய்ப்புக்கள் சமமாக இருக்க வேண்டும்; குணமும் அழகும் சுற்றத் துணையும் ஒத்திருக்க வேண்டும்' என்றெல்லாம், பெண்ணின் பெற்றோர் சிந்தித்து முடிவு செய்ததை இதனால் அறிகிறோம்.

> **கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
> **கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
> **கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே** *(1088)*

என்றும்

> **கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே**
> **புணர்ந்துடன் போகிய காலை யான** *(1089)*

என்றும் தொல்காப்பியரே சுட்டுவதால் அன்றே இவ்விருவகை மணமும் நிகழ்ந்தன என்பதையும் சமுதாயத்தில் ஒருதிருப்புமுனை ஏற்பட்டு விட்டதென்பதையும் அறியலாம்.

சங்க இலக்கியம் ஒரு பழங்குடிச் சமுதாய மரபுகளில் தொடங்கி, நாகரிக வளர்ச்சி நோக்கி நடந்ததையும் அதை மேன்மேலும் பண்படுத்த முயலும் ஓர் இலக்கியக் கோட்பாடு மரபு வழியாகப் பின்பற்றப்பட்டதையும் உய்த்துணர முடிகிறது. எனவேதான் சங்க இலக்கியம் தனது காலச் சமுதாயத்தைக் காட்டுமிடங்கள் எவை; ஒரு குறிக்கோள் சமுதாயத்தைக் காட்ட முயலும் இடங்கள் எவை எனப் பிரித்தறிய வேண்டுமென வற்புறுத்தப்படுகிறது.

# 5. இந்தியத் தமிழகம்

தெற்கே ஒரு பெருநிலப் பரப்பு இருந்து மறைந்ததை, வெளிநாட்டு அறிஞர்கள் சுட்டிக்கூறியுள்ளனர். அதனைத் தமிழ் நாட்டு வரலாறு பற்றிய நூல்களில் பரக்கக் காணலாம். அதுபோலவே அரப்பா, மகஞ்சதாரோ எனப்படும் சிந்துவெளி நாகரிகம் பற்றியும் மேனாட்டறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர்.[9] தமிழிலக்கிய வரலாற்றில், தமிழில் கிடைக்கும் அகச் சான்றுகள் இங்கு உற்று நோக்கத்தக்கன.

மிகத் தொன்மை வாய்ந்தது என நாம் கருதும் தொல்காப்பியம், தமிழக எல்லைகளை வரையறுத்துக் கூறுகிறது. பனம்பாரனார் தம் பாயிரத்தில்,

**வடவேங்கடம் தென்குமரி**
**ஆயிடைத்**
**தமிழ்கூறும் நல்லுலகத்து. . .**

என வடக்கே வேங்கட மலையையும் தெற்கே குமரியாற்றையும் குறிப்பிடுகிறார். பாயிரங்கூறும் இச்செய்தியை நூலுள் வரும் கூற்றும் மெய்ப்பிக்கிறது.

**வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்**
**நாற்பெயர் எல்லை அகத்தவர்** *(1336)*

என்று, மூவேந்தருக்குட்பட்ட இந்நிலப் பரப்பே சுட்டப்படுகிறது. வடவேங்கடம் என்பது வேங்கட மலைத்தொடர், இன்றைய திருப்பதி மட்டுமன்று. தென்குமரி என்பது குமரியாறு உள்ளிட்ட நிலப்பகுதி. குமரியாற்றுக்குத் தெற்கே, ஒரு பெருநிலப்பரப்பு இருந்துள்ளது. 'பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள' *(11-19:20)* என்று சிலம்பில் வரும்பகுதி, முன்னைய வரலாற்றைச் சுட்டுவதாக உளது. அதுவே 'குமரிக்கண்டம்' எனப்பட்ட பெருநிலப் பரப்பாகும். குமரிக்கண்டம் எத்துணைப் பரந்து விரிந்த நிலப்பகுதி என்பதை அடியார்க்கு நல்லார் உரையால் அறிகிறோம்.

பஃறுளி ஆறு தொடங்கிப் பலமலை அடுக்கங்கள், நீண்ட மலைத் தொடர்கள், குமரி மலை யாவும் 'கொடுங்' கடலினால் கொள்ளப்பட்டதாகக் குமரியாறு பாயும் நிலப்பகுதி மட்டும் மீதமிருந்துள்ளது. பனம்பாரனார் பாயிரத்தில் வரும் 'தென்குமரி' என்பதற்கு, நச்சினார்க்கினியர், 'குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல்கொண்டதாகலின்', ஆறு எல்லையாகக் கூறப்பட்டதென' விளக்கம் தருகிறார்.

கோப்பெருஞ்சோழனைப் பிசிராந்தையார் பாடிய புறநானூற்றுப்பாடலில்,

'குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவையாயின் இடையது
சோழநன்னாட்டுப் படினே. . . . .

என்று, மிகத் தெளிவாகக் குமரியாற்றைக் குறிப்பிடுகிறார். அயிரை மீன் ஆற்றில்மட்டுமே கிடைக்கக் கூடிய சிறியமீன், குட்டை குளங்களிலும் வாழும். பழைய உரையாசிரியர், 'குமரியாற்றினது துறைக்கண்ணே அயிரையை மேய்ந்து வடதிசைக்கண் இமயமலைக் கண்ணே போகின்றாயாயின், இவ்விரண்டிற்கும் இடையதாகிய சோழாநாட்டின்கண்' என எழுதுதலும் காண்கின்றோம். 'தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்' எனும் புறநானூற்று அடிக்கும், பழைய உரையாசிரியர் 'தெற்கின் கண்ணது உட்கும்திறம் பொருந்திய கன்னியாற்றின் தெற்கும்' என்றே உரையெழுதுகிறார் *(17-2)*. 'உருகெழுகுமரி'- அச்சம் பொருந்திய குமரி என்பானேன்? கடல் கோள்களினால் ஏற்பட்ட அச்சமே அது.

மாடல மறையவன் 'குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து' *(15-15)* என்று வரும் சிலப்பதிகார அடிக்கு, குமரியாற்றில் தீர்த்தமாடியதாகவே அடியார்க்கு நல்லார் உரையெழுதுகிறார்.

இவ்வாறு பலஇடத்தும் வரும் குறிப்புகளால் தெற்கே குமரிமலையின் ஒரு பகுதியும் அதில் தோன்றிக் கடலிற் கலந்த ஓராறும் இருந்தன; அவை சங்க காலத்தன என அறிய வாய்ப்புளது. அவற்றிற்கு முன்பாக ஒரு பெரிய நிலப்பரப்புக் கடலிற் கலந்ததையும், அதில் குமரி ஆறு ஒன்றே மீந்திருந்ததையும் அறிகிறோம்.

இதுவும் கடல்கோளால் அழிவுபட்டது. அதற்கு முன்னரும் கடல்கோள்கள் ஏற்பட்டதாகக் குறிப்புக்கள் கிடைத்தாலும், நாம் இங்கு நன்கு நினைவிற் கொள்ளுமாறு, பல இடத்தும் கூறப்படும் குமரியாற்றுக்கு முந்தைய கடல்கோளையும், குமரியாறும் மறைந்து குமரிக்கடல் அல்லது குமரி முனையான கடல்கோளும் ஆகிய இரண்டினை ஐயம் அற அறிகிறோம்.

பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் *(11-19 :22)*

என்று சிலப்பதிகாரம் அப்பெரிய நிலப்பரப்பைச் சுட்டுகிறது.

மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன் *(104)*

என்பது கலித்தொகை. குமரிக்கண்டம், குமரியாறு, குமரிமுனை என ஒரே பெயர் திரும்பத் திரும்ப வந்தாலும் எல்லைகள் வேறுவேறு.

முதன்முதல் இருந்த அவையம் அதற்குமுந்தைய நில அரிப்புக்களின் விளைவான உந்துதலால் ஏற்பட்டிருக்க வேண்டும். பஃறுளியாறும் மலையடுக்கங்களும் இருந்த காலத்து அவையம் அது. அப்பெருங்கடல் கோளால் அஃது அழிவுற்றுக் குமரியாற்றுடன் கூடிய நிலப்பகுதிக்கு வந்த போது அதே அவையத்தின் தொடர்ச்சிதான் இரண்டாவதாகும். அந்த ஆறும் நிலமும் மறைந்தது, மிகக் குறைவான காலப்பகுதிக்குள் ஆதல் கூடும். அதன்பிறகு வந்ததே மூன்றாம் அவையம் எனப்பட்டது. நமக்குக் கிடைக்கின்றவை இரண்டாம், மூன்றாம் அவையங்கள் இரண்டினையும் சார்ந்தன. தொல்காப்பியம் இரண்டாம் அவையத்தில் எழுதப்பெற்று, தமிழ்மொழி, இலக்கியத்தின் தொடர்ச்சி அறாமல் காத்தது. சங்கப் பாடல்கள் சிலவும் இவ்விரண்டாம் அவையக்காலப்பகுதியில் பாடப்பெற்றனவாகத் தோன்றுகின்றன.

> செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த
> முந்நீர் விழவின் நெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே *(9)*

இப்புறப்பாட்டு முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடியது. பாண்டியனின் முன்னோன் நெடியோனுக்குரியதாகப் பஃறுளியாறு குறிக்கப்படுகிறது. இந்நெடியோனே நிலந்தருதிருவிற்பாண்டியன் எனக் காரணப் பெயரால், தொல்காப்பியப் பாயிரத்தில் குறிக்கப்படுபவன். தனது நிலப்பகுதி மிகப்பெரிய கடல்கோளால் அழிந்ததால் இவன் அருகிலிருந்த சோழ, சேரர்களது நிலப்பகுதிகளை மட்டுமல்லாமல், இமயம் வரை தமிழ் மக்களைக் குடியேற்றி வாழவைத்தான் எனத் தெரிகிறது. அடியார்க்கு நல்லார் விளக்கம் ஒன்றும் இதை உறுதி செய்கிறது. இம்மன்னன் கடலொடு போராடி, நிலத்தை மீட்கப் பெருமுயற்சி செய்துள்ளான். கடலே இவனுக்கு அடிபணிந்து, இவன் பாதங்களை அலம்ப இவன் உயர்ந்துநின்றான் என்பதால் 'நெடியோன்' எனப் போற்றப்பட்டான். மக்கள் கொண்ட எழுச்சியால் இப் பெயரும் புகழும் வாய்த்திருக்க வேண்டும். 'முந்நீர் விழா' என்பது இவன் கடலை வெற்றி கொண்டதாக, அரித்த நிலத்தை மீட்டு வென்று விழாக்கொண்டாடியதாக எண்ணவைக்கிறது. கடலின் மீது இவன் 'வடிவேல்' எறிந்தான் என்பது, இவன் கடற்பகைவர்களை வென்ற செய்தியை நினைவூட்டுகிறது. அதாவது கடலின்மீது செலுத்திய இவனது அரசியல் ஆதிக்கம் கண்டு பொறாமல்தான், கடல் சீறி எழுந்து இவன் நாட்டைக் கொள்ளை கொண்டது என்றும் இவன் அதையும் வென்று, மக்களைக் காத்துப் பெரும் பெயர் பெற்றான் என்றும் மக்கள் நம்பினர்.

> **அடியில் தன்னளவு அரசர்க்கு உணர்த்தி**
> **வடிவேல் எறிந்த வான்பகை பொறாது**

பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் *(11-17 : 22)*

என்பது சிலப்பதிகாரம். அடியார்க்கு நல்லார் இந்த இடத்தில் 'கடல் எறிந்து கொண்ட எல்லையளவும் வடபால் தனதாக்கி மீண்டும் தென்திசையை ஆண்ட என ஒப்பாக்கலும் ஒன்று' என எழுதியுள்ளார். எந்த அளவு கடலால் கொள்ளப்பட்டதோ அந்த அளவு நிலத்தை, வடக்கே தன்னகப்படுத்தி, மக்களைக் குடியேற்றி வாழ வைத்தவன் என்பது குறிப்பு. வடபகுதி இமயமலை உட்பட, கடலினுள், ஆழ்ந்துகிடந்து வெளிப்பட்ட நிலம் எனவும் ஒரு கருத்துண்டு.

மாங்குடி மருதனார், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் புகழும்போது, அவனுடைய முன்னோன், இந்நிலந்தந்த திருவின் நெடியோன் எனக் குறிப்பிடுகிறார்.

உயர்ந்தோங்கிய விழுச்சிறப்பின்
நிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல் *(59-61)*

மீண்டும் மாங்குடி மருதனார்,

பல்சாலை முதுகுடுமியின்
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல *(760-763)*

என்று, மதுரைக் காஞ்சியில் வாழ்த்துகிறார். இந்நிலந்தரு திருவின் நெடியோன் 'புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பினை'யுடைய அவையத்திலே தான் தொல்காப்பியம் அரங்கேற்றப் பெற்றதென்று பனம்பாரனார் பாயிரம் கூறுகிறது. காலத்தால் முற்பட்ட பல்யாகசாலை முதுகுடுமியை, நெட்டிமையார் 'முந்நீர் விழவின் நெடியோனது, நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலநாள்' வாழ வாழ்த்துகிறார் *(புறம். 9)*. இம்முதுகுடுமிப் பெருவழுதியை,

காரி கிழார்,

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும் *(புறம் 6-1:4)*

மற்றும் கீழுலகம், மேலுலகம் அனைத்திலும் புகழுடன் வாழ வாழ்த்துகிறார். நெடியோனின் வழிவந்த முதுகுடுமியையும் சுட்டி வாழ்த்துவதால், இவர்களின்

கால அணிமையும் உணரப்படும். 'நிலத்தரு திருவின் நெடியோன்' பற்றிப் பல பாடல்களில் வருகிறது. 'நிலத்தரு திருவின் நிழல்வாய் நேமி' *(சிலம்பு. 15-1)*. சேர மன்னனும் 'நிலந்தரு திருவின் நெடியோன்' எனப் பாராட்டப்படுவது, அங்கும் கடலரிப்பால் நாட்டின் பகுதிகள் பல இழக்க நேரிட்டதை நினைப்பூட்டுகிறது. *(பதிற்று. 82-16; சிலம்பு. 28-3)*. பதிற்றுப்பத்துப் பாடப்பெற்று, அம் மன்னர்களது புகழ் நிலைநிறுத்தப் பட்டதற்கும் அங்கு ஐங்குறுநூறு பாடித் தொகுக்கப்பட்டதற்கும் இவ்வியற்கைச் சீற்றத்தின் எதிரொலியே காரணமாகும். இந் 'நெடியோன் புகழ்' காலங்கடந்தும் நினைவுகூருமளவு பெருமையுடையதாக விளங்கியுள்ளது. 'கடல் வடிவலம்ப நின்ற பாண்டியன்', 'செய மாகீர்த்தி', 'கடல்சுவற வேல்விட்ட படலம்' என்றெல்லாம் திருவிளையாடற்புராணங்கள், இவ் வரலாற்றுக்குத் தொன்ம வடிவு தந்தன.

ஆக, தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்கம், நிலந்தரு திருவிற் பாண்டியனின் அவையத்தில் தொடங்குகிறது. அன்றைய தமிழகம் 'வடவேங்கடம் தென்குமரிக்கு' உட்பட்டதாக இருந்தது.

அதனுள் செந்தமிழ் நிலமும் செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்து பன்னிருதிசை வழக்குகள் பேசப்பட்ட பகுதிகளும் இருந்தன. பிறகு கன்னட, மலையாள மொழி பேசும் தனிப் பகுதிகளாக இவை பிரிந்தன. வடக்கே, வேங்கட மலைத் தொடருக்கு அப்பால், அதாவது இன்றைய ஆந்திர நாட்டு நெல்லூர்ப் பகுதிகளுக்கும் அப்பால், தமிழிலிருந்து மிகவும் திரிபுற்ற மொழியைப் பேசிய 'வடுகர்' வாழ்பகுதி இருந்தது, மாமூலனார், 'தமிழ்கெழு மூவர் காக்கும், மொழிபெயர் தேஎத்த பன்மலை இறந்தே' *(அகம். 31)* என வேற்று மொழி பேசும் நிலப்பகுதி என்று இதைக் குறிப்பிடுகிறார். இப் 'பன்மலைத் தொடர்' என்பதில் ஏழில் குன்றம் எனப்படும் ஏழுமலைகளும் அடங்கும். புல்லி, திரையன் போலும் தமிழ் மன்னர்கள் இம் மலைநாட்டை ஆண்டனர் *(அகம். 83,85)*. 'பனிபடு வேங்கடத்து உம்பர், மொழி பெயர் தேஎத்தராயினும் *(அகம். 211)*, 'வேங்கடத்து உம்பர்--வடுகர் தேஎத்து' *(அகம் 213)* என இவ்வாறு, தலைவன் பிரிந்து பொருள்தேடச்சென்ற பகுதி, ஆந்திரநாட்டு இராயலசீமைக்கு அப்பாற்பட்ட வடநாடு எனும் குறிப்பு, பல பாடல்களில் இடம் பெறுகிறது. 'கல்லா நீள் மொழிக் கதநாய் வடுகர் *(அகம். 107)* என்றினைய தொடர்களால் அவர்களின் தொடக்க கால நிலையை அறியலாம். துளுநாடு தமிழகத்தின் ஒரு பகுதியாகவே விளங்கியது *(அகம். 15)*. வடுகர் பகுதி ஒன்றே 'மொழிபெயர் தேஎம்' எனப்படுகிறது. ஏனைய கொங்கணர், கொடுங்கருநாடர் அல்லது எருமை நாட்டினர், குட, குட்ட நாட்டினர் எல்லோரும் தமிழகம் சார்ந்த திசைவழக்குகளைப் பேசியவர்களாகவே சங்கப் பாடல்களில் குறிக்கப்படுகின்றனர். "ஒரு காலத்தில் கன்னடத்தைக் கருநாட்டுத் தமிழ் என்றும் துளு மொழியைத் துளுநாட்டுத் தமிழ் என்றும் மலையாளத்தை மலைநாட்டுத் தமிழ் என்றும் சிலர் குறிப்பிட்டது உண்டு, " என்பார் மு. வரதராசனார். பிற்காலத்தில்

இவை இசைவழக்குகளிலிருந்து மேலும் திரிபுற்றுத் தனி நாடுகள் என்னுமாறு பெயர் பெற்றன.

**தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி,**
**பன்றி, அருவா, அதன்வடக்கு - நன்றாய**
**சீத, மலாடு, புனல்நாடு செந்தமிழ்சேர்**
**ஏதம்இல் பன்னிருநாட் டெண்**

எனும் தனிப்பாடல் 'பன்னிரு நாடு' என்றே குறிப்பிடக்காணலாம்.

இவ்வாறு தமிழகம் 'தமிழ்கெழு மூவர் காக்கும்' தேயமாகவும், 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பாகவும்' விளங்கினாலும், தமிழர் களுக்கு இந்தியா முழுமையையும் ஒரே நாடாகப் பார்க்கும் பார்வை நன்கு வேரூன்றி இருந்ததைச் சங்கப் பாடல்கள் தெளிவாக உணர்த்துகின்றன.

**வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்**
**தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்**
**குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்**
**குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்**

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் புகழ் பரவியிருந்ததாகக் காரிகிழார் பாடுகிறார் *(புறம்6)*. பனிபடு நெடுவரை பனிமலை, இமயமலையைக் குறிக்கும். இத்தொடர், அம்மலைபற்றிய தெளிவான அறிமுகமிருந்ததைச் சுட்டும். பாரதியாரும் 'வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்' எனப் பாடியதை நினைவுகூர்க. கடலரிப்புக்கு ஆளாகிக் கொண்டேயிருந்த குமரியை, 'உருகெழு குமரி' என்று பாடியிருப்பதும் காண்க. இவை கற்பனைகளாயின், இவ்வாறு நடப்பியல் பாங்குடனும் நன்குபழகிய அனுபவ அறிவுடனும் பாடப்பெற்றிரா.

**தென்குமரி வடபெருங்கல்**
**குண குட கடலா எல்லை**
**குன்று மலை காடு நாடு**
**ஒன்றுபட்டு வழிமொழிய**

என யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைக் குறுங்கோழியூர் கிழார் பாடுகிறார். இந்தியா ஒரு நாடாகப் படம் வரைந்து காட்டப்படுகிறது. சேரமான் உதியஞ்சேரலாதன் பாரதப் போரில், பெருஞ்சோறு படைத்து, அனைவரையும் காப்பாற்றினான். 'பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்' என அழைக்கப்பட்ட அவனது வரலாற்றைக் கற்பனை என்போரும் உளர். எனினும் 'பெருஞ்சோற்றுநிலை' எனும் புறத்துறை ஒன்றிற்கு ஏற்ப அவன் வழங்கியதை முரஞ்சியூர் முடிநாகராயர் பதிவு செய்கிறார்.

**அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ**
**நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை**

ஈரைம்பதின்மரும் பொருதுகளத்தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்

என்பார் அவர் *(புறம் 2)*. அது 'தும்பைப்போர்' என்பதும் 'ஈரைம் பதின்மரும்' தோற்று அழிந்ததும் உண்மையே. இது நந்தர், மோரியர் உட்பட, வடநாட்டை நன்கு அறிந்து, பல பாடல்களில் பாடியவராகிய மாமூலனாராலும் பதிவு செய்யப்படுகிறது.

மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇ இருந் தாங்கு *(அகம். 232)*

என்பது அது. 'துறக்கம் எய்திய முதியர்' - இறந்துபோன முதியவர்களுட்பட்ட வீரர்களுக்கு ஈமக்கடனாற்றி அளித்தபெருஞ்சோறு இது.

ஓர்ஐவர் ஈரைம்பதின்மர் உடன்றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தான் அளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்

என்று, வாழ்த்துக்காதை ஊசல்வரிஃபில் இளங்கோவும் இதைக்குறிப்பிடுகிறார். எங்ஙனமாயினும் இமயம் முதல் குமரிவரை ஆட்சி செய்ததாகப் புனையப்படும் பல பாடல்கள், முன்னோர் புகழாயினும் பாடல் பெற்றவர் புகழாயினும் அப்படி ஒரு நிலைமை பல காலும் இருந்ததை மறுப்பதற்கில்லை. இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் சேரர்களிலும் இமயத்தில் இலச்சினை பொறித்த கரிகாலன் சோழர்களிலும் இமயம்வரை ஆண்ட நிலந்தருதிருவிற் பாண்டியன் பாண்டியர்களிலும் குறிக்கத் தகுந்தவர் ஆவர். தமிழ்ப் புலவர்களுக்கு இமயச்சாரல் பற்றிய நேர்முக அனுபவங்களிருந்ததையும் அறிகிறோம்.

அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கில் துஞ்சும்
பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்றே *(புறம் 2)*

எனும் முடிநாகர் ஆயர் இமயமலையில் மட்டுமே காணப்படும் மான் வகையைச் சுட்டுவதோடு, அந்தணர் பற்றியும் கூறுகிறார். 'நாஅல் வேத நெறிதிரியினும், திரியாச் சுற்றமொடு வாழ' வாழ்த்துகிறார். ஒருதீ வழிபாடு, முத்தீ வழிபாடென்று மாறியது வேத காலத்திலேதான் என்பர். 'இறைஞ்சுக பெருமநின் சென்னி, சிறந்த நான்மறை முனிவர் ஏந்து கை எதிரே' என்பார் காரிகிழார் *(புறம்.6)*. கிள்ளிவளவனைப் பாடும் நப்பசலையார் 'ஓங்கிய வரை

அளந்து அறியாப் பொன்படு நெடுங்கோட்டு இமயம்' என்று, அதன் சிகரங்களைச் சுட்டுகிறார்.

வடநூல்களில் தென்னாடு- தட்சிண பாதம் - பற்றிய குறிப்புக்கள் பலவுள. எனினும் இந்திய நாட்டை, அப்பழங்காலத்திலேயே 'ஒரு நாடாகப்' பார்க்கும் பார்வை, சங்கப்பாடல்களிற்போல, வேறெந்த மொழி நூல்களிலும் காணுமாறில்லை. 'குமரியொடு வட இமயத்து ஒரு மொழிவைத்து உலகாண்ட சேரலாதற்கு' என்பது சிலம்பின் வாழ்த்துக் காதைத் தொடக்கமாகும். பதிற்றுப்பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடும்போது,

> **கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி**
> **பரந்து இலங்கு அருவியொடு நரந்தம் கனவும்**
> **ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்**
> **தென்னங் குமரியொடு ஆயிடை** (பதிற். *11)*

உள்ள மன்னர்களை வென்று ஆண்டதாகக் கூறுகிறார். திருவள்ளுவர் கூறும் 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்' இமயமலையிற் காணப்பட்டது என்பதை இப்பாடல் விளக்குகிறது. கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடியபோது, 'வடதிசை எல்லை இமயமாகத் தென்னங் குமரியொடு ஆயிடை' மன்னரை வென்றதாகக் கூறுகிறார். அதில் யானைக் கூட்டம் நிறைந்தது எனவும் 'கடவுள் நிலைய கல் ஓங்கு நெடுவரை' எனவும் கூறுதல் கருதத்தக்கது. 'வடவர் உட்கும் வான்தோய் வெல்கொடிக் குடவர் கோமான்' என்பது இப் பாடலின் பதிகம். இந்தியத் துணைக் கண்டத்தை முழுமையாகப் பார்த்து, கங்கைச் சமவெளி, நந்தர், பாடலிபுத்திரம், மோரியர் பற்றியெல்லாம் வரும் பழம்பாடற்குறிப்புக்களைத் தனி ஆய்வாகவே தொகுக்கலாம். இவை உணர்த்தும் ஒரு செய்தி, மிகப் பழங்காலத்தே தமிழர்கள் பரத கண்டம் முழுவதும் பரந்து வாழ்ந்திருந்தனர் என்பதும், வடவேங்கடம் தென் குமரிக்குள் தமிழகம் சுருங்கிய காலத்தும் அவர்கள் போர்வென்றியாலும் வாணிகத் தொடர்பாலும் வடநாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்பதுமாகும்.

வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே இந்தியா தமிழர்களின் தாயகமாக இருந்து, பிறகு குடியேறியவர்களுடன் கலந்தும், தென்னாட்டளவில் சுருங்கியும் மாறியது. 'இந்து' ஆங்கில நாளிதழில் *(21, பிப் 1980)* வி.ஜி. இராமச்சந்திரன் எழுதிய 'வாசகர் கடிதம்' ஒன்று, மிக விரிவாகத் தனி நூலில் எழுதத்தக்க செய்தியைச் சுருக்கித் தருகிறது. அது வருமாறு: "தமிழர்கள் தென்னிந்தியாவிற்கு மட்டுமே உரியர் என்ற கருத்து தவறுடையதாகும். இமய மலைவரை அவர்கள் செல்வாக்கு பழங்காலத்தே பரவியிருந்தது. வடநாட்டுப் புதிய 'இந்தி ஆர்வலர்கள்' இராமாயண காலத்திலேயே *(கி.மு. 4439)* தமிழர்கள் செழிப்புற்றோங்கிய நாகரிகம் நிறைந்த

இனத்தாராக இருந்தனர் என்பதை அறிய வேண்டும். அதற்கு முன்னால் இரகு சக்கரவர்த்தி (சூரிய வமிசத்தைத் தோற்றுவித்தவன்) அன்றிருந்த பாண்டிய மன்னனுடன் (கி.மு. 5500) போரிட்டு வென்ற செய்தி, காளிதாசருடைய இரகு வமிசத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இந்துமதியின் சுயம்வரத்தில் பாண்டிய மன்னனும் வந்திருந்தான். அவள் இரகு மன்னனின் மகனாகிய அஜனுக்கு மாலையிட்டுத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள். கிருஷ்ண பெருமான் குமரிக்கண்டத்துப் பாண்டியனை (கி.மு. 3100) வெற்றி கொண்டார். வியாச பகவான் மகாபாரதப் பெரும் போரில் (கி.மு. 3067) பாண்டவர்களைப் பாண்டிய சேர சோழ வீரர்கள் ஆதரித்ததாகக் கூறியுள்ளார். வான்மீகி அயோத்தியில் தசரதனின் அரசர்கள் பேரவையில் பாண்டிய மன்னனும் வந்திருந்தான் எனக் கூறியுள்ளார். ஹரப்பாவிற் கிடைத்த எழுத்துச் சான்றுகள் ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இரு நகரங்களிலும் (கி.மு. 5000-3000) தமிழ் மக்கள் மிகுதியாக இருந்தனர் என்பதை வெளிப்படுத்துகின்றன. திருச்சூர் இராமகிருஷ்ணா ஆசிரமத்தைச் சார்ந்த சுவாமி சாக்கியாநந்தாவின் கருத்தின்படி அம்மக்கள் சந்திர வமிசத்தவராகிய யயாதி, புரு, அனு ஆகியவர்களின் வழிவந்தோர் ஆவர். இவையனைத்தும் பாரத நாட்டவர் ஒரே ஒரு இனத்தவரே தவிர (ஆரியர், திராவிடர் என) இரண்டு இனத்தவரல்லர் என்பதைக் குறிக்கின்றன. இருக்கு வேதம் கி.மு. 6000 காலத்தது. அதில் நீர, பழ (நீர், பழம்) என்ற தமிழ்ச்சொற்கள் காணப்படுகின்றன. அதற்கு முன்பிருந்தே தமிழும் வடமொழியும் பிரிக்க முடியாத சகோதரிகளாக இலங்கி வந்துள்ளன.

பாலி மொழி இலக்கியத்தில் பாரதநாடு முழுமையும் 'தமிழுக்' (Tamuluk) என அழைக்கப்படுகிறது. இது இந்திய நாடு முழுமையும் தமிழர்கள் பரவியிருந்தனர் என்பதைக் காட்டுவதாகவுள்ளது. வங்காளத்தில் ரூப் நாராயண ஆற்றங்கரைகளில் உள்ள மிட்னாப்பூர்ப் பகுதியில் மயிலின் மரபுவழித் (மயில் மரபினர்) தமிழ் அரசர்கள், தமிழுக்கில் தம் தலைநகரத்தைக் கொண்டு ஆட்சி செலுத்தினர். ஆர்.டி. பானர்ஜி எழுதிய, 'வங்காளத்தில் பாலி மொழியினர்' என்ற ஆய்வு நூலில் இது வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. உதயப்பூரின் (இராஜஸ்தான்) புகழ் பெற்ற மன்னனான உதயணன், இராஜஸ்தானத்திலிருந்த பத்துத் தமிழ்ச்சேரிகளிலிருந்து சேர்க்கப்பட்ட மிகப் பெரிய தொரு தமிழ்ப் படையைப் பெற்றிருந்தான். கொங்குவேளிர் எழுதிய தமிழ்க் காப்பியமாகிய பெருங்கதை என்ற நூலில் இவ்வுதயணனின் உணர்ச்சியூட்டும் வரலாறு காணப்படுகிறது. பேராசிரியர் மதிவாணன், உதயணன் ஒரு தமிழனே எனக் கருதுகிறார். ஏனெனில் அவன் பைசாச பிராகிருதம் என்ற மொழியைப் பேசினான். அஃது ஆரியப்படுத்தப்பட்ட தமிழேயாம். அவன் கி.மு.500 இல் ஆட்சி செய்தான். மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர் 'உதயணன் பெருங்கதை' பற்றிய பைசாச, பிராகிருத நூலொன்று (இன்று கிடைத்திலது) முன்பு இருந்ததெனக் குறிப்பிட்டுள்ளார்.

இச்சான்று மூலங்கள் அனைத்தும், வடநாட்டில் முற்காலத் தமிழர்கள் பரவியிருந்தமையை மேலும் ஆழமாக ஆராய வேண்டும் எனத் தூண்டுகின்றன. இன்று கல்கத்தா நூலகங்களில் கிடைக்கும் பழங்காலப் பாலி மொழி இலக்கியத்தை ஆராய்ந்தால், இது பற்றி மேலும் விளக்கம் கிடைக்கக்கூடும். அறிஞர் வி.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஒரு தனிநூலில் விவாதிக்கத்தக்க செய்திகளை இம்மடலில் தொகுத்துத் தந்துள்ளார்.

வடநாட்டில் பிறமொழியாளர் (துரானியர், ஆரியர்) புகுந்ததால் அங்கு பேசப்பட்டுவந்த பழந்தமிழ் அல்லது மூலத்திராவிட மொழி பல்வேறு திரிபுற்றுக் கிளைமொழிகள் ஆனது. அவற்றுள் பாலி, பிராகிருதம் தலைமைவாய்ந்தவை; ஏனையவை பைசாச பிராகிருதம் எனப்பட்டன. கோலாமி, பார்ஜி, நாய்கி, கோந்தி, கூ, குவி, கோண்டா, மால்டா, ஒராவோன், கட்பா, குருக், பிராகூய் முதலியவை மேனாட்டறிஞர்களால் திராவிட மொழிகள் என இனமறியப்பட்டுள்ளன. வடமொழி யல்லாத திராவிட மொழிக் குடும்பத்தை இனங்கண்டு, வேறு பிரித்து, திருந்திய திராவிட மொழிகள் ஆறு, திருந்தாத திராவிட மொழிகள் ஆறு என விளக்கிய கால்டுவெல்தான், முதன்முதல் தமிழின் தனித்தன்மையை உலகறியச் செய்தவர். இன்று வடஇந்தியத் திராவிட மொழிகள், மத்திய இந்தியத் திராவிட மொழிகள், தென்னிந்தியத் திராவிட மொழிகள் என இவை வகைப்படுத்திப் பேசப்படுகின்றன. இந்தியாவின் வடமேற்கே பலுச்சிஸ்தானத்தில் பேசப்பட்ட பிராகூய் மொழியில் திராவிட மொழிக்கூறுகள் மிக்கிருப்பது முதன்முதல் அறியப்பட்டு, இப்பரந்துபட்ட ஆய்வுக்கு வழிவகுத்தது.

பி.டி. சீனிவாச அய்யங்கார் வேதம், இதிகாசம், புராணம் ஆகிய அனைத்து சமற்கிருத நூல்களையும் கற்றும், பௌத்தப் பாலி, மற்றும் சமணர்களின் அர்த்தமாகதி அனைத்தையும் படித்தும் தம் 'தமிழர் வரலாற்று' நூலை எழுதி யிருப்பதாக அதன் முன்னுரையில் குறிப்பிடுகிறார் (All the available Aryan sources have been ransacked for information). அவர் பிராகூய் எனும் (Brahui) கிளை மொழியில் தமிழ்ச்சொற்கள் காணப்படுவதை வைத்து, மிகப் பழங்காலத்தே வடமேற்கு இந்தியாவில் தமிழ் அல்லது தமிழோடு தொடர்புடைய மொழி அங்குப் பேசப்பட்டு வந்தது என்பதைச் சான்றுடன் நிறுவமுடிகிறது என்று கூறுகிறார். மேலும் ஒருபடி மேலே சென்று அவர் கூறுவன கருதத்தக்கன. "இதற்கு வேறு ஒரு சான்றும் துணை ஆதாரமாகிறது, அதாவது சமஸ்கிருதம் அல்லது கௌடியன் வழிப்பட்டவை என அழைக்கப்படுகிற, இக்கால வடஇந்திய மொழிகள், திராவிட மொழிக் கிளை மொழிகள் போலவே அடிப்படை இலக்கணக் கட்டமைப்பும் வாக்கியத் தொடரமைப்பும் உடையனவாயுள்ளன. எந்த அளவு ஒற்றுமையெனில் இவற்றில் ஒரு கிளைமொழிக் குழுவின் வாக்கியங்களை, மற்றொரு கிளைமொழிக் குழுவின் மொழி ஒன்றுடன், உள்ளது உள்ளவாறே சொல்லுக்குச் சொல் மாற்றிப் போட்டு, கருத்து மரபு கெடாதபடி மொழி

பெயர்த்துவிடலாம். இம்மெய்ம்மைகள் ஒரு காலத்தில் தமிழுடன் உறவுடைய கிளைமொழிகளைப் பேசும் மக்கள் இந்தியா முழுவதும் பரவி வாழ்ந்தனர் என்பதையும் இம்மக்கள் இந்தியாவுக்கு வெளியேயிருந்து குடியேறி வந்தவர்கள் அல்லர் என்பதையும் உறுதிப்படுத்துகின்றன. பழைய கற்காலம் முதல் புதிய உலோக காலம் வரையிலான மிகப் பழங்காலத்தில், தொடர்ச்சி யான ஒரு நாகரிகம் (தமிழகத்தில்) இங்கு வளர்ந்ததைக் காட்டும் பழைய சின்னங்கள், கலைப்பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்நீண்ட காலப் பரிணாம வளர்ச்சியுகத்தில், தமிழ்மொழி தென்னாட்டில் திகழ்ந்தது. இந்த நாகரிகத்தின் ஒவ்வொரு படிநிலையையும் விளக்கப்போதுமான சொல்லாட்சிகள், தமிழின் தொன்மைக்கால இலக்கியத் தொகுப்பில் காணப்படுகின்றன. இத்தொடக்க காலப் பழக்கவழக்கங்களின் தொடர்ச்சிகள் போதுமான அளவு இடையறாது விளங்கியமை, இன்று கிடைக்கும் அப்பழங் காலத்தமிழிலக்கியங்களில் நன்கு புலனாக்கப்படுகின்றன."[11]

இந்திய வரலாற்றையோ, தமிழர் வரலாற்றையோ எழுதிய பிறர் பலருக்கு வடமொழி மற்றும் வட இந்திய மொழிகளிலும் இலக்கியங்களிலும் இருந்த அளவு புலமை தமிழிலக்கியங்களில் இல்லாது போனமையால், அவர்கள் ஒரு சார்புபட எழுதியதில் வியப்பில்லை. பேராசிரியர் சீனிவாச அய்யங்காருக்கு, அவர்களினும் மிகுதியாக வடமொழிசார்ந்த புலமையுடன், தொல்காப்பியம் உள்ளிட்ட பழந்தமிழ் நூல்களிலும் நல்ல ஆழ்ந்த புலமை இருந்தமையால், அவர் தெளிந்த சிந்தனையுடன் நடுநிலை பிறழாது பல கருத்துக்களை முன் வைத்துள்ளார். தொடர்ந்து எழுதுவார்க்கு இன்றும் இனியும் அவை வழிகாட்டுவன எனில் மிகையாகாது.

# 6. தமிழகமும் தமிழ்மக்களும்

இந்தியா முழுவதும் தமிழகமாக இருந்தது ஒரு காலம். சங்க இலக்கியங்கள் பாடப்பட்டுத் தொகுக்கப்பட்ட போது, அது வட வேங்கடத் தொடர், குமரி யாறு எனும் இவற்றினுட்பட்டதாக இருந்து, பிறகு இன்றைய நிலையை ஒட்டியமைந்தது. தமிழக நில அமைப்பின் படி மலை, குன்று சூழ் பகுதிகள், காடடர்ந்த நிலங்கள், ஆற்றுப் பாசனமும் வயலும் சூழ்ந்த வளம் நிறைந்த பூமி, கடற்கரையோர நிலங்கள் என வேறுபாடறியப்பட்ட நான்கு நிலப்பகுதிகளாக இருந்தன. இவற்றுள் குன்று, காடுசூழ் இடங்களின் எல்லையோரப்பகுதிகள் அங்குள்ள பருவமாறுதல்களின்படி கோடை காலத்தில் பெரும் வறட்சியுறுவதுண்டு. மீண்டும் மழைக்காலத்தில் அங்கு நிலம் செழிப்படையும். இவையும் தமிழகத்திற்கு வடக்கே நெடுவழிகளில் இருந்த பாலைநிலங்கள் பலவும் நீண்ட தொலைதூரப் பயணங்களுக்குதவும் பெருவழிப் பாதைகளாகப் பயன்பட்டன.

மலை காடு ஆறு கடல் சார் பகுதிகள் நான்கும் சமநிலையில் காணப்பட்டதுடன், இவை ஒன்றுடன் ஒன்று தொடர்பின்றித் தனித்தனியே பிரிந்துகிடந்த காலங்களும் உண்டு. இவை படிப்படியாக ஒருங்கிணையும் காட்சிகளை நாம் சங்க நூல்களில் காண்கிறோம். எனினும் முன்னைய தனித்தன்மைகளின் வளர்ச்சியைச் சங்கப்பாடல்கள் விளக்குகின்றன.

பேராசிரியர் சீனிவாச அய்யங்கார் மலைவாழ்வு, காட்டுள் வேட்டையாடிய காலம், பயிர் வளர்த்து வேளாண்மையால் நாகரிகம் வளர்ந்து செல்வச் செழிப்புற்ற மருதநிலக் காலம், கடலோரப் பகுதிகளில் வாழ்ந்து வாணிகம் முதலியவற்றில் முன்னேறிய காலம் என மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற இப்பகுப்பில் முறையே காணப்படுவதாக விளக்குகின்றார்.

மேலும் ஆரியர் வருகைக்கு முன் வடநாட்டிலும் இதே போல, ஐந்து நிலப்பகுப்பும் ஐவகை மக்கட்பிரிவும் இருந்தன என்பார் அவர். மக்களின் வாழ்க்கை நெறிகளும் தென்னாட்டிற்போலவே இந்தியா முழுவதுமிருந்தது என உறுதிபடக் கூறுதலும் கருதற்பாலது.

அக்காலத்தே இந்த நான்கு நிலத்தவர்க்கும் தொழில் வேறுபாடு இருந்தது. உணவு, பயிர்வகை வேறுபாடுகளும், பழக்க வழக்கச் சடங்குகளில் வேறுபாடுகளுமிருந்தன. கலைத்துறை தொட்டுப் பெயர்க்குறியீடுகள் வரை தனித்தன்மைகளுடன் இந்நிலப் பகுதிகள் இலங்கின. ஒவ்வொரு

நிலத்தவரும், தொடக்கத்தில், வெவ்வேறு வகையான இசைக் கருவிகளைப் பயன்படுத்தினர். மலையும் காடும் அணித்திருந்ததால் அவற்றிடையே நிலக்கலப்பு ஏற்படவும் ஆறுகளும் அவை கலக்கும் கடலும் நெருக்க முற அமைந்திருந்ததால் அவற்றிடையே ஒருங்கிணைதலும் ஓரளவு தோன்றலாயிற்று.

பொய்கையார் பாடல் ஒன்றில்

> **நாடன் என்கோ? ஊரன் என்கோ?**
> **பாடுஇமிழ் பனிக்கடல் சேர்ப்பன் என்கோ?**
> **யாங்ஙனம் மொழிகோ, ஓங்குவாட் கோதையை** *(புறம். 49)*

என வருகிறது. நாடன் - மலைநாடன். ஊரன் - மருதநிலத்தவன். சேர்ப்பன்- கடல் பகுதியினன். ஒரு மன்னனது நாடு, இந்நான்கு நில வளமும் உடையதாக இருப்பது ஒரு சிறப்பு எனக் கருதப்பட்ட காலம் அது.

மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலம் எனப்பட்டன. வேட்டுவன், மலை கிழவோன், மாமலைநாடன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி, குறமகள் எனத் தலைமக்கள் மற்றும் அந்நிலமக்கள் அழைக்கப்பட்டனர். காடும் காடுசார்ந்த பகுதியும் முல்லைநிலம் எனப்பட்டன. பொதுவன், ஆயன், இடையன், ஆய்ச்சி, ஆயமகள் என்றினையன அந்நில மக்களை அழைக்கப் பயன்பட்டன. வயலும் வயல்சார்ந்த பகுதியும் கொண்ட ஆற்றங்கரைப் பகுதிகள் மருதமெனப்பட்டன. ஊரன், மகிழ்நன், உழவன், உழத்தி என மக்கள் அழைக்கப்பட்டனர். கடல் சார்ந்த பகுதிகள் நெய்தல்நிலம் எனப்பட்டன. சேர்ப்பன், துறைவன், கொண்கன், பரதவன், பரதவர் மடமகள் என அவர்கள் பெயரிட்டழைக்கப்பட்டனர். முதலில் இவ்வாறு நில அடிப்படையிலான தொழிலால் வேறுபட்ட இம்மக்கள் பற்றியே சங்கப் பாடல்கள் பகர்கின்றன.

ஆயினும் சமுதாயத்தில் ஆரியர் வருகைக்குப்பின், தமிழரிடையே அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் எனத் தொழிலால் நான்கு பிரிவுகள் ஏற்பட்டு, வேறுபாடறியப்பட்டன. இவற்றிற்கும் வடநூலாரின் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் எனும் பிறப்பினாலான வருணப் பகுப்புக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

பாலைநிலம் எதுவும் விளையாத நிலமாகும். அங்கு எயினர், எயிற்றியர் வாழ்ந்தனர். 'ஆறலை கள்வர்' என வழிப் போவாரைக் கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் வாழ்ந்தனர் என்ற குறிப்பும் உளது.

சங்கப் பாடல்கள் தமிழக நிலப்பகுதிகளை, அகப்பாடல்களின் பின்னணியாக்கின. நிலம், பொழுது *(முதற்பொருள்)*; பிற இயற்கைச் சூழல்கள் *(கருப்பொருள்)* ஆகிய இவை நாடகத்தில் வரும் பின்னணித் திரைச்சீலைகள் போல, அகப்பாடல்களுக்கு ஏற்ற பின்புலமாயின. இக்கருப்பொருள் என்பதில்

மக்கட்சமுதாய வாழ்வும் அடங்கும். சங்க இலக்கியத்தில் இன்று நமக்குக் கிடைப்பது மிகச் சிறிய பகுதியேயாகும். எனினும் அதன்வழி தமிழகஇயற்கைப் பூவியல் அமைப்பைத் தொகுத்து, படம்பிடித்துக் கண்ணெதிரே பார்ப்பதுபோல் பார்க்கலாம்.

சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதை, காடுகாண் காதை, வேட்டுவவரி போல்வன கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளுடன் மதுரை நோக்கி நடந்த பாதையை விளக்குதலின், தமிழக நாட்டுப்புறச் சிற்றூர் வாழ்வு நிலைகளும் நிலப் பின்னணியும் நன்கு அறியப்படுகின்றன. செங்குட்டுவனின் வடதிசைப் பயணமும் குறிக்கத்தக்க அளவு, வடநாடு செல்லும் வழியைப் புலப்படுத்துகிறது. தமிழக நகரங்கள் பற்றி மிகுதியான விவரங்கள் கிடைக்கின்றன. காவிரிப்பூம்பட்டினம் பற்றிச் சிலப்பதிகார இந்திரவிழவூர் எடுத்த காதையும் பட்டினப்பாலையும் விளக்குகின்றன. மதுரைக் காஞ்சி, சிலப்பதிகார ஊர்காண்காதை, நெடுநல்வாடை போல்வன பல தெளிவுபட விளக்குதல், இன்றும் அம்மதுரைநகரைக் கண்முன் காணவைக்கும் திறனுடையது. சிலப்பதிகார வஞ்சிக்காண்டம் வஞ்சிமூதூரின் சிறப்பெல்லாம் விளக்கவல்லது. ஆற்றுப்படைகள் வழிவிவரம் கூறி, வழிகாட்டுவனவாதலால், மலைபடுகடாம் உட்பட அவையாவும் தமிழக நிலப்பரப்பையும், மக்கள் வாழ்வையும் அறியத் துணை செய்கின்றன.

தமிழர்கள் நாகரிகத்திலும் கடல்வாணிகம் மற்றும் தரை வாணிகத்திலும் மிகச்சிறப்புற்று விளங்கியதை அறிகின்றோம்.

தமிழகம் மூவேந்தர்களால் ஆளப்பட்டது. இவர்கள் மிகத் தொன்மைமிக்க காலந்தொட்டு, ஆட்சிபுரிந்து வந்த பேரரசர்கள் ஆவர். பரிமேலழகர், "சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருதல்" என்று குறிப்பிடுகிறார் *(குறள் 955)*. மேலும் குறுநில மன்னர், படைத்தலைவர் போல்வார் இனவழி அரசுகளாக விளங்கினர். கிரேக்க அரசுகளை நகர அரசுகள் *(*City states*)* என்றால், தமிழக அரசுகளை இனவழி அரசுகள் *(*Communal States*)* எனலாம். அன்று ஒரு குன்றும் அதனைச் சார்ந்த சில நூறு ஊர்களும்கூட ஒரு சிற்றரசனால் ஆளப்படும். இவற்றை மூவேந்தரின் கிளையினத்தவர்களும் நிலக்கிழார்கள், படைத் தலைவர்களாயிருந்து அரசு ஆளும் நிலையை அடைந்தவர்களும் ஆண்டனர். இவ்வாறு பல்வேறு இனக்குழுவினரால் தமிழகம் தன்னாட்சிக் காலத்தில் ஆளப்பட்டது. சில சமயம் மூவேந்தர்களில், யாரேனும் ஒருவர் தலைமையடைந்து மற்றவரை அடக்கி ஆள்வதுண்டு. வேந்தர்களுக்குள் அரசுரிமையுடைய இருவர் அல்லது ஐவர் என ஒரு காலப்பகுதியில், நாட்டின் வெவ்வேறு பிரிவை ஆள்வதுண்டு. இதனால் நாள்தோறும், இவ்வீரத் திருநாட்டினர், தமக்குள்ளேயே போரும் பூசலுமாய்ச் சண்டைபிடித்துக் கொண்டு ஒற்றுமை குலைந்து வேற்றுநாட்டினர் புக வழிவிட்டனர்.

சில காட்டுகள் மூலம் இதை அறியலாம். ஆய்குடி, ஆவியர் குடி, வேளிர்குடி எனச் சிறுசிறு குடிவழியினரைப் பற்றியும் குறிப்புக்கள் கிடைக்கின்றன. பறம்பு மலையும் அதனைச் சார்ந்த முந்நூறு ஊர்களும் குறிஞ்சிநிலப் பறம்பு நாடாகும். கொங்கர் ஆண்ட கொங்குநாடும் பூழியர் ஆண்ட கொண்கானமும் முல்லைநில இனவழி அரசுகளாகும். ஓரியின் கொல்லியும் ஆயின் நவிரமும் குறிஞ்சி நில இனவழி அரசுகளாகும். மத்தி யாண்டபகுதி கடற்கரையோர நாடாகும். இவ்வாறு சொல்லிக்கொண்டே போகலாம். ஆரியர் வழிப்பட்ட வருணபேதம் பிறப்பு அடிப்படையில், பார்ப்பனரை உயர்வுபடுத்தப் பயன்பட்டது. ஆனால் இங்கு 'ஆயிரம் உண்டிங்கு சாதி' எனப் பாட வைத்த பல்வேறு சாதிவளர்ச்சி, இவ்வினக்குழுவாம் குடிவழிப் பரம்பரைகளேயாகும்.

நிலத்தெய்வ வழிபாட்டு முறையும் கல்லெடுத்து வணங்குதலும் தமிழர்களின் சமய வளர்ச்சிக்குக் கால்கோளிட்டன. உருவ வழிபாடு, இங்ஙனம் இங்குக் கால்கொண்டது.

ஆரியர்கள் வேதகாலத்திற்கு முன்பு ஒற்றை நெருப்பு வழிபாட்டு முறையையும் (one fire-cult) வேத காலத்தில் முத்தீ வழிபாட்டு முறையையும் கைக்கொண்டனர். சங்கப் பாடல்களில் 'முத்தீ' வழிபாடு பற்றிய குறிப்பே காணப்படுகிறது. அக்கினி தேவன் வழியாக, மேலுலகத் தேவர்களுக்கு, அனைத்துப் பொருள்களையும் போட்டால், அவை காணிக்கையாக அங்கு போய்ச்சேருமென்றும், அதனால் அத்தேவர்களின் அருளைப் பெற்று எல்லா நலன்களையும் எய்தலாமென்றும் ஆரியர்கள் நம்பினர். ஆனால் திராவிடர்கள் கண்ணெதிரே சிலைவடிவில் தெய்வங்களைக் கொண்டுவந்து நிறுத்தி, அத்தெய்வங்களுக்குப் படையலிடுவதையே தம் வழிபாடாகக் கொண்டனர். படையலைத் தெய்வங்கள் அருவநிலையில் ஏற்குமென நம்பினர். அவ்வாறு ஏற்கப்பட்டபின், அவ்வுணவு வகைகளைப் பலருக்கும் பகுத்துக் கொடுத்துத் தாமும் உண்டு இறையருளைப் பெற்றனர். இவ்வேறுபாட்டை, பேராசிரியர் சீனிவாச அய்யங்கார் மிக விளக்கமாகச் சுட்டிக்காட்டுகிறார். இன்றையத் திருக்கோயில்களும் அவற்றுக்கான ஆகமங்களும் வடமொழி வேதங்களுக்கு வேறுபட்டவை மட்டுமன்று, முரண்பட்டவை என்பது அவர் கருத்தாகும். இன்று இரண்டுங்கெட்டானாய், இவ்வழிபாடுகள் கலப்புற்றுப் போயின.

தமிழர்கள் மரங்களிலும் மலைகளிலும் நடுகற்களிலும் தெய்வம் உறைவதாக நம்பினர். பல்லிசொற் கேட்பது, அசரீரி எனப்படும் விரிச்சி கேட்பது, முழுத்தம் என நல்லநாள் பார்ப்பது, கனவு பலிக்குமென்பது, பறவை முதலியவற்றினால் குறி (சகுனம்) பார்ப்பது, கோடாங்கி மற்றும் குறத்தியரிடம் அருள்வந்து சொல்லும் குறிகேட்பது என்றினைய பல்வேறு மூடநம்பிக்கைகள் பழந்தமிழரிடம் குடி கொண்டிருந்தன. காக்கை கரைந்தால் விருந்துவரும், நரிமுகத்தில் விழித்தால் நன்மை உண்டாகும் என்பன போன்ற 'குறி'களும் காணப்படுகின்றன. பேய் பற்றியும், தாக்கணங்கு எனத் தீண்டிவருத்தும்

தெய்வம் பற்றியும், கொல்லிப்பாவை எனக் கண்ணால் கண்டாலே உயிரை வௌவும் பெண்தெய்வம் பற்றியும் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

அதே சமயம் அவர்கள் என்றும் நிலையான மானுட விழுமியங்களை அறிந்து போற்றினர். நாகரிகத்தின் உச்சத்தைக் காட்டும் சிந்தனைச் சிகரங்களை அவர்களின் பாடல்களில் காணமுடிகிறது. செல்வச் செழிப்புமிக்க நாகரிக முதிர்நிலைகள் பல ஆங்காங்கு பளிச்சிடுகின்றன.

மேலோங்கிய செல்வச் செழிப்பு, பொன், மணி, இரத்தினக் குவியல்கள், மயில்தோகை, யானைத்தந்தம், மிளகு எனவும் மணம்தரும் பொருள்களாகிய அகில், சந்தனம் எனவும் இங்கு அச்செல்வம் குவிந்து கிடந்தது.

கடல் வாணிகத்தில் அவர்கள் நிகரின்றி வாழ்ந்ததற்கு நூற்றுக் கணக்கான குறிப்புக்கள் உள்ளன. கட்டைமரம் முதல் மிகப் பெரிய வங்கம் எனப்படும் பாய்மரக் கப்பல்கள் வரை அவர்கள் பயன்படுத்தியவை (தெப்பம், புணை, நாவாய் முதலியன) மிகப் பலவாகும். *1965* இல் வெளியிடப்பட்ட சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்பில் (Vol. xx. Part I) 'சங்க காலத் தமிழரின் கடற்செலவு' எனும் நீண்ட கட்டுரையில் பேராசிரியர் மெ. சுந்தரம் ஏறத்தாழ நூறு சான்றுகள் தந்துள்ளார்.

தீக்கடைகோலால் கலங்கரைவிளக்கம் அமைத்துக் கப்பல்களுக்கு வழி காட்டியதைப் பெரும்பாணாற்றுப்படை *(346-51)* கூறுகிறது. பெரிய கப்பலில் வந்த பொன் முதலியவற்றைத் தோணிகளால் கரை சேர்த்ததை புறப்பாட்டொன்று பகர்கிறது. 'கலம் தந்த பொற்பரிசம், கழித்தோணியான் கரை சேர்க்குந்து' என்பது அது *(343)*. கடல்வழி வாணிகம் பற்றி, பட்டினப் பாலை பகர்வன, இன்றைய நாகரிக உச்சத்திற்கும் இணையாய் எண்ண வைக்கின்றன. 'உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்' என்ற அடி, கப்பல் எவ்வளவு பெரியதாக இருந்ததென்பதைக் காட்டுகிறது. (அகம். *255*). இக் 'கலங்கள்' மூலம் குதிரைகளும் இறக்குமதி செய்யப்பட்டன (பெரும்பாண். *391-93*, மதுரைக். *321-23*, பட்டினப். *185*).

**சினமிகு தானை வானவன் குடகடல்**
**பொலம்தரு நாவாய் ஓட்டிய அவ்வழி**
**பிறகலம் செல்கலாது அனையேம்** (புறம் *126*)

மாறோகத்து நப்பசலையார் சேரமன்னன் இவ்வாறு கடலில் கலம் செலுத்துவதில், வேறு யாருக்கும் இடமில்லாதபடி, தனக்கே உரித்தாக உயர்ந்துநின்றதை உவமையாகத் தருகிறார்.

தமிழர்களைப் போலவே கிரேக்க நாட்டிலிருந்து யவனர்கள் இங்குவந்து, பொன்னைக் கொடுத்துவிட்டு, மிளகைப் பெற்றுச் சென்றனராம். அவர்களது 'வினை மாண் நன்கலம்' பற்றிய குறிப்பும் அறியத்தக்கது.

'சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி *(அகம் 149)*

இம்முசிறியை மட்டுமல்லாமல், வேறுபல மேற்குக் கடலோரத் துறைமுகங்கள் பற்றியும் பிளினி என்ற கிரேக்கப் பயணி குறிப்பிடுகின்றான். அவை யாவும் கடலாற் கொள்ளப்பட்டன. கிழக்குக் கடலோரப் பட்டினமாகிய புகாரும், காஞ்சியும் பிறசில பட்டினங்களும் கடற்கோளுக்கு இலக்காயின. மிகத்தொன்மையான காலத்திலிருந்து, கிரேக்க உரோமனியர், எகிப்தியர் முதலான பிறநாட்டவருடன் கடல்வாணிகம் செய்து வந்ததோடு, கடற்பகைவர்களுடனும் நிலஅரிப்புக் காரணமாகக் கடலுடனும் போராடிய வரலாறு, சங்கநூற்சான்றுகளால் தெரியவருகிறது.

கரிகாற் பெருவளத்தானை வெண்ணிக் குயத்தியார் பாடிய புறப்பாடலில்,

நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக! *(66)*

என்று, அவனது முன்னோனைக் கூறிப் புகழ்கிறார். இதற்குப் பழைய உரையாசிரியர் 'நீர் செறிந்த பெரிய கடலின்கண்ணே மரக்கலத்தை ஓட்டிப் போர் செய்தற்குக் காற்றின்றி நாவாய் ஓடாதாக ஆண்டு வளிச்செல்வனை அழைத்து ஏவல்கொண்ட வலியோன் மரபினுள்ளானே!' எனப் புராண விளக்கம் எழுதியுள்ளார். இதன் நேர் பொருள் 'வளி தொழில் ஆளுதல்' என்பது, காற்றடிக்கும் திசையைவைத்து, கலங்களைச் செலுத்தி, அக்காற்றைத் தனக்குப் பணிசெய்யும் படி செய்த, அத்துணைத்திறல் மிக்க சோழன் என்பதேயாகும். கிரேக்கப் பயணி ஹிப்பாலஸ் என்பவன் கிழக்கு நோக்கி வீசுகின்ற காற்றைப் பயன்படுத்திக் கொண்டு, அக்காற்றுவீசும் பருவத்தில், முசிறித் துறைமுகத்தை அடைந்தானாம். சோழனோ மேற்கு நோக்கிக் காற்றுவீசும் பருவத்தை வைத்து, கலங்களைச் செலுத்தியுள்ளான். கிரேக்கப் பயணியின் பெயர் காற்றுக்கே இடப்பெற்று, காற்றடிக்கும் திசைபார்த்துக் கலத்தைச் செலுத்துவதைக் கண்டுபிடித்தவனே ஹிப்பாலஸ்தான் என்று உலகக் கலைக்களஞ்சியங்களில் குறிப்பிட்டுள்ளனர். (Pliny state that 'if the wind called Hippalus be blowing, Musiri, the nearest mart of India can be reached in forty days' (J.W.MeCrindle, op. Cit. pp. 111-12) ஆனால் தமிழர்தம் இத்தகு முயற்சிகள் பல இன்றளவும் உலகறியாமலே உள்ளன. பிளினி தவிர, தாலமி, பெரிப்ளூஸ் நூலாசிரியர் முதலான வெளிநாட்ட்வர் பலர், இக்கடல்வாணிகம் பற்றி விளக்கியுள்ளனர்.

கி.மு. ஆயிரம் ஆண்டினை ஒட்டி வாழ்ந்த சாலமோன் காலத்தில், அம்மன்னனுக்கு மயில்தோகையும் யானைத் தந்தமும் சந்தனம் அகில் முதலான நறுமணப் பொருள்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. மூன்றாண்டுக்கு ஒருமுறை இவ்வாணிகம் தொடர்ந்து நடந்தது. ஹீப்ரு மொழியில் துகி *(தோகை)* என்ற சொல்லும் அஹலத் *(அகில்)* என்ற சொல்லும் காணப்படுகின்றன. 'பீலிபெய் சாகாடு' *(475)* என்று மயில் தோகையை ஏற்றுவது பற்றியே, திருக்குறள் குறிப்பிடுகிறது. இன்று ஆங்கிலத்தில் கறி *(Curry)* என்ற சொல், கிரேக்க மொழி வழியாகச் சென்று வழங்குகிறது. பழந்தமிழில் 'கறி' என்பது மிளகைக் குறிக்கும். இதுபோலவே கட்டமரான், சாண்டல், ரைஸ் போன்ற பல சொற்கள் கிரேக்க, இலத்தின் மொழிகளுக்குச் சென்று, இன்றைய ஆங்கிலத்திலும் காணப்படுகின்றன. கிரேக்க நாட்டிற்கு அனுப்பப்பெற்ற இஞ்சிசிக்கிபெரஸ் அதன் வழி சிஞ்சர் *(Ginger)* ஆனது, பிப்பிலி-பெப்பரி அதன் வழி பெப்பர் *(Pepper)* ஆனது, நாவாய் நேவி *(Navy)* ஆனது. உரோமப் பேரரசன் அகஸ்டஸ் காலத்துப் பொற்காசுகள் தமிழகத்தில் கிடைக்கின்றன. இதுபோன்ற சான்றுகள் தமிழக வரலாற்றில் விரிவாகப் பேசப்படும்.

தரைவழி வாணிகம் என்பது வடநாட்டுடன் தமிழர்கள் செய்ததேயாம். ஆந்திரம் கடந்து சென்று வாணிகம் செய்ததையே அகப்பாடல்கள் அனைத்தும், பாலைநில வழியாகச் சென்று பல இடர்ப்பாடுகளுற்றுப் பல ஆண்டுகள் மனைவி மக்களைப் பிரிந்து வாழ நேரிட்டதாகப் புனைகின்றன. மு. வரதராசனாரின் ஓவச் செய்தி நூல், இதை விரிவாக விளக்குகிறது. வடமொழி நூல்கள் இவ்வாணிகம் பற்றிக் குறிப்பதைச் சீனிவாச அய்யங்கார், மிக விரிவான சான்றுகளுடன் விளக்கியுள்ளார். தென்னாட்டு முத்தும் மணியும் பவளமும் பொன்னும் அணிகலன்களும் பிற பலவகை மணப்பொருள்களும் வடநாட்டவரை தென்னாடு போந்து வாணிகம் செய்யவும், தென்னாட்டு வணிகரை வடநாட்டில் வரவேற்கவும் காரணிகளாயின.

வடநாட்டு அரசர்கள் தென்னாட்டைப் போரிட்டு வெற்றிகொண்டு இங்கே புகவில்லை. அசோகனும் கலிங்கத்தை வென்றானே தவிர, மூவேந்தர்களை நண்பர்களாகவே குறிப்பிடுகின்றான். "வடக்கேயிருந்து ஏதாவது படையெடுப்பு நடந்திருந்தால், சங்ககாலப் புலவர்கள் வாயிலாக நாம் நிச்சயம் கேள்விப்பட்டிருப்போம். ஆனால் போரெனில் கிளர்ந்தெழும் தமிழக அரசர்களை, வேள்விகளால் மிகப்பெரும் நன்மைகளை அடையலாம் என ஆசைகாட்டி உறுதிகூறித் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் பிராமணர்கள் கொண்டுவந்தனர். தங்கள் தோற்றம் கல்வி அமைதி போன்றவற்றாலும் அவர்கள் போரே வாழ்வாக இருந்த தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெற்றனர். அப்பிராமணர்கள் தமிழை நன்கு கற்றனர். கபிலர் போலும் பெரும் புலவர்களை மனிதநேயம் மிக்கவர்களைச் சங்க காலத்தில் காண்கின்றோம்.

மற்றபடி வடமொழி தமிழைவிட உயர்ந்ததாகவோ, தமிழை அடக்கி யாண்டதாகவோ எவ்விதக்குறிப்பும் சங்கப்பாடல்களில் காணப்படவில்லை. இவ்வளவு தூரம் பிராமணரைத் தமிழ் ஆட்கொண்ட காலம் அது. பின்னாளிலோ, அம்மொழி தமிழ் மக்கள் அனைவரையும் தமிழ் மன்னர்களையும் அடிமைகொள்ளும் பேராற்றலாக மாறிய காலங்கள் பல தோன்றின". இவ்வாறு ஹெப்சிபா சேசுதாசன் விளக்குவன பல தமிழிலக்கிய வரலாற்றில் தோய்ந்து அறிந்து எழுதிய மெய்ம்மைகளாகும். 'அக்காலத் தமிழ்ப் பிராமணர்கள், தத்தெடுக்கப்பெற்ற தமிழர்களாகவே விளங்கினர், ஆயினும் தங்கள் குலவழித்தனிமையைக் காப்பதில் மிகக் கவனமாகவும் இருந்தனர்' என்றும் திருமதி சேசுதாசன் குறிப்பிடுகிறார்.[12]

**தமிழ்நாட்டு அந்தணர்கள்**

தமிழகத்தில் உள்ள அந்தணர்கள் பற்றி, வரலாற்றுப் பேரறிஞரும் வடமொழியும் பாலியும் பிறவுமாகிய வடநாட்டுச் சான்று மூலங்களை நன்கு கற்றறிந்தவருமாகிய பி.டி. சீனிவாச அய்யங்கார் கூறுவனவற்றை இங்குத் தொகுத்துக் காண்பது பயன்தரும். பின்னர்ச் சங்க காலந்தொட்டு, இவ் அந்தணர்கள் பற்றித் தமிழ் நூல்களில் வரும் முக்கியமான குறிப்புக்களையும் ஒருவழித் தொகுத்து ஒப்பிட்டு உண்மை அறியலாம்.

"பண், பாணர், பாட்டு, பாடினி எனும் சொற்கள் பாடுவதை ஓர் இனிய பொழுதுபோக்காகக் கொண்ட, தமிழர் நாகரிகத்தைக் காட்டும். முதலில் பாடும் பாணர்களாக நாடோடிகளாக இருந்த இவர்கள், பிறகு அரசர்களைப் புகழ்ந்துபாடி, அவர்களால் புறந்தரப்பட்டு, பரிசும் பாராட்டும் பெற்றுத்திகழ்ந்தனர். தமிழர் நாகரிகம் வளர்ச்சியுற்ற நீண்ட காலப்பகுதியில், இப்பாணர்கள், அரசர்களின் நண்பர்களாகவும் ஆலோசகர்களாகவும் விளங்கினர். ஆயினும் மது, புலால்உணவு போன்றவற்றில் மூழ்கிக் கிடந்ததால், ஆரியப் பண்பாடு இங்கு நுழைந்தபின், இவர்கள் தரம் தாழ்ந்து, தீண்டத்தகாத கீழ்க்குலத்தினர் எனும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் *(ப. 16).*

இந்தியா முழுவதும் தமிழும் தமிழுடன் தொடர்புடைய கிளை மொழிகளுமே பரவியிருந்தன என்று கூறும் சீனிவாசனார் வடநாட்டிலேயே ஆரியர்கள், அங்கிருந்த மக்களுடன் கலந்து இருவகைப்பட்ட பிரிவினர் ஆயினர் என்பதைத் திட்டவட்டமாகக் கூறுகிறார். வேத காலத்திலேதான் ஒருதீ வழிபாடு, முத்தீ வழிபாடாயிற்று எனக் கூறும் அவர், அன்றே வடக்கும் தெற்கும் வாணிகத் தொடர்புபட்டு, நெருக்க முற்றிருந்ததென்று கூறி, விந்திய மலைக்குத் தெற்கே எவ்விதத் தொடர்புமின்றி, வடநாடு தனித்திருந்ததென்ற வி.ஏ. சுமித் கருத்தை மறுக்கின்றார் *(ப. 19).* வேத காலத்தில் தட்சிணபாதம் என்பது, ஆரியரைப் பிரிந்து கலப்புற்றுப் போனவர்களை, வடநாட்டிலிருந்து நாடுகடத்தும் இடமாகவே கருதப்பட்டது எனும் மாக்டோனெல், கெய்த் ஆகியோர் கருத்தை இப்பேராசிரியர் ஒப்புக் கொள்கிறார். அதாவது வடநாடு

'புண்ணிய பூமி' என்று கருதப்பட்டதாம். ஆரியாவர்த்தம் என்ற அதன் எல்லைக்கு அப்பால் தெற்கே, வடநாட்டில் 'சாதியை விட்டு விலக்கப்பட்டவர்கள்', ஆரியச் சடங்குகளினாலான நன்மைகளை அடையத் தகுதியற்றவர்கள் எனக்கருதப்பட்டவர்கள் குடியேறிச் சென்றார்கள் *(ப. 20)*.

இத்தகைய ஆரியர்கள், தூய ஆரியர்கள் எனக் கருதப்பட்டவர்களால் விலக்கப்பட்ட காரணம், பௌத்த சமண சமயக் கருத்துக்கள், திராவிடப் பண்பாடு இவற்றைப் பின்பற்றியதன் விளைவாகும் எனலாம். எனினும் தங்கள் உயர்சாதிச் சிந்தனையையும், குலவழிச் சடங்கு மரபுகளையும் விடாமலே இங்ஙனம் விலக்கப்பட்டவர்கள் தென்னாட்டுள் புகுந்துள்ளனர்.

தூய ஆரியர்கள் வடநாட்டுத் திராவிடர்களை 'தஸ்யூக்கள்' என்றே அழைத்தனர். வெட்சி எனப்படும் ஆனிரை கவர்தல், முற்காலப் போராக, வடநாட்டு 'தஸ்யூக்களிடமும்' விளங்கியது. ஏனெனில் வேளாண் தொழிலில் ஈடுபட்டிருந்த அவர்களுக்கு இவ்ஆனிரைகளே செல்வமாக இருந்தன.

பரசுராமனின் குடியேற்றம் தொடங்கி, ஆரியப்பண்பாடு, தொன்மை மிக்க காலத்தில் சேரநாடடில்தான் முதன்முதலாகப் பரவிற்று *(ப. 29)*. வேத வேள்வி செய்யும் அக்கினி வழிபாட்டை முதன்முதலாகத் தென்னாட்டிற்குக் கொண்டு சென்ற ரிஷி பரசுராமரே எனலாம் *(31)*. விசுவாமித்திரரும் அவருடைய ஐம்பது மகன்களும் சுத்த ஆரியர்களால், தெற்கே நாடு கடத்தப் பட்டதாகவரும் புராணக்கதை வரலாறு அடிப்படையில் இப்பேராசிரியர் விளக்குவன மனங்கொளற்பாலன. டி.ஆர். பண்டார்க்கர் இதுபற்றிச் சொல்வதை அவர் மேற்கோள் காட்டுகிறார்.

"வடநாட்டு ஆரியர்களால் நாடு கடத்தப்பட்ட இவர்கள் 'தஸ்யூக்களின் மகளிரை மணந்து கொண்டார்கள். இவர்கள் அவ்வாறு, பூர்வ குடிகளோடு திருமணம் செய்து கொண்டு தடையேதுமின்றிக் கலந்தது, அவர்களிடம் ஆரியப் பண்பாட்டைப் புகுத்துவதற்கேயாகும்.'

இதை ஏற்கும் அய்யங்கார், 'தஸ்யூக்களை' நாகரிகப்படுத்தவே எனும் கருத்தை வன்மையாக மறுக்கிறார். ஏனெனில் அப்பூர்வ குடிகள் நாகரிக மற்றிருக்கவில்லை.. அத்திராவிடப் பழங்குடிகள் மிக நாகரிகமுற்றிருந்தனர் என்ற செய்தியை, இம்மேனாட்டறிஞர்கள் தமிழிலக்கியத்திலும் கலைகளிலும் படிக்காததால் ஏற்பட்ட அறியாமையே, இத்தவறான முடிவுக்குக் காரணம் என மிக விரிவாக எழுதி மறுத்துரைக்கிறார், இப்பேரறிஞர். வேதகால 'ரிஷிகள்' இத் தஸ்யூக்களைத் தம் எதிரிகள் எனக் கருதியதாலேயே இவ்வாறு பழித்துரைத்துள்ளனர். எனினும் அதன் பக்கத்திலேயே அத் 'தஸ்யூக்களின்' மிகவுயர்ந்த நாகரிகச் சிறப்பையும், அவர்களின் ஆனிரைச் செல்வத்தையும், பொன் அணிகலன்களையும், அவர்களின் செல்வவளத்தையும் இன்னபிற சிறப்புக்களையும் அந்த ரிஷிகள் சொல்லியுள்ளனர் என்பது நினைவுகூரத் தக்கதாகும். வேத மந்திரங்களையும், வரலாற்றுவழி இதிகாசங்களையும்

புராணங்களையும் கற்றுத் துறைபோகிய அய்யங்கார், தாம் இவற்றைப் படித்தறிந்ததைக் குறிப்பிட்டு இதுபற்றிய மேனாட்டாரின் அறியாமையைச் சுட்டிக்காட்டிப் பல இடங்களில் மறுக்கின்றார் *(31, 32)*.

திராவிடப் பழங்குடிகளின் நாகரிகம், ஆரியர் புகுமுன்னரும் அவர்தம் கலப்பு நேருமுன்னரும், மிகமிக உயர்ந்த நிலையிலிருந்ததைச் சீனிவாசர் பலபட வியந்தெழுதக் காரணம் அவருக்குப் பழந்தமிழ் நூல்களிலிருந்த பயிற்சியே எனத் தோன்றுகிறது. சுமேரிய மன்னர்களின் தலைநகர் ஊர் *(ur)* எனப்பட்டது. அதன் அழிபாடுகளில் தேக்குமரம் காணப்பட்டது. இது கி.மு. நாலாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது. பாபிலோனியர்களின் துணிவகைகளில் சிந்து என்னும் *(மஸ்லின்)* துணி குறிக்கப்படுகிறது. துளுவிலும் கன்னடத்திலும் ஒரு துணிவகையைக் குறிக்க வழங்கும் ‘சிந்தி’ எனும் சொல் தமிழில் ‘சிந்து’ எனக் கொடியைக் குறிக்கிறது. எனவே தமிழ்க்கடற்கரையிலிருந்து, இது பெர்சியன் கடற்கரைக்கு நேரே ஏற்றுமதி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்கிறார் இவர்.

‘சாலமன் காலத்திலிருந்து’ தமிழிலக்கிய வழியில், தமிழர் வரலாற்றை, ஆங்கிலத்தில் எழுதிய திருமதி ஹெப்சிபா சேசுதாசன், அம்மன்னன் தமிழகத்திலிருந்து தங்கம், தந்தம், வெள்ளி, மயில், மந்திகள் முதலியவற்றை இறக்குமதி செய்ததை, அந்நாட்டுச் செய்யுள்களைக் காட்டியே நிறுவுகிறார். ஒருமுறை கப்பல் வந்து திரும்ப மூன்றாண்டுகளாகுமாம். மேலும் ஆப்ரகாம் *(Abraham)* என்பவர் ஊர் *(ur)* என்ற ஊரிலிருந்ததாக *(கி.மு. 2000)* வரும் குறிப்பைச் சுட்டி, ‘ஊர்’ என்ற பெயரால் தமிழகத்தில் எத்தனை ஊர்கள் உள்ளன என ஆர்வத்துடன் கேட்கிறார் திருமதி சேசுதாசன். மேலும் கிறித்துவின் காலத்தில் மக்தல் *(Magdal)* என வழங்கிய, ஹீப்ரு மொழிச் சொல்லுடன் ‘மதில்’ என்ற சொல்லுக்குத் தொடர்பிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார் *(ப. 12)*.

பேராசிரியர் சீனிவாச அய்யங்கார் தமிழகத்தில் வாழும் பிராமணர்கள், ஹைபர் போலன் கணவாய் வழியாக வந்த ஆரியர்கள் அல்லர்; அவர்களிடமிருந்து பிரிந்து, வடநாட்டில் வாழ்ந்த ‘தஸ்யூக்கள்’ என ஆரியர்களால் அழைக்கப்பட்ட திராவிடர்களுடன் கலந்து, பிறகு தென்னாட்டிற்கு ‘நாடுகடத்தப்பட்டு’ வந்து, தமிழர் பழக்கவழக்கங்களை ஏற்றுத் தமிழ்ப்பெண்களை மணந்து, முற்றிலும் தமிழினத்தவரானவர்கள் என்பது தோன்ற, மிகக் கூடுதலான சான்றுகள் விளக்கங்கள் தந்துள்ளார்.

திராவிடர்கள் உயிர்க்கொலை செய்த ஆரியவேள்விகளை அழித்ததால் ‘இராக்கதர்கள்’ என அழைக்கப்பட்டனர். இதனால் தங்கள் புனிதம் கெட்டதாக, ஆரியர்கள் எண்ணிப் பகைமை கொண்டனர். தமிழர்கள் இறந்தவர்களைப் பதைப்பதையே முதன்மையாகக் கொண்டிருந்தனர். இதுவே உலகெங்குமிருந்த தொன்மையான வழக்கம். எரிக்கும் பழக்கம் உலகெங்கும் ஆரியர் மூலமே பரவியதாம்.

இராவணன் முதலான அரக்கர்கள் சமஸ்கிருதம் கற்று, அதில் தேர்ச்சி பெற்றனர். அனுமான் சீதையிடம் பேசும்பொழுது, சமஸ்கிருதத்தில் பேசினால், அவள் தன்னை இராவணன் ஆள் என ஐயப்படுவாள் என எண்ணியதாக வான்மீகி இராமாயணத்தில் வருகிறதாம். மிகப்பலர் அரக்கர்கள் எனப்பட்டவர்கள் வேதவிற்பன்னர்களாக விளங்கினர் என்பதோடு அவர்களும் வேள்விச்சடங்குகளைச் செய்தனராம். அதனால் அவர்கள் பிரம்மராட்சதர்கள் *(Brahmaraksasas)* எனப்பட்டனர். அகத்தியர்கள், விசுவாமித்திரர் வழியினர், இராவணன் உள்ளிட்ட புலஸ்தியமரபினர் எனப் பலரை, இப்பிரம்மராட்சதர்கள் எனக் குறிக்கின்றனர் *(ப. 51)*.

'பிரம்ம இராட்சதர்கள்' பற்றி இழிவான கருத்துப் பிற்காலத்தில் பரவியிருப்பினும் அதன் தொடக்ககாலப் பொருள் வேறாகும். 'தஸ்யூக்களுடன் கலந்துவிட்ட அதாவது தம்மை இணைத்துக்கொண்டுவிட்ட பிராமணர்களையும் 'இராட்சதர்கள்' எனக் கூறப்பட்டு இயல்பாக வடமொழி கற்றுப் பிராமணர் ஆனவர்களையும் 'பிரம்ம இராட்சதர்' என்ற சொல் குறித்தது. தென்னிந்தியாவில் 'பிராமணியம்' என்பது, இக்குடும்பங்களின் மூலத்திலிருந்து உருவானதேயாம். இத்தென்பகுதியிலுள்ள பிராமணர்கள், இவ்வாறு ஒரு தனித்தன்மை பெற்றிருந்தனர். அதாவது சிலவற்றில் அவர்கள் வேத காலச் சடங்கு, பழக்கவழக்கங்களை அவ்வாறே கொண்டிருந்தனர். பிறவற்றில் 'ஆரியாவர்த்தம்' எனப்படும் வடநாட்டினர் அறியாத தென்னாட்டுப் பழக்கவழக்கம் சடங்குகளைக் கொண்டிருந்தனர். தென்னிந்தியப் பிராமண மகளிரிடம் ஆரியர்களுடையதல்லாத பழக்கமான, தாலி கட்டும் திருமணச் சடங்கு மிகுந்த விருப்பத்திற்குரியதாய்க் காணப்பட்டது, கழுத்தில் மஞ்சள் கயிறு அணிவதை மிகவும் போற்றினர். மணமக்களுக்கு ஆரத்தி எடுக்கும் பழக்கமும் இங்கு கற்றுக் கொண்டதேயாகும். தொடக்க காலத்தில் குடியேறிய ஆரியர்கள் மணந்துகொண்ட 'தஸ்யூ' இனமகளிரால், இவ் 'விவாகச்சடங்குகள்' ஆரியச் சடங்குகளிடையே புகுத்தப்பட்டிருக்க வேண்டும் *(ப. 56, 57)*.[13]

இவ்வாறு தமிழ்மக்கள் பற்றிய சில கருத்துவேறுபாட்டிற்குரிய கருத்துக்கள், வடநூல்களில் காணப்படுவதை, சீனிவாச அய்யங்கார், நடுநிலையோடு மிக விரிவாக விளக்கியுள்ளார். இனித்தமிழ்நூல்களில் காணப்படுவனவற்றை, இவற்றுடன் ஒருங்குவைத்து எண்ணிப் பார்க்க வேண்டும். மிக விரிவாக ஆராயத்தக்கதும், தமிழினத்தின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாக இருப்பதுமான ஒரு கேள்விக்குரிய விடைகள் இவற்றால் கிடைக்கக்கூடும். மிகச்சுருக்கமான அளவில் தொகுத்துக் காண்போம்.

தொல்காப்பியர் காலத்திலேயே வடநாட்டு ஆரியர்களிலிருந்து பிரிந்தவர்கள், அவர்களால் தெற்கே துரத்தப்பட்டவர்கள், அங்கேயே 'தஸ்யூக்களோடு' கலப்புற்றவரென்றும் 'பிரம்மஇராட்சதர்' என்றும்

கருதப்பட்டவர்கள், இங்குவந்து தமிழரோடு தமிழராக உடன் கலந்து போயினர். எனினும் சில பழக்க வழக்கம், சடங்குகள், வேத பாராயணம். இவற்றைக் கைவிடாமல், இங்குள்ள பெண்களை மணந்தாலும் தங்கள் 'உயர்குலப்பெருமையைக்' கைவிடாமல் வாழ்ந்துள்ளனர். இறைச்சி உண்ணுதல், சோமபானம்போலும் மது அருந்துதல் ஆகியவற்றைக் கைவிடாமலிருந்தவர்களும் காணப்பட்டனர். இங்கிருந்த பாணர் பாடினியர், பொருநர், கூத்தர்களின் கலைகளைக் கற்றும் தமிழைக் கற்றுத் தமிழ்ப் புலவர்களுடன் ஒன்றாய்ச் சிறந்தும் இவ்வாறு தமிழரோடு தமிழராய் விளங்கினர்.

பதிற்றுப்பத்தில் பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாடியவர் பாலைக் கௌதமனார். இம்மன்னன் இமயவரம்பன் தம்பி. இமயவரம்பன் வடநாட்டு வென்றியின்பின், அங்குள்ள அந்தணர்கள், 'வேள்வி செய்து எல்லாவித நன்மைகளையும் அடையலாம்' என்று கூறவே, அவர்களை இங்குக் குடியேற்றினான். அவனைப் போலவே கரிகாலன் முதலாக இமயம் வரை வெற்றி கொண்ட அனைவரும் இங்கு அந்தணர்களைக் குடியேற்றி, 'வேள்வி' செய்தலில் மிகுந்த ஆர்வம் காட்டினர். வடமொழி நூல்களில் அங்கிருந்து 'துரத்தப்பட்டதாகக்' கூறுவதையும் இங்கு தமிழ் வேந்தர்கள் குடியேற்றியதாகவரும் செய்திகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

படையெடுப்பின் மூலமோ, பிறவாறு வெற்றிகொண்டோ, ஆரியர்கள் இங்கே புகுந்திலர் என்பதை அறிஞர்கள் மிகத் தெளிவுபட எழுதியுள்ளனர். பரத கண்டம் முழுவதும் தமிழகமாக இருந்தபோதிருந்தே, வடநாட்டிலும் கலப்புற்று, பிறகு தென்னாட்டிலும் குடியேற்றப்பட்டுள்ளனர். இங்கிருந்த பாணர்கள், புலவர்கள், கணியன்மார், ஆசான்மார், பூசனையாளராம் குருக்கண்மார் அனைவருடனும் கலந்துபழகி, அக்கலைகளனைத்தையும் கற்றுத் தமிழராகவே கூடி வாழ்ந்த காலம் அது. எடுத்துக்காட்டிற்கு, மேலே குறிப்பிட்ட மூன்றாம் பதிற்றுப்பத்தைப் பாடிய பாலைக் கௌதமனார், செறிவுமிக்க தமிழில் மிக விரிவாகத் தமிழகத்தையும் தமிழையும் முழுதுணர்ந்த தனிப்பெரும் புலமை தவழவே அப்பத்தைப் பாடியுள்ளார்.

**'ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்**
**ஈதல் ஏற்றல் என்று ஆறுபுரிந்து ஒழுகும்**
**அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுகி** (பதிற்று. *24)*

எனவரும் பாடலைக் கருதுக. அந்தணர் என்றும் பார்ப்பனர் என்றும் அழைக்கப் பெற்றாலும் தமிழக மகளிரை மணந்தும் தமிழகக் குடிகளோடு கலந்தும் வாழ்ந்தாலும், முற்கூறிய வரலாற்றுப் பேராசிரியர் குறிப்பிடுவது போலத் தங்கள் அறுதொழிலையும் தொல்காப்பியர் காலந்தொட்டே விடாதுபோற்றிவந்துள்ளனர். இன்றளவும் அவர்கள் தாமரை இலைத்

தண்ணீர் போலத் தமிழோடும் தமிழகத்தோடும் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்கின்றமை கண்கூடாகும்.

இப்பாலைக் கௌதமனாரிடம் 'நீர் வேண்டியபரிசில் யாது' எனக் குட்டுவன் கேட்க, 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகவேண்டும்' எனப் பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு பத்துப்பெருவேள்வி செய்ததாகப் பதிகம் கூறுகிறது. பாட்டுள் வரும் மேற்கண்ட அறுதொழிலோர் வழிமொழிந்து ஒழுகினர் இவ்வேந்தர்கள் என்பதையே இப்பதிக வாயிலாகவும் அறிகிறோம்.

அந்தணர், பார்ப்பனர் எனும் தூய தமிழ்ச்சொற்களால் இவர்கள் அழைக்கப்பட்டனர். இவர்கள் தமிழரினும் மேம்பட்டிருந்து, தமிழர்களுக்கு நாகரிகம் கற்பித்தனர் எனும் கருத்தைப் பேராசிரியர் சீனிவாசர் அறவே மறுக்கின்றார் என்பது முன்னரும் கூறப்பட்டது. நாகரிகக் கலைகள், புலமை அனைத்திலும் மிகமேம்பட்டிருந்த தமிழரிடம் அவை அனைத்தையும் கற்றுக்கொண்டு, அவர்கள் அறியுமுன்பே அவற்றைத் தாமறிந்தனர் போலக் காட்டிக் கொண்டு, தங்கள் மேம்பட்ட வாழ்வைக் காப்பாற்றிக் கொண்டனர் என அவரும் பரிதிமாற் கலைஞரும் கூறியுள்ளவற்றை முன்பே கண்டோம். மேலும் அவர்களின் நிறத்திலும் புலமைத் திறத்திலும் ஈடுபட்ட தமிழ் மன்னர்கள், 'வேள்வி' செய்தலில் காட்டிய பேரார்வம் சொல்லுந்தரத்ததன்று. பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, தொடங்கிச் சங்கப் பாடல்களை ஆராய்ந்தால், அன்றே 'பார்ப்பனியம்' என்பது, பர்ப்பனரைவிடப் பார்ப்பனரல்லாதாரிடமே ஊடுருவி இருந்தமை புலப்படும். இருப்பினும் தொடக்கத்தில் தமிழரோடு தமிழராக இருந்து, கபிலரைப் போல, ஆரிய அரசர்களுக்கும் 'தமிழ்மை' பற்றிய தனித்தன்மையைக் கற்பித்த அவர்கள், இடைக் காலத்தில் வடமொழியாளர் ஆட்சிக்கு வந்து, சமற்கிருதத்தை ஆட்சிமொழி ஆக்கியதும், தமிழர் கலைகள், அறிவியல், மெய்பியல் அனைத்தையும் சமற்கிருத மயமாக்கினர். இதில் தமிழர்களுக்கும் பெரும்பங்கு உண்டு.

பார்ப்பனர் தமிழ்மகளிர் கூட்டு மணமும் ஆசான்மார் முதல் பாணர் வரை ஆரிய மகளிருடன் கலந்த கலப்பு மணமும் நேர்ந்தாலும், பார்ப்பனர் தங்களைத் தனிமைப்படுத்தியே வாழ்ந்த காரணம், பிழைப்பும் வருமானமும் சமுதாய மேம்பாடும் கவுரவமும் கருதியேயாகும். தமிழ்ப் பாணர் பொருநர்தம் இசைக்கலை, நாட்டியக்கலைகளைக் கற்றுக்கொண்டு, அவற்றிற்குரிய அப்பாணர் பரம்பரையை இழிகுலத்தவராக்கினர். 'சதுர்' எனப்படும் நாட்டியக் கலைக்குரிய இன்றைய இசை வெள்ளாளர் பரம்பரையைப் பின்னடைய வைத்துப் பார்ப்பன மகளிர் அதைக் கைக்கொண்டனர். ஆனால் பெருவங்கியமாம் நாதசுரத்தைக் கைக்கொண்டிலர். அன்றும் இன்றும் அதே நிலைதான். அதற்குத் தோதாகாப் பாணர்கள் சிறுகச் சிறுக வறுமையில் வாடி நிலைகுலைந்து போயினர். பல்வேறு தொழிலினர்களிலிருந்து, புலவர்கள்

கிளைத்து எழுந்தனரெனினும், காலம் செல்லச்செல்ல, அவரவர் தத்தம் தொழிலிலேயே நாட்டம் செலுத்தினர். சிற்பக்கலை, நாட்டியக்கலை, இசைக்கலை, கட்டிடக்கலை எல்லாம் இன்றளவும் குலவழிக்கல்வியாக, வாய்மொழி மரபாகப் பார்த்தும் கேட்டும் பயின்றும் செய்வதாகிப் போயினமையால், வடமொழியில் எழுதி வைத்துக்கொண்டு, தமிழில் ஒன்றுமில்லை என்று சொல்ல வாய்ப்பாகிப் போயிற்று. கடல் கொண்டதும் கறையான் தின்றதும் போக, எஞ்சிய நூல்களும் தவறாக வழிகாட்டப்பட்டு ஆடிப்பெருக்கில் இடப்பட்டும் சொக்கப்பனை கொளுத்தப்பட்டும் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. 'மறைந்துபோன தமிழ்நூல்கள்' பற்றி, மயிலை சீனி வேங்கடசாமி எழுதியிருப்பதுபோல, ஆயிரக்கணக்கான தமிழ்நூல்கள் மறைந்தொழிந்தன. தமிழ்க்கலைகளைப் புதைபொருள் ஆராய்ச்சிபோலத் தேடுவதைத் தவிர வேறுவழியின்றித் தமிழறிஞர்கள் கவல்கின்றனர்.

இப்பார்ப்பனரை ஐயர், ஐயங்கார் என வழங்கும் முறைகளும் நஞ்சுண்டப்பா *(கன்னடப் பார்ப்பனர்)*, நஞ்சுண்டய்யா *(தெலுங்குப் பார்ப்பனர்)*, நஞ்சுண்டண்ணா *(மலையாளப் பார்ப்பனர்)*, நஞ்சுண்டய்யர் *(தமிழ்ப்பார்ப்பனர்)* என்று வழங்கும் பின்னொட்டுக்களும் வடநாட்டு ஆரியப் பார்ப்பனரிடம் இன்றும் காணாதன.

பட்டர், குருக்கள், சிவாச்சாரியார் தமிழர்களே. விசுவப்பிராமணாள் எனக் கல், மரத்தச்சு ஆசாரியர்கள் பூணூல் போட்டுக் கொண்டு, 'உயர்வு' தேட முயன்றதுபோல இவர்களும் மாறிக்கொண்டவர்கள்.

இவர்களின் உறவுப்பெயர்கள் அகமுடையான், அகமுடையாள், அம்மான்சேய், அத்தையன்பர், ஓர்பிடியாள் என்றினையன இவர்களை இனங்காட்டிவிடும்.

இன்றும் வடநாட்டு ஆரியப் பார்ப்பன வழியினருக்கும், நம்பூதிரிகளுக்கும், தமிழகப் பார்ப்பனரை மதிக்கத் தோன்றுவதில்லை.

தமிழகத்திலோ இவர்கள் பலநிலைகளில் ஊடாடி, உயர்வு தேடித் தமிழரோடு தமிழர்களாய் வாழ்ந்ததைத் தனிவரலாறாகவும் இடைக்காலத்தில் மீண்டும் ஆரிய மயமாகித் தமிழிலிருந்து அயன்மைப்பட்டு, சூழலுக்கு ஏற்பவும் பிழைப்புக்காகவும் சமற்கிருத மயமானதைத் தனித்தனி ஆய்வாகவும் கண்டறிய வேண்டும்.

ஔவையார் மூவேந்தரும் ஒருங்கிருந்த ஒருசமயத்தில் பாடிய புறப்பாடலில்,

**'ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்**
**பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து'**

'தானங்' கொடுத்து அம் மூவேந்தரும் வாழ்ந்ததைப் பாராட்டுகிறார்.

ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்! *(367)*

என, அப்பாடலில் மூவேந்தரை முத்தீக்கு உவமை சொல்லியுள்ளார். இதைப் பார்த்து திருமதி சேசுதாசன் வியப்படைகிறார். சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனைப் பாடிய, ஆவூர் மூலங்கிழார் அப்புறப்பாடலில் *(166)* புத்தம் சமணம் முதலிய சமயங்களின் பொய்ம்மையையும் வேள்வி வகைகளையும் வைதிகத்தின் மெய்ம்மையையும் மிக விரிவாக எடுத்துரைக்கின்றார். தாமப் பல் கண்ணனார் எனும் பார்ப்பனப் புலவர் மாவளத்தான் எனும் சோழவேந்தனை, வட்டாடிய பொழுது தப்புச் செய்தானென்று கூறி, 'ஆர்புனை தெரியல் நின் முன்னோர் எல்லாம், பார்ப்பார் நோவன செய்யார்' *(புறம் 143)* என்று, தமிழக வேந்தர்கள் பார்ப்பனரைப் போற்றிப் புறந்தந்ததைப் பாடுகிறார்.

'அரு மறை நாவின் அந்தணர்க்கு அடையா.....' *(சிறுபாண். 204).*

'வயலைக் கொடியின் வாடிய மருங்குல், உயவலூர்திப் பயலைப்பார்ப்பான்" மன்னர்களிடையே தூது சென்றதை மதுரை வேளாசான் பாடுகிறார் *(புறம். 305).*

'நன்பல கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்' எனச் சிறப்பிக்கும் இடங்கள் பலவுள *(புறம் 361).* பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை, மாங்குடி கிழார், 'ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை, நான்மறை முதல்வர் சுற்ற மாக' வாழ்ந்தான் என்றே பாடுகிறார் *(புறம் 26).* போரில் விழுப்புண் படாது இறந்தவரை, 'வீர சுவர்க்கம்' அனுப்பத் தருப்பைப் புல்லிலே கிடத்தி, மார்பை வாளால் போழ்ந்து, அடக்கம் செய்யும் சடங்கை 'அறம்புரி கொள்கை நான்மறை முதல்வரே' செய்தனராம் *(புறம். 93).* புலவர்களுக்கு நாடும் வயலும் பொன்னும் மணியும் ஒருகாலத்தில் அளித்த தமிழ் மன்னர்கள் பிறகு 'கழல்புனை திருந்தடிக் காரிநின்னாடே, அழல்புறந் தருஉம் அந்தண ரதுவே' *(122)* என, அந்தணர்களுக்கே அவற்றை வழங்கியதைக் கபிலரின் புறப்பாடல் பகர்கிறது. சங்க இலக்கியத்திலேயே மிகக் கூடுதலான அதாவது *235* பாடல்கள் பாடிய கபிலர், தம்மை அந்தணர்' எனப் பெருமையோடு கூறிக் கொள்ளுமிடங்கள் பலவுள.

'யானே, பரிசிலன் மன்னும் அந்தணன்' *(புறம். 200).* 'அந்தணன் புலவன் கொண்டு வந்தனென்' *(புறம் 201)* என்பார் கபிலர் பெருமான.

இதுகாறும் விளக்கியவற்றைக் கீழ்வருமாறு சுருக்கிக் கூறலாம். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே, இந்தியநாடு முழுவதும் தமிழகமாக இருந்த காலந்தொட்டு, ஆரியர் தொடர்பு ஏற்பட்டிருந்தது.

அவர்களின் வேத காலத்தொடக்கம் முதல், வடக்கே பரவினர். பின்னர் வேள்விகள் செய்தால் பெரும் நன்மைகள் விளையுமென்று நம்பிக்கையூட்டியதால், தமிழ் மன்னர்கள் அவர்களைத் தென்னாட்டில் குடியேற்றினர். இராமாயண, பாரத காலங்களிலேயும் வாணிகத் தொடர்பும், மன்னர்கள் தொடர்பும் காணப்படுதலால், தெற்கே போந்தவர்கள், தமிழர் நாகரிகத்தின் உச்சியிலிருப்பதைக் கண்டு, அவர்களைக் கவருமாறு மேன்மையும் தூய்மையும் சீர்மையுமுடையவர்களாய்த் தம்மைக் காட்டிக்கொண்டு, இங்கே நிலைபெற்றனர். சிலப்பதிகாரத்தில் மாடல மறையவன், சேரன் செங்குட்டுவனிடம் நடந்து கொண்ட விதங்கள் அனைத்தும், அக்கால வேந்தர்களுக்குப் பொருந்தும். தமிழ் கற்றுத் தமிழரோடு தமிழராய்க் கலந்துறைந்தனர். பெரும் பாணாற்றுப்படையில், ஓர் அந்தணர் வீட்டில், அப்பெரும்பாணன் விருந்தருந்திய செய்தி கூறப்படுகிறது (பெரும்பாண். *297-310*). இது தமிழ்க் குடிமக்களோடு தாமும் இணைந்து கலந்து வாழ்ந்தமையையே காட்டுகிறது.

தமிழ்மொழியின் செழுமைமிக்க செவ்வியல் முதிர்ச்சியையும் தமிழிலக்கியத்தின் பல்வேறு இலக்கியக் கலைத் திட்ப நுட்பங்களையும் பட்டினப்பாலை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி முதலானவை காட்டும் தமிழர் நாகரிகத்தின் உச்சங்களையும் காணும் நாம், இச்செல்வவளம் கெழுமிய தமிழகத்தில் வந்து, கலந்துறைந்த அந்தணர்களின் பண்பட்ட தமிழ்ப்பற்று மிக்க பெருந்தகைமைகளையே கண்டு வியப்படைகிறோம். ஆயினும் பிறப்பினால் உயர்வுதேடும் தங்கள் பழக்க வழக்கங்கள் சிலவற்றை அவர்களில் சிலர் பின்பற்றி வாழ்ந்தமையையும் அறிகிறோம். களப்பிரர், பல்லவர் காலத்திலும் பௌத்த சமணசமய நுழைவுகளாலும் வடமொழி, பாலி, கிரந்தம் அனைய மொழிகளின் செல்வாக்கு மிகுந்தபோது, முன்னர் இருந்த நிலைமாறி, பார்ப்பனர்கள் தம்மை அயன்மைப்படுத்திக்கொண்டு, எல்லாவற்றையும் சமற்கிருதமயமாக்குதலில் ஈடுபட்டுத் தமிழுக்குப் பெருந்தாழ்வும் தலைகுனிவும் ஏற்படுத்தவும் தயங்கவில்லை என்பதையும் காண்கிறோம். பௌத்தமும் சமணமும் பெருமளவில் பரவவே, வைதிகம் தமிழ்ப்பண்பாடு மற்றும் சிவனிய மாலியச் சமயங்களுடன் கலந்து, தமிழ் வளர்ச்சியில் நாட்டம் கொண்டதைத் திருஞானசம்பந்தர் காலந்தொட்டுக் காண்கிறோம். இங்ஙனம் 'இரு பிறப்பாளர்' என்பதைக் குலச் சடங்காக மட்டுமல்லாமல், தமிழ், தமிழினம், தமிழ்நாடு பற்றிய தமது நிலைகளிலும் இன்றுவரை பின்பற்றி வருவதைக் காணும் நாம், சங்கப் பாடல்களையும் பக்திப் பாடல்களையும் பாடிய அந்தணப் புலவர் பலரையும் அவர்தம் பாடல்களையும் படித்து மகிழும்போது அதிர்ச்சியடைகிறோம். முக்கியமாகக் கபிலர் பாடல்களைப் படிக்கும்போது, நாம் அடையும் மகிழ்ச்சியும் பெருமிதமும் பிறகு வற்றி வறண்டதன் காரணமறியாமல் திகைக்கிறோம். இன்றும் இவ்விரண்டுபட்ட நிலைமை நீடிப்பதைக் காணநேர்வதை மறைப்பதற்கில்லை.

# 7. தமிழும் தமிழிலக்கியமும்

தமிழ்மொழியின் சிறப்பு அதன் இலக்கிய வளத்திலும் இலக்கணக் கட்டமைப்பிலும் உளது. ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளாய், ஒரே தொடர்ச்சியாக வழங்கி வருகிறது. அகராதி வைத்து, அருஞ்சொற்களுக்கு மட்டும் பொருள் கண்டு படிக்குமளவு தமிழிலக்கியம் இன்றும் திகழ்கிறது. இடையேதான் எத்தனை எத்தனை சமயம், மொழி, பண்பாட்டுப் படையெடுப்புகள்! இயற்கைச் சீற்றமாம் கடல் கோள்களாலும் பிறமொழி ஆதிக்கத்தால் கிளைமொழிகள் பிற மொழிகளாகியதாலும் தான் வழங்கிய நிலப்பரப்புக் குறைந்ததெனினும், தமிழ்மொழி சிறிதும் தளர்ச்சி யடையாது வளர்ந்துகொண்டே இருக்கிறது. கிரேக்கம், இலத்தின், சமற்கிருதம் எனப் பல செவ்வியற்காலத்தொன்மைமிக்க மொழிகள் வழக்கிழந்து போகவும் அவற்றின் சமகாலத்ததாய் விளங்கிய தமிழ் அவைபோல் பேச்சு வழக்கு அறாது இன்றளவும் வழங்குவதொன்றே அதன் வலுவான - வளமான - செறிவுள்ள கட்டமைப்புக்குப் போதிய சான்றாகும்.

அயர்லாந்திலிருந்து போந்த இராபர்ட் கால்டுவெல் தமிழின் சிறப்பை எடுத்துக்காட்டும்வரை, தமிழ்ப் புலவர்களே 'எல்லாம் வடமொழியிலிருந்து தமிழ் கடன்பெற்றனவே' என நம்பி, எழுதி, பேசி வந்தனர்.

பெருகிவரும் ஆங்கில ஆதிக்கம்பற்றிக் கூட, அன்றே *1856* லேயே - தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் அறியப்படுவதற்கு முன்பே பேறிஞர் கால்டுவெல் பின்வருமாறு எழுதுகிறார்.

"சென்னை மாகாணத்தைப் பொறுத்தமட்டில். பண்டு வடமொழி எந்த உச்ச நிலையை எய்தியிருந்ததோ அந்த அளவிற்கு இப்பொழுது ஆங்கிலம் உயர்தரக் கல்விபெறும் மொழிக்கருவியாக இருந்துவருகிறது. எனினும் இவ்வாங்கிலமோ, வேறெந்தப் புறமொழியோ எக்காலத்திலேனும் தென்னாட்டு உண்ணாட்டு மொழியாக மாறிவிடக் கூடுமென்று நம்புவதற்கு எட்டுணையும் வழியில்லை. ஆற்றலிலும் எண்ணிக்கையிலும் மிக்கவர்களாகக் கருதப்படும் ஓரினத்தாரின் மொழியாகிய வடமொழியைச் சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக எதிர்த்துநின்று போராடி வருவனவாய திராவிட மொழிகள், மற்றெந்த அயல் மொழியும் தம்மிடைத் தலைசிறவாதபடி எதிர்த்துநின்று தடுத்துக் கொள்ளும் என்று எளிதில் நம்பலாம்".[14] மேலும் அவர் தமிழ்மொழியின் தனிச்சிறப்பை வியந்தெழுதும் இடமொன்றுண்டு. இவ் ஐரோப்பியர்களின் வருகைக்கு முன், தமிழ்ப்புலவர்களே நீர் நீரம் என்ற

வடசொல்லின் திரிபு, மீன் மீனம் என்ற வடசொல்லின் திரிபு என இவ்வாறு எழுதிக் கொண்டிருந்தனர்.

"திராவிட மொழிகள் அனைத்தினும் மிகவும் திருந்திய பண்பட்ட நிலையிலுள்ள தமிழ்மொழியோ, வேண்டுமென்றால், வடசொற்களை அறவே அகற்றித் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்திருப்பதோடன்றி, அவற்றின் உதவி இல்லாமல் மிகவும் மேம்பட்டு வளமுற்று மிளிரும் ஆற்றலும் வாய்ந்ததாகும்."

"பண்டைத்தூய தமிழ்மொழிக்குச் செந்தமிழ் என்று பெயர். இச்செந்தமிழிலேயே தமிழ்மொழியிற் காணப்படும் பண்டை இலக்கியங்களிற் பெரும்பாலன இயன்றுள்ளன. ஆனால் அவற்றுள் காணப்படும் வடசொற்களோ மிக மிகக் குறைவு. இன்றையப் பேச்சுத் தமிழுடனும், உரைநடைத் தமிழுடனும் இந்நிலை மாறுபட்டதொன்றாகக் காணப்படும். எதனால் அவ்வாறெனிலோ, கண்ணுங்கருத்துமாய் இருந்து வடசொற்களையும் வடமொழி எழுத்துக்களையும் விலக்கி, தூய தமிழ்ச் சொற்கள், மரபுமொழிகள், அமைப்புகள் ஆகியவற்றையே கையாண்டு வந்துள்ளமையினாலேதான். தமிழ்மக்களிடையே இச்செந்தமிழ் மொழிப் பாதுகாப்பு எவ்வளவுக்குப் பரவி இருந்ததென்பது, எழுதப்பட்ட ஒரு தமிழ் நூலில் எவ்வளவுக்கெவ்வளவு வடசொற்கள் அருகிக் காணப்படு கின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது சிறந்ததொரு நூலென்றும், எவ்வளவுக்கெவ்வளவு வடசொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அது தாழ்ந்ததொரு நூலென்றும் கருதி மதிப்பிடும் பழக்கம் பண்டு தொட்டுப் பயின்று வருகின்றமையினாலேயே இனிது பெறப்படும்".[15]

இம்மரபும் காப்பும் இன்றும் போற்றப்பட வேண்டும். ஆனால் இதற்கு மறுதலையான போக்கை இன்று புதுக்கவிதை எனும் பெயராலும் மக்கள் தமிழ் எனும் பெயராலும் வளர்க்கின்றனர். மக்கள் தகவல் ஊடகங்கள் குறிப்பாகத் திரைப்படங்களும் சின்னத்திரைகளும் நாளிதழ்களும் கொச்சைத் தமிழையும் பிழைபட்ட வழக்குகளையும் சேர்த்து, பிறமொழிக் கலப்பை அளவின்றிப் புகுத்தி, தமிழின் தனித்தன்மையைச் சீரழித்து வருகின்றனர். 'ஆங்கிலம் தென்னாட்டு உண்ணாட்டு மொழியாக மாறிவிடக்கூடும் என்று நம்புவதற்கு எட்டுணையும் வழியில்லை', என எழுதிய கால்டுவெல் கூற்றைப் பொய்யாக்கி, ஆங்கிலக்கல்வியே கல்வி எனக்கருதப்பட்டுத் தமிழ் அறவே புறக்கணிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கால்டுவெல் பெரியவரின் கூற்றுக்கள் நமக்கு விழிப்புணர்வை ஊட்ட வல்லனவாயுள்ளன.

மேலும் அவர் நிரம்பப் படித்தவர்களிடத்தில் அதிலும் குறிப்பாகச் சமயம் தத்துவம் ஏனைக் கலைகள் பற்றிய கலைச்சொற்களில் மட்டுமே வடசொற்கலப்பு மிகுதியாகக் காணப்படுகிறது என்பார். இதற்கு இடைக்காலத்தில் நடந்த 'சமற்கிருதமயமாக்கல்' நிகழ்வுகளே காரணமாகும்.

தமிழின் பழைமைக்கும் தூய்மைக்கும் இலக்கியத் தொன்மைக்கும் மேலும் பல சான்றுகளை அடுக்குகிறார் அப் பேரறிஞர். தமிழ் பழங்கன்னடம் பழம்மலையாளம் போன்றவற்றுடன் மிகவும் ஒற்றுமைப் பட்டிருப்பதும் செந்தமிழில் அவற்றின் சொற்களும் இலக்கணக் கூறுகளும் மலிந்து கிடப்பதும் அதன் பழைமைக்குச் சான்றுகளாமென அவர்தம் ஆய்வு விரிகிறது.

பழந்தமிழ் நூல்கள் பல கிடைக்காத நிலையிலேயும் கால்டுவெல் செய்த ஆய்வும் எடுத்த முடிபுகளும் இனி மேலும் ஆராய அடியெடுத்துத் தருமாறுஉள. எமனோவும் பரோவும் திராவிடமொழி ஆய்வு மேற்கொண்ட கால்டுவெல்லைப் பின்பற்றி மேலும் அவ் ஆய்வு முடிபுகளை உறுதி செய்தனர்.

மேலும் ஆராய, நம் தமிழ்மொழிக்கல்வி பெருந்துணையாகும். ஆயினும் ஏனைய திராவிட மொழிகள் பல பற்றிய கல்வியும் வடமொழிப் புலமையும் பெற்றால், நாமும் அம்மேனாட்டாரைப் போலப் பல புதுமைகளைக் கண்டு, தமிழின் மேன்மையையும் தொன்மையையும் நிலைநிறுத்த முடியும் என்று தோற்றுகிறது.

**தமிழ் எழுத்துக்கள்**

தமிழ் எழுத்துக்கள் மிகத் தொன்மையானவை. அவற்றின் பெயர்க்குறியீடுகள், தேர்ந்த முதிர்ச்சியைக் காட்டுகின்றன. உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம், குற்றியலுகரம், வல்லினம், மெல்லினம், இடையினம் எனும் பெயர்க்குறிகள் ஆழ்ந்த கருத்துடையவை.

'உட்பெறு புள்ளி உருவாகும்மே', 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்', 'புள்ளி இல்லா எல்லா மெய்யும் உருவுருவாகுதலும் பிற உருவுதிரிந்துயிர்த்தலும் உடையவை', 'உருவினும் இசையினும் அருகித் தோன்றும், மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தின் இயலா (எழுதிக்காட்ட இயலாது)' 'அவற்றுள் மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' எனவரும் தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பாக்கள் பல. இன்று போலவே அன்றும் தமிழுக்கு எழுத்துவடிவம் இருந்தமையை நிலைபெற உணர்த்தும்.

கல்வெட்டு எழுத்துக்கள் பல, ஏடுகளில் எழுதப்பட்ட எழுத்துக்களின் வேறுபட்டவையாய். கல்லில் வெட்டுதற்கு ஏற்றவையாய்த் தனியே பயன்பட்டனவோ எனும் ஐயம் எழுகிறது. தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் தென்பிராமி அல்லது தமிழி என்ற எழுத்துத் தொன்மையுடையதாகக் காணப்படுகிறது. பிறகு கிரந்த எழுத்துக்களிலும் கல்வெட்டுத் தோன்றியுள்ளது.

வட்டெழுத்து என்பது பழைய தமிழ் எழுத்தே என்று கருதப்படுகிறது. தென்பிராமிக்கும் வட்டெழுத்துக்கும் நெருங்கிய ஒற்றுமை உளது. எவ்வாறு நோக்கினும் இவ்வட்டெழுத்துக்கள் கண்டறியப்படு முன்பே, நடுகற்களில்

'பெயரும் பீடும்' எழுதிவைத்த செய்தி, தமிழ்ச்சங்கப் பாடல்களில் காணப்படுகிறது. 'எண்'களையும் பின்னங்களையும் குறிக்கும் தமிழ் எழுத்துவடிவங்கள் தனியே இருந்தன.

வடமொழியிற் காணப்படும் 'வர்க்க' ஒலிகள் தமிழில் இல்லை. தமிழில் ஒலியினிமையுடைய எழுத்துக்களே காணப்படுகின்றன. வல்லெழுத்துக்களும், உகர இறுதிபெற்று இனிமைப்படுத்தப்படுதல் தமிழின் எளிமைக்குச் சான்றாகும்.

## சொற்கட்டமைப்பும் பாகுபாடும்

தமிழ்ச்சொற்கள் 'ஒட்டுநிலை'யின. பல மொழிகள் உட்பிணைப்பு நிலைக்குத் திரிபுற்றுப்போயின. ஒரு வண்டி அல்லது உந்துவின் பாகங்களைப் பிரிப்பதுபோலத் தமிழ்ப் பெயர், வினைச் சொற்களின் உறுப்புக்களைத் தனித்தனியே பிரிக்கலாம், பிரித்து அவை இன்ன பயன்பாடுடையன என்று பொருள் கூறலாம். 'அறிஞன்' என்பதில் அறி – அறிவு முதனிலை, அன் ஆண்பால் என்பதைக் குறிக்கும் இறுதிநிலை, 'ஞ்' இடைநிலை. 'பாடினானடா' என்பதைப் பாடினான் + அடா எனவும் பாடினான் என்பதைப் பாடு+இன் (இறந்தகால இடைநிலை) + ஆன் (ஆண்பால் உணர்த்தும் வினை இறுதிநிலை) எனவும் பகுக்கலாம். 'பாட்னாண்டா' என்று எழுதி இன்று பேச்சுவழக்குத் திரிபை, உலகவழக்கு - மக்கள் வழக்கு என்று கூறுகிறார்கள். 'விளையாட்றாங்க' 'செஞ்சுட்டேனுங்க' என்பன யாவும் பேச்சில் வரும் ஒலித்திரிபுகள். இவை பேச்சுவழக்கின் ஒரு பகுதி, வட்டார வழக்கிலேற்படும் திரிபொலிகள். உண்மையான வட்டார வழக்கு முழுச்சொற்களே. சிலர் குளத்தைக் கேணி என்பர் (திருவல்லிக்கேணி). சிலர் சளியிடிப்பதைத் 'தடுமன்' என்பர். இவற்றைவிட்டு 'வெள்ளாட்றாங்க', 'செஞ்சிட்டாக' என்பன ஒட்டு நிலை தவறி உட்பிணைப்பு நிலைக்குப் போகும். சொல் வடிவம் சிதையும். காலப்போக்கில் அதன் உறுப்புக்கள் பகுத்தறியப்படா. இது தமிழின் இளமையைக் குலைத்து, 'என்றுமுள தென்தமிழ்' என்பதை அழித்துக் 'கன்னித்தமிழ்' வழக்கைச் சிதைக்கும் முயற்சிகளாகும். வாய்ப்பேச்சாக எப்படிப் பேசினாலும், எழுதும்போது கட்டளைத் தமிழிலேயே' எழுத வேண்டும். அதுவே தமிழைத்திரிபுறாமல் காக்கும்.

தமிழ்ச்சொற்கள், பெயர், வினை, இடை, உரி என நான்கு வகையின. உரிச்சொற்கள், பண்பை உணர்த்தும் அடைமொழிகளாய்ச் செய்யுளில் பயின்று வழங்கும் அடிச்சொற்கள். அவை ஒரு பொருள் குறிக்கும் பல சொற்களாகவும் பலபொருள் குறிக்கும் ஒரு சொல்லாயும் வழங்குவதுண்டு. இவை தமிழின் பல ஆண்டு வளர்ச்சியைக் காட்டுவதோடு, மக்களால் நீண்டகாலமாக வழங்கிப்பின் அருஞ்சொற்களாயின என்பதை உணர்த்தும்.

இலக்கணத்தில் வரும் உரிச்சொற்களை மட்டுமே காட்டாமல், இங்ஙனம் நிகண்டுகளில் தொகுக்கப்பட்டிருப்பவற்றையும் இன்னும் தொகுக்கக் கூடியவற்றையும் நாம் தேடிக் காணவேண்டும்.

இடைச்சொற்கள் பெயர், வினையிடையே வந்து அவற்றின் பொருளை வேறுபடுத்த உதவுவன. அவற்றை இணைப்பதற்கு - ஒட்டுவதற்குப் பயன்படுவன. உருபுகள், சாரியைகள், எழுத்துப் பேறுகள், இடை கடை உறுப்புக்கள் என்றினையன. பெயரும் வினையும் திணை, பால், எண், இடம் உணர்த்தும். ஆறறிவுள்ளவை உயர்திணை, 'மற்று உயிர் உள்ளவும் இல்லவும்' அஃறிணை. வடமொழி முதலான மொழிகளில் இத்தகைய பகுத்தறிவுக்கு ஒத்த சொற்பாகுபாடு - திணை, பால் உணர்த்தும் முறை இல்லை.

முன்பு காணப்பட்ட சில நுட்பமான சொற்பொருள் வேறுபாடுகள் மறைந்து வருவது, வருந்துவதற்குரியதே.

| | | |
|---|---|---|
| வந்தனென் | - | தன்மை |
| வந்தனை | - | முன்னிலை |
| வந்தனன் | - | படர்க்கை |

கம்பர் இம் மரபை விடாது போற்றக் காணலாம். நாங்கள் எல்லோரும் - தன்மைப் பன்மை. நீங்கள் எல்லீரும் - முன்னிலைப் பன்மை. அவர்கள் எல்லாரும் - படர்க்கைப் பன்மை. அது வந்திலது. அவன் வந்திலன், அவள் வந்திலள் என்றனர். அஃது அன்று, அவை அல்ல என வேறுபாடு காட்டினர். ஈ, தா, கொடு எனும் சொற்கள் பொருள்தரும் முறையும் *(927-931)*, செல்லுதல், வருதல், தருதல்; கொடுத்தல் ஆகிய சொற்கள் இடம் உணர்த்தும் முறையும் பற்றிய *(511-513)* தொல்காப்பிய நூற்பாக்கள், அன்று சொற்கள் பொருள்தரும் முறையிலிருந்த நுட்பங்களை அறிவிப்பன. தமிழர்களின் முதிர்ந்த அறிவுக் கூர்மையைத் தமிழ்ச் சொற்கள் உணர்த்திய பொருட் கூர்மைகளில் வைத்துத் தனியே ஆராய வேண்டும். ஞா. தேவநேயப் பாவாணர் சொல்வளம் பற்றித் தமது தமிழிலக்கிய வரலாற்றில் தந்துள்ளவை, தமிழின் சொற்கோவையை உணர்த்தும். சொல்லுதலைக் குறிக்கமட்டும் சொல், இசை, பகர், கழறு, கூறு என இவ்வாறு நாற்பது சொற்களுக்குமேல், வெவ்வேறு நிழற்பொருள்களில் வழங்குகின்றன. முகிழ், மொக்குள், முகை, அரும்பு, அலர், போது, மலர், பூ, வீ, செம்மல் என்பன மலரின் படிப்படியான வளர்ச்சியைக் குறிப்பன.

தமிழின் சொல்வளமும் இலக்கணக் கட்டமைப்பும் இன்னும் பல காலங்களுக்கு ஆராயவும் புதியன காணவும் இடந்தருவதொன்றே, அதன் பழைமையை நிறுவப் போதிய சான்றாகும்.

வடமொழியோடு ஏற்பட்ட தொடர்புமட்டும் மீண்டும் மீண்டும் நினைவிற்கொள்ளற்பாலன. இன்றேல் தமிழியல் வரலாற்று ஆய்வில் தடுமாற்றங்களே ஏற்படும்.

முதல்காலப்பகுதி முழுவதையும் 'ஏற்புநிலை'க் காலம் எனலாம். அதாவது வடவரையும் வடமொழியையும் புதுமை கருதித் தமிழர்கள் ஏற்றுக்

கொண்ட காலம். சங்க முற்காலம், சங்ககாலம் இது. வடவர்கள் இங்கு குடியேறிய அல்லது குடியேற்றப்பட்ட காலம். அப்போது சீனிவாச அய்யங்கார் கூறுவது போல, வடக்கேயே இவர்கள் ஆரியர்களினின்றும் வேறுபட்டு, அவர்களால் நீக்கப்பட்டு, அவர்கள் 'தஸ்யூக்கள்' என அழைத்தவர்களோடு கலந்து போனவர்கள். செல்வவளமும் நாகரிக உச்சமும் பெற்ற தமிழகத்தில் போந்தபின் இங்குள்ளவர்களோடு ஒன்றி, இங்கு வளர்ந்தோங்கியிருந்த கலைகளைக் கற்று, மன்னர்களாலும் மக்களாலும் மதிக்கப் பெற்றிருந்தனர். வேள்வியின் மீது புதுமை கருதிக் கொண்ட பேரவாவால், மன்னர்களால் குடியேற்றப்பட்டதால், தமது மொழியையும், சடங்குகளையும் கைவிடாது ஓரளவு போற்றித் தனிமைகாத்தனர். அதுவும் அவர்களது வாழ்வுக்கும் வருமானத்திற்கும் அவ்வடமொழிச் சடங்குகள் உறுதுணையாய் இருந்தமையாலேயாம். இன்று வரை அதே நிலை காணப்படுகிறது.

களப்பிரர், பல்லவர் காலமும் பௌத்த சமண ஆதிக்க நிலைகளும் பாலி, கிரந்தம், வடமொழி ஆகிய பிறமொழிகளை, தமிழகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துமளவு உயர்த்தின. அவையும் ஏற்புநிலையில் தொடங்கி ஆதிக்க நிலைக்கு மாறிக் கொண்டன. இதனால் பிறமொழிச் சார்புகளைத் தமிழ் மயமாக்குவதில் தொடங்கிப் பின்னர் அதற்கு நேர்மாறாக இங்கிருந்த எல்லாவற்றையும் வடமொழி மயமாக்குவதில் முனைப்புக் காட்டின. பல்லவர் காலம் முடிய இது நீடித்தது. ஆயினும் எல்லாக் காலத்தும், தமிழர்கள் விடாப்பிடியாக மரபுகளைக் காத்ததால், இது போராட்டமாக மட்டுமே அமைந்ததே தவிர, ஆதிக்கம் செலுத்தித் தமிழை அழித்துவிடவில்லை. சமண, புத்தச் செல்வாக்கை எதிர்க்க, வைதிகம், தமிழைத் தழுவிக்கொண்ட காலமே, பக்தி இயக்கமாக மலர்ந்தது.

சோழர் எழுச்சிக்காலம் முதல் வடமொழி ஆதிக்க 'எதிர்ப்புநிலை' வளர்ந்தது. பின்னர் இவை மாறிமாறி அமைந்து ஆதிக்கமும் எதிர்ப்பும் என்ற இருநிலைகளின் போராட்டமாகவே தமிழ் இன்றளவும் இயங்கி வருகிறது. இது எங்குபோய் முடியுமென்பது, இன்னும் முடிவாகவில்லை. தமிழர்களின் 'தாழ்வு மனப்பான்மை' பலநிலைகளில், தமிழை இரண்டாந்தர, மூன்றாந்தர நிலைக்குத் தள்ளுவதோடு, தமிழும் உலகவழக்கு நிலையை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறது.

### தமிழ் இலக்கியம்

தமிழ் இலக்கியம் தமிழ்ப் புலவர்களாலும் பாணர்களாலும் மரபுவழி காக்கப்பட்டது. இன்றேல் 'மண்புக்கு மாய்வது மன்' எனும் நிலை ஏற்பட்டிருக்கும். தமிழ்மக்கள் அன்று செல்வச்செழிப்பில் திளைத்தனர். இயற்கைவளம் கொழித்தது. கலைகள் பல, உச்சநிலையடைந்தன. களியாட்டங்களில் வரம்பு மீறிய ஈடுபாடும் ஒருவரை ஒருவர் பகைத்து அழித்து ஒடுக்கிப் போர்க்களமே தொழிலாக வாழ்தலும் என இவற்றில் மூழ்கிக்

கிடந்தனர். தமிழ் மக்களும் மன்னர்களும் தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் வேர்களும் விழுதுகளுமாக விளங்கினர். எனினும் முற்கூறிய சூழலில், இலக்கியத்தையும் அதனை எழுதிவைத்துப் பரப்பியதால் மொழியையும் காப்பாற்றித் தலைமுறைகளுக்குத் தந்த பெருமை தமிழ்ப் புலவர்களுக்கே உரியதாகும். அதே நிலைதான் இன்றளவும் நீடிக்கிறது.

### தமிழக நில அமைப்பும் தமிழ் இலக்கியமும்

தமிழர்கள் உலகை நான்கு நிலப்பகுப்புடையதாகப் பார்த்தனர். தமிழக நில அமைப்பே அதற்குக் காரணம். 'நானிலம்' எனவும் உலகிற்குப் பெயரிட்டனர். ஐந்தாவதாகப் பாலை நிலம் என ஒன்று, பருவ வேறுபாட்டால் அமைவதைத் தனி நிலமாகக் கொண்டிலரெனினும் பொதுவழி நிலம் எனக் கொண்டனர். இந்த ஐந்துநிலப் பகுப்பு, தொடக்ககாலத்தில் இந்தியா முழுவதற்கும் உரியதாக இருந்ததென்று சீனிவாச அய்யங்கார் கருதுவது முன்னரும் எடுத்துக்காட்டப்பெற்றது.

தமிழர்களுக்குரியதான இந்நில அமைப்புப் பகுப்பைத் தொல்காப்பியம் சுட்டிக்காட்டுகிறது.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே. *(951)*

தெய்வம் உணாவே மா மரம் புள் பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருஎன மொழிப *(964)*

காட்டுவளம், மலைவளம், ஆற்றுவளம், கடல்வளம் நான்கும் ஏறத்தாழச் சமனிலையிலும், ஒன்றுக்கொன்று தொடர்பின்றியும் தழைத்து, மனித நாகரிகம் வளர்ந்த தொடக்கநிலையை இது காட்டுகிறது. பண்பாட்டு மானுடவியலார் பழைய கற்காலம் தொட்டு ஆய்வதுடன், இவ்வகையான 'பரிணாம' வளர்ச்சியையும் ஆராய்தல் தகும். இந்நிலங்களுக்குத் தனித்தனித் தெய்வவழிபாடு, வேறுபட்ட பயிர் விளைவுகள், உணவு வகைகள், ஒவ்வொன்றற்கும் சிறப்பாக உரிய விலங்குகள், மரங்கள், பூக்கள், செடி கொடிகள் வெவ்வேறு பறவை இனங்கள் இருந்ததையும், அவற்றைப் பின்னணியாகக் கொண்டே சங்கப் பாடல்கள் புனையப்பட்டிருப்பதையும் பார்க்கும் போது, அங்கங்கு காலம்காலமாகப் பாடப்பட்ட நாட்டுப்புற மக்களது பாடல்களின் வளர்ச்சியே சங்க இலக்கியம் என்பது புலனாகிறது.

தமிழர்கள் பெரும்பொழுது (பருவங்கள்) ஆறு எனவும் சிறுபொழுது ஆறு எனவும் பகுத்தனர். இலக்கியம் புனையும்பொழுது, இந்த நிலத்திற்கு

இந்த உரிப்பொருள் சிறந்ததென ஒரு பாகுபாடு கண்டனர். இந்த நிலத்தில் இப்பருவத்தில் இச்சிறுபொழுதில் இவ்வுரிப் பொருள் நிகழ்ந்ததெனப் பாடுதல், அவ்வுரிப் பொருட் சுவையை மிகுவிக்குமெனவும் வரையறை செய்து பாடினர். 'புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்' எனவும் இவற்றின் நிமித்தங்கள் (இவை நிகழ்தற்குக் காரணமான சூழல்கள்) எனவும் உரிப்பொருள்களைப் பகுத்துத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. குறிஞ்சி நிலமும் கூதிர், முன்பனிக் காலங்களும் நள்ளிரவாகிய யாமமும் களவுக் காதலை அதாவது புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகிய உரிப் பொருளைப் பாடச் சிறப்புடைய பின்னணியாகுமெனக் கண்டு பாடினர். பாலைத் திணை பிரிவு பற்றியது. அதனைப் பாடப் பின்பனியும் வேனில் எனப்படும் கோடை காலமும் நண்பகற்பொழுதும் சிறந்த பின்புலமாய் அமைந்து, பிரிவின் கொடுமையைக் கூறி, அவலச்சுவையை மிகுவிக்கப் பயன்படுமென்று கண்டு, அவ்வாறே பாடினர். இவை ஒருவாறு நாடகத்தில், பின்புலமாக அமைக்கும் 'திரையை' ஒத்துக் காணப்படுகின்றன. இளம் பூரணர் குறிப்பிடுவது போல், எல்லா நிலத்தும் எல்லா உரிப்பொருளும் நிகழுமாயினும் இங்ஙனம் பாடுவது, மெய்ப்பாடு எனும் சுவையை மிகுவித்து, இலக்கியத்தை வளப்படுத்தும் உத்தியாகும். தமிழிலக்கியம் கூத்து, நாடகம், நாட்டியம் ஆகிய மக்கள் கலையிலிருந்து முகிழ்த்ததென்பதற்கு வேறு சான்று வேண்டியதில்லை.

அகம், புறமெனப் பகுக்கப்பட்ட தமிழிலக்கியம், மக்கள் வாழ்வை உள்ளது உள்ளவாறே இலக்கியமாக்கியதாகும். பிற உலகச் செவ்வியல் இலக்கியமெல்லாம் புராணங்களாகவோ, புராணக் கூறுகள் மிக்கவையாகவோ காணப்படுவன. அவை மறைமுகமாக மானுடத்தை உய்த்துணரவைத்து, மக்கள் வாழ்வியலை அறியச்செய்யும். தமிழிலக்கியமோ அதற்கு நேர் எதிராக, மக்கள் வாழ்வியலை நேரே புனையும் தனிச்சிறப்புடையது. இங்கு தொன்மங்கள் என்பன, மக்கள் வாழ்வைப்பாடத் துணையாகச் சிறிய அளவில் இடம் பெறுவதோடு நின்றுவிடும்.

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல்சான்ற புலனெறி வழக்கம்' *(999)* 'மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்' *(1000)*. 'உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின், வழக்குவழிப்படுதல் செய்புட்குக் கடனே' *(1163)* - இத்தொல்காப்பியப் பகுதிகள் மக்கள் வாழ்வே, இலக்கியம் புனைதற்கான கரு (Theme) என உணர்த்துகின்றன. இதனால் தொல்காப்பியப் பொருளதிகாரம், 'தமிழர் நாகரிகம்' பற்றியதாக, விரிவடைகிறது. உண்மையில் அது மக்கள் வாழ்வை, இலக்கியமாக்கும் கலை பற்றியதேயாகும்.

### அந்தணர்களும் வடமொழியும்

இவ்வாறு தமிழர்களின் வாழ்வியலிலிருந்து மட்டுமன்றி, தமிழக நில அமைப்பிலிருந்தும் தமிழ் இலக்கியம் கருக்கொண்டு, பிறந்து, வளர்ந்திருப்பது

அதன் தனித்தன்மையை *(Unique feature)* உயர்த்திக் காட்டுகிறது. இதனால் வைதிக, பௌத்த, சமணத் தொடர்புகளால் பிறமொழிகளும் பண்பாடுகளும் எவ்வளவு மிகுதியாகத் தாக்கியும், தமிழிலக்கியம் சற்றும் அசைவிலாத அரண் என நிலைபெறலாயிற்று.

தொல்காப்பியர் காலத்திலேயே - இன்னும் கூர்ந்து நோக்கினால், அவருக்கும் முற்பட்ட முதற்சங்கக் காலத்திலேயே, வடமொழித் தொடர்பும் வடநாட்டிலிருந்து குடியேறியவர் தொடர்பும் வேரூன்றியிருந்துள்ளன. தமிழரோடு தமிழராகக் கலப்புற்றுப் போனாலும், அவர்களில் ஒருசாரார் தங்களுடைய வடமொழித் தொடர்பையும் சடங்குகளையும் கைவிடாது வாழ்ந்துள்ளனர். தமிழர்களின் வேள்வி ஆர்வமும் புதுமை வேட்கையும் வடமொழியையும் வேதியர்களையும் போற்றச் செய்தன. பாணரும் புலவரும் தமிழ் மன்னர்களிடமும் வள்ளல்களிடமும் பெற்றிருந்த சிறப்பையும் நெருக்கத்தையும் பரிசில் முதலியவற்றையும் அந்தணர்கள் பெறத் தொடங்கினர். அவ்வாறு பெறுதற்பொருட்டுப் பாணர்தம் கலைகள் முதல் தமிழ்ப்புலமை, வானியல், கணியம் என அனைத்தையும் கற்றுத் தமதாக்கிக் கொள்ளவும் அன்றே தொடங்கினர்.

இங்கு புலால் உண்ணுதல், கள் பருகுதல், போர் உடற்றுதல், பரத்தைமை ஒழுக்கக் கேடுகள், களவொழுக்க ஏமாற்றங்கள் எனப் பல்வேறு சீர்கேடுகள் பெருகி வந்த நிலையில், வடக்கே இருந்து போந்த கேள்வி அந்தணராம் வேள்வி வைதிகர், பௌத்த சமண நெறியினர் நல்லொழுக்கங்களைப் போதிப்பவராகக் காணப் பட்டமையின், தமிழ்ச் சமுதாயம் அவர்களைப் போற்றி வாழத் தொடங்கியது. தமிழகத்தில் வாழ்ந்த சான்றோர், ஆசான்மார், கடவுள் வழிபாட்டிற்குப் பூசனை இயற்றிய குருக்கள்மார் என இத்தகையவருடன், அந்தணர்களும் மிக உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்பட்டதுடன், அனைவரிலும் மேலாக வணங்குதற்குரியர் என்ற கருத்தும் தோன்றி, வளரலாயிற்று. சமுதாயத்தில் மேல்மட்டத்திலிருந்தோரிடமும் மன்னர்களிடமும் புகுந்த இப் புதிய 'போதை' மெல்லமெல்ல எல்லா மக்களிடமும் பரவியபடி இருந்தது என்றுதான் கூற வேண்டும். களவில் கூற்று நிகழ்த்துதற் குரியோர் என, அக வாழ்க்கையில் இடம் பெறுவோரில், பாங்கனுக்கும் முன்னதாகப் 'பார்ப்பான்' குறிக்கப் படுகின்றான் *(தொல். 1445)*. கற்பிலும் குடும்ப வாழ்வில் கூற்றுநிகழ்த்துவோரில் அறிவர், கண்டோருடன் பார்ப்பான் சிறப்பிடம் பெறுகிறான் *(1446)*. பார்ப்பார், அறிவர் *(எதிரது அறியும் கணியர்)* சொல்வதை, அனைவரும் கேட்டு நடப்பர் *(1453)*. இங்ஙனம் அகவாழ்வாம் குடும்ப வாழ்வில், பார்ப்பாரும் முக்கிய இடம் பெறுமளவுக்குக் கலந்திருந்தனர். தமிழகத்தில் மக்களிடையே தாமும் தமிழராகவே ஊடுருவி வாழ்ந்துள்ளனர்.

வாகைத்திணையில் பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர் *(மூவகைக் காலமும் அறியவல்ல)* அறிவர், தாபதர், பொருநர் எனும் இவர்கள் தத்தம் வாழ்வு நெறியில் மேம்படுவது பற்றிப் பேசப்படுகிறது *(தொல். 1021)*.

கற்பியலில் 'கரணம்' பற்றிய செய்திகள் வருகின்றன. திருமணச் சடங்குகளில் தாலி கட்டும் பழக்கம் முதலியன தமிழர்க்கே உரியன. ஆயினும் இவற்றை 'ஐயர்' என அகவையில் மூத்த, தமையன்மார், பெற்றோரனைய பெரியவர்கள் கூடி முடிவு செய்து, 'கரணங்களை' உருவாக்கினர் என்பதே பொருளாகும் *(தொல். 1091)*. இதில் தமிழரோடு தமிழராகக் கலந்து வாழ்ந்த பார்ப்பனருக்கும் பங்குண்டு என எண்ணலாம். இக்கரணங்கள் முதலில் மேற்குலத்தாரிடமே காணப்பட்டுப் படிப்படியாகப் பிறராலும் பின்பற்றப்பட்டன *(தொல். 1090)*.

வடக்கே இருந்து போந்த துறவிகளே *(வைதிகர், பௌத்தர், சமணர்)* முதலில் அந்தணர் எனப்பட்டனர் எனத் தெரிகிறது. பார்ப்பனர் பொதுமக்களோடு கலந்து வாழ்ந்த ஒரு குலத்தவராகவே காணப்படுகின்றனர். அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் எனும் குலப்பகுப்பு, வடவரின் 'வருணாசிரம முறை' வந்தபின், தமிழர்கள் தமக்குள்ளே ஏற்படுத்திக் கூறிக்கொண்ட ஒரு குலப் பகுப்பு முறையாகும். இது பிறப்புப் பற்றியதன்று, தொழில் பற்றியது அல்லது அவரவர் குடிவழி முறைச் செயல்கள் பற்றியது. வேளாளர் என, அனைவரையும் அடக்கிக் கூறப்பட்டுள்ளது. தச்சர், குயவர் எனக் கைவினைஞர் பல பிரிவினராயினும் எல்லோரும் 'உழுதுண்ணும்' வாழ்வும் உடையவராகவே அன்று விளங்கினர். புறநானூற்றில் 'வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்' என ஓரிடத்தில் *(183)* வருவது, மெல்லமெல்ல இப்பகுப்பு முறை தொடங்கியதையே சுட்டிக் காட்டுவதாகும்.

இத்தகைய தொடர்புகளால்தான், தொல்காப்பியர்க்கு வடசொற்களைத் தமிழில் எடுத்தாள்வது பற்றி, இலக்கணம் வகுக்க வேண்டியதாயிற்று.

கிரேக்க இலத்தின் சொற்களைக் கணக்கின்றிக் கடன்பட்ட ஆங்கிலம், அவற்றை ஆங்கில ஒலிப்புக்குரிய வடிவமாக்கி' ஏற்றுக் கொண்டது. அதுபோலத் தமிழும் தனக்குரிய எழுத்தோசைக்குள் அடக்கியே, வடமொழியை எடுத்தாண்டது. இங்ஙனம் பிறமொழிச் சொற்களைத் தமிழ்மைப் படுத்திய பாங்கை *(வடமொழி, கிரந்தம், பாலி, உருது, அராபி, போர்ச்சுக் கீசியம், பிரெஞ்சு, ஆங்கில மொழிகளிலிருந்து கடன்பெற்ற சொற்களைத் தமிழாக மாற்றியமையை)* ஒரு தனி அகர முதலியாகவும் தொகுக்கலாம்.

இவ்வாறு தமிழ் இலக்கியம் அன்றைய தமிழகப் பின்னணியில் உருவாயிற்று. அதனுள் நுழைபுலங் கொண்டு கற்பார், கூர்ந்து நோக்கினாலன்றி, பல்வேறு கருத்துக்கள் வேறுபட்டவை மட்டுமன்றி, முரண்பட்டவை கூட இருக்கக் காணலாம். முன் சுட்டியவாறு வைதிக, பௌத்த, சமண மெய்யியற் சார்புகளும் தமிழ்ப் பண்பாட்டிற்கு அப்பாற்பட்டனவும் முற்றிலும் தமிழ் நாகரிக எதிரொலிகளாக விளங்குவனவும் கலப்புற்றுக் காணப்படுகின்றன. சங்கப் பாடல்கள் தமிழர்களது எழுச்சியை மட்டுமன்றி, வீழ்ச்சியைக் காட்டுமிடங்களும் மிகப்பலவுள என்பதை மறத்தல் கூடாது.

அக்காலச் சூழலுக்கேற்ப, அவை மிகக் கூர்மையாய் வெளிப்படுத்தப் பெற்றுள்ளன. ஆழ்ந்து கற்று வேறுபாடறிதல் வேண்டும்.

வலிமைமிக்க தமிழகப் பேரரசுகள் ஆரிய நாகரிக வேட்கையில் மூழ்கித் திளைத்தன. அதற்கு இங்கிருந்த செல்வச் செழிப்பும், மது, பரத்தைமை முதல் அனைத்திலும் வரம்பு மீறி வளர்ந்திருந்த கேடுகளும் காரணமாயின. இவற்றின் வேறுபடப் புதிய 'போதனைகளுடன்' வந்த வடநாட்டு அந்தணர்தம் மன அமைதி தரக்கூடிய வாழ்வு நெறிகள் சில வழியமைத்தன. சிலப்பதிகாரத்தில் மாடல மறையவன், சேரன் செங்குட்டுவனின் சீற்றத்தைத் தணித்து, அவனை 'வேள்விசெய்து' வீடு பெறும் நெறியில் செலுத்த முயலும் பாங்கினை, ஓர் உதாரணமாகக் காட்டலாம். தமிழர்கள் வடநாட்டவரை வென்றனர். வாணிகத்தில் மேம்பட்டனர். ஆனால் அவ்வடநாட்டவரின் வேத நெறிக்கும் மெய்யியல் மரபுக்கும் சமற்கிருத மயமாதலுக்கும் இடம் கொடுத்துத் தம் அடையாளங்களை இழக்க அன்றே ஆயத்தமாயினர். அரசர்களும், உயர்குடிமக்களும் 'ஆனியற் பார்ப்பன மாக்களைக் காப்போராகவும்', 'பார்ப்பார் நோவன செய்யாதவராகவும்', 'பார்ப்பார்க்குத் தப்பெதுவும் செய்தலைக் கொடுமையாகக் கருதுபவராகவும், 'நான்மறை அந்தணர் ஏந்துகை எதிரே தலை தாழ்த்துபவராகவும் அவர்களைக் கொண்டு வேள்வி செய்தலைப் பெரும்பேறாகக் கருதுபவராகவும் மாறினர். அரசர் எவ்வழி, குடிகள் அவ்வழி அன்றோ*? (புறம் 6, 9, 15, 34, 43).*

உரோமானியர்கள் கிரேக்கர்களைப் போரில் வென்றனர். ஆனால் கிரேக்க இலக்கியம் உரோமானியர்களை அடிப்படுத்தி ஆளுமை கொண்டது எனக் கூறப்படுவதை இங்கு ஒப்பு நோக்கலாம்.

# 8. தொல்காப்பியம்

ஒரு மொழிக்கு இலக்கணம் வகுக்கும்போது, பிற மொழிகளின் இலக்கணம் பற்றிய பொது அறிவும் வேண்டும். தொல்காப்பியர் ஒப்பிட்டறிய வல்லராதல் வேண்டி, வடமொழி 'ஐந்திரம்' முதலாய நூல்களைக் கற்றிருந்தார். இது ஒப்பீட்டு முறைக்காகவும், தமது மொழிக்குரியவாறு இலக்கணம் வகுக்க வேண்டிய நெறி முறையறிதற்காகவுமே அல்லாமல், ஒரு பிறமொழி நூலைப் பார்த்துத் தமிழில் இலக்கணம் எழுதுவதற்காக அன்று, அரங்கேற்றத்தைக் கேட்ட, அதங்கோட்டு ஆசானும் வடமொழி நான்மறைகளைப் பழுதறக்கற்ற, முழுதுணர்பெரியோராவார். தமிழ்மொழி வல்லுநர்களாகிய இவர்கள், கிணற்றுத்தவளைகள் அல்லர்; பிறமொழி அறிவும் மொழியை அறிவியல் முறையில் அணுகும் ஆய்வும் மிக்கவர் என்பதற்கே அன்றைய நிலையில் அவர்களது வடமொழி அறிவு சிறப்பித்து அடைமொழியாகக் கூறப்பட்டுள்ளது.

### தொல்காப்பியர் நூல் யாத்த முறை

உலகவழக்கும் செய்புள் *(இலக்கிய)* வழக்கும் என இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு, தொல்காப்பியம் யாக்கப்பட்டுள்ளது. வழங்கியல் மருங்கு, செய்புள்மருங்கு *(22, 1499)* என இவை, ஒரு மொழியின் இரண்டு பக்கங்களென விதந்தோதப்படுகின்றன. இவற்றுள் உலகவழக்கிற்கே முதன்மைதந்து, 'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்' எனப் பனம்பாரனார் பாயிரம் பகரும். தொல்லாசான் உலகவழக்கு என்றது தரமான பேச்சு வழக்காகும். கொச்சைகளையும் பிழைபட்டவற்றையும் ஒலித்திரிபுகளையும் அவர் ஏற்கவில்லை. மொழியின் இயற்கை இதுவெனக் கிளந்தவற்றிலிருந்து, ஏதேனும் வேறுபடத் தோன்றுமானால், உலக வழக்கு அடிப்படையை வைத்தே உண்மை இதுவென ஆராய்ந்து முடிவு கட்ட வேண்டும் என்பார் அவர்.

> கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
> வழங்கியல் மருங்கின் மருவொடுதிரிநவும்
> விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
> வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
> நன்மதி நாட்டத்து என்மனார் புலவர் *(483)*

இதிலிருந்து அவரது சிந்தனைப் போக்கை அறியலாம். மொழியின் அடிப்படையை, ஆணி வேரை உணர்ந்து, இலக்கணம் படைத்தவர் அவர்.

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பெரும் பிரிவுகளையுடையது தொல்காப்பியம். தொல்காப்பிய மூலம் *1610*

நூற்பாக்களைக் கொண்டது. எழுத்ததிகாரம் *483*. சொல்லதிகாரம் *463*. பொருளதிகாரம் *664*. உரையாசிரியர்கள் சில நூற்பாக்களை இணைத்தோ, பிரித்தோ கொண்டமையால், எண்ணிக்கையில் இரண்டொன்று கூடுதல் குறைவாகக் காணப்படும். தெய்வச் சிலையார் எச்சவியலில் காணப்படும் மூன்று நூற்பாக்களை, அவை வினைச்சொல் பற்றியன என்பதற்காக, வினையியல் இறுதியில் கொண்டுபோய்ச் சேர்த்துள்ளார். இத்தொன்மை மிக்க நூலில் *387* பாடவேறுபாடுகள் காணப்படினும், பெரிய மாற்றமெதுவும் இல்லை. ஏடுபெயர்த்து எழுதுவோராலும் உரையாசிரியர்களாலும் இவ்வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கக் கூடும். எனினும் 'காப்பியக் கட்டமைப்புப் போன்ற செறிவுள்ள கட்டமைப்புள்ள நூலாகத்' தொல்காப்பியம் அமைந்துள்ளது.

தமிழ்கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் பற்றித் தொல்லாசான் ஆராய்ந்தாரெனக் கூறிய பனம்பாரனார், 'செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு, முந்து நூல் கண்டும்' அவர் தமது நூலை யாத்ததாகக் குறிப்பிடுகிறார். மீண்டும் ஒரு 'நிலம்' குறிப்பிடப்படுவதும், அங்கு வழங்கிய 'முந்துநூல்களை' அறிந்து, 'புலம்' தொகுத்ததாகக் குறிப்பிடுவதும் எண்ணிப் பார்க்கத் தக்கன. தொல்காப்பியர் தம் நூல் முழுவதும் 'என்ப', 'என்மனார் புலவர்' என்றிவ்வாறு, ஏறத்தாழ இருநூற்று முப்பது இடங்களில் குறிப்பிடுகிறார். 'இலக்கணம்' என்பது படைப்பிலக்கியம் போல்வதன்று. பலரது சிந்தனைகளின் தொகுப்பாகவே அமையும். பனம்பாரனார் 'புலம் தொகுத்தோன்' என்பது, இன்றைய ஆய்வாளர்கள் 'தகவல் சான்றாதாரங்களைத்' தொகுப்பதை நினைப்பூட்டுகிறது.

தொல்காப்பியரின் ஆசிரியர் அகத்தியர் என்பதும் அகத்தியம் முதலில் தோன்றிய இலக்கண நூலென்பதும் செவிவழிச் செய்திகளாக மட்டுமே அறியப்படுகின்றன.

**வரைநிலை இன்றே ஆசிரியர்க்க** *(315)*

**கடிநிலை இன்றே ஆசிரியர்க்க** *(389)*

எனக் குறிக்கப்படும் இடங்களில், இலக்கண ஆசிரியர்களைப் பன்மையில் கூறும் தொல்காப்பியர், 'அகத்தியர்' என யாண்டும் சுட்டிக்கூறவில்லை.

காப்பியாறு, காப்பியக்குடி, காப்பியாமூர் என ஆறு, ஊர்ப்பெயர்கள், அன்று வழக்கிலிருந்துள்ளன. பதிற்றுப்பத்தில் நான்காம்பத்து 'காப்பியாற்றுக் காப்பியனார்' என்பவரால் பாடப்பெற்றது. நற்றிணையில் 'காப்பியஞ் சேந்தனார்' என ஒரு புலவர் குறிக்கப்படுகிறார் *(246)*. காப்பியன் மகன் சேந்தன் என்பது, அதன் பொருளாகும். சிலப்பதிகார வரந்தரு காதையில் ' காப்பியத்தொல்குடி' *(83)* என வருவது ஊர்ப் பெயராகும். உ.வே.சா. அவர்கள், இதற்கு, 'காப்பியக்குடி என்பது சீர்காழிக்குத் தென்கிழக்கிலுள்ளதோர் ஊர்' என அடிக்குறிப்பு எழுதியுள்ளார். 'தொல்கபிலன்' என்பது போலத்

'தொல்காப்பியன்' என்பதும் இயற்பெயராக இருந்து, அவரெழுதிய நூலுக்குத் 'தொல்காப்பியம்' எனும் பெயராக அமைந்தது எனலாம்.

இன்றைய நிலையில், தொல்காப்பியர் காலத்தை அறுதியிடப் புறச்சான்றுகள் ஏதுமில. தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், இரட்டைக் காப்பியம் ஆகியவற்றைப் பிறரினும் மேம்பட, உள்நுழைந்து கற்றவர்கள் இவை அனைத்திலும் முற்பட்டது தொல்காப்பியம் எனக் கூறுகின்றனர்.

தொல்காப்பியத்திற்கு உரையெழுதியவர்கள் உதாரணம் காட்ட முடியாமல் 'இவை வழக்கு வீழ்ந்தன' எனச் சுட்டுமிடங்கள் பலவுள. தொல்லாசான் குறிப்பிடும் அதோளி, இதோளி முதலாய - சுட்டுமுதலாகிய இகர இறுதிச் சொற்களும் *(159)*, அழன், புழன் முதலிய சொற்களும் *(82)* சங்க காலத்திலேயே வழக்கிறந்தனவாகும். செய்யுளிலக்கணங்கள் பலவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தரமுடியாத இடங்கள் பலவுள. அங்கெல்லாம் பேராசிரியர், 'தலைச்சங்கத்தார் முதலாயினார் செய்யுட்களுள் பயின்று வந்திருக்க வேண்டும்' *(பொருள் 292)* என்பார். 'சங்கச் சான்றோர் செய்யுளுள் பயின்று வாரா இவை, முன்னதாகத் தலைச்சங்கத்தார், இடைச்சங்கத்தார் காலத்தே பயின்று வருமாறு செய்யப்பட்டிருக்கும்' *(பொருள். 362)* என்று கூறுவார். 'ஆசிரியர் நூல்செய்த காலத்து உளவாய்ப் பிறகு செய்யப்படா தொழிந்தன' எனவும் குறிப்பிடுவார். *(பொருள் 392)*. நான்குவகைப் பாக்களைக் கூறிவிட்டு அவை 'அறம் முதலாகிய மும்முதற் பொருட்கும் உரியனவாகும்' *(1363)* என்பது தொல்காப்பியம். வாழ்வை அகம், புறமெனக் கண்டு, மறை பிறரறியாக் காதலை அகமென்றும், அகமல்லாத பிற வாழ்வைப் புறமென்றும் இலக்கியத்துள் பகுத்தனர். அறம் முதலிய மூன்றும் வாழ்க்கை நெறிகளும் குறிக்கோள்களுமாகும். இது தமிழர் தம் கோட்பாடு, 'அறம்' என்பதற்குள்ளேயே அவா அறுத்தல், துறவு, மெய்யுணர்தல், பிறப்பறுத்து வீடுபெறல் யாவும் அடங்கும். திருக்குறள் இதனை அடியொற்றி அமைந்ததுடன் தொல்காப்பிய நெறிகள் பலவற்றைப் பின்பற்றியுள்ளது.

வேதம், மந்திரம் என ஒரு குலத்தார்க்கே உரித்தாகக் கூறப்பட்ட கருத்துப் புகுந்தபோதே, தொல்காப்பியர்

> **நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
> **மறைமொழி தானே மந்திரம் என்ப** *(1434)*

என மறை, மந்திரம் என்பன சான்றோர்க்குப் பொதுவானதொரு சிறப்பென்றார். அதனை அடியொற்றி,

> **நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
> **மறைமொழி காட்டி விடும்** *(28)*

என்றார் திருவள்ளுவர்.

காஞ்சித்திணையில் 'மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமையும்' *(1025)* என்பது முதல்துறை. திருவள்ளுவர்

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு *(336)*

என்று, 'பெருமை' எனும் சொல்லையே ஆள்கின்றார்.

அக்காலத்தில் தோழி தாயிடம், 'ஒரு யானை தினைப்புனத்தில் ஓடிவந்தது. எங்களைக் கொல்லவந்த அந்த யானையை, அவ்வழி வந்த மலைநாடன் விரட்டியடித்து எங்களைக் காப்பாற்றினான்', என ஒரு பொய்யைக் கூறி, அக்காதலனுக்குத் தலைவியை மணம் முடிக்க ஒப்புதல் பெற முயல்வாள். இது சிலசமயம் உண்மையாகவும் இருக்கும், சில சமயம் நடக்காததை நடந்ததாகப் 'படைத்து மொழியவும்' படும்.

வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்
நல்வகையுடைய நயத்திற் கூறியும்
பல்வகையானும் படைக்கவும் பெறுமே *(1183)*

என்பது தோழி கூற்றுப் பற்றியது. 'படைக்கவும் பெறும்' - பொய் ஒன்று மெய்போலக் கட்டிக் கூறப்படும்.

முன்னிலை, அறன்எனப் படுதல்என்று இருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும் *(1060)*

என்று, இதனைக் குறிப்பாகவும் அவர் கூறுவார்.

தலைவியின் களவுக் காதலை அறிய விரும்பும் தோழி 'நாண நாட்டம்' 'நடுங்க நாட்டம்' என்று பொய்யும் மெய்யும் கலந்தவற்றைச் சொல்லி, அவளிடமிருந்து உண்மையைக் கண்டு கொள்ள முயல்வாள். 'மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது, பல்வேறு கவர்பொருள் நாட்டத்தானும்' அவள் ஆராய்வாள். இப்பொய்ம்மைகள், தலைவிக்கு அவள் விரும்பியவனுடன் திருமணம் செய்விக்கத் தோழி கூறுவனவாதலின் 'புரைதீர் கிளவி' என்று *(குற்றமில்லாத பேச்சு)* தொல்காப்பியரால் குறிக்கப்படுகின்றன. 'பொய்யாயிற்றே என்று எண்ணாதீர்கள், இது ஒரு நன்மை கருதிக் கூறப்படுவதாகலின் குற்றமற்றதே' எனச் சொல்வது அது. திருக்குறள்.

பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின் *(292)*

எனக் கூறுமிடத்துப் 'புரைதீர்ந்த' என்ற தொல்காப்பியச் சொல்லாட்சியே வருதல் காணலாம்.

தமிழ்ப் பண்பாடு, தமிழர் நாகரிகம். தமிழர்தம் தனித்தன்மைகள், அடையாளங்களைத் தொல்காப்பிய வழி நின்றே, திருக்குறள்

நிலைபெறுத்துகிறது. துறவு எனக் கமண்டலம் ஏந்துதல், காடேகுதல், பிச்சையெடுத்துண்ணுதல் யாவும் புற நாகரிகங்களாய்த் தமிழரிடையே புகுந்தவை, இங்கும் காணப்பட்டவை. தமிழர் கோட்பாடு, இறைவன் தந்த இவ்வாழ்வை முழுமையாய் அனுபவித்துப் பிறகு அதினின்றும் படிப்படியாக விடுபடவேண்டும் என்பதேயாகும். 'ஐம்புலன்களின் வகை அறிந்து, அவற்றை அடக்கி ஆளவேண்டும்'. ஐம்பொறிகளை அழிப்பது, ஒழிப்பதாகச் சொல்வன, புறவேடங்களாய், போலிகளாய் வாழவே வழிகோலும். அவை 'கூடா ஒழுக்கத்தில்' கொண்டுபோய் விடும்.

**காமம் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமம் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே** *(1138)*

என்பது தொல்காப்பியம். திருக்குறள் அறத்துப்பாலையும் துறவு முதலிய அதிகாரங்களையும் இப்பின்னணியில் வைத்துக் கற்றால்தான், உண்மை அறியப்படும்.

தொல்காப்பியம் திருக்குறளுக்கும் சங்க இலக்கியத்திற்கும் முற்பட்டது என்பதை, க. வெள்ளைவாரணர் தமது 'தொல்காப்பியம்' என்ற இலக்கிய வரலாற்று நூலில், பல்வேறு அகச்சான்றுகள் தந்து நிறுவியுள்ளார் என்பதை முன்னரும் குறிப்பிட்டோம்.

**பதிப்புக்கள்**

*1849* முதல் தொல்காப்பியம் முழுமையாகவும் எழுத்து சொல் பொருள் என்பன தனித்தனியாகவும் பதிப்பிக்கப்பட்டு வந்துள்ளன. சாமுவேல்பிள்ளை, ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை, எஸ். பவானந்தம்பிள்ளை, மழவை மகாலிங்கையர், வஉ. சிதம்பரம் பிள்ளை, யாழ்ப்பாணம் கணேசய்யர் எனத் தொல்காப்பியத்தைப் பதிப்பித்த பேராசான்கள் பலராவர். மொழியியல் வல்லுநர்களும் ஆய்வாளர்களும் தொல்காப்பிய ஆய்வுகளில் ஈடுபட்டுப் பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் கேரளப் பல்கலைக்கழகமும் இதில் ஈடுபாடு காட்டியதை, அங்கிருந்து வெளிப்பட்ட ஆய்வுகளாலும் வெளியீடுகளாலும் அறியலாம். சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் தொல்காப்பியப் பதிப்பில் போற்றுதற்குரிய பணியாற்றியுள்ளது.

**உரைகள்**

'உரைகள்' எனும் பெயரே, 'வாயால் உரைக்கப்பட்டமை' யால் வந்ததேயாகும். அன்று பனை ஏடுகள் போன்றவற்றில், ஒரு சில பிரதிகளே எழுத முடியும். மாணவர் அனைவரும் ஏடு வைத்திருத்தல் இயலாது. அதனால் நூல் எழுதுபவனும் செறிவாக, சுருக்கமாக எழுத வேண்டியிருந்தது.

இலக்கண நூல்கள் நூற்பாக்களாக எழுதப்பட்டதற்கும் எடுத்துக் காட்டுக்களை நூலாசிரியனே தரமுடியாமல் போனதற்கும் அதுவே காரணம். ஆசான் கையில் ஏட்டை வைத்துக்கொண்டு, நூற்பாவை ஓதி, அதன் விளக்கம், எடுத்துக்காட்டு, ஐயமகற்றல் யாவற்றையும் வாயால் உரைத்துச் சொல்லச் சொல்ல, மாணவர் கற்றுக் கொள்வர். நூற்பா மட்டும் மனப்பாடமாய், மாணவர் நினைவிலிருக்கும். ஒருவர் பாடம் சொன்னதைக் கேட்டவர்கள் மற்றவர்க்குப் பாடம் சொல்ல, இவ்வாறு பல பரம்பரைக்கு 'உரைகள்' 'வாய்மொழி' மரபாகவே போதிக்கப்பட்டும் கற்கப்பட்டும் வந்தன.

இவ்வாறு இறையனார் அகப்பொருளுரை பத்துத் தலைமுறைக்குச் சொல்லப்பட்டு வந்ததை, அந்நூலுள் குறிக்கப்படுவது கொண்டு அறியலாம். உரைகளில் 'இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின் இன்னது நுதலிற்று' எனவும் 'இவ்வாறு அமைதலன்றோ தக்கதெனின், நன்கு கடாயினாய், அதற்கது பொருளன்று' எனவும் இவ்வாறு வரும் மொழிநடைகள் பலவும் இவை வாய்மொழியாகவே பாடம்சொல்லப்பட்டு வந்தன என்பதை நிலைநிறுத்தும்.

தொல்காப்பியம் தோன்றிய காலந்தொட்டே இவ்வாறு பாடம் சொல்லிவந்த மரபு, கிபி. பனிரண்டாம் நூற்றாண்டு தொடங்கி, மீண்டுமோர் தமிழ் மறுமலர்ச்சி ஏற்பட்டுப் பழந்தமிழ் நூல்கள் கற்கப்பட்டபோது, ஏட்டில் எழுதிவைக்கும் பழக்கம் தோன்றி, வாய்மொழி மரபு உரைகள் எழுதிப் பாதுகாக்கப்பட்டன.

இளம்பூரணர் உரை என்பது, இங்ஙனம் கூறப்பட்டு வந்த ஒரு மரபே, அவரால் எழுதி வைக்கப்பட்டதாகும். பேராசிரியர் உரை, பிறிதொரு பாடம் சொல்லிவந்த கருத்துவழி மரபாகப் படுகிறது. ஒரு கல்வித் தொடர்ச்சிக் கருத்துவழி மரபு (A school of thought) என்று இவ்வுரை மரபைக் குறிப்பிடலாம்.

இளம்பூரணர் உரை முதலுரையாகத் தோற்றுதலின், 'உரையாசிரியர்' என அடைமொழியின்றிச் சொன்னால், அப்பெயர் அவரை மட்டுமே குறித்தது. அவர் உரை நூல் முழுமைக்கும் கிடைத்துள்ளது. பேராசிரியர் உரை ஒரு தனிவழி மரபாகப் படுகிறது. ஆனால் இன்று கிடைப்பவை, தொல், பொருள், இறுதி நான்கு இயல்களுக்கு மட்டுமேயாகும். அவரை ஓரளவு பின்பற்றியும் தமது கருத்தை ஏற்றியும் எழுதிய நச்சினார்க்கினியர் உரை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் முழுமைக்கும் உளது. பொருளதிகாரத்தில் முதல் ஐந்து இயல்களுக்கும் செய்யுளியலுக்கும் கிடைத்துள்ளது. தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே விரிவான பலஉரைகள் கிடைத்துள்ளன. இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், சேனாவரையர், கல்லாடர் உரைகள் குறிப்பிடற்பாலன.

இக்காலத்தும் ச. சோமசுந்தர பாரதியார், பூவராகம் பிள்ளை, மு. அருணாசலம் பிள்ளை, புலவர் குழந்தை, க. வெள்ளைவாரணர்,

கு. சுந்தரமூர்த்தி, ச. பாலசுந்தரனார், வ. சுப. மாணிக்கம், ஆ. சிவலிங்கனார், சொ. சிங்காரவேலன் எனப்பலர் குறிப்புரை, பொழிப்புரை, விரிவான விளக்க உரைகளில் ஏதேனும் ஒன்றை எழுதித் தொல்காப்பியத்தை நன்கு பதிப்பித்துள்ளனர். சைவசித்தாந்தக் கழகவழி வெளியிடப்பட்ட இளவழகனாரின் குறிப்புரை - மூலப் பதிப்பு பயனுடையது. மணிவாசகர் பதிப்பகவழி வெளிவந்துள்ளதான, தமிழண்ணலின் கருத்துரை விளக்கச் செம்பதிப்பும் குறிப்பிடற்பாலது. இ.எஸ். வரதராசய்யர், சி. இலக்குவனார், ச.வே. சுப்பிரமணியம் அனைய சிலர் தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் தர முயன்றுள்ளனர்.

தொல்காப்பியம் எழுத்து சொல் பொருள் என மூன்று பெரும் பிரிவுகளையுடையது.

எழுத்ததிகாரத்தில் முதற்கண் உள்ள மூன்று இயல்கள் நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் என்பன. அவை தனிநின்ற எழுத்து, மொழியிடை நிற்கும் எழுத்து, பிறப்பு முறை (ஒலிக்கும் முறை) பற்றியன. தமிழில் புணர்ச்சி இலக்கணம் தனித் தன்மை கொண்டது. ஒட்டுநிலைவிட்டுத் தளராது, இன்றளவும் 'கன்னித் தமிழாக' விளங்குவது, இப்புணர்ச்சி பற்றிய, அறிவியல் அணுகுமுறைகளினாலேயாம். இதனால் அது எஞ்சிய ஆறு இயல்களிலும் நிரல்பட விளக்கப்படுகிறது.

சொல்லதிகாரத்தில் முதல் இயல் சொற்கள் தொடர்ந்து நிற்கும் விதங்களைக் 'கிளவி ஆக்கம்' எனும் பெயரில் விளக்குகிறது. குறிப்பாக அல்வழித் தொடர்கள் அமையுமாற்றையும் அது பேசுகிறது. வேற்றுமைத் தொடர்கள் பற்றி அடுத்துவரும் மூன்று இயல்கள் விளக்குகின்றன. பின்னர் வரும் நான்கு இயல்கள் முறையே பெயர், வினை, இடை, உரிச் சொற்கள் பற்றியன. இறுதியிலுள்ள எச்சவியல் முன்னர்க் கூறியவற்றிற்குப் பொதுவானவற்றையும் அங்குக் கூறாது விடுத்தவற்றையும் விளக்குகிறது.

ஏனைய மொழிகள் எல்லாம் எழுத்துக்கும் சொல்லுக்குமே இலக்கணம் வகுத்தன. தமிழில்கூட இவை இரண்டிற்குமட்டும் இலக்கணம் கூறி, பொருளிலக்கணத்தை விட்டுவிட்ட நூல்கள் உண்டு. பொருள் இலக்கணம் என்பதைச் சுருக்கமாக, மக்கள் வாழ்வை இலக்கியமாக்குவதற்கான, 'இலக்கியக் கலை' பற்றிய இலக்கணம் எனலாம். இது தமிழில் மட்டுமே காணப்படும் சிறப்புக்களில் ஒன்றாகும்.

'பொருள்' என்றால் சொல்லுக்கும் பொருளுண்டு. இலக்கியத்திற்கும் பொருளை வெளிப்படுத்தும் தன்மையுண்டு. அவ்வாறுணர்த்தப்படுவது இவ்வுலகம், இவ்வுலக வாழ்வே ஆகும். திருக்குறளில் 'பொருட்பால்' என்பதும் இதுபோன்றதேயாம்.

மக்கள் வாழ்வனைத்தையும் பச்சையாகவும் கொச்சையாகவும் இலக்கியமாக்குவது தமிழர் இலக்கியக் கோட்பாடன்று. இதை மறுத்துப்

பலவாறு வாதமிடுபவர், மனித நேயத்தை மறந்தவர்மட்டுமன்றி, மனிதத்தை அழிப்பவரும் ஆவர் என நம் முன்னோர் கருதினர். அதனால் மக்கள் வாழ்வைப் பாகுபாடு செய்து, நெறிமுறைப்படுத்தி, உட்கூறுகளாக்கி, இவையிவை சொல்லத்தகுவன வெளிப்படுத்தத்தகுவன வெளிப்படையாக வெளிச்சம்போட்டுக் காட்டத்தகுவன என வகைப்படுத்தினர்.

மனித வாழ்க்கைக்கு அடிப்படையான காதலையும் காதல் நிமித்தங்களையும் 'அகம்' என்றனர். அகம் அல்லாதன எல்லாம் 'புறம்' என வகுக்கப்பட்டன. அக இலக்கிய மரபுதான் முதலில் கால்கொண்டது. அதனால் அகவாழ்வை வெளிப்படுத்தும் மரபினின்றும் மாறிய - மீறிய அகச்செய்திகளும் மரபுகளும் 'புறத்துடன்' சேர்க்கப்பட்டன. புறத்தில் கொடை அளி செங்கோல் போர்மறம் வெற்றிவாகை அவலநிலையாமை மெய்யியல் இறைவழிபாடு என எல்லாம் அடங்கின. இவற்றுள் 'அகத்தை' முதலிலுள்ள அகத்திணையியலிலும் புறத்தைப் புறத்திணையியலிலும் விளக்கினார் தொல்காப்பியர். பொருளதிகாரத்தில் அடுத்துவரும் களவியல், கற்பியல், பொருளியல் மூன்றும் அகத்தின் உட்பிரிவு பற்றியன.

பின்னர்வரும் மெய்ப்பாட்டியலும் உவமவியலும் இலக்கியத்தில் வரும் பொருள்புலப்பாட்டு நெறிகளை விளக்குவனவாம். தொல்காப்பியர் அணி இலக்கணம் என்பதைப் பொருள் புலப்பாட்டு நெறியாகவே கண்டு விளக்கம் கூறியிருப்பது வியப்பைத் தருகிறது. அலங்காரம் அல்லது அணி என ஓரியல் வகுக்க அறியாதவரல்லர் அவர். மேனாட்டார் அணிகளையும் உத்திகளையும் பொருள் 'புலப்பாட்டுநெறி என இன்று வகுத்ததை (Rhetorics) நோக்கும்பொழுது, வடநூல் மரபுகளினின்றும் மிக வேறுபட்டு, இவ்வாறு விளக்கிச் சென்ற அவர்தம் நுழைபுலம் கருத்திற்கொள்ள வேண்டியதாகிறது. தொல்காப்பியர் 'அணியியல்' என அலங்காரத்தைத் தனியே கூறாமல் விடுத்ததன் காரணங்களைப் பேராசிரியர் உவமவியல் இறுதியில் விளக்குகிறார்.

'செய்புள்'-செய்யப்படும், படைக்கப்படும் இலக்கியம் என்றே அன்று பொருள்பட்டது. செய்புள் ஒரு தனிப்பாட்டை (Verse) மட்டும் குறிக்கவில்லை. செய்யுளியல் பாவகை, அதன் அடிப்படைகள், இலக்கிய வகைகள் பற்றிய அனைத்தையும் விரித்துப் பேசுகிறது. இறுதியிலுள்ள மரபியல் உலக உயிர்கள், அவற்றின் இளமைப் பெயர்கள், ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள் பற்றிய சொல் மரபுகளை விளக்குகிறது. பின்னர் நூல் (இலக்கண நூல்) பற்றிய மரபுகளைக் கூறுகிறது. இடையே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் பற்றிய மரபுகளைக் கூறுகிறது. இவற்றை அறிஞர் சிலர் 'இடைச் செருகல்' என்பர். இவை வடநூலார் கூறிய வருண வேறுபாட்டினின்றும் வேறுபட்டவை. ஆயினும் 'பிறப்பினால்' அவர்கள் கூறிய அந்த நான்கு குல மரபுக்கு இணையாகத் தொழிலினால் தமிழர்கள் பிரித்துக்கொண்ட குடிவழி

மரபுகளாக இவை காணப்படுகின்றன. வடவரை நோக்கித் தமிழர் பிற்பாடு பகுத்த குலவழி மரபாகவே இது தோற்றுகிறது. 'அந்தணர்' பற்றிக் கூறுவன, வடக்கே இருந்து வந்தவர்களை மட்டுமே சுட்டும்படி இருப்பதும், 'வைசியன்' எனும் சொல்லாட்சியும் ஐயத்தை ஏற்படுத்துகின்றன. மேலும் தொல்காப்பியர் செய்திகளை நிரல்படக் கூறுபவர். கருப்பொருளாக அன்றைய இலக்கியத்தில் ஆளப்பட்ட, சிற்றுயிர்களின் பெயர் மரபு கூறிவந்தவர், 'பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே' *(70)* எனும் நூற்பாவிற்கும், 'புறக்காழனவே புல்லன மொழிப' *(86)* எனும் நூற்பாவிற்கும் இடையே பதினைந்து நூற்பாக்களில் சற்றும் தொடர்பில்லாமல் 'நூலே கரகம்' எனத் தொடங்கி, மக்கள் குல வகைகளைக் கூறியிருப்பாரா எனும் ஐயம் எழாமற் போகவில்லை.

### தமிழ் மரபு போற்றியமை

தொல்காப்பியர் வடமொழி அறிவு மிக்கவரென்பதில் ஐயமில்லை. ஐந்திர வியாகரணம் முதலிய வடநூல்களில் சிறப்பான புலமையுடையவர் ஆவார். அக்காலப் பின்னணி பற்றி, முன்னரே விளக்கப்பட்டது.

களவியல் முதல் நூற்பா, களவொழுக்கத்தை வடவரின் 'காந்தர்வம்' எனப்படும் இரகசியத் திருமணத்துடன் ஒப்பிடுகிறது.

> **மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
> **துறைஅமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே** *(1038)*

மறையோர் தேஎம் - வடதேசம். துணைமையோர்-ஒருவரை விட்டு ஒருவர் பிரியாத காதற்சோடிகள்; *(1442)* கந்தருவர். 'மறை என மொழிதல் மறையோர் ஆறே' என்றும் கூறுகிறார். ஒப்பிட்டுக் காட்டி விளக்குவன இவை.

பிறப்பியலிலும் ஓர் ஒப்பீடு வருகிறது.

> **எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து**
> **சொல்லிய பள்ளி எழுதரு வளியின்**
> **பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து**
> **அகத்தெழு வளியிசை அரில்தப நாடி**
> **அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே;**
> **அஃது இவண் நுவலாது எழுந்துபுறத்து இசைக்கும்**
> **மெய்தெரி வளிஇசை அளபு நுவன்றிசினே** *(102)*

எழுத்துக்களின் ஒலிக்கும் கால அளவை மாத்திரையாகக் கணக்கிடும் பொழுது, உள்ளிருந்தெழும் காற்றையும் கணக்கிடுவது அந்தணர்தம் நூன்முறையாகும். தொல்காப்பியர் தன்மை ஒருமையில் கூறுமிடம் இஃதொன்றேயாகும்.

'அஃது இவண் நுவலாது' - "அந் நூன்முறையை ஏற்று இங்கு நான் கூறவில்லை; புறத்தே தோன்றும் - செவிப்பொறிக்குப் புலனாகும்

தெளிவான எழுத்தொலிக்கே அளபு கூறியுள்ளேன்” என்று கூறுகிறார். தொல்காப்பியர் நூல் யாத்தபோது, ஒப்பிட்டுப் பார்த்துள்ளாரே தவிர, வடநூல் முறையை வலிந்து யாண்டும் பின்பற்றவில்லை என்பதற்கும் தமிழ்மரபையே போற்றிக் கூறியுள்ளாரென்பதற்கும் அவர் தரும் ‘வாக்குமூலம்’ இந்நூற்பா என்று குறிப்பிடலாம். இந்நூற்பாக் கருத்தை நூல் முழுமைக்கும் ஏற்றிப் பார்க்க வேண்டும். அன்றே சிலர் தொல்காப்பியர் ஓர் அந்தணர் என்றும் அவர் வடமொழியைப் பார்த்தே, தமிழுக்கு இலக்கணம் எழுதினாரென்றும் கதை பல கட்டிக் கூறினர். இப் பழம் நூலை ஆழமாய்க் கற்பார், வடமொழி முதலாய புறப் பண்பாட்டுப் படை எடுப்பு, நாளும் கூடிவந்த காலத்தில், அதனைத் தடுத்து நிறுத்தித் தமிழ்நூன் மரபை நிலைநிறுத்தவே தமது நூலை அவர் யாத்தாரென நன்குணர்வர். “வடமொழிப் புலவர் சிலர் தமிழ் மக்களுடன் அளவளாவிப் பழகியதன் விளைவாக, வடமொழி வழக்குகள் சில தமிழகத்தில் இடம் பெறத் தொடங்கின. அந்நிலையில் தமிழிற் பிறமொழி மரபு விரவித் தமிழின் தனி மாண்பினைச்சிதைக்காது பாதுகாக்கக் கருதிய தொல்காப்பியனார், வடமொழி மரபு தமிழிற் கலவாதபடி தமிழின் தனி இயல்பினை விளக்கு முகமாக இயற்றமிழ் நூலாகிய இத் தொல்காப்பியத்தை இயற்றினாரென்பார், ‘மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி’ என்றாரெனினும் அமையும்” என க. வெள்ளைவாரணர் கூறுவன, தொல்காப்பியத்தை அழுந்தக் கற்றதன் பயனாகும்.[16]

தொல்காப்பியரை அடியொற்றி விளக்கம் தந்தவர் பேராசிரியர். அவர் ‘தமிழ் நாட்டார் மரபு’; ‘தமிழ் நாட்டார் வழங்கும் மரபுப் பகுதி’ என எழுதுவன (பொருள் 391) குறிக்கத்தக்கவை. ‘மற்று ‘பாட்டுஉரை நூலே’ என எழுவகை வகுத்த பகுதியையும் செய்யுட்கு மரபென மேற்கூறினான்; அதனானே இவ்வேழு வகையானன்றி ஆரியர் வேண்டுமாற்றானும் பிற பாடை மாக்கள் வேண்டும் கட்டளையானும் தமிழ்ச் செய்யுள் செய்தல் மரபன்று என்றவாறு” (பொருள் 392). ‘பிற பாடைக்காயின் ஈண்டு ஆராய்ச்சியின்றென்பது’ (பொருள் 485). இவ்வாறு குறிப்பிடும் பேராசிரியர், உவமவியலின் இறுதியில், தொல்காப்பியர் அணியியல் என ஓரியல் வகுக்காமைக்குக் கூறும் காரணங்கள், தமிழர்தம் அணிக் கோட்பாடு வடமொழி முதலியவற்றினின்றும் மிக வேறுபட்டது என்பதை நிறுவுகிறது என முன்னரும் கூறப்பட்டது.

சங்க இலக்கியமாகிய சான்றோர் செய்யுளகத்தும் முன்னைய ஆசிரியர்களின் தமிழ் இலக்கண நூல்களிலும் காணப்படாதனவற்றை ஒருவன் செய்யுமாயின், “தமிழ் வழக்கமாகிய மரபினொடும் தமிழ் நூலொடும் மாறுபடநூல் செய்தானாகும்” எனக் கூறுவர் பேராசிரியர் (பொருள் 649).

சில இலக்கணக் கூறுகள் பல மொழிகட்குப் பொதுவானவையாகத் தான் இருக்கும். அத்தகையவற்றுக்கும் தமிழ்மொழி வழக்காற்றை நோக்கியே இலக்கணம் கூறப்படும் என்று பேராசிரியர் தெளிவுபடக் கூறுகிறார். “பிற

பாடைக்கும் பொதுவாயின பொருளவாயின் அவையும் தமிழ்வழக்கு நோக்கியே இலக்கணம் செய்யப்படுமாகலானும்..." என்பது பேராசிரியர் கூற்று (பொருள் *662*).

நச்சினார்க்கினியர் வைதிகநெறியினர். அவர் வகுத்த உரை பல இடங்களில் வடநூன்மரபைத் தழுவ முயலும். வலிந்து வடநூற் கருத்தைப் புகுத்தும் பழக்கமுடைய அவரே, ஓரிடத்தில், 'காலம் உலகம் என்பன வடசொல்அன்று, ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணம் கூறாராகலின்", என அமைதி தேடுவார் (சொல்*59*).

'முந்து நூல் கண்டு' எனும் பாயிரத் தொடருக்கு, வடமொழி நூல்களைப் பார்த்துத் தொல்காப்பியர் எழுதியதாகச் சிலர் வாதித்த காலமுண்டு. 'தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி' எழுதிய சிவஞான முனிவர், தாம் வடமொழி கற்று, அம்மொழியைப் போற்றுபவரேயாயினும், இத்தகைய பொருந்தாக் கூற்றை மறுத்து, ஆணித்தரமாக விளக்கம் தருகிறார், "தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும் குறியீடுகளும் வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும் உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும் அகம், புறம் எனும் பொருட்பாகுபாடுகளும் குறிஞ்சி, வெட்சிமுதலிய திணைப்பாகுபாடுகளும் அவற்றின் பகுதிகளும் வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப் படாமையானும் இவை எல்லாம் தாமே படைத்துக்கொண்டு செய்தாரெனின், முந்துநூல் கண்டு என்பதனோடு முரணுதலானும் முற்காலத்து முதனூல் அகத்தியம் என்பதும் அதன் வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூல் என்பதும் துணியப்படும் என்க, என்பது", சிவஞான முனிவரின் உறுதிமிக்க கருத்தாகும்.

ஆகவே, தொல்காப்பியர் கடல்கோளால் அழிவுற்ற நூல்களுக்கு எல்லாம் ஈடாகத் தமது நூலைத் தமிழ்மரபுப்படி யாத்து அம் முந்து நூல்களின் சாரத்தையெல்லாம் 'புலந்தொகுத்தோன்' எனப் போற்றுமாறு காத்தளித்தார் என்பதே கருத்தாகும்.

**தொல்காப்பியத்தின் புதுமை**

பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பிய இலக்கணக்கூறுகள் காலகாலமாகத் தொடர்ச்சியறாதுநின்று, இன்றும் வழக்கிலிருப்பதைத் 'தொல்காப்பியப் புதுமை' எனும் நூலில் வ.சுப. மாணிக்கம் விளக்குவார்.

'நாம் இருவர், நமக்கு ஒருவர்' என்பது அரசின் குடும்பக் கட்டுப்பாட்டு விளம்பரம். குழந்தை ஆணா, பெண்ணா எனக் கூற இயலாதபோது, 'ஒருவர்' எனப் பன்மையால் குறிக்கப்பெற்றுள்ளது.

**'ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி**
**இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை** *(676)*

எனும் தொல்காப்பிய இலக்கணப்படியே, இச்சொல்லாட்சி உளது. தொல்காப்பியத்தில் செம்பாதிக்குமேல் இன்றும் ஆட்சியிலிருப்பதை, எடுத்துக்காட்டுச் சான்றுகளால் நிறுவ இயலும். உரையாசிரியர்கள் தத்தமது கால உதாரணங்களைத் தந்துள்ளனர். அவற்றை எடுத்துவிட்டு, அதே பாங்கில் இன்று வழங்கும் காட்டுக்களை நாம் காட்ட முயன்றால் இவ்வுண்மை விளங்கும். மீதமுள்ளவை பழந்தமிழ் நூல்களைக் கற்க வழிகாட்டும்.

தொல்காப்பியத்தைச் சங்க இலக்கியத்துடன் ஒப்பிட்டு, அதன் அடிப்படை அவ்விலக்கியத்தில் பொருந்தியிருப்பதையும் வளர்ந்திருப்பதையும் மரபு மாறியிருப்பதையும் பலர் ஆராய்ந்து எழுதியுள்ளனர். தமிழில் இலக்கண நூல்களுக்கென்றே ஒர் 'இலக்கண வரலாற்று' நூல் எழுதலாம். அத்தனை இலக்கண நூல்கள் காலந்தோறும் தோன்றியுள்ளன. சிலர் முன்பே எழுதியுமுள்ளனர்.

தொல்காப்பிய அடிப்படையிலிருந்து, பல்வேறு கிளை நூல்கள் வளர்ந்திருப்பதும், அப்பெருநூலுக்குச் சிறப்புச் சேர்ப்பதாகும்.

தொல்காப்பியப் பொருளாதிகாரத்தில் செய்யுள் அல்லது பா வடிவம், வகைகள் பற்றிய இலக்கணம் செய்யுளியலில் உளது. எழுத்து அசை சீர் தளை அடி தொடை பா பாவகை பற்றிய அதனைத் தனியே பிரித்து யாப்பிலக்கண நூல்கள் பிற்காலத்தில் தனித்து எழுதப்பட்டன. உவமை, மெய்ப்பாடு, வண்ணம், வனப்புடன் மேலும் பல இடங்களில் அணி இலக்கணக் கூறுகள் விரவிக் கிடக்கின்றன. பிற்காலத்தில் 'அணி இலக்கணம்' தோன்ற, அவை அடிப்படையாயின. வடமொழியைப் பின்பற்றி எழுதப்பட்டாலும், இதில் தமிழ் மரபும் விரவி இருப்பதற்குத் தொல்காப்பியமே காரணமாகும். எழுத்து, சொல், பொருள் என்று மட்டுமிருந்த தமிழிலக்கணம் இவ்வாறு யாப்பு, அணி சேர்த்து 'ஐந்திலக்கணம்' ஆனது. பின்னர் 'ஐந்திலக்கண நூல்களாகத்' தோன்ற இது வழிவகுத்தது.

தொல்காப்பியர் எழுவகை யாப்பு, எண்வகைவனப்பு எனும் கோட்பாடுகளின் மூலம் தமிழ்ப் படைப்புக்களை வகைமைப் படுத்த முயன்றார். இதன்வழி கிளைத்தனவே 'பாட்டியல் நூல்கள்' எனத் தனிப்பிரிவாயின. அவற்றில் நச்செழுத்து அமுத எழுத்துப் பற்றிய, வடமொழிச் சார்புள்ள பகுதியை நீக்கிப் பார்த்தால், வகைமைப்பாடு பற்றியன தமிழ்நூல் வழிப்பட்டன என்பது விளங்கும்.

உரியியலில் தொல்காப்பியர் பழைமையான, வேர்ச்சொல் அனைய, அடைமொழிகளாகக் கூடிய, செய்யுள்களில் பயின்று வருகிற 'உரிச் சொற்களைக்' கூறிப் பொருள்தருவது அகராதி தொகுப்பது போன்ற முயற்சியாகும். இது 'உரிச்சொல் நிகண்டு' தொடங்கி, தமிழில் ஒரு 'நிகண்டுநூல்' வரிசை வளரவாய்ப்பானது.

தொல்காப்பியர் குறிப்பிடும் இருபது வண்ணங்கள் தனிச்சிறப்பு உடையவை. காவடிச்சிந்து போன்ற, நாட்டுப்புறப் பா வடிவங்களிலும் திருப்புகழ்

போன்ற சந்தவடிவ (தன தான முதலான) நூல்களிலும் சந்தவிருத்தங் களிலும் வண்ண வகைகளைக் காணலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள் 'வண்ண இலக்கணம்' பற்றித் தனிநூல் எழுதியுள்ளார். தனியொரு யாப்பிலக்கணவகையாக மேன்மேலும் வளர்க்கக் கூடிய துறை இது.

தமிழில் காலந்தோறும் தோன்றிய இலக்கண நூல்களும் இவ்வளர்ச்சியைக் காட்டும். அவற்றுள் மிக முக்கியமானவற்றை இங்குக் குறிப்பிடலாம். இதற்குத் தொல்காப்பியமாம் முதல் நூலே உந்துதல் தந்தது. பிற்காலத்தில் வடமொழிச் சார்புடைய இலக்கணம் எழுதினார்களெனினும் அச்சார்புகள் இங்கு எடுபடாமல் போனமைக்குத் தொல்காப்பியத்தின் ஆளுமையே அடிப்படையாகும். ஐந்திலக்கண நூல்களில் வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் எனும் இவற்றைக் குறிப்பிடலாம். யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை இரண்டும் புகழ்பெற்ற யாப்பிலக்கண நூல்கள். இதில் காலத்தால் முற்பட்ட அவிநயம், காக்கைபாடினியம் போல்பவை சிற்சில பகுதிகள் கிடைத்துள. யாப்பிலக்கணம், சிதம்பரச் செய்புட்கோவை, மாறன் பாப்பாவினம், பல்சந்தப் பரிமளம், திருவலங்கல்திரட்டு, விருத்தப்பாவியல் எனப் பிற்காலத்தில் தோன்றியவை பலவாகும்.

தண்டியலங்காரம், மாறனலங்காரம், அணி இலக்கணம் போலும் தமிழ் அலங்கார நூல்களில், வடமொழிச் செல்வாக்குக் கூடுதலெனினும், அவற்றிலுள்ள தமிழ்மரபும் அறியத்தக்கதாகும். நேமிநாதமும் நன்னூலும் எழுத்து சொல் இரண்டுக்குமட்டும் இலக்கணம் கூறுவன. இலக்கணக் கொத்து சொல்லிலக்கணம் பற்றியது. இன்று ச. பாலசுந்தரனாரும் சொ. சிங்கார வேலரும் சரவணத் தமிழரும் புதிய இலக்கண நூல்கள் எழுத முயன்றுள்ளனர். அ.கி. பரந்தாமனாரும் கி.வா. ஜகந்நாதன் அவர்களும் இலக்கணத்தை எளிமைப்படுத்தித் தரமுயன்றுள்ளனர்.

இறையனார் களவியல், நம்பியகப் பொருள், தமிழ்நெறி விளக்கம், களவியற்காரிகை, மாறனகப் பொருள் என்பன அகம் பற்றியன. பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை புறம் பற்றியன.

இவ்வாறு தமிழ் இலக்கண வளர்ச்சிக்கும் இலக்கண நூல்கள் பற்றிய வளர்ச்சிக்கும் தொல்காப்பியம் உந்துதல் தந்து, வித்திட்டது என்றால் மிகை ஆகாது.

**தனிச்சிறப்புக்கள்**

தொல்காப்பியம் மேனாட்டார் 'காப்பியக் கட்டமைப்பு' (Epic Structure) எனக் கூறியதற்கு ஏற்பத் தனித்ததொரு அமைப்புடன் யாக்கப்பட்டிருப்பதாலே தான், அது இன்றளவும் - மூவாயிரம் ஆண்டுக்குப்

பிறகும் பெரும்சிதைவோ, மாற்றமோ ஏதுமின்றி நம்கைக்குக் கிடைத்துளது. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களையுடையது. எதை முன்னே சொல்ல வேண்டும், எதைப் பின்னே சொல்ல வேண்டும் என்ற வைப்புமுறை மிகக் கூர்மையாய் அமைந்துள்ளது. எடுத்ததும் 'நூன்மரபு' உளது. நூல் என்றால் அன்று இலக்கணம் ஒன்றையே குறிக்கும். 'நூற்பா-சூத்திரம்'. இலக்கணம் அனைத்திற்கும் அடிப்படையான நெடுங்கணக்காகிய எழுத்துக்கள் பற்றி அது விளக்குகிறது. அ, க, த எனத் தனிநின்ற எழுத்துக்கும் புத்தகம், கடவுள் என மொழியிடை வரும் எழுத்துக்கும் சிலபோது வேறுபாடு தோன்றும். அங்ஙனம் மொழியிடை நின்ற எழுத்துக்கு இலக்கணம் கூறுவது மொழிமரபு.

சொல்லதிகாரத்தில் கிளவியாக்கத்தில் முதலில் அல்வழித்தொடருக்கு இலக்கணம் கூறிவிட்டுப் பிறகு வேற்றுமை பற்றிய இயல்களை வைத்திருப்பது, தெளிவு கருதியேயாம்.

இயல் வைப்புமுறையே அன்றி, இயல்களுக்கான பெயர்க்குறியீடுகளும் எளிமையும் பொருளாழமும் உடையன. ஓரியலுக்குள் உள்ள சூத்திரங்களின் வைப்பு முறையும் கூட காரண காரியத் தொடர்ச்சியுடையது.

எதனையும் அகரவரிசைப்படி நிரல்படுத்த வேண்டுமென்பது இன்றைய ஆய்வியல் நெறிமுறை. அன்றே இந்நெறியை ஓரிடத்தும் தவறவிடாமல் போற்றுவது வியப்பளிக்கும். குற்றியலுகரம் திரிந்துவரும் குற்றியலிகரமே மிகுதி. ஆனால் எந்த இடத்திலும் முதலில் குற்றியலிகர இலக்கணத்தைக் கூறிவிட்டே, குற்றியலுகரம் பற்றித் தொல்லாசான் கூறுவார். இதற்கு இகரத்திற்குப் பின்பு உகரம் வருமென்ற அகரவரிசை முறையே காரணம். புணர்ச்சி இலக்கணம் தமிழ் எழுத்து வரிசை முறைப்படி கூறப்படுவதை உற்று நோக்குக. ஒரோவழி இவ்வரிசை மாறுமேல், அதற்கு ஒரு காரணமிருக்கும்.

செய்யுளியலின் முதல்நூற்பாவில் *34* உறுப்புக்கள் கூறப்பட்டு, அவை வரிசைமாறாமல் அவ்வியலில் விளக்கம் பெறுகின்றன. மெய்ப்பாட்டியலில் எட்டுவகை மெய்ப்பாடுகளும் தொகுத்துக் கூறப்பட்டு, பின்பு வகுத்துக் கூறப்படும் வரிசைநிரல் அறியத்தக்கது.

இவ்வைப்பு முறையோடு தொடர்புடையது இயைபுடைமை (Alphabetical Order and Sequence). இவை இரண்டும் ஒருசேர அமைந்துள.

மகரக் குறுக்கம், குற்றியலுகரம், வலி மிகுமிடமும் மிகா இடமும் - இவை பற்றிய இலக்கணம் பல்வேறு இடங்களில், அங்கங்கு இயைபு நோக்கிக் கூறப்பட்டுள. இவற்றைத் தொகுத்து நோக்கினாலன்றி, முழுமையான அளவு அவை விளங்கிக் கொள்ளப்படா.

பனம்பாரனார் பாயிரத்தைப் படித்தாலே, இன்றைய 'ஆய்வியல் நெறிமுறை' அடிப்படை முழுவதும் தொகுத்துச் சொன்னது போல் இருப்பதை அறியலாம். 'வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' என்பது, ஆராய எடுத்துக் கொண்ட களம். இலக்கணம் எழுதக் 'கள ஆய்வு' (Field Work) முதல்தேவையாகும்.

'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்' என்பது, அக் 'கள'த்தில் ஆய்வுக்கான மூலங்கள் (Sources). 'எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி' என்பது ஆராய எடுத்துக்கொண்ட பொருள். 'செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு, முந்து நூல்களைக் கண்டு' என்பது அதேதுறையில் முன்னைய நூல்கள் பற்றிய கல்வியை நன்கு அறிந்திருத்தல். இதனை முதன்மை ஆதார நூல்கள், துணைமை ஆதார நூல்கள் என இரண்டாகப் பகுக்கலாம். இன்று தரும் 'துணை நூற்பட்டி'யின் (Bibliography) தொகுப்பு இது. அங்ஙனம் தந்தால் போதாது, அந்நூல்களைப் படித்திருக்க வேண்டும், பயன்படுத்தி யிருக்க வேண்டுமென்பதைக் 'கண்டு' எனும் சொல்லாட்சி விளக்கும். 'முறைப் படி எண்ணி' என்பது வழக்கிலும் செய்யுளிலுமிருந்து அறிந்தவற்றையும், முந்து நூல்களிலிருந்து பெற்றவற்றையும் பற்றி நன்கு சிந்திக்க வேண்டும் என்பதாம். 'வினைத்திட்பம் என்பது ஒருவரது மனத்திட்பம்' அல்லவா?

'புலம் தொகுத்தோன்' என்பது, நிரல்படச் சான்றாதாரங்களைத் தொகுத்தல் (Data Collection). 'போக்கு அறு பனுவல்' என்பது ஓர் ஆய்வேடு, பிழைகளின்றி, எக்குற்றமுமின்றி எழுதப்படவேண்டும் என்பதை வலியுறுத்தும்.

'அதங்கோட்டாசானுக்கு அரில்தபக் கூறி அரங்கேற்றியது' இன்றைய பொது வாய்மொழித் தேர்வுக்கு இணையானது. ஆனால் வெறும் சடங்காக அல்லாமல் நெறிமுறை தவறாமல் நடத்தப்படுவது. 'மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி' என்பது, ஓர் ஆய்வேடு (Thesis), முன்பின் மாறுபாடு எதுவுமின்றித் தெளிவாக, எழுதவேண்டிய முறைப்படி எழுதித் தந்திருப்பதை, விளக்கிச் சொல்லி அதை நிலைபெறுத்துவது. இங்ஙனம் தொல்காப்பிய நூலினுள்ளும் இவை அனைத்தும் இடம் பெற்றிருப்பதை அறியலாம். தொல்காப்பியக் கல்வியே, இதை முழுமையாய் உணர வழிசெய்யும்.

**கலைச் சொற்கள்**

தொல்காப்பியத்தில் வரும் 'இலக்கணக் கலைச்சொற்கள்' பொருள் ஆழமுடையவை, எளிமையானவை. இவை தொன்று தொட்டு வருவனவாகவும் இருக்கலாம், அவர் படைத்தனவும் இருக்கலாம். இவை தமிழ் இலக்கண முதிர்ச்சியையும் செறிவையும் செம்மையையும் காட்டவல்லன.

'நிறுத்த சொல், குறித்து வருகிளவி' *(107)* என்பன, ஒரு பொருளைக் கூறுவதற்காக முன்னே நிறுத்திய சொல்லையும் அதன் பொருளை முடிப்பதற்காக எதிர்வரும் சொல்லையும் குறிப்பன. பிற்காலத்தார் நிலைமொழி, வருமொழி என்றதைவிட இதில் பொருள் ஆழமும் எளிமையும் உள்ளன.

உயர்திணை (மக்கள்), அஃறிணை (அல்+திணை, உயர்திணை அல்லாத திணை) எனும் பாகுபாட்டுப் பெயர்கள் மிகுந்த அறிவு முதிர்ச்சியையும் பண்பாட்டையும் காட்டுவன. பிறராயின் தாழ்திணை, இழிதிணை என எதிர்ச்சொல் தேடியிருப்பர்.

இங்ஙனம் நூல் முழுதும் தேடி உண்மை காணலாம்.

**தனித்தன்மைகள்**

சிலருக்குத் தங்கள் படைப்பில் சில தனித்தன்மைகளைப் புகுத்தும் ஆர்வமிருக்கும். தொல்காப்பியருக்குத் தமது நூலுக்கேற்பச் சில தனிஆர்வங்களிருந்தது உய்த்துணரப்படுகிறது. ஓர் இலக்கண நூலில், ஒரு மொழியின் இலக்கணம் முழுமையையும் சொல்லிவிடுதல் அத்துணை எளிதன்று. சில இலக்கணக் கூறுகள் அவ்வாறு விதந்து ஓதப்படாமல், அவர்தம் இலக்கணச் சொல்நடையிலுள்ளன. ஒன்றற்குச் சொல்லப்பட்டதை வைத்துச் சொல்லாததற்கும் கொள்ளுமாறு சிலவுள்ளன.

இவற்றுள் முக்கியமாக இங்குக் காட்டக் கூடியன மூன்று உத்திகளாகும். உடம்பொடு புணர்த்தல், மாட்டேற்றுதல், புறனடைகள் என்பன அவை.

'அ இ உ அம் மூன்றும் சுட்டு' *(31)*

என்னும்போது, 'அம் மூன்றும்' என்பதில் எடுத்துக்காட்டும் உளது. இன்றேல் 'அ இ உ மூன்றும் சுட்டு' என்றால் போதாதா? இவ்வாறு 'உடம்பொடு புணர்த்தல்' - நூற்பாவிலேயே எடுத்துக்காட்டையும் இணைத்துச் சொல்லுதல் சில இடங்களில் உள.

'மாட்டேற்றுதல்' என்றால், ஓரிடத்தில் சொல்லப்பட்ட இலக்கணத்தை, வேறு ஒன்றற்கும் தொடர்ந்து ஏற்றிச் சொல்லுதல் - நூல் முழுதும் கற்கத் தூண்டும் முயற்சி ஆவதுடன், நினைவாற்றலை வளர்க்கும் அல்லது சோதிக்கும் முயற்சியாகவும் இஃதுளது. தொல்காப்பியம் முழுவதும் இவ் வுத்தி விரவிக் கிடப்பதால், இந்நூல் தனி ஒருவரால் எழுதப்பட்டதே என்பது உறுதிப்படுகிறது.

மாட்டேற்றுதலிலேயே ஆறேழு வகைகள் உள்ளன. 'உருபியல்' விதிகளைப் பின்வரும் புணர்ச்சி இயல்களில், பல இடங்களில் மாட்டேற்றக் காண்கிறோம்.

'பலவற்றிறுதி உருபியல் நிலையும்' *(220)*

உயிர் மயங்கியலில் வரும் இந்நூற்பா, உருபியல் *174*இல் கூறியதை மாட்டேற்றுகிறது.

'நீஎன் ஒருபெயர் உருபியல் நிலையும்' *(253)*. இது முன்னைய உருபியல் நூற்பா *179*-ஐ மாட்டேற்றுகிறது. 'உருபியல் நிலையும்' என்று, உருபியலை மட்டும் மாட்டேற்றும் இடங்கள் மிகப்பலவுள.

ஆகார இறுதி அகர இயற்றே *(221)*

ஈகார இறுதி ஆகார இயற்றே *(249)*

உகர இறுதி அகர இயற்றே *(254)*

ஊகார இறுதி ஆகார இயற்றே *(264)*

ஏகார இறுதி ஊகார இயற்றே *(274)*

ஓகார இறுதி ஏகார இயற்றே *(289)*

இவ்வாறு தொடர் சங்கிலிபோல் மாட்டேற்றுவதற்கு வேறு ஒரு காட்டும் காட்டலாம்.

பனிஎன வரூஉம் காலவேற்றுமைக்கு
அத்தும் இன்னும் சாரியை ஆகும் *(241)*

இதனை அடுத்த நூற்பாவில் மாட்டேற்றுவார்.

வளிஎன வரூஉம் பூதக் கிளவியும்
அவ்வியல் நிலையல் செவ்விதென்ப *(242)*

இதனை மேலும் மூன்று இடங்களில் தொடர்ந்து மாட்டேற்றும் அழகைக் கவனியுங்கள்.

மழைஎன் கிளவி வளியியல் நிலையும் *(287)*

வெயில்என் கிளவி மழையியல் நிலையும் *(377)*

இருள்என் கிளவி வெயில்இயல் நிலையும் *(402)*

இவ்வாறு நூற்றுக்கணக்கான இடங்களைப் பார்க்கும் போது, தொல்காப்பியர்க்கு இதிலிருந்த பேரார்வம் புலனாகிறது.

கிரேக்க மொழியில் ஹோமர் எழுதிய காப்பியங்கள் ஒதீசியும் இலியாதும் நாட்டுப்புறப் பாடல்களிலிருந்து உருவானவை எனக் கண்டறிந்தனர். உடனே பலர் ஹோமர் ஒரு 'தொகுப்பாளரே' தவிரப் 'படைப்பாளர்' அல்லர் எனக் கூறுமளவு மேற்சென்றனர். சி.எம். பௌரா, நாட்டுப்புறப்பாடல் அடிப்படையை மறுக்காமல், அக்காப்பியங்களின் பின்புலமாகத் தனி ஒருவரின் 'படைப்பாக்க மனப்பாங்கு' காணப்படுவதைச் சுட்டிக்காட்டி, ஹோமர் மிகச்சிறந்த படைப்பாளி என நிறுவினார். தொல்காப்பியருக்கும் இது பொருந்தும்.

தொல்காப்பியர் 'இலக்கணநூல்' என்பது, ஒரு மொழியின் அமைப்பை விளங்கிக் கொள்ள வழி காட்டும் நூலேயன்றி, முழுமையாகக் கூறிமுடிக்கும்

தன்மையதன்று என்பதை நன்கு உணர்ந்திருந்தார். இதனால், 'உணரக் கூறிய புணரியல் மருங்கின், கண்டு செயற்குரியவை கண்ணினர் கொளலே' *(405)* என்று முடிப்பார், 'இனைத்து என அறியும், வரம்பு, தமக்கு இல்லை, ஓம்படை ஆணையிற் கிளந்ததைக் கொண்டு, பாங்குற மேலும் உணர்க' என்பார் *(879)*. இவ்வாறு கூறுவதன்மூலம் தாம் ஒரு சிறந்த 'மொழியியலறிஞர்' என அவர் வெளிப்படுத்தும் திறத்தைப் பிற 'பாடை நூல்களிற்' காண்டலரிது. இத்தகைய அப்பெருமகனாரது தனித்தன்மைகளை முற்ற உணராதார், அவரைப் பிற பாடைகளைப் பார்த்து எழுதியவரெனத் தவறாகக் கூறிப் போயினர். இம்மயக்கம் தெளிந்து வருவதற்கு, இன்றைய தொல்காப்பிய ஆய்வுகள் வழிகாட்டுகின்றன.

## தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள்

தொல்காப்பியப் பொருளதிகாரம், ஏனைய மொழிகளிற் காணாதது, தமிழர் நாகரிகத்தை விளக்குவது எனும் அளவில் பெருமை பேசப்பட்டது. ஆனால் அது தமிழ் இலக்கியக் கொள்கைகளின் தோற்றுவாய் - அடிப்படை என்பது போதிய அளவு உணரப்படவில்லை.

சுருங்கச் சொன்னால் தொல்காப்பியப் பொருளதிகாரம் ஒரு கருவூலம், கருத்துச்சுரங்கம். இன்னும் எடுத்தறியப்படாது, பூட்டிவைத்துப் பாதுகாக்கப்பட்டுவரும் கருவூலம், தோண்டி எடுத்துத் துருவி ஆராயப்படாத பொன்னும் மணியும் புதைந்து கிடக்கும் சுரங்கம்.

அரிஸ்டாடிலின் 'கவிதையியல்' துன்பியல் நாடகங்களைப் பற்றி விளக்க வந்தது. ஆயினும் அதனை அடிப்படையாகக் கொண்டுதான், மேனாட்டு இலக்கியக் கொள்கைகள் பலவும் உய்த்துணரப்பட்டன, விளக்கப் பட்டன, விரித்துவிரித்துப் பலநூறு நூல்களாக எழுதப்பட்டன. அது போல, பரதமுனிவரின் 'நாட்டிய சாத்திரம்' நாட்டிய, நாடகம் பற்றியதாயினும் வடமொழியில் அதனடிப்படையில், இலக்கியக் கொள்கைகள் பலவும் விளக்கப் பட்டன. தமிழில் அகம்புறம் பற்றியதுபோலத் தோன்றும் பொருளதிகாரத்தில், பல்வேறு, இலக்கியக் கோட்பாடுகளும் திறனாய்வு நெறிகளும் புதைந்து கிடப்பினும், முன் சொன்னவைபோலக் காலந்தோறும் விளக்கப்படவோ, விரிக்கப்படவோ இல்லை. எவ்வகையில் நோக்கினாலும் தொல்காப்பியர் அரிஸ்டாடிலுக்கும் பரத முனிவருக்கும் நிகராகவும், ஒருபடி கூடுதலாகவும் இலக்கியக் கோட்பாட்டு நெறிகளைத் தந்தவரென்பது உலகோரால் அறியப்படும் என்பதுறுதி. எதனையும் மேனாட்டார் வந்து சொன்னாலன்றி, நமக்குச் 'சொந்தமாக அறிதல்' என்பது சுழியமே.

தொல்காப்பியரை ஓர் இலக்கணியாகவே பார்த்து, எண்ணிப் பழகிய நெஞ்சங்களுக்கு, அவர் ஒரு இலக்கியக் கோட்பாட்டாளராகத் (Theorist) தோன்றுவது கடினமே.

'மெய்ப்பாடு' என்பது என்ன? 'மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடு' மெய் - உடம்பு. அதன்வழிப்பட்ட சைகைகள், அவிநயங்கள், வியர்த்தல் மெய்ம்மயிர் பொடித்தல் கண்ணீரரும்பல் புருவங்களை நெரித்தல் முதலாயின மெய்ப்பாடுகளாகும். இவை நாட்டியக் கலை பற்றியன, அதன்வழி நாடகங்களில் 'நடிப்புப்' பற்றியன. ஒருவரது நடிப்பு, காண்போரிடம் விளைவிக்கும் சுவையும் அது.

தொல்காப்பியர் விளக்கிய தமிழ் இலக்கியம், கூற்றுமுறை கொண்டது, கூத்து, நாடக வழிப்பட்டது. எனவே அவர் மெய்ப்பாட்டை விளக்கிச் சென்றார் என்ற அளவில் அவரை ஓர் இலக்கணியாகவே கண்டனர் உரையாசிரியர் பலர்.

ஆனால் கூத்தினின்றும் பெறப்பட்ட இது, இலக்கியத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதே ஈண்டு ஆராய்ச்சிக்குரியது. இதைத் தெளிவாக அறிந்திருந்த தொல்காப்பியர், அக்காலத்தில், ஒருவர் பாட்டாகப் பாடிய கவிதை, கேட்பவர்க்கு நன்கு விளங்கி, அவரிடம் விளைவிக்கும் சுவை பற்றியதே மெய்ப்பாடு என விளக்கினார். இன்று படிக்கப்படும் இலக்கியம், படிப்பவரிடம் விளைவிக்கும் சுவையே 'மெய்ப்பாடு' ஆகும். இவ்வாறு கொள்ளும்போது, 'மெய்' என்பது, இலக்கியத்தின் 'பொருள்' என ஆகிறது. அப்பொருளுணர்ச்சியால் தோன்றும் சுவையே, இலக்கிய மெய்ப்பாடாகும்.

அதாவது 'நாடக மெய்ப்பாட்டிற்கும்' நாடகத்தினின்றும் இலக்கியத்திற்குப் பெறப்பட்ட, இலக்கிய மெய்ப்பாட்டிற்கும் வேறுபாடுண்டு.

முன்னது காணப்படுபொருளால், காண்போனிடம் விளைவது, பின்னது படிக்கப்படும் இலக்கியத்தின் பொருளுணர்ச்சியால், வாசகனிடம் விளைவது. முன்னதற்குக் 'காட்சி' முக்கியம், பின்னதற்குப் 'பொருளுணர்தல்' முக்கியம். இதனைத் தொல்காப்பியத்தில் வரும் இரண்டு நூற்பாக்கள் நன்கு தெளிவுபடுத்துகின்றன.

**உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருளான்**
**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்** *(1460)*

ஒரு செய்யுளை பாடலை மேலோட்டமாகப் படித்த அளவிலேயே தோன்றுவதுதான் சுவை, மற்றது ஆராய்ச்சி. உய்த்துணருமாறு அமைவன எல்லாம் ஆராய்ச்சிப்பாற்படும், அங்கு சுவை முக்கியமன்று, சுவை கூடாதென்றும் கூறலாம். எனவேதான் 'உய்த்துணர்வு' இல்லாமல், தலைவரு பொருளால் - படித்ததும் தோன்றும் பொருளுணர்ச்சியால், நம் உள்ளத்தில் 'மெய்ப்பட' - சுவை தோன்ற முடிப்பது மெய்ப்பாடு அமைந்த இலக்கியமாகும்.

மெய்ப்பாட்டியலின் இறுதி நூற்பா இது.

**கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங்குரைத்தே** *(1221)*

இது இலக்கிய வாசகனைப் பற்றியது. படைப்பவன் எவ்வளவு சிறப்பாகப் படைத்தாலும், படிப்பவனின் 'வாங்கிக் கொள்ளும்' ஆற்றலுக்கு ஏற்பவே சுவை தோன்றும். இன்றேல் மொழி தெரியாது ஆங்கிலப்படம் பார்ப்பவனைப் போலவும் தெலுங்கிசை கேட்பவனைப் போலவும்தான் ஆகும். 'நன்னயப் பொருள்கோள்' - இலக்கியத்தில் வரும் நல்ல, நயம் மிக்க பொருளை வாங்கிக் கொள்ளும்திறன். இதிலிருந்து, இலக்கியத்தில் மெய்ப்பாடு என்பது, அதன் 'பொருள் கோள்' - 'பொருள் கொள்ளும் திறன்' பற்றியதே என அன்றே அவர் விளக்கிச் சென்றமை புலனாகும்.

தொல்காப்பியரை அடியொற்றி விளக்கம் எழுதிய உரையாசிரியராம் பேராசிரியர், 'மெய்ப்பாடு - சொல் கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்' என எழுதிய விளக்கம் மிகப் பொருத்தமுடையதாகும். இது மேனாட்டார் குறிப்பிடும் 'உருக்காட்சித் தோற்றம்' பற்றிய கோட்பாட்டை - Imagism என்பதை நினைவூட்டுகிறது. Image - மெய், தோற்றம், உருக்காட்சி. மேலும் பேராசிரியர், மெய்ப்பாடென்பது பொருட்பாடு *(பொருள் தோன்றுதல்)*. 'அஃது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே, புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்' என எழுதுவன பலவும் கற்றுணர வேண்டியன.

இவை போல்வன பல தொல்காப்பியரை ஒரு 'கோட்பாட்டாளராக' உலகிற்கு விளக்கக்கூடிய தகுதியுடையன.

தொல்காப்பியர் இலக்கியம் என்பது அறம் பொருள் இன்பம் என்ற குறிக்கோளுடன் படைக்கப்பட வேண்டும் என்பார் *(1363)*. இது மனிதநேயம் பற்றியது.

இலக்கியத்திற்கு 'மரபு' முக்கியம். முன்னில்லாத ஒன்றை யாரும் படைப்பதில்லை, படைப்பினும் படைத்தவனுக்கே விளங்காதொழியும். மரபை மீறுவது, மாற்றுவது, சிதைப்பது எல்லாம் 'மரபை' வைத்துக் கொண்டு விளையாடும் சித்து விளையாட்டுக்களே ஆகும்.

'மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்' *(1591)*. இம்மரபு வழி வருவதைப் 'புலனெறி வழக்கம்' என்பார் தொல்காப்பியர். இது உலக வழக்கை, நாடக வழக்காக அதாவது புனைந்துரை *(இலக்கிய)* வழக்காக மாற்றுவது. இது படைப்பாளிகள் பின்பற்றும் வழிவழிமரபேயாகும்.

> **உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்**
> **வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே** *(1163)*

உலகில் உயர்ந்த எழுத்தாளர்கள் படைத்த நூல்கள் யாவும் உலக வழக்கைக் கொண்டே - அதாவது மக்கள் வாழ்வை வைத்தே புனையப்பட்டுள்ளன. ஆகையால் உலக வாழ்வைக் கருவாகக் கொண்டுதான் இலக்கியம் படைக்க வேண்டும். அவ்வாறாயின் உலகில் பொய், களவு, கொலை, கற்பழித்தல்

முதலான 'அறக் கழிவுடைய' கொடுமைகளும் நடக்கின்றனவே, அவற்றையும் உலகில் நடப்பது என்று புனைய வேண்டியிருக்குமே எனும் கேள்வி எழுகிறது. அவ்வாறு புனையும் நிலை வரத்தான் செய்யும். ஏனெனில் படைப்பாளி சுவை, விறுவிறுப்பு, உணர்ச்சி முதலியன கருதி அவற்றைப் படைப்பதை விரும்புவதும் இயற்கையே. அதனால் அவ்வாறு படைக்கும்பொழுது, அதில் மேலோங்கிநிற்கும் பொருளமைப்பில், 'நாணத்தின் நீங்காத நல்வழிப்படுத்து' அவற்றைப் படைக்கவேண்டும். இக்கோட்பாடு மனித நேயத்தின்பாற்பட்டது. மானுடம் வெல்ல வழிகாட்டுவதே படைப்பின் முடிந்த நோக்கமாக இருக்க வேண்டும் *(தொல். 1163-1165)*.

### அகம், புறம்

வாழ்க்கையை அகம், புறமெனக் கொண்டு வாழ்வது தமிழர் நாகரிகமாகும். அகம் - ஓர் இல்லம், வீடு. அகம் - மனம், மனத்துளதாகிய காதல். காதல் வாழ்வும் *(களவு)*, குடும்ப வாழ்வும் *(கற்பு)* அகமெனப் பட்டன. அகமல்லாதனயாவும், கொடை அளி செங்கோலாட்சி அலுவலகம் போர் வெற்றி தோல்வி எல்லாம் புறமெனப்பட்டன. இவையே இலக்கியமாகும் பொழுது, காதல் வாழ்வும் கற்பு வாழ்வும் அகம் எனப்பட்டன, அகம் அல்லாதவை எல்லாம் புறமெனப்பட்டன. எடுத்துக் காட்டாகச் சாவு பற்றிய அவலம் அகத்தில் பாடப்படுவதில்லை. காதலியை இழந்த காதலனின் 'தபுதாரநிலை' காதலனை இழந்த காதலியின் 'தாபதநிலை' எல்லாம் புறத்திணைப் பாற்பட்டன. மேலும் அகவாழ்வேயாயினும் அது இன்னாரது எனப் பெயரும் ஊரும் அடையாளமும் அறியப்பட்டால் புறத்திணையில் சேர்க்கப்பட்டது.

அகம் எழு திணைகளாகவும் அவற்றிற்கிசையப் புறமும் எழு திணைகளாகவும் வகுக்கப்பட்டன.

அகத்திணைப் பாடல்கள் முதல் கரு உரி என மூன்று பொருள்களையுடையன. முதலென்பது நிலமும் பொழுதும், கரு என்பது அந்நிலத்து இயற்கையும் மக்கள் வாழ்வும் ஆகும். உரி என்பதே, பாடலில் வரும் அடிக்கருத்து. இவ்உரிப்பொருளுக்கு இசைவான பின்னணியாக ஏனைய இரண்டும் பயன்பட்டன. அரிஸ்டாடில் துன்பியல் நாடகங்கட்குக் கூறிய இடம், காலம், செயல் பற்றிய முவ்வொருமைக் கோட்பாட்டைவிடத் தெளிவுடைய இது, ஒரு 'கோட்பாடாக' நோக்கப்படாமல், இன்றும் இலக்கணமாகவே கருதப்படுகிறது. இவற்றுடன் தொல்காப்பியர் குறிப்பிடும் கூற்றுமுறை, துறை என்பன இரண்டும், முற்கூறிய உரிப்பொருளைச் சார்ந்தன. இவை பாடு பொருளைக் குவி கண்ணாடியில் வைத்துக் காட்டுவதுபோல் விளக்கவல்லன. மெய்ப்பாடு, உவமை, உள்ளுறை, இறைச்சி, முன்னம், யாப்பு, வண்ணம், வனப்பு என்பனவும் களம், மாட்டு, பயன், எச்சம் என்பனவுமான, தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கியக் கொள்கைகள் அனைத்தும் தனித்தனி ஆய்வுக்குரியன.

இவற்றைப் பற்றிப் பின்னர் வந்த இலக்கணிகள் யாரும் தொட்டார்கள் இல்லை; அவர்கள் தொட்ட ஒன்றிரண்டிலும் எதுவும் விளக்கம் தந்தார்கள் இல்லை. உரையாசிரியர்கள் ஓரளவு விளக்க முயல்கின்றனர். இன்றைய 'ஒப்பியலாய்வு' முறையில், இவற்றை ஆராயும்போது, பல உண்மைகள் மேன் மேலும் விளக்கமாகின்றன. தொல்காப்பியரின் நுண் மாண் நுழைபுலங்கள் அறியப்படுவதோடு, தமிழிலக்கியத்தின் அருமை பெருமைகளும் அளந்தறிய வொண்ணாச் சிகரங்களும் புலனாகின்றன. சங்க இலக்கியமும் இரட்டைக் காப்பியமும் கிடைத்திருப்பதால், இக்கோட்பாடுகளை மேலும் விளங்கிக் கொள்ளவும் ஆராயவும் அவை போதிய சான்றாதாரங்களாக அமைகின்றன.

# 9. சங்க இலக்கியம்

இந்திய இலக்கியம் மற்றும் உலக இலக்கியங்களிலிருந்து, தமிழ்ச் சங்க இலக்கியம் வேறுபட்டு நிற்கும் தனித்தன்மையுடையதாகும். தமிழில் கிறித்துவுக்கு முற்பட்டதாக, இன்று கிடைப்பனவற்றுள் தொன்மைமிக்கது சங்க இலக்கியமே. பிற்பட்ட காலமனைத்திலும் ஏதோ ஒரு வகையில் தன் செல்வாக்கைப் பரப்பிய பெருமை அதற்குண்டு. அது தமிழர் நாகரிக வரலாறாகவும், பண்பாட்டுக் கருவூலமாகவும், தமிழினத்தின் நிலைபெற்ற அடையாளமாகவும் என்றென்றும் திகழ்வதாகும். அது வெறும் பாடல் தொகுப்பன்று, ஒரு முறை படித்ததும் சலிப்பூட்டி தூக்கிவைக்கக் கூடியதன்று. அதன் உள்ளார்ந்த வலிவும் பொலிவும் செறிவும் நிகரற்றவை. 'நவில்தொறும் நூல்நயம் பயக்கும்' ஆழமும் நுட்பமும் அழகும் இனிமையும் உடையது அது. அதன் பொருளமைதி, தரம், வடிவம், உத்தித்திறன்கள் யாவும், பொன்னை உரைத்துப் பார்த்து வாங்குவது போல், பத்தரை மாற்றுடையனவாய்த் தேர்ந்தெடுத்துத் தொகுத்த பாடல்களைக் கொண்டதாக இருப்பது அது. அதனுள் பொதிந்து கிடக்கும் இலக்கியக் கலைநுட்பங்கள், மனிதஇனம் உள்ளவரை மனத்தை ஈர்க்கக் கூடிய அழகுணர்ச்சியுடையனவாகும்.

பண்டைத் தமிழர்கள் மனித வாழ்வைக் கூர்ந்து நோக்கி, அகம் புறமெனப் பகுத்து அவற்றின் உட்பிரிவுகளில், உலகிற்கு உணர்த்த வேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்துக் கூற்று, துறைகளாக்கிப் பாடியுள்ளனர். இவ்வாறு குறிப்பிட்ட ஒரு முன்மாதிரியான இலக்கியக் கலையைக் கண்டுபிடித்து, அதனைச் செம்மையுடையதாக்கி, அதன்வழி உலகிற்சிறந்த படைப்புக்களை உருவாக்கித் தந்துள்ளனர். அதனால், அவ்விலக்கியத்தின் எப்பகுதியைத் தொட்டாலும் வியப்பு மேலிடுகிறது, இனிமை தவழ்கிறது. இது காறும் அதன் தனிச்சிறப்புக்களை அறிய நேர்ந்த பிற நாட்டவர் அனைவரும் அதை மேன்மேலும் ஆய்வதிலும் இனிமை காண்பதிலும் ஈடுபாடு காட்டி, அதனைவிட்டு விலகவொண்ணா நிலையினராயினர். கமீல் சுவலபில், ஜார்ஜ்ஹார்ட். தக்ககசி, ஏ.கே. இராமானுசம் என விரல்விட்டு எண்ணக்கூடியவர்களுக்கே, அவ்விலக்கியம் அறிமுகமாகியுள்ளது. எதிர்காலத்தில் அதன் சிறப்பை உலகறியச் செய்யவல்ல முயற்சிகள், இற்றைத் தமிழறிஞர்களிடம் காணப்படுகின்றன.

எத்தனையோ வழிவழிப் பரம்பரைகள் கழிந்தபிறகும், சங்க இலக்கியம், இன்றும் அன்றலர்ந்த மலர்போல் புதுமையுடையதாய்ப் பொலிகிறது.

'செங்களம்படக் கொன்று' எனும், குறுந்தொகை முதற்பாடலில், இன்றைய திறனாளர் விளக்கும் 'இருண்மை' எனும் உத்தி, மிகச்சிறப்பாகப் பொருந்தியிருப்பதை எடுத்துக்காட்டி, தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் 'சங்க இலக்கியப் புதுமை' எனத் தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் விளக்கினார். மனித இன வளர்ச்சிப் பாதையில் பெரும்பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவ்வளவு காலத்திற்குப் பிறகும் இன்றும் சங்க இலக்கிய ஆளுமை நீள்கிற தென்றால், அதன் கருத்தாழமும் கற்பனைப் பொலிவுமே காரணங்களாகும்.

முதற்சங்க காலத்திலிருந்து தோன்றிய கலைச் செல்வ நூல்கள், அறிவியல் ஆக்கங்கள் யாவும் மறைந்துபோயின. கடல்கோள்களால் போயினபல, காலப்பழைமையால் கறையான் தின்றன பல, சமயக் காழ்ப்பால் நீரிலிட்டும் நெருப்பிலிட்டும் அழிக்கப்பட்டன பல. நமக்கு இன்று எஞ்சியிருப்பதோ, அப்பெரிய கருவூலத்தின், மிகச்சிறிய ஒரு கூறேயாகும். கிரேக்க இலக்கியம் பற்றிக் குறிப்பிடும் பொழுது, சி.எம்.பௌரா, 'இவ்விலக்கியத்தில், இத்துணைச் செல்வாக்கும் ஈர்ப்புமுள்ளதில், நாம் பெற்றிருப்பதோ, அன்று இருந்ததில் மிகச்சிறிய - உதிரிகளான பகுதியேயாகும்' என்பார். இக்கூற்று சங்க இலக்கியத்திற்கும் பொருந்தும்.

இறையனார் அகப்பொருளுரை முதற்சங்க நூல்களாக பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை, அகத்தியம் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. இடைச்சங்க இலக்கியங்களாகக் கலி, குருகு, வெண்டாளி. வியாழமாலை அகவல் என்பனவும் இலக்கணங்களாக அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் என்பனவும் குறிக்கப்படுகின்றன. கடைச்சங்க நூல்களாக நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூறும் புறநானூறும், பரிபாடலும் கூத்தும் வரியும் சிற்றிசையும், பேரிசையும் கூறப்பட்டுள்ளன. அகத்தியமும் தொல்காப்பியமும் இவர்களுக்கும் இலக்கண நூல்களாகும்.

சிலப்பாதிகார உரையில் அடியார்க்கு நல்லார் முதற் சங்க நூல்களாக, இறையனார் அகப்பொருளுரை குறிப்பிட்டவற்றையே தாமும் குறிப்பிடுகிறார்.

முதற்சங்க காலத்தது எனக் குறிக்கப்படும் 'எண்ணிறந்த பரிபாடலும் இடைச்சங்கத்ததாகக் குறிக்கப்படும் 'கலி'யும் மறைந்தொழிந்தன. இப்பொழுது கிடைக்கும் பரிபாடலும் கலித்தொகையும் மதுரையில், பல புலவர்களால் திட்டமிட்டுப் பாடப்பட்டனவாகத் தோன்றுகின்றன. மரபைக் காக்கும் நோக்கமும், ஒன்றுகூடி, ஆளுக்கொரு திணை அல்லது தெய்வத்தைப் பற்றிப் பாடிய பாங்கும் காணப்படுகின்றன. மதுரையும் மதுரையைச் சுற்றியுள்ளனவும் பாண்டிய மன்னர் புகழும் இவ்விரு நூல்களிலும் பாடுபொருளாயுள்ளன. பரிபாடல் எழுபதில் இருபத்து நான்கு முழுப் பாடல்களும் சில துணுக்குகளுமே எஞ்சியுள்ளன.

பதிற்றுப்பத்து நூறு பாடல்களில் முதற்பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்காமற் போனதற்குக் கறையான் தின்றதே காரணமென யூகிக்க இடமுளது. புறநானூற்றிலும் இறுதியிலுள்ளவற்றில் சிதைவுகள் சிலவுள. நாற்பத்தொன்பது உட்பிரிவு நாடுகளைக் கொண்ட குமரிக்கண்டம் அழிந்து, குமரிமுனை எனக் கடற்கரைமட்டும் எஞ்சியிருப்பதுபோல, மிகப்பெரிய கூடுதலான இலக்கியக் கருவூலம் அழிந்து, அதன் சிறு பகுதி மட்டுமே கிடைத்துளது. எனினும் கிடைத்ததில் ஒரு முழுமை தென்படுகிறது. அகப்பாடல்கள், புறப்பாடல்கள் இரண்டும் உள. குறும்பாடல்கள், பத்துப் பாட்டு எனும் நெடும்பாடல்கள் கிடைத்துள. காப்பியம் இரண்டு (இரட்டைக்காப்பியம்), அறநூல் ஒன்று (திருக்குறள்) கிடைத்துள. கலி, பரிபாடல் மாதிரிகள் கிடைத்திருப்பதும், ஆசிரிய வகைகள் கிடைத்திருப்பதும் குறுவெண்பாட்டு எனும் குறள்வெண்பா கிடைத்திருப்பதும் 'பத்துப்பாட்டு' ஒன்றிரண்டில் வஞ்சியடிகள் விரவி வந்திருப்பதும் காண்கிறோம். ஏனைய இலக்கியத் திறன்கள் பலவற்றுக்கும் முன்மாதிரிகள் உள. அதனால் கிடைத்தவற்றை வைத்துக் கிடைக்காமற் போன முழுமையை உணருமாறுளது. இவ்வாறு மரபை நிலைநிறுத்தி, தமிழ் மக்கள் தங்கள் பழம்பெருமையை, மீட்டுருவாக்கம் செய்து கொள்ளவும் பண்பாட்டைக் காத்துக் கொள்ளவும் வழிகாட்டிய தமிழ்ப் புலவர்தம் நோக்கம் புலனாகிறது.

தொல்காப்பியம் குறிப்பிடும் எட்டுவகை வனப்பிற்கும் பொருந்திய உதாரணங்களைக் காட்ட இயலவில்லை. அதுபோலவே வண்ணங்கள் இருபதுக்கும் பிற்கால நூல்களில் எடுத்துக்காட்டுத் தேட வேண்டிய நிலை உளது. தொல்காப்பியர் குறிப்பிடும் எழுவகை யாப்பில் உரை என்பது, வாய்மொழிக் கதைகளாகும். பழமொழியும் விடுகதைகளும் வாய்மொழியாக விளங்கியவை. மந்திரம் எனப்படும் வாய்மொழியும் அங்கதமும் இவ்வாறே ஏட்டில் எழுதப்படாமல் போயின. திருமந்திரம் என்பதிலுள்ள மந்திரம் எனும் சொல், தொல்காப்பியர் குறிப்பிடும் மந்திர யாப்பு வகைக்குச் சிறந்த காட்டாக இருப்பினும் அது பிற்காலத்ததாகும். திருக்குறள் மட்டுமே, மந்திரயாப்புக்குப் பொருந்திய சங்க கால நூலாகும்.

கிடைத்தவை யாவும் உலகிற் சிறந்த படைப்புக்களாகும்; உலக உயர்தரச் செவ்வியல் இலக்கிய வரிசையில், ஒருங்குவைத்து எண்ணத்தக்கனவாகும். அவற்றின் செறிவான நடையும் மானுட விழுமியங்களாகிய பொருளமைதியும் அவற்றை, மாந்தர் படைத்த மிகச்சிறந்த கலைப்படைப்புக்களுடன் வைத்து, எண்ணுமாறு உள.

இப்பழைய நூல்கள், இடைக்கால உரையாசிரியர்களால் விளக்கம் பெற்றுள. சங்க காலத்திற்குப் பிறகு, ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகள், இவை படிப்பாரற்று மூலையில் கிடந்தன. இடைக்காலச் சோழப் பேரரசின் எழுச்சிக்குப் பிறகு, இவை திரும்பப் படிக்கப் பெற்றன. வழிவழிவந்த உரைகள்

எழுதிவைக்கப்பட்டன; பாடம் சொல்லப்பட்டன; கற்கப்பட்டன. இதனால் மூலநூல்கள் அழியாமல் நிலைபெற்றன. இன்றேல், நாம் இன்று பெற்றுள்ளனவும் கிடைக்காமல், தமிழர்தம் பழந்தமிழ் இலக்கியமென்பது, பெயரளவினதாகக் குறிக்கப்பட்டுப் போயிருக்கும். தமிழிசை இருந்ததென இன்று வழக்காடி, நிறுவ முயல்வதுபோல், தமிழர்களுக்கெனத் தனித்தன்மையுள்ள இலக்கியமொன்று இருந்ததென்று விவாதிப்பதில் காலம் கழிந்து கொண்டிருக்கும். நடுநிலைத் திறனாளர் எனத் தம்மைத்தாமே வருணித்துக் கொள்ளும் இன்றைய ஆய்வாளர் சிலர்தம் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாக நேர்ந்திருக்கும்.

ஏடுகளைப் பார்த்துப் படி எடுப்பதற்கென்று, 'ஏடெழுதுவோர்' பலர் அன்று, ஊர்தோறும் இருந்துள்ளனர். அவர்கள் தமிழ்ப்புலமை மிக்கவராகவும் இருந்திருக்கலாம்; பிற முறிகள் பத்திரங்கள் எழுதுவோராக அப்பயிற்சி மட்டும் பெற்றவராகவும் இருந்திருக்கலாம்; இதனால் வேண்டுமென்று அல்லாது, எதிர்பாராத தவறுகள் சில ஏற்பட்டிருக்கக் கூடும். இவை 'மூலபாட வேறுபாடுகள்' எனும் அளவில், மிகச் சுருங்கிய அளவில் காணப்படுதல் தவிர, பெரிதாக ஏதும் ஏற்பட்டுவிடாமல், இவை நமக்குக் கிடைத்திருப்பதைக் கொண்டு நாம் மனநிறைவடையலாம்.

கிரேக்கம், இலத்தின், சமற்கிருதம் முதலான, தொன்மைக்காலத்து உலக இலக்கியங்களுக்கும் அவற்றோடு ஏறத்தாழச் சமகாலத்ததாகிய சங்க இலக்கியத்திற்கும் ஒர் அடிப்படை வேறுபாடுண்டு. அவையும் மானுட மேம்பாடு, மனித முன்னேற்றம், நிலையான மானுட விழுமியங்கள் பற்றியன எனக் கூறப்படுகின்றன. ஆனாலும் அவை அனைத்தும் தமிழில் நாம் 'தொன்மம்' என்று கூறும் புராணங்களாகவே படைக்கப் பெற்றுள்ளன. கடவுளர்களும் கடவுளனைய மனிதர்களும் தேவதைகளும் அவற்றில் வரும் கதை உறுப்பினர்களாவர். இயற்கை இகந்த நிகழ்வுகளே அவற்றைத் தொண்ணூறு விழுக்காடு பற்றிக் கொண்டிருக்கும். சிறுவர்களை வியப்பிலாழ்த்தும் மர்மக்கதைகள் போன்றவையும் அவற்றிலுண்டு. இக்கதைகளினால் ஈர்ப்புண்ட உலகமக்களை அவை கவர்ந்தன.

சங்க இலக்கியமோ நேரடியாக மனித வாழ்வைப் பாடுவது. இதில் வரும் தொன்மக்கூறுகள், துணைப் பொருளாக, உவமையாக வருமே தவிர, இது தொன்மத்தை அடிக்கருத்தாக யாண்டும் கொள்ளவில்லை. இதில் உயர்வு நவிற்சியுண்டு; உள்ளதில் நல்லது இது என்று உயர்ந்தோரால் பாடப்பெற்றது இது. உலகில் இல்லாததை - நம்ப இயலாததை 'அடிக்கருத்தாகக்' கொண்டு பாடுவது இதில் சிறிதளவும் இல்லை. எனவே பாமர மக்களை ஈர்ப்பதைவிடப் படித்தவர்களை ஈர்ப்பது சங்க இலக்கியம் எனலாம். இதில் குறிக்கோட்தன்மை என்பது 'நடப்பியல்' சார்ந்தது. 'சிறந்தன எல்லாம் ஒருங்குவந்தனவாகத் தொகுத்துக் கூறும்' நாடக வழக்கு, உலக வழக்கை அடிப்படையாகக் கொண்டு, அதிலிருந்தே தோற்றுவிக்கப்படுகிறது.

சங்க இலக்கியம் நாடகத் தன்மையுடையது. முழுவதும் கூற்றுமுறை யாலானது. புறப்பாடல்களும் கண்கண்ட வாழ்வில் புலவர் கூற்றாய் அமைந்தவை; அகப்பாடல்களோ குறிப்பிட்ட குடும்ப மாந்தர்களின் கூற்றுக்களாக அமைந்தவை.

சங்க இலக்கிய நெடும்பாடல்கள் காப்பியப் பாங்கும் உடையவை. தனித்தன்மை வாய்ந்த முப்பது நெடும்பாடல்களைக் கொண்ட சிலப்பதிகாரம், நாடகத் தன்மை மிகுந்த காப்பியமாகவுளது. அதனால் அது நாடகக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம் எனப்படும். சங்கப் பாடல்களில் இக்காலச் சிறுகதைத் தன்மையுடைய பாடல்கள் பலவுள. சிறுகதை முடிவு எதிர்பாராததாய் இருக்கும்; வியப்பிலாழ்த்துவதாய் இருக்கும், வாசகரை யூகிக்கவைத்து நிறைவுறும். இப்பண்புகள் உள்ள சங்கப் பாடல்கள் ஒப்பாய்வுக்குரியன. சங்கப்பாடல்களில் புதினப் பாங்குடையவை, நீண்ட புதினங்கட்கு அடி எடுத்துக் கொடுக்கக் கூடியன பலவுள. இன்றைய புதுக்கவிதையின் பாங்கினை வெளிப்படுத்துவனவாய்ப் பல பாடல்கள் விளங்குகின்றன. அக்கால நிலைமைக்கு ஏற்ப அவை செய்யுள் வடிவினவாய் யாக்கப்பட்டன என்பதே வேறுபாடாகும்.

சங்க இலக்கியம் மரபு சார்ந்தது. இதைத்தான் பாடவேண்டும்; இப்படித்தான் பாடவேண்டும் என்று படைப்பாளர்களின் கைகள் கட்டிப் போடப்பட்டிருந்தன. புலவர்கள் தாம் விரும்பியதை, விரும்பியவாறு பாடச் சுதந்திரமில்லை. 'மரபு' எனும் கட்டுப்பாடு, இலக்கியத்தைச் சில குறிப்பிட்ட எல்லைகளுக்குள் முடக்கிவிட்டது. இவ்வாறு திறனாளர் பலர் விவாதித்து வந்துள்ளனர்.

சி.எம். பௌராவின் கிரேக்க இலக்கியம் பற்றிய பார்வை இங்கு கருதத்தக்கது: "கிரேக்க இலக்கியத்தை இக்கால இலக்கியத்துடன் ஒப்பிடும் போது, வியக்கும்வகையில் அலங்காரமற்றதாகவும் எளிமையானதாகவும் உளது. ஆனால் இவ் எளிமை, வெளிப்படையானதும் மேன்மைப்படுத்தப் படாததுமான நாட்டுப்புறப் பாடலுடன் ஒப்பிடற்குரியதன்று. அல்லது மிகவும் பண்பட்ட நாகரிகம் மிக்கவர்களிடம் காணப்படும் தற்கட்டுப்பாடு காரணமான எளிமையுமன்று. இந்த எளிமை முக்கியமற்றதைப் பாடாமல் விட்டுவிடுவதால் விளைந்தது. பொருள்கட்டமைப்புக்கும் உணர்ச்சி வெளிப்பாட்டுக்கும் இன்றியமையாததில் வைத்த அழுத்தத்தின் காரணமாக வெளிப்பட்டது அது. காப்பியத்தின் நேரிய வெளிப்பாட்டுக் கலைநுட்பத்திலும், துன்பியல் நாடகத்தின் சுருங்கிய அளவான தன்மையிலும் வெளிப்படையான வரலாற்றுக் கதையமைப்பிலும் இதைக் காணலாம்.

கிரேக்க நாட்டு நில அமைப்பு அழகான வடிவத்தையும் எல்லைகளையும் உடையது. கிரேக்கச் சிற்பம் இடைக்காலச் சிற்பங்களைப் போலவோ, கீழை நாட்டுச் சிற்பங்களைப் போலவோ பல்வேறு வகைப்பட்ட மாதிரிகளைக்

கொண்டதன்று. அதன்வழிப்பட்ட கிரேக்க இலக்கியமும் முழுமைக்குப் பயன்படாத, முக்கிய மற்ற அனைத்தையும் விட்டுவிடுவதன் மூலம், தன் தனித்தன்மையைப் பெற்றுளது. மேலும் ஒரு பாடலின் உள்ளமைப்புப் பாகமான ஒவ்வோருறுப்புக்கும் அதனதளவில் தரப்படும் செவ்விய வலிமையினாலும் அச்சிறப்பை அடைந்துளது. கிரேக்கர்கள், எது உண்மையிலேயே முக்கியத்துவமுடையதென அறியும் உறுதியான இயல்பூக்கத்தைப் பெற்றிருந்தனர். அவை தவிர்த்த அனைத்தையும் அவர்கள் பாடாது - புனையாது விட்டுவிட்டனர். இவ்வாறு விடுவதென்பது வேண்டுமென்றோ, அறிந்தோ செய்ததன்று. அது எங்கே அழகு படிந்துள்ளது எனக் கண்டு கொள்ளும் அறிவாற்றலிலும் சாதாரணமானவற்றையும் மிகைப்பட்டவற்றையும் எவ்வாறு கைவிடவேண்டுமென அறிவதிலும் வல்லமையுள்ள மக்களின் இயல்பூக்கத்தின் வழிப்பட்ட இயல்பான செயற்பாடாகும்."[17]

சங்க இலக்கியம் தனக்கு முற்பட்ட இலக்கியத்திலிருந்துதான், இம்மரபுக் கட்டுப்பாட்டைப் பெற்றது. அம் முந்தைய இலக்கியத்தைப் படைத்தவர்கள், இயல்பாகவே விடத் தகுவனவற்றை விடுத்துப் பாடத் தகுந்தனவற்றையே பாடினராதல் வேண்டும். ஏனெனில் தொல்காப்பியம் இவ்விலக்கிய மரபுகளை, இலக்கியத்தின் இலக்கணமாக விளக்குகிறது.

சங்க இலக்கியத்தின் பிறிதொரு சிறப்பு, அது பொதுவான மானுட அனுபவத்திற்கு ஒத்து வருகிறது. புற இயற்கை வருணனைகள் மிக இயல்பானவை. காலவழு, இடவழு அற்றவை. நிலப்புனைவாயினும் பருவ வருணனைகளாயினும் சிற்றுயிர்கள் பற்றிய செய்திகளாயினும் அவை யாவும் மெய்ம்மையானவை. நேரே கண்டு, அனுபவித்து, அதன் வெளிப்பாடாகப் பாடப்பெற்றவை.

இன்ன பூ இந்தப் பருவத்தில், இந்தப் பொழுதில் பூக்குமெனில், அது இன்றும் அவ்வாறே காணத்தகுவதாக உளது.

புறத்தே காணும் பின்னணிக்கு ஏற்ப, அகத்தே தோன்றும் மனவுணர்வு நிலைகள் படம்பிடிக்கப்பட்டுள்ளன. சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றும் மாந்தர்தம் மன உணர்வுப் படப்பிடிப்பாக இருப்பதே அதன் நிலைபேறான தன்மைக்கு அடித்தளமாகும்.

சங்க இலக்கியம் குறிக்கோட்தன்மையுடையதே. ஆனால் மக்களது வாழ்க்கை நடைமுறைகளை உள்ளவாறே பாடும் 'நடப்பியலுக்கு' வேறுபடாத குறிக்கோள் பாங்கு அதுவாகும். இத்தகைய தனித்தன்மைகள் பலவற்றையுடைய சங்க இலக்கியம், தொல் பொருளாய்வில் தோண்டத் தோண்டப் பல உண்மைகள் கிடைப்பதுபோல, துருவித்துருவி ஆராய இடம் தருமாறுளது. அதன் செறிவும் படைப்புநுட்பமும் வளர்ந்தோங்கிய தொரு முதிர்ச்சியைக் காட்டுகின்றன. இச்சிறப்பே, கன்னித்தமிழ்போல, அது தந்த இலக்கியமும் என்றும் இளமை தவழ வாய்ப்பளித்துளது.

**சங்கம் பற்றிய வரலாறு**

தமிழக மூவேந்தர்களும் குறுநில மன்னர்களும் நிலக்கிழார்களும் பாணர், புலவர், கலைஞர்களை ஆதரித்ததன் மூலம் தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் தமிழர் கலைகளையும் வளர்த்தனர். தொகுக்கப்பட்ட சங்கப் பாடல்கள் இதை உணர்த்தும். ஆனால் இவை தொகுக்கப்படவும் தொல்காப்பியம் போலும் இலக்கண நூல்கள் அரங்கேற்றப்படவும் பாண்டியரே காரணமாக இருந்துள்ளனர். அவர்களது தலைநகரங்களே இடமாக இருந்துள்ளன. புலவர்கள் அங்கேதான் கூடி இப்பணியைச் செய்துள்ளனர். காரணம் என்ன? சோழமன்னர்களோ, பிறரோ தமிழ் வளர்ப்பில், பாண்டியரைவிடப் பின்னணியில் இருந்ததாகக் கூற இயலாது. ஆனால் பாண்டியர்க்குக் கூடுதலான 'தமிழ்ப்புகழ்' வாய்த்ததேன்?

தெற்கே கடல்கோள்களால் அடிக்கடி நிலம் அரிப்புண்டதுடன், பெருங்கடல்கோள்களும் நேர்ந்தன. சேரநாட்டுக் கடற்கரை ஓரப்பகுதிகளும், குறிப்பாகப் பல பட்டினங்கள் நில அரிப்பால் கடலொடு கலந்ததைப் பிளினி முதலாய வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்பாலும் சங்கப் பாடல்களாலும் அறிகிறோம்.

மிகுதியான கடல்கோள்களுக்கு ஆளாகிப் பெருநிலப் பரப்பை இழந்த பாண்டியர்களுக்கு ஒரு 'காப்புணர்ச்சி' உந்துதல் ஏற்பட்டே, அவர்கள் அவையங்களை ஏற்படுத்தி, பாடல்களைத் தொகுத்தும் புதியன பலவற்றைப் பாடவைத்தும், இலக்கணம் மற்றும் பிற அறிவியல்சார் நூல்களை இயற்றி அரங்கேற்ற வைத்தும் 'தமிழ்க் காப்புக்கு' முயன்றுள்ளனர். 'நெடியோன்', 'நிலந்தருதிருவிற் பாண்டியன்', காலம் முதல், தொல்காப்பியம் அரங்கேற்றப் பெற்று, தமிழ்மொழி இலக்கியத் தொடர்ச்சி இடையறவுபடாமல் காக்கப் பெற்றுளது. இவ்வாறு தமிழின் வரலாறே தற்காப்பில் தொடங்குகிறது. முதலில் இயற்கைச் சீற்றத்திற்கு எதிராகத் தொடங்கிய இக்'காப்பு' முயற்சி, தொடர்ந்து வைதிக, பௌத்த, சமண சமயங்கள் - அவை போற்றிய சமற்கிருதம் கிரந்தம் பாலி அனைய வேற்றுமொழிகள் - தொடர்ந்து களப்பிரர், பல்லவர், மொகலாயர், நாயக்கர், மகாராட்டிரர், ஐரோப்பியர் என்றினைய பிறநாட்டவர் ஆட்சிகள் - இவற்றால் ஏற்பட்ட பண்பாட்டுக் கலப்புக்கள் ஆகிய அனைத்திற்கும் எதிரான 'காப்புணர்ச்சியாக' வளர்ந்து போனது. இத் தற்காப்பு முயற்சி இன்றும் இந்திக்கும் ஆங்கிலத்திற்கும் எதிராக, அவற்றின் தாக்கத்தைத் தாங்கி எதிரேற்று நிலைக்கவேண்டிய முயற்சியிலுளது.

*(பாண்டியரது)* அவையம், கூடல், புணர்ப்பு, *(தீந்தமிழின்)* துறை, *(மதுரைத்)* தொகை எனப் பல பெயர்களால் இது அழைக்கப்பட்டுவந்தது. பௌத்தர்களால், 'சங்கம்' எனும் சொல் தமிழில் புகுந்தது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில், 'வச்சிரநந்தி' எனும் சமயப் பெரியவர், 'திரமிள சங்கம்' என அமைத்து, அதில் பல சமண நீதிநூல்களை அரங்கேற்றச் செய்தார். பாண்டியரது அவையம் போன்றே, அவர் தமிழ் வளர்த்து, மக்களை ஈர்க்கவும்

நீதிபோதனை செய்யவும் முயன்று, அதைச் 'சங்கம்' என அழைத்தார். இதனால் தமிழர்களுக்கு என முன்பிருந்த அவையங்களையும், 'தமிழ்ச் சங்கங்கள்' எனக் குறிப்பிடும் வழக்காறு நிலைபெற்றது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் அப்பரடிகள்,

**நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி**
**நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன்காண்** *(6-76)*

எனப் பாடலானார். இறையனாரகப் பொருளுரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் செவிவழிச் செய்திகளாகப் பல நூற்றாண்டுகளாக வழங்கிப் புராணத்தன்மை பெற்றுவிட்ட, சங்கம் பற்றிய கதைகளை எழுதிவைத்தனர். அவர்கள் குறிப்பிடாத, திருக்குறள் அரங்கேற்றம் பற்றிய கதைகளுட்படப் பல இன்றும் 'விநோதரசமஞ்சரி' போன்ற நூல்களிற் காணப்படுகின்றன.

பாண்டியர் தலைநகரில் சங்கமிருந்ததால், அவர்கள் புகழ் தமிழுடன் கூட்டியுரைக்கும் பெரும்புகழாயிற்று.

சோழர்களின் தலைநகராக இருந்த 'உறந்தை' அறம்நிலை பெற்ற ஊர் எனப் புகழ்பெற்றது. வேடனிடமிருந்து புறா ஒன்றைக் காத்து, அதற்கு இணையாகத் தன் உடலைத் தர முன் வந்து, துலாக் கோலில் ஏறிநின்று, தன்னை ஈந்த சிபிச் சக்கரவர்த்தி, சோழரின் முன்னோன் எனப்படுகின்றான் (புறம். *39*).

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய மாறோகத்து நப்பசலையார் 'புள் உறு புன்கண் தீர்த்ததைக்' குறிப்பிடுகிறார் (புறம். *37*). அப்புலவர், அம்மன்னனை

**புறவின் அல்லல் சொல்லிய, கறையடி**
**யானை வால்மருப்பு எறிந்த வெண்கடைக்**
**கோல்நிறை துலாஅம் புக்கோன் மருக!** (புறம் *39*)

என விளக்கிக்கூறி மீண்டும் பாடியுள்ளார். மேலும் பல பாடல்களிலும் சிபியின் வரலாறு குறிக்கப்படுகிறது. *(புறம். 43, 46)*, கரிகாற்பெருவளத்தான் நரை முடித்து முறைசெய்த வரலாறு பொருநராற்றுப் படையிலும் *(188)* பிற இடங்களிலும் காணப்படுகிறது. மனுநீதிச் சோழன் வரலாறும் பிற்பாடு, சோழருடன் இணைத்துப் பேசப்பட்டது. இதனால் சோழர்களுக்கு அறநெறி தவறாத அறங்கூறு அவையம் வைத்திருந்தவர் என்ற புகழேற்பட்டது. 'அறம் நிலைபெற்ற உறந்தை' என்றே உறையூர் புகழப்பட்டது. சேரவேந்தர்களுக்கு இமயம் வென்ற போர்ச்சிறப்புக் கூடுதலாகப் பாடப் பெற்றுளது. அதைப் போலவே பாண்டியர் புகழ் தமிழுடன் இணைத்தே, தொடர்ந்து பாடப்பட்டு வந்துளது.

**தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்**
**மகிழ்நனை மறுகின் மதுரை** (சிறுபாண். *66-67*)

தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே (புறம். 58)

தென்தமிழ் மதுரை (மணி. 25-131)

தமிழ் வையைத் தண்ணம்புனல் (பரி. 6)

இவ்வாறு பாண்டியன், பாண்டியநாடு, வையை, மதுரை இவற்றுடன் தமிழை இயைபுபடுத்தி எண்ணற்ற புலவர்கள் காலந்தோறும் பாடி வந்துள்ளனர்.

சின்னமனூர்ச் செப்பேடுகள் 'மா பாரதம் தமிழ்ப்படுத்தும், மதுராபுரிச் சங்கம் வைத்தும்' பாண்டிய மன்னர் தமிழ் வளர்த்ததைக் குறிப்பிடுகிறது.

அடுத்து, முன்னரே சுட்டியதுபோல, சங்கத் தொகைநூல்களின் அமைப்பே, அவை சில குழுவினரின் செயற்பாடு என்பதைத் தெளிவுறுத்துகிறது. அதில்

காப்புணர்ச்சி
கூட்டு முயற்சி
திட்டமிடல்
மீட்டுருவாக்க முயற்சி

இவற்றுக்கெனத் தொடர்ந்து ஓர் அவையம் இருந்தமை பற்றிய மெய்ம்மைகளை உய்த்துணரச் சங்கத் தொகுப்புக்கள் இடம் தருகின்றன. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனக் கைக்குக் கிடைத்த பாடல்கள் அனைத்தையும் தொகுத்ததும், பெயரின்றிக் கிடைத்த ஏடுகளுக்கு, அவ்வப் பாடலில் வரும் சிறந்த தொடர் ஒன்றையே பெயராக அமைத்ததும் அவற்றைத் தொகுத்தவர்க்குரிய 'காப்புணர்ச்சியைக்' காட்டுகின்றன. போனவை போக, இருப்பவையேனும் சிதறி அழிந்துபோய்விடாமல், ஒரு பேழையில் வைத்துக் காக்கக்கூடிய அளவு, இவை சில தொகைகளாக வரன்முறைப்படுத்தித் தொகுக்கப்பட்டிருப்பது, ஒரு 'காப்புணர்ச்சியின்' வெளிப்பாடு என, அறியாதோரும் அறிந்துகொள்வர்.

இதனை ஒரு கூட்டு முயற்சி எனல் வேண்டும். பாண்டியர் தலைநகரில் தொகுக்கப்பட்டாலும், மூவேந்தர் மற்றும் குறுநிலக்கிழார்கள் பற்றிய பாடல்கள் அனைத்தும் தொகுப்பில் இடம்பெற்றுள. தமிழகமெங்குமிருந்து, பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பல நிலையினரான புலவர்களின் பாடல்களும் மூவேந்தர்களின் பாடல்களும் தேடித் தொகுக்கப் பெற்றுள்ளன. சி.வை. தாமோதரனார், எஸ். பவானந்தர், உ.வே. சாமிநாதர் போல்வார், தொல்காப்பியம் சங்க இலக்கியம் தொடர்பான ஏடுகளைத் தேடிப் பதிப்பித்தது போன்ற முயற்சி, அன்றும் நடந்துளது. எனவே இது தனி ஒருவர் முயற்சி மட்டுமல்லாது, கூட்டு முயற்சியாக நடந்தது எனும் மெய்ம்மை உணரப்படுகிறது.

இத்தொகுப்பிலுள்ள 'திட்டமிடல்' பாங்கு வெளிப்படையானது. அகம் பற்றியவை ஐங்குறுநூறு *(3 அடி முதல் 6 அடி வரை)*, குறுந்தொகை *(4-8)*, நற்றிணை *(9-12)*, அகநானூறு அல்லது நெடுந்தொகை *(13-31)* என அடிவரை யறை பற்றித் தொகுக்கப்பட்டிருப்பதில் திட்டமிடல் புலனாகவில்லையா?

மீட்டுருவாக்க முயற்சி பரிபாடலிலும் கலித்தொகையிலும் புலனாகின்றன. சங்கச் செய்திகளில் வரும் முற்பட்ட சங்க நூல்களான பரிபாடல், கலி ஆகியன மறைந்ததால், இவை புதிதாகப் பாடி, அவ்வகைப் பா வடிவத்தை மீட்டுத் தந்துள்ளன. இன்று கிடைப்பன இரண்டிலும் மதுரையும் பாண்டியரும் பற்றிய பெயரும் புகழுமே இடம்பெற்றுள்ளன. இவற்றை ஐந்து புலவர் ஐந்து திணையைப் பாடுவது என வரும் *(இன்றைய கவியரங்கம் போல)* முன்கூட்டிய திட்டமிடலும் மீட்டுருவாக்கம் செய்தலுமாகிய முயற்சிகள் புலப்படுகின்றன.

இத்தகைய முயற்சிகளுக்குக் கலந்துரையாட, எண்ணிப் பார்க்க, திட்டமிட, செயற்படுத்த ஒரமைப்பு அரச ஆதரவுடன் இருந்திருக்க வேண்டுமென்பதை, மேலும் சான்றுகாட்டியா நிறுவ வேண்டும்?

சங்க இலக்கியத்துள் வரும் அகச்சான்றுகளும் எண்ணிப் பார்க்கத் தக்கன.

பனம்பாரனாரின் தொல்காப்பியப் பாயிரம்,

> **நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து**
> **அறங்கரை நாவின் நான்மறை முற்றிய**
> **அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து**

தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட வரலாற்றைச் சொல்கிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் பாடிய மதுரைக் காஞ்சியில்,

> **தொல்லாணை நல்லாசிரியர்**
> **புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்**
> **நிலந்தரு திருவின் நெடியோன் போல**
> **வியப்பும் சால்பும் செம்மை சான்றோர்**
> **பலர்வாய்ப் புகரறு சிறப்பின் தோன்றி** *(761-65)*

என்று அந் நெடியோன், நல்லாசிரியர்களை அழைத்து 'புணர் கூட்டுண்ட புகழைப்' பாடுகிறார். இது புலவர்களை ஒன்று கூட்டிச் சங்கம் அமைத்து, அவர்தம் நூல்களை அரங்கேற்றக் கேட்டு, அதனால் புகழபெற்ற வரலாற்றைப் பதிவு செய்கிறது.!

> **நல்வேள்வித் துறை போகிய**
> **தொல்லாணை நல்லாசிரியர்** *(760-61)*

என வரும் அடிகளில் பல்கேள்வித் துறை போகிய எனும் பாடமே இருந்திருக்க வேண்டும். 'நல் வேள்வித் துறை போகிய' எனும் பாடம் பொருந்தவில்லை. 'பல்கேள்வித் துறைபோகிய, தொல்லாணை நல்லாசிரியர்' என *(169-170)* வரும் பட்டினப் பாலை அடிகளை ஒப்பு நோக்குக. சங்க இலக்கியத்தில் இவ்வாறு ஒரே மாதிரியான தொடர்கள் திரும்ப வருவதே பொது மரபும் வழக்காறுமாகும்.

இந்'நெடியோன்' எனப்பட்ட நிலந்தருதிருவின் பாண்டியன், பஃறுளி யாறு பாய்ந்த நிலப்பகுதியிலிருந்து அப்'பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்தைக்' கொடுங்கடல் கொண்ட, முதலூழியின் பிற்பாடு தப்பித்து வந்திருந்தவனாகக் கருத இடமுளது. இவனுக்குப் பின்வந்த பல்யாகசாலை முதுகுடுமியைப் பாடிய நெட்டிமையார்

**செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த**
**முந்நீர் விழவின் நெடியோன்**
**நந்நீர்ப் பஃறுளி மணலினும் பலவே** (புறம். *9)*

என வாழ்த்துவதால், முன்னோனையும் அவனது ஆற்றையும் கூறி வாழ்த்தும் மரபு புலனாகிறது.

தன்மீது மதுரைக் காஞ்சி பாடிய மாங்குடி மருதனாரை, பாண்டியன் நெடுஞ்செழியன் குறிப்பிடுகிற பாடல் ஒன்றுளது.

**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவனாக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்**
**புலவர் பாடாது வரைகஎன் நிலவரை** (புறம். *72)*

இப்பாடலில் 'உயர்ந்த வேள்வி' என வாராது 'கேள்வி' என்றே வருவதை உன்னுக.

**'மாங்குடி மருதன் தலைவனாகப் புலவர் பாடுதல்'**

பற்றி வருவானேன்? நெடியோன் புணர்கூட்டுண்டது போல, இந் நெடுஞ்செழியனும் கேள்வி முற்றிய மாங்குடி மருதன் தலைவனாகப் புலவரை அழைத்துப் 'புணர்கூட்டுண்டான்' என அறிய முடிகிறதன்றோ?

'கூட்டுண்ணுதல்' - கூடியிருந்து, புலவர்கள் தத்தம் பாடலை அரங்கேற்றக் கேட்டு மகிழ்தல். செவிக்கு உணவன்றோ அது? புணர் - புணரியில் அதாவது அவையம் அல்லது சங்கத்தில், கூட்டுண்ணுதல் - கூடியிருந்து கேட்டு மகிழ்தல். கிரேக்கப் புலவர்கள் பரந்துபட்ட, திறந்தவெளி அரங்கங்களில், பாடல்களைப் பாடிட, மக்கள் திரளாகக் கூடியிருந்து கேட்டனர் என்றும், ஹோமர் படிப்பவர்களுக்கு எழுதியவரல்லர், கூர்ந்து கேட்பவர்களுக்காகப் பாடியவர் என்றும் சி.எம். பௌரா கூறுவன இங்கு ஒப்பிடற்பாலன.

கலித்தொகைப் பாடல்கள், இவ்வாறு புதிய நூல்களை - புத்தம்புது இலக்கியங்களை ஆண்டு தோறும் குறிப்பிட்ட இளவேனிற்காலத்தில், மதுரையில், பாண்டியன் அவையத்தில் 'கூடியிருந்து குளிர்ந்தேலோர்' என்றாற்போலப் பாடக்கேட்டு, இன்பமுற்றதைக் குறிப்பிடுகின்றன.

கலித்தொகையில்,

> பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளும் செல்வர்க்கு
> மதிமொழி இடல்மாலை வினைவர்போல், வல்லவர்
> செதுமொழி சீத்த செவிசெறு வாக,
> முதுமொழி நீராப், புலன்நா உழவர்
> புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர *(68)*

என வருகிறது. புலத்தை *(நிலத்தை மட்டுமன்று, அறிவை)* தம் நாவால் உழும் உழவர்களாகிய புலவர்களின் புதுமொழிகளை *(புதிய படைப்புக்களை- பாடல்களை - இலக்கியத்தை)* கூட்டுண்ணும் - கூடியிருந்து சுவைக்கும். புரிசைசூழ் புனலூர - மதில் சூழ்ந்த மதிரை - மதுரை எனலாம்.

இக்கலித்தொகையில் வரும் இன்னொரு பாடலும் கருதத்தக்கது. அகப் பாடல்களில் முதுவேனிலில் பிரியும் தலைவன் கார்காலத்தே திரும்புவதாகவும், பனிக்காலத்தே பிரிபவன் இளவேனிலில் திரும்புவதாகவும் பாடும் மரபுகள் காணப்படுகின்றன.

தலைவன் குயில் கூவும் இளவேனிற்பருவத்தில் திரும்புவதாகக் கூறிச் சென்றான். இப்போது அப்பருவம் வந்தும் அவன் வந்திலனே எனத் தலைவி கவன்றாள். அதைப் பார்த்துத் தோழி, தலைவர் குறிப்பிட்டபடி வந்துவிட்டார் எனக் கூறி ஆற்றுவிக்கிறாள்.

இக்கருத்தமைந்த கலிப்பாடலில் *(35)* தலைவி, இளவேனில் பருவ வருகையை, மூன்று தாழிசைகளிலும் வரிசையாகக் குறிக்கிறாள்.

வையை மணல்மேட்டில் பூத்துள்ள முல்லைப் பூக்களின் நறுந்தாதை வண்டுகள் உண்ணும் இளவேனில் காலமல்லவா, பிரியும்போது கண்ணீருடன் வழிவிட்ட நமக்கு, நம் தலைவர், வருவதாக உறுதிசொன்ன பருவம்?

வையையின் ஆற்றிடைக் குறைகளில் மணல் திட்டுகளில், காதலர்கள் இணைஇணையாகக் கரும்பு வில்லையுடைய காமன் விழாவின்கண் மகிழ்ந்து விளையாடும் இளவேனிற் பருவமல்லவா, நாம் 'வெற்றியுடன் திரும்புக' என வாழ்த்தி வணங்கி விடை கொடுத்தபோது நம் தலைவர் திரும்புவதாக உறுதி கூறியது?

உலகோரால் புகழப்படும் இக் கூடல் நகரத்திலுள்ளார், புலவோர் நாவில் பிறக்கும் புதிய பாடல்களைக் கேட்டுச் சுவைக்கும் இளவேனிற் பருவமல்லவா,

நம் தலைவரை நாம் வருந்தி வழிவிட்டபோது, அவர் கட்டாயம் 'திரும்பி வருவேன்' என உறுதி கூறியது?

**நிலன்நாவில் திரிதரூஉம் நீள்மாடக் கூடலார்**
**புலன்நாவில் பிறந்தசொல் புதிதுண்ணும் பொழுதன்றோ?**
**பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால்**
**சுடரிழாய் நமக்கு அவர் வருதும் என்று உரைத்ததை?**

இப்பாடல் முழுவதையும் கூர்ந்து நோக்கிப் படித்தால் உண்மை தெளிவுறும். அன்று இளவேனிற் காலத்தில் (இன்றைய சித்திரை, வைகாசி) வையை ஆற்று மணல் திட்டுகளில் பூக்கள் பூத்துக் குலுங்கும்; இளையோர் இணை இணையாகக் காமன் விழாக் கொண்டாடுவர்; கூடல் நகரார் அவையத்தில், புலவர்தம் நாவில் பிறந்து, பாடப்பெறும் புதிய பாடல்களை – இலக்கியங்களை– கூடியிருந்து கேட்டுச் சுவைத்து மகிழ்வார்கள். (இப்படிப்பட்ட இளவேனிற் பருவம் வந்தும், அப்பருவத்தில் திரும்புவதாகச் சொன்ன தலைவனைக் காணவில்லையே என்பது தலைவி கவலை).

இன்று மதுரையில் நடைபெறும் சித்திரைத் திருவிழா இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் காதலர்களுக்கு வசந்தவிழாவாகவும் அறிவு வாணர்களுக்குப் புதிய, புதிய நூல்கள் அரங்கேற்றப்பட, அவற்றைக் கேட்டுச் சுவைத்து மகிழும் இலக்கிய விழாவாகவும் இருந்தமை புலனாகிறது. காலப் பழைமையால் சமயம் சார்ந்தும் நாயக்கர் காலத்தில் பல புதிய கூறுகள் புகுத்தப்பட்டும், இன்றளவும் இவ்விழா ஏதோ ஒருவகையில் தொடர்கிறது.

எங்ஙனம் நோக்கினாலும் புலவர்கள் கூடும் பொது அமைப்பொன்றும் அதில் புதிய நூல்களை அரங்கேற்றிப் பாடி அளிக்கும் வழிவழி வழக்கமொன்றும் இருந்ததை மறுப்பதற்கில்லை.

**சங்கமிருந்த காலம்**

சங்க இலக்கியத் தொன்மையை கி.மு. இரண்டாயிரம் வரை கொண்டு செல்வார் பி.டி. சீனிவாச அய்யங்கார். பாணர்களும் பொருநர்களும் பாடிய நாட்டுப்புற வடிவங்கள் இலக்கிய வடிவம் பெறுதற்குச் சில நூற்றாண்டுகள் ஆகியிருக்கும் என்பார் அவர். இன்றைய சங்க இலக்கியத்தில் சில பாடல்களும் தொல்காப்பியமும் இடைச்சங்க காலத்தனவாதல் கூடும். ஏனையவை கடைச்சங்க காலத்தன. அதாவது முதற்கடல்கோளுக்குப் பிற்பட்டன சில., இரண்டாம் கடல்கோளுக்குப் பிற்பட்டன பல எனலாம்.

இவ்வகையில் கடைச்சங்க காலம் என்பது கி.மு. ஆயிரம் தொடங்கி, கி.பி. 250 வரை நடைபெற்றிருக்க வேண்டும்.

சங்கப் புலவர்கள் நம்பவியலா நிகழ்வுகளை வைத்துப் புராணம் பாடியவரல்லர். கண்ணால் கண்டதை வைத்து, உள்ளதை உள்ளவாறு

புனையும் மனநிலையினர் அவர்கள். யானைகள், மான்கள், பறவைகள் பற்றியும் செடிகொடி மரம் பற்றியும் மலர்கள் பற்றியும் இவ்வாறு அவர்கள் பாடியுள்ளனவற்றை வனத்துறையினர், விலங்கியல் மற்றும் பயிரியல் துறையினரிடம் காட்டினால் வரிக்குவரி, சொல்லுக்குச் சொல் உண்மையாய் இருப்பதைக் கண்டு அதிர்ந்து போவர். ஐம்புலன்களால் மெய்ம்மைப்படும் உண்மைகளைத்தவிர, வெற்றுப் புனைவுகளைப் பாடாத நாவினர், சங்கச் சான்றோர்.

முரஞ்சியூர் முடிநாகர் ஆயர் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனை 'நாஅல் வேத நெறி திரியினும் திரியாச் சுற்றமொடு' வாழவும் 'முத்தீ விளக்கில் நவ்விப் பெண்மான் துஞ்சும், பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்று வாழவும்' வாழ்த்துகிறார். அவர், அப்பாடலில்

**அலங்கு உளைப் புரவி ஐவரொடு சினைஇ**
**நிலம்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை**
**ஈர்ஐம்பதின்மரும் பொருதுகளத்து ஒழிய**
**பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!** *(புறம். 1)*

என்று பாரத நிகழ்வைப் பாடுகிறார். இப்பாடல் பாரத காலத்தது என நம்பப் பலர் மனம் ஒப்புவதில்லை. சிலப்பதிகார வாழ்த்துக் காதையிலும் 'ஓரைவர் ஈரைம்பதின்மர் உடன்றெழுந்த, போரில் பெருஞ்சோறு போற்றாது, தான் அளித்த சேரன்' என்று இச்செய்தி வருகிறது. இவனைப் பற்றி, மாமூலனாரும் அகநானூற்றில் *(233)* குறிப்பிடுகிறார். புறநானூற்றில் கடவுள் வாழ்த்தைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியதாகவும் அடுத்த இரண்டாம் பாடலில் இப்பாரதச் செய்தியும் வருகின்றமை சிந்திக்கத்தக்கது.

சங்கப் பாடல்கள் பல்வேறு மன்னர்களின் பெயர்களைக் குறிக்கின்றன. அவற்றுள் ஒரு பாடலாவது களப்பிரரைப் பற்றியோ, பல்லவரைப் பற்றியோ குறிப்பிடவில்லை. கிபி. மூன்றாம் நூற்றாண்டினிடையில், இப் பல்லவ மரபினர் தமிழகத்தின் வட பகுதியைக் கைப்பற்றித் தமிழகத்தை ஆளத் தலைப்பட்டனர். பல்லவர்கள் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டனர். வடக்கே கிருஷ்ணை யாறு வரை ஆட்சிசெய்த பல்லவரைச் சுட்டாமல் இருந்திருக்கவியலாது. தமிழக வடக்கெல்லையாகிய வேங்கடமலைத் தொடரின் பகுதிகளை ஆண்ட மழவர், கள்வர் போல்வாரையும் கோசர், துளுவர், ஒவியர், ஆவியர், திரையர் எனப் பல்வேறு அரச இனத்தவர்களையும் குறிப்பிடும் சங்க இலக்கியம் பல்லவர் என்ற இனத்தாரைச் சுட்டவில்லை. எனவே மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே கல்வெட்டுக்களால் பல்லவர் எனச் சுட்டப்படும் ஓர் அரச இனத்தாரைச் சுட்டாத சங்கப் பாடல்கள், அந்நூற்றாண்டிற்கு முற்பட்டதாதல் வேண்டும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

"வடவேந்தரான மௌரியர் தென்னாட்டின்மீது படையெடுத்து வந்த செய்தியையும் *(அகம். 69, 251, 281, புறம் 175)* முடியுடைத் தமிழ் வேந்தர்

மூவரும் தமிழ்நாட்டுக் குறுநில மன்னர்களும் ஒருவருக்கொருவர் பகைமை கொண்டு ஆங்காங்கு நிகழ்த்திய போர்களையும் தம் பாடல்களில் குறித்துள்ள கடைச்சங்கப் புலவர்கள், பல்லவர் தமிழ் வேந்தரோடு புரிந்த போர்களுள் ஒன்றையாவது குறிப்பிடாமை ஊன்றி நோக்கற்பாலதொன்றாம். அன்றியும், பல்லவர் என்ற பெயரே சங்கத்துச் சான்றோர் பாடல்களில் காணப்படவில்லை", என்பார் தி.வை. சதாசிவ பண்டாரத்தார்.[17]

இந்திய வரலாற்றில் முதன்முதல் குறிப்பிடப்படும் அரச பரம்பரையினர் நந்தர்களும் மோரியர்களுமாவர். நந்தர்களுள் மகா பதும நந்தன் என்பவன், பதும நிதி எனப்படும் பெருஞ்செல்வத்திற்குரியவனாக விளங்கினான் என்பர்.

அகப்பாடல் ஒன்றில் மாமூலனார், இன்றைய ஆந்திர மாநிலத்தைக் கடந்து, வாணிகம் செய்யச் சென்ற தலைமகன் பற்றிப் பாடுகிறார். நிரம்ப வரலாற்றுக் குறிப்புக்களைத் தந்தவர் மாமூலனார். அவர் தெற்கே போரிட வந்த, புதிய மோரிய மன்னர்கள், மலையைக் குடைந்து, தங்கள் தேர்கள் வர அமைத்த பாதை வழியாகத் தலைமகன் வடக்கே சென்றான் எனக் குறிக்கின்றார். தெற்கே போந்தார்களே தவிர, அவர்கள் தென்னாட்டை வெல்லவில்லை. அசோகனும் எருமை நாடு எனப்பட்ட மைசூர்ப் பகுதிவரை வந்தானே தவிர, கலிங்க வெற்றிக்குப்பின் அவன் போர் செய்திலன். வடக்கெல்லையை ஒட்டியிருந்த கோசர் துணையுடன் வந்தனர் மோரியர். ஆனால் இடையேயிருந்த மோகூர் மன்னன் பணியவில்லை. அவனுடன் போரிட்டு வென்று வந்த மோரியர், தங்கள் தேர்கள் வருவதற்காகப் பாறைகளை வெட்டிக் குறைத்த வழியில், தலைமகன் சென்றானாம்.

**துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்.....**
**தெம்முனை சிதைத்த ஞான்றை, மோகூர்**
**பணியாமையின் பகைதலை வந்த**
**மாகெழு தானை வம்ப மோரியர்**
**புனைதேர் நேமி உருளிய குறைத்த**
**இலங்குவெள்ளருவிய அறைவாய் உம்பர்** *(251)*

என்பது அகநானூறு. அங்ஙனம் அவ்வழியே சென்ற தலைவன் 'நந்தன் வெறுக்கை *(செல்வம்)* எய்தினும், மற்று அவண் தங்கலர் வாழி, தோழி! எனத் தலைமகளைத் தோழி ஆற்றுவிக்கின்றாள்.

நந்தரது செல்வப்புகழ் பரவியிருந்த அண்மைக் காலத்தில், இப்பாடல் பாடப் பெற்றிருக்கவேண்டும். நந்தர்தம் தலைநகராம் பாடலிபுத்திரம் செல்வவளம் மிக்கதென்ற புகழ் பழமொழிபோல் இந்திய நாடெங்கும் பரவியிருந்த காலம் அது.

அக்காலத்தில் செல்வ வளமிக்க நகரங்களையே பரிசிலாகத் தரக்கூடும் என்று சொல்வதொரு மரபுண்டு. பட்டினப்பாலையில், தன் நெஞ்சிற்குச்

சொல்லி, பிரியமாட்டேன் எனக் கூறும் தலைமகன், 'முட்டாச் சிறப்பினையுடைய காவிரிப்பூம்பட்டினமே கிடைத்தாலும், என் காதலியைப் பிரிந்து வாரேன், வாழிய நெஞ்சே!' என்று சொல்கின்றான் *(222-24)*. படுமரத்து மோசிகீரனார் பாடிய பாடல் ஒன்று குறுந்தொகையில் உளது. அப்பாடலில், நெடுங்காலமாக எதிர்பார்த்திருந்த தலைவன் வருகிறான் எனக் கூறக் கேட்ட தலைமகள், 'அவ்வாறு நல்வார்த்தை சொன்னவர், சோணையாற்றங்கரையிலுள்ள பொன் நிறைந்த பாடலிபுத்திரத்தையே, பரிசிலாகப் பெறுவாராக!' என வாழ்த்துகிறாள்.

**வெண்கோட்டு யானை சோணை படியும்**
**பொன்மலி பாடலி பெறீஇயர்** *(75)*

என்பது அப்பாடல். இது பாடலிபுத்திரம் சிறந்து விளங்கிய சமகாலத்தில் பாடப் பெற்றதாதல் வேண்டும். இன்றேல் பொருளற்றதாகிவிடும்.

மாமூலனார் பிறிதொரு அகப்பாடலிலும் நந்தரது பெருஞ்செல்வம் பற்றிக் குறிப்பிடுகிறார். தலைவி தோழியிடம் "நம் தலைவர் வேங்கட மலையை ஒட்டிய நீண்ட பாலை வழியில் பிரிந்துபோய் ஈட்ட விரும்பிய பொருட்செல்வம் இமயமலையைப் போன்றதாகுமா? அல்லது நந்தர்களது பாடலிபுத்திர நகரில், பூமிக்கு அடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்து, பிறகு கங்கையாறு திசைமாறி ஓடவே, அதில் காணாது தொலைந்த அப் பெருநிதியமோ? அவர் 'நம்மினும் வலிதாத் தூக்கிய பொருள் எதுவோ?" என வினவுவதாக உளது அப்பாடல்.

**புகையின் பொங்கி வியல்விசும்பு உகந்து**
**பனி ஊர் அழற்கொடி கடுப்பத்தோன்றும்**
**இமயச் செவ்வரை மானுங் கொல்லோ?**
**பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்**
**சீர்மிகு பாடலிக் குழீஇ, கங்கை**
**நீர்முதல் கரந்த நிதியங் கொல்லோ**
**எவன்கொல் வாழி, தோழி.... (தலைவர்)**
**நம்மினும் வலிதாத் தூக்கிய பொருளே!** *(அகம்265)*

குறுந்தொகைப் பாடலில் படுமரத்து மோசிகீரனார் கங்கையின் கிளையாறாகிய சோணையாற்றங் கரையில் 'பொன்மலி' பாடலி இருந்ததைப் பாடினார். மாமூலனார் பெருஞ்செல்வம் ஆற்றினால் அடித்துக் கொண்டு போகப்பட்டதைப் பாடியுள்ளார். இவை கால அணிமையுடைய நிகழ்வுகளாதல் வேண்டும். இமய மலையை நேரில் பார்த்த காட்சி அனுபவம் பாடலில் இருப்பதைக் கவனிக்க வேண்டும்.

முன்னர், மாமூலனார் மோரியர்தம் தென்திசை நோக்கிவந்த படையெடுப்பைச் சுட்டியிருப்பதைப் பார்த்தோம். அவ் அகப்பாடற்செய்தி, வேறு சில பாடல்களாலும் உறுதிப்படுகிறது.

தலைவன் பிரிந்த காலத்து வருந்திய தலைமகளுக்கு, 'வந்துவிடுவார்' என்பதாகச் சொல்லித் தோழி ஆற்றுவிக்கும் அகப்பாடல் ஒன்றுளது. அது உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார் பாடியது.

**விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்**
**பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த**
**அறை இறந்து அகன்றனராயினும், எனையதூஉம்**
**நீடலர் வாழி தோழி!** *(அகம். 69)*

தலைமகளது ஆற்றாமையைப் பாடும் பிறதொரு அக நானூற்றுப் பாடல், மாமூலனார் பாடியது, இச் செய்தியைக் குறிப்பிடுகிறது.

**முரண்மிகு வடுகர் முன்னுற, மோரியர்**
**தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு**
**விண்ணுற ஓங்கிய பனிஇருங் குன்றத்து**
**ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த**
**அறை இறந்து அவரோ சென்றனர்!** *(281)*

ஆதனுங்கனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடிய புறப்பாடலும் இச்செய்தியைக் குறிப்பிடுகிறது. ஆதனுங்கன் அரண்மனை வாயில் அகலத் திறந்திருக்குமாம், எவ்வாறு?

**............................ வென்வேல்**
**விண்பொரு நெடுங்குடைக்**
**கொடித்தேர் மோரியர்**
**திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த**
**உலக இடைகழி அறைவாய் நிலைஇய**
**மலர்வாய் மண்டிலத்து அன்ன....** *(175)*

மோரியர் பற்றிய இப்பாடல்கள், *(1)* மோரியர் தேர்ப்படை மிக்கவர் *(2)* தென்னாட்டை நோக்கி படையெடுத்து வந்தனர் *(3)* வழியிடையே பணியாத மோகூர் மன்னனை வென்றனர் *(4)* ஒன்றுமொழிக் கோசர் எனப்படும். மன்னரைத் துணையாகக் கொண்டனர். *(5)* வரும் வழியில் உயர்ந்து நீண்ட பாறைகள் எதிர்ப்பட்டமையால், அவ்வழியே தங்கள் தேர்களைச் செலுத்தி வருவதற்காக, அப்பாறைகளை அறுத்துக் குறைத்து வழி அமைத்தனர். அது உலகு புக அமைத்த பெரிய வாயில்போல், அவ்வளவு அகலமாகக் காட்சி தந்தது. வடுகரை முன்னே செலுத்தி, அவர்கட்குப்பின்னர் பெரும்படையுடன் புகுந்தனர். 'தென்திசை முன்னிய வரவிற்கு' என்பதால், தென்னாட்டை வெல்லக் கருதிப் புறப்பட்டார்கள் என்று மட்டுமே, இப்பாடல்கள் அனைத்தும் குறிக்கக் காண்கிறோம்.

மைசூர்ப் பகுதியில் காணப்படும் அசோக வேந்தனின் மலைக் கல்வெட்டும் இதை உறுதி செய்கிறது. அதில் அவன் சேர, சோழ, பாண்டிய,

சத்திய புத்திர மன்னர்களைத் தன் நண்பர்களாகவே குறிக்கின்றான். கோசர்கள், 'ஒன்று மொழிக் கோசர்' - சொன்ன சொல் தவறாத சத்திய புத்திரர்' என்றே தமிழ்ப் பாடல்களில் புகழப்படுகின்றனர்.

இனி யவனர்களைப் பற்றியும், இங்கு யவனச்சேரிகள் இருந்தமை பற்றியும் அவர்கள் அரண்மனைக் காவலர்களாக விளங்கியமை பற்றியும் பல குறிப்புகள் சங்கப் பாடல்களில் உள்ளன. அவர்களின் கடல் வாணிகம் சிறப்பாகப் பேசப்படுகிறது.

எருக்காட்டுத் தாயங்கண்ணனார்,

**சேரலர்**
**சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க**
**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடுவந்து கறியொடு பெயரும்**
**வளம்கெழு முசிறி** (அகம். *149*)

பற்றிப் பாடுகிறார். பொன்னைக் கொடுத்து, மிளகை ஏற்றிச் சென்ற, கைவினைத் திறன்மிக்க மரக்கலம் இதில் பேசப்படுகிறது.

புறம் *56*ஆம் பாடலில், பாண்டிய மன்னனைப் பாடிய நக்கீரனார்.,

**யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்**
**பொன்செய் புனைகலத்து ஏந்தி, நாளும்**
**ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து**
**ஆங்கு இனிது ஒழுகுமதி**

என வாழ்த்துகிறார். யவனர் கொண்டுவந்த மதுவுக்கு அத்துணை ஆர்வம் இருந்துளது. தமிழர்களைப் போலவே யவனர்களும் மரக்கலம் செய்வதிலும் செலுத்துவதிலும் தேர்ச்சிபெற்று விளங்கியுள்ளனர்.

யவனர் கைவினைத் திறத்தால் செய்த 'பாவை விளக்கு', பாண்டியன் அரண்மனையில் இருந்ததை நெடுநல்வாடையால் அறிகிறோம்.

**யவனர் இயற்றிய வினைமாண் பாவை**
**கைஏந்து ஐ அகல் நிறைய நெய்சொரிந்து** *(101-102)*

இதுவும் நக்கீரனார் தரும் குறிப்பேயாகும். 'யவனர் ஓதிம விளக்கு'ப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படையில், கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடுகிறார். இது அன்னப்பறவை போல, உருவமைந்த விளக்காகும்.

யவனர், குதிரை வீரர்களாய், மடித்து உடுத்த செறிவுமிக்க மேலுடையுடன், அஞ்சத்தகும் தோற்றம் உடையவர்களாய், அரண்மனை மெய்க்காப்பளர்களாக விளங்கியதை, முல்லைப் பாட்டுப் பகர்கிறது.

**மத்திகை வளைஇய, மறிந்து வீங்கு செறிவுஉடை**
**மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து**

**வலிபுணர் யாக்கை, வன்கண் யவனர்**
**புலித்தொடர்விட்ட புனைமாண் நல்இல்** *(59-62)*

இத்தகைய யவனத் தொடர்பைப் புறச்சான்றுகளாலும் அறிகின்றோம். கல்வெட்டுச் சான்றுகளும் கிரேக்கப் பயணிகளாகிய பிளினி *(கி.பி. 24-79)*, தாலமி *(கி.பி. 150)* எழுதி வைத்துள்ள குறிப்புகளும் இதற்குத் தகுந்த சான்றுகளைத் தருகின்றன. உரோம நாணயங்களும் பொற்காசுகளும் புதைபொருள் ஆராய்ச்சியிற் கிடைத்துள்ளன.

சி.எம். பௌரா ஹோமரைப் பற்றிக் குறிப்பிடுவது : "அவர் வாசிப்பவர்களாகப் பாட்டுப் புனையவில்லை; கேட்பவர்களுக்காகப் பாடினார்- அவருடைய இலக்கியக்கலை கிரேக்க வெற்றிவாகை சூடியவர்கள் மற்றும் அயோனியக் குடியேற்றக்காரர்களது அவையங்களில் வளர்ந்த கலையாகும்." [He composed for listeners, not for readers and his art is the art which grew in the Courts of the Greek conquerors and Colonists of Ionia"]. இதில் குறிப்பிடப்படும் அயோனியர்தான் தமிழில் 'யவனர்' எனப்பட்டனர். இவர்கள் நாடு கடந்து பரவிய கிரேக்கக் குடிவகையினராவர்.

சிலப்பதிகார உரைபெறு கட்டுரை, கண்ணகிக்குக் கோயிலெடுத்து வழிபட்டவர்களுள் 'கடல்சூழ் இலங்கைக் கயவாகுவை'யும் குறிப்பிடுகிறது. வரந்தருகாதையிலும் 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்' தன்னாட்டிலும் கண்ணகித் தெய்வம் வந்தருள வேண்டுமெனக் கேட்ட செய்தி இடம்பெறுகிறது *(160-164)*, இலங்கை வம்சாவழியில் முதற் கயவாகு கி.பி. *171* முதல் கி.பி. *193* வரை அரசாண்டதாகக் குறிப்புளது.

இவை அனைத்தும் உணர்த்தும் செய்தி, சங்க இலக்கியம் என இன்று கிடைக்கும் தொகுப்புகள் கிறித்துவுக்குமுன் மூன்று நூற்றாண்டுகட்குட் பட்டுத் தொகுக்கப்பெற்றவை என்பதாகும். ஆனால் கிரேக்க இலக்கியத்திற்குப் பௌரா குறிப்பிடுவதுபோலச் சங்க இலக்கியமும், "ஏராளமானவை அல்ல; ஆனால் அவற்றின் நடையழகும் ஆற்றலும் மாந்தரது படைப்புக்களில் மிகவுயர்ந்த இடத்தில் அவற்றை விளங்கச் செய்கின்றன. அவற்றில் போலிப் பாசாங்கோ, மிகைப்படுத்தி எழுதுவதோ இல்லை. ஒவ்வோரடியும் ஒவ்வொரு செய்தியைச் சொல்லும்; ஒவ்வொரு சொல்லும் அதன் பணியைச் செய்யும்" [These are not numerous, but their style and power place them among the greatest works of man.... There must be no shoddiness and no redundance. Every stroke must tell, every word do its work]. இத்தகைய செவ்விய முதிர்ச்சியையடையப் பல நூற்றாண்டுகள் ஆகியிருக்கும் என்பதில் ஐயமில்லை.[18]

திருமுருகாற்றுப்படை, பரிபாடல், கலித்தொகையில் வரும் செய்திகளில் பல, பிற தொகைகளிலும் காணப்படுவனவே. அவற்றின் பாடுபொருளாலும் பாவடிவத்தாலும் புராணமரபுச் செய்திகளும் உலக வழக்குகளும் கூடுதலாக இடம்பெற்றுள. திருக்குறள், இரட்டைக் காப்பியம் வரை வடிவம், பொருள்,

திறன்களால் ஒரு குடும்பச் சாயல் ஊடுருவி நிற்பதை எளிதில் மறுப்பதற்கில்லை.

## சங்க நூல்கள்

சங்க இலக்கியம் 'பாட்டும் தொகையும்' என்று கூறப்படும் பாட்டு என்பது பத்துப்பாட்டு; தொகை என்பது எட்டுத்தொகை. எட்டுத்தொகையில் ஒவ்வொன்றும் பல உதிரிப்பாடல்களின் தொகுப்பெனலாம். பத்துப்பாட்டு நெடும் பாடல்களின் தொகுப்பாகும்.

**எட்டுத்தொகை :**

குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை (அகநானூறு), ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல், புறநானூறு, பதிற்றுப்பத்து.

இவற்றை மனத்தில் பதியவைத்துக் கொள்ளுமாறு ஒரு தனிப்பாடல் உண்டு.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம், புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை

குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறு நூறு, கலித்தொகை ஐந்தும் அகத்தொகைகள், பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறத்தொகைகள். பரிபாடலில் வையை பற்றியன அகப்பாடல்கள்; ஏனைய செவ்வேள், திருமால் பற்றிய கடவுள் வணக்கப்பாடல்கள் புறம் பற்றியன.

கலியும் பரிபாடலும் முறையே கலிப்பாவாலும் பரிபாடலாலும் ஆயினமையால் அப்பெயர்களுக்கு உரியனவாயின. பிற சங்கத் தொகைப்பாடல் அனைத்தும் ஆசிரியப் பாவாலானவை.

ஐங்குறுநூற்றிலும் பதிற்றுப்பத்திலும் பத்துப்பத்துப் பாடல்கள் என்ற முறையில் அகமும் புறமும் தொகுதி தொகுதியாகப் பாடப்பட்டுள்ளன. பரிபாடலிலும் கலித்தொகையிலும் ஒரு பொருள் அல்லது திணை பற்றிய பாடல்களின் தொகுதிகளாக அமைந்திருக்கக் காணலாம்.

ஏனைய எட்டுத்தொகை சார்ந்த நான்கு நூல்களும் உதிரிப்பாடல்களின் தொகுப்புப் போன்றவை.

பத்துப்பாட்டில் நெடும்பாடல்கள் பத்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

**பத்துப்பாட்டு :**

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்), மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை.

## எட்டுத் தொகை

| வ, எண் | நூற்பெயர் | பொருள் பாட்டு எண்ணிக்கை கடவுள் வாழ்த்து | பாடிய புலவர்கள் எண்ணிக்கை | தொகுத்தவர் | தொகுப்பித்தவர் |
|---|---|---|---|---|---|
| *1.* | குறுந்தொகை | அகம் *401* முருகன் *1* பா. பா. பெ. | *205* | பூரிக்கோ | தெரியவில்லை |
| *2.* | நற்றிணை | அகம் *400* திருமால் *1* பா. பா. பெ. | *192* | பன்னாடு தந்த பாண்டியன் | தெரியவில்லை |
| *3.* | அகநானூறு | அகம் *400* சிவன் *1* பா. பா பெ. | *142* | மதுரை உப் பூரிகுடி கிழார் மகனார் உருத் திர சன்மர் | பாண்டியன் உக்கிரப் பெருவழுதி |
| *4.* | ஐங்குறுநூறு | அகம் *498* சிவன் *1* பா. பா. பெ. | *5* | புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் | யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை |
| *5.* | கலித்தொகை | அகம், *149* சிவன் *1* | *5* | நல்லந்துவனார் என்பர் நச்சினார்க் கினியர் | தெரியவில்லை |
| *6.* | பரிபாடல் | அகம் புறம் *22* + உதிரி *10* | *13* | தெரியவில்லை | தெரியவில்லை |
| *7.* | பதிற்றுப்பத்து | புறம் *80+6* சிவன் *1* *(பிற்சேர்க்கை)* | *8* | தெரியவில்லை | தெரியவில்லை |
| *8.* | புறநானூறு | புறம் *399* சிவன் *1* பா. பா. பெ. | *157* | தெரியவில்லை | தெரியவில்லை |
| | பத்துப்பாட்டு | *10* | *- 8* | தெரியவில்லை | தெரியவில்லை |
| | **சமாசப் பதிப்பின்படி மொத்தப் பாடல்கள்** | 2381 | 473 | | |

பா. பா. பெ-பாரதம் பாடிய பெருந்தேவனார்

## பத்துப் பாட்டு

| வ. எண் | பாட்டு | பொருள் | அடி யளவு | பாடியவர் | பாடப்பெற்றவர் |
|---|---|---|---|---|---|
| 1. | திருமுருகாற்றுப்படை | புறம் | 317 | மதுரைக் கணக் காயனார் மகனார் நக்கீரனார் | குமரவேள் |
| 2. | பொருநராற்றுப்படை | புறம் | 248 | முடத்தாமக் கண்ணியார் | சோழன் கரிகாற் பெருவளத்தான் |
| 3. | சிறுபாணாற்றுப்படை | புறம் | 269 | இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் | ஒய்மாநாட்டு நல்லியக்கோடன் |
| 4. | பெரும்பாணாற்றுப் படை | புறம் | 500 | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | தொண்டைமான் இளந்திரையன் |
| 5. | முல்லைப்பாட்டு | அகம் | 103 | காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் | |
| 6. | மதுரைக்காஞ்சி | புறம் | 782 | மாங்குடிமருதனார் | தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் |
| 7. | நெடுநல்வாடை | அகம் | 188 | மதுரைக் கணக் காயனார்மகனார் நக்கீரனார் | பாண்டியன் நெடுஞ்செழியன் |
| 8. | குறிஞ்சிப்பாட்டு | அகம் | 261 | கபிலர் | ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குப் பாடியது |
| 9. | பட்டினப்பாலை | அகம் | 301 | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | சோழன் கரிகாற் பெருவளத்தான் |
| 10. | மலைபடுகடாம் | புறம் | 583 | இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் | பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன் சேய் நன்னன் |

பத்துப்பாட்டைத் தொகுத்தார், தொகுப்பித்தார் விவரம் தெரிந்திலது.

இவற்றை நினைவில் வைத்துக்கொள்ள உதவும் தனிப்பாடல் ஒன்றுண்டு. பத்துப்பாட்டுள் காணப்படும் வரிசை முறைப்படியே இப்பாடலிலும் அவற்றின் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன.

முருகு பொருநாறு பாண்இரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி-மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

இவற்றுள் ஆற்றுப்படை ஐந்தும் மதுரைக் காஞ்சியும் புறப்பாடல்களாகும். எஞ்சிய நான்கும் அகப்பாடல்கள். நெடுநல்வாடை பற்றி அகமா, புறமா என்ற கருத்து வேறுபாடு உண்டு. பட்டினப் பாலை காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிப் பெரும்பகுதி கூறுதலால் பாலைப்பாட்டு எனப்படாமல் பட்டினப்பாலை எனப்பட்டது. *103* அடியுள்ள முல்லைப் பாட்டே இவற்றுள் அடி அளவாற் சிறியது; *782* அடியுள்ள மதுரைக் காஞ்சியே மிகப் பெரியது. பத்துப்பாட்டின் கடவுள் வாழ்த்துப் போலத் திருமுருகாற்றுப்படை அதில் முதற்கண் வைக்கப்பட்டுள்ளது. பட்டினப் பாலையில் வஞ்சியடிகள் மிகுதியாக விரவி வந்துள்ளமையால் அதனை வஞ்சிநெடும்பாட்டு என்பாரும் உளர்.

## எட்டுத் தொகை நூல்கள்

### குறுந்தொகை

பூரிக்கோ என்பவரால் தொகுக்கப்பட்ட இதில் நான்கடிச் சிற்றெல்லை முதல் எட்டடிப் பேரெல்லை வரை அமைந்த நானூறு பாடல்கள் அடங்கியுள்ளன. (இன்று *402* பாடல்கள் காணப்படுகின்றன; இரண்டு *9* அடிப்பாடல்களாக உள). இதற்கு முதலில் உரையெழுதிப் பதிப்பித்த சான்றோர் திருக்கண்ணபுரம் சௌரிராசப்பெருமாள் அய்யங்கார் ஆவார். பிறகு பதிப்பித்த உ.வே. சாமிநாத அய்யர், ‘உரையாசிரியர்கள் குறுந்தொகைப் பாடல்களையே மிகுதியாக எடுத்துக்காட்டுகின்றனர்’ என்று தம் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். அடியளவால் குறுகிய இப்பாடல்களில் முதல் கருவைவிட உரிப் பொருட்கே சிறப்பிடம் நல்கப்படுமாற்றைக் காணலாம் என்பர் ‘தமிழ்க்காதல்’ ஆசிரியர் அறிஞர் வ. சுப. மாணிக்கம். வருணனை குறைந்தும் உணர்வு மிகுந்தும் விளங்கும் இப்பாடல்கள் அகத்திணையின் உயிரோட்டத்தைக் காட்ட வல்லனவாயுள்ளன.

தலைமகள் தோழியிடம் தலைவன் அன்புடைமையை வற்புறுத்தும் சூழல் ஒன்று வருகிறது. அப்போது அவள் அக்காதல் நிலத்தைவிடப் பரந்ததாக, வானைவிட உயர்ந்ததாக, நீரைவிட ஆழமானதாக விளங்குவதெனக் கூறுகிறாள்.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே. *(3)*

பிரிந்த தலைவன் உரிய காலத்தே திரும்பினானில்லை; அதனால் தலைவி சோகமே வடிவாயினாள்; உள்ளங்குமைந்தாள். வீட்டினுள்ளிருந்து பலகணி வழியாகப் பறவைகள் மாலை நேரத்தில் கூடுநோக்கிப் பறந்து போவதைப் பார்க்கிறாள். அஃது அவள் கவலையை மேலும் அதிகரிக்கச் செய்கிறது. இதைப்போலத் தன் தலைவனும் வீடுநோக்கிப் பறந்து வரவில்லையே என அவள் வாய்விட்டுச் சொல்லவில்லை. அவ்வாறு வெளிப்படச் சொல்லாமல் குறிப்பாகச் சொல்வதனாலேயே, படிக்கும் நம் நெஞ்சத்தில் அவ் அவலவுணர்வு இருமடங்காகிப் பெருகுகிறது.

ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த
பிள்ளை உள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமாற் செலவே. *(9)*

திருமணமான புதிதில் தலைவி தலைவனுக்குத் தானே உணவு சமைத்துப் பரிமாறுகிறாள். அனுபவக் குறைவாலும் விரைவாலும் பட்டுச் சேலையில் கையைத் துடைத்துக் கொண்டு, கண்களில் புகைபடிய அவள் சமைக்கும் அழகே அவளுக்கு அதில் அதிகப் பழக்கமில்லை என்பதைக் காட்டுகிறது. இருந்தும் மனைவி மிகமுயன்று சமைத்ததாயிற்றே என்று கணவன் 'இனிது, இனிது' என உண்ண, அவன் பெருந்தன்மையையும் பேரன்பையும் எண்ணி மனைவி புன்னகை பூக்க, அவ்வீட்டு இல்லற மாட்சி இனிதாக நடைபெறுகிறது. ஒரு தாய் தன் மகளின் நல்லற வாழ்வை இங்ஙனம் கண்ணாரக் கண்டு மகிழ்கிறாள்.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே. *(167)*

திருமணம் முடிக்கும் மணமக்களுக்கு நாம் இதைவிடக் கூறக்கூடிய அறிவுரைகள் எவையேனும் உளவோ? எண்ணிப் பார்மின்!

காமம் தாங்குமதி என்போர் தாமஃது
அறியலர்கொல்லோ? அனைமதுகையர்கொல்?
யாமெங் காதலற் காணே மாயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே. *(290)*

இப்பாடலை எழுதிய புலவர் பெயர் அறியப்படாதபொழுது இதனைத் தொகுத்தவர்கள் 'கல்பொரு சிறுநுரையார்' என இப்பாடலாசிரியர் பெயரைக் குறிப்பிட்டுள்ளனர். இதிலமைந்துள்ள சிறந்த, தனித்தன்மை வாய்ந்த உவமை கருதி ஆசிரியர்க்குப் பெயரிட்ட திறம் பாராட்டற்பாலதாகும்.

இங்ஙனம் பாடலால் பெயர் பெற்றவர்கள் பதினெட்டுப் பேருக்குமேல் இந்நூலில் காணப்படுகின்றனர். இவ்வாறு பாடலால் பெயர் பெற்றவர் தொகை இத்தொகுப்பிலேயே மிகுதியாகக் காணப்படுகின்றது. மேலும் அவர்களிற் சிலர் அதே பெயரால் பிற தொகை நூல்களிற் குறிக்கப்படுதலாலும் பிற தொகை நூல்களிற் பாடலால் பெயர் பெற்ற புலவர் பாடலெதுவும் இதிற் காணப்படாமையாலும் குறுந்தொகையே முதலில் தொகுக்கப்பெற்ற தென்பர். இத்தொகை பாடிய புலவர் தொகை *205*. இந்நூலின் முதல் *380* பாட்டுகளுக்குப் பேராசிரியரும், இறுதி *20* பாட்டுகளுக்கு நச்சினார்க்கினியரும் உரையெழுதினர் எனக் கேள்விப்படுகிறோம். அவ்வுரைகள் கிடைத்தில.

## நற்றிணை

பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியால் தொகுக்கப்பட்ட இதில் *9* அடிச் சிற்றெல்லை முதல் *12* அடிப் பேரெல்லை வரை அமைந்த *400* பாடல்களைக் காணலாம். பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் இதற்கு உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். அளவாயமைந்த பாடல்களைக் கொண்டதாதலின் 'நல்' என்ற அடைமொழி பெற்றது. பாடிய புலவர் தொகை *275*. பாடல் தொடரால் பெயர்பெற்ற நற்றிணைப் புலவர்கள் எழுவராவர். அவர்கள் வண்ணப்புறக் கந்தரத்தனார், மலையனார், தனிமகனார், விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனார், தும்பிசேர் கீரனார், தேய்புரிப் பழங்கயிற்றினார், மடல் பாடிய மாதங்கீரனார் என்போர் ஆவர்.

தோழி எவ்வளவு கூறியும் தலைவி தலைவன் மேற்கொண்ட சீற்றம் தணிந்திலள். அதனால் மனம் வருந்திய தோழியின் கூற்றாகக் கபிலர் பாடிய பாடல் இது :

மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோன் அன்ன வயங்குவெள் ளருவி
அம்மலை கிழவோன் நம்நயந்தென்றும்
வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேறாய்
நீயுங் கண்டு நுமரொடும் எண்ணி
அறிவறிந்து அளவல் வேண்டும் மறுதரற்கு
அரிய வாழி தோழி! பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே. *(32)*

திருமாலைப் போன்ற கரிய மலைத்தொடர்; பலதேவனைப் போன்ற வெள்ளருவி! அம்மலைநாடன் நம்மை விரும்பி வருந்துகிறான் என யான் எவ்வளவு கூறியும் நீ என் பேச்சை ஏற்றுக் கொள்ளவில்லை. நீயாகச் சிந்தித்துப்பார்! அல்லது உனக்கு மிக வேண்டியவர்களுடன் கலந்து எண்ணிப்பார்! அறியவேண்டியதை அறிந்து அவனை ஏற்றுக் கொள்வதே நலம். மறுப்பது தவறு. பெரியவர்கள் ஆராய்ந்த பின் நட்புக் கொள்வார்களே தவிர, நட்புக் கொண்டபின் ஆராயமாட்டார்கள்'. எவ்வளவு நயமாக, நாவன்மை மிக்க தோழி தலைவியை இடித்துக் கூறுகிறாள் என்பதைப் பாட்டினைப் பல முறை படித்து உணர்தல் வேண்டும். திருவள்ளுவர்.

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு (791)

எனக் கூறுவது, இப்பாடலின் இறுதியில் பொருத்தமுற ஆளப்பட்டுள்ளமை சிந்திக்கத்தக்கது.

தலைவன் தன் காதலியை அவள் வீட்டுக்கருகிலுள்ள ஒரு புன்னை மரத்தடியில் சந்தித்தான். அவள் "இது நாங்கள் விளையாடுகிற பொழுது மறந்து போட்டுவிட்ட புன்னை விதையிலிருந்து வளர்ந்தது. பிறகு நாங்கள் அதனைப் பாலும் தேனும் பெய்து வளர்த்தோம். அப்போதெல்லாம் எங்கள் தாய் 'உங்களை விட உங்கள் தங்கையான புன்னை மிக நல்லவள்; அவள் அடமே செய்வதில்லை', எனப் பாராட்டுவாள்; எனவே என் உடன் பிறப்பனைய இப்புன்னை நிழலில் உங்களுடன் அளவளாவ எனக்குக் கூச்சமாக இருக்கிறது. வேறு இடங்களும் அருகிலுள; நாம் அங்கே போய்ப் பேசிக் கொண்டிருப்போம்" என்கிறாள். இயற்கையையும் உயிருள்ளதாகக் கருதி நாணும் இந்நுட்பமான உணர்வு நிலையை நாம் சங்கப்பாடல்களில் கண்டு மகிழலாம்.

விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே!– (172)

## அகநானூறு

இதனைத் தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. தொகுத்தவர் உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர். *13* அடிச் சிற்றெல்லை, *31* அடிப் பேரெல்லைக்கு உட்பட்ட *400* பாடல்களை இத் தொகையிற் காணலாம். முழுமையான அளவில் அகத்திணையை விளக்கும் பாடல்களைக் கொண்டதால் 'அகம்' எனவும் முன்னைய இரண்டு

தொகைகளையும் விட நீண்ட பாடல்களைப் பெற்றிருப்பதால் 'நெடுந்தொகை' எனவும் இது பெயர் பெறும். முதல்; கரு, உரிப்பொருள் மூன்றும் நிறைவுற அமைந்த பாங்கினை உடையவை இவை. வரலாற்றுச் செய்திகளாகிய புறச் செய்தியும் இவற்றில் மிகுதி. அகநானூறு என்பதற்கொப்பப் புறநானூறு எனவும் ஒன்று தொகுக்கப் பெற்றுள்ளதை உன்னுக. இவையெல்லாம் சங்கம் போன்ற அமைப்பு ஒன்றிருந்தே நடைபெற்றிருக்க வேண்டும். "இவ்வமைப்பை நோக்குகையில் பல புலவர்கள் தனித்தனியே இயற்றிய அகப்பொருட் செய்யுட்களைத் தொகுத்து அவற்றை அடியளவில் வகைப்படுத்திய பின் அவற்றைத் தொகுத்தவர்கள் ஒவ்வொன்றில் நானூறு பாக்கள் இருக்கும்படி தம்காலத்துப் புலவர்கள் இயற்றியவற்றையும் சேர்த்து அமைத்தார்கள் என்று கருத இடமுண்டாகிறது" என்று உ.வே. சாமிநாதையர் தம் குறுந்தொகை முன்னுரையில் கூறுதலும் காண்க. பாரதம் பாடிய பெருந்தேவனார் இதற்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை மூன்றிலும் *4* அடி முதல் *31* அடி வரையுள்ள பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ள முறைமையை நோக்கினால் இவை ஒரே சமயத்தில் திட்டமிட்டுத் தொகுக்கப்பட்டவை என்ற உண்மை விளங்கும்.

அகநானூறு தொகுப்பு முறையில் சில குறிக்கத்தக்க செய்திகள் உள. முதல் *120* பாடல்கள் களிற்றியானை நிரை எனவும். அடுத்த *180* பாடல்கள் மணிமிடை பவளம் எனவும், இறுதி *100* பாடல்கள் நித்திலக் கோவை எனவும் அழைக்கப்படுகின்றன. இந்நூலில் ஒற்றைப்பட வருவனவெல்லாம் பாலைத்திணைப் பாடல்கள்; இரண்டும் எட்டும் ஆன பாடல்கள் குறிஞ்சி; *4,14* என வருவன முல்லை; *6,16* என வருவன மருதம்; *10,20* என வருவன நெய்தல். எனவே அகநானூற்றில் *200* பாலைப்பாடல்கள், *80* குறிஞ்சிப் பாடல்கள், *40* முல்லைப்பாடல்கள், *40* மருதப்பாடல்கள், *40* நெய்தற் பாடல்கள் உள என்பது பெறப்படும். முதல் *90* பாடல்கட்கு மட்டும் காணப்படும் பழைய குறிப்புரை ஒன்று இந்நூலுக்கு உண்டு. அகநானூற்றின் முதற் பதிப்பாசிரியர் வே. இராசகோபாலாச்சாரியார் ஆவார். அவர் முதல் *70* பாடல்களுக்கு மட்டும் உரையெழுதியுள்ளார். தஞ்சை நாவலர் ந.மு. வேங்கட சாமி நாட்டாரும் கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளையும் நூல் முழுமைக்கும் உரை விளக்கம் எழுதியுள்ளனர். தலைவியிடம் தோழி பருவ வரவைக் காட்டி, "அதோ உன் கணவரும் திரும்பி விட்டார்!" எனக் கூறி மகிழ்விப்பது கீழ்வரும் பாடலில் இலக்கிய நயத்தோடு அமைந்துள்ளது;

**முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு**
**பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ**
**இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பில்**
**பரலவல் அடைய இரலை தெறிப்ப**
**மலர்ந்த ஞாலம் புலம்பு புறக் கொடுப்பக்**
**கருவி வானம் கதழுறை சிதறிக்**

கார்செய் தன்றே கவின்பெறு கானம்!
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உதுக்காண் தோன்றும்! . . . (4)

தேன் குடிக்கும் வண்டுகள் அஞ்சி ஓடக்கூடாதே என்று மணியின் நாவைக் கட்டித் தேரில் வரும் தலைமகனின் மனவுணர்வு குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் தம் தொல்காப்பிய உரையில் இதன் நயத்தை மிக நுட்பமாக எடுத்துக்காட்டியுள்ளார்.

## ஐங்குறுநூறு

மூன்றடிச்சிற்றெல்லை முதல் ஆறடிப் பேரெல்லை வரையுள்ள பாடல்களைக் கொண்டது. பத்துக்களாகப் பாடித் திணைக்கு நூறு பாடல்கள் என வகுத்துள்ளமை இதன் தனிச்சிறப்பு. பாரதம் பாடிய பெருந்தேவனார் இதற்கும் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். மருத நூறு-ஓரம்போகியார், நெய்தல் நூறு-அம்மூவனார், குறிஞ்சிநூறு-கபிலர், பாலைநூறு-ஓதலாந்தையார், முல்லைநூறு - பேயனார் எனப் பாடியுள்ளனர். ஏதோ பாட்டரங்கத்திற்குப் பாடியதைப் போலத் திட்டமிடும் பாங்கை இது காட்டுகிறதன்றோ?

மருதம் ஓரம் போகி நெய்தல் அம்மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன் - கருதிய
பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே
நூலை ஓது ஐங்குறு நூறு

என்ற தனிப்பாடல் மூலம் இதனைப் பாடியவர்களை நினைவில் வைத்துக் கொள்ளலாம். இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார்; தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை. இதிலிருந்து இத்தொகை சேரநாட்டில் தொகுக்கப்பட்ட தாதல் வேண்டும் எனத் தோன்றுகிறது. பதிற்றுப்பத்து முழுமையும் சேர மன்னர்களைப் பற்றியதாதலின் சேர நாட்டில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். இவையிரண்டும் பத்துக்களாக இருப்பதனால் சேரமன்னர் தொகை நூல்களில் புதுமை புகுத்த முயன்றனர் போலும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆசிரியப்பாவின் சிற்றெல்லை மூன்றடிகளேயாகும். அடிவரையறையாற் குறைந்த சிறிய பாடல்களில் அரிய கருத்துக்களைச் செறிவாகக் கூறும் பாங்கினை இத்தொகையிற் காணலாம்.

நாடும் அரசும் வாழ்க எனத் தாய் வாழ்த்துகிறாள்; தோழியோ தலைவன் மார்பு 'பழனம்' ஆகிப் பலர்க்கும் பொதுவாகாது தலைவிக்கே உரித்தாக வேண்டும் என வாழ்த்துகிறாள்.

**வாழி ஆதன் வாழி அவினி**
**பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக**
**எனவேட்டோளே யாயே; யாமே**
**பூத்த கரும்பிற் காய்த்த நெல்லின்**
**கழனி ஊரன் மார்பு**
**பழனம் ஆகற்க எனவேட் டேமே** *(4)*

பாணன் தலைவனுக்காகப் பரிந்துபேசிப் பொழிந்து தள்ளுகிறான். அதைக்கேட்ட தோழி 'நாண் இலை' எனக் கடிகின்றாள்.

**நாணிலை மன்ற பாண நீயே**
**கோணேர் இலங்குவளை நெகிழ்த்த**
**கானலந் துறைவற்குச் சொல்லுகுப் போயே** *(136)*

இவ்வாறு செறிவுமிக்க சிறிய பாடல்களடங்கிய இந்நூலுக்கு ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரையெழுதியுள்ளார். எருமைப்பத்து, அன்னாய்ப்பத்து, இளவேனிற்பத்து, தெய்யோப்பத்து என இவ்வாறு, இதில் பத்துக்கள் சொல்லாட்சியும் பொருளாட்சியும் கருதிப் பெயரிடப்பட்டுள்ளன. இதன் அடிக்குறிப்புக்கள் பொருத்தமும் விளக்கமும் மிக்கன எனவும் தொன்மையானவை எனவும் அறிஞர் கருதுவர். பத்துக்களாகப் பாடும்போதும் உரித்தன்மையுடன் பாடுவதென்றும் ஒரு பொருள் மேல் பலவடுக்கிப் பாடுவதென்றும் இவ்வாறு பலவுத்திகள் இதிலுள.

### கலித்தொகை

கலிப்பாவால் ஆன *150* பாடல்களைக் கொண்ட தொகை நூல் இது. பரிபாடலால் ஆனது பிறிதொன்று. இவ்விரு பாக்களும் அகப்பொருளைப் பாடுதற்குச் சிறந்த யாப்பு வடிவங்கள் என்பார் தொல்காப்பியர்.

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்**
**உரிய தாகும் என்மனார் புலவர்** *(தொ. 999)*

இதிலிருந்து ஆசிரியத்தினும் சிறப்பாக அகம் பாடுதற்குரியவை இவ்விரு பாக்களுமே என்று அறியப்படும். இவைபிரண்டும் அமைப்பாலும் ஒரு சில உறுப்புக்களாலும் ஒப்புமையுடைய பாக்களாகும்; இரண்டும் இசைத்தன்மை மிக்கன; ஆடலுடன் கூடியன; உரையாடல் கொண்டன; உலக வழக்கைத் தழுவியன; நடப்பியல் சார்ந்தன; புராண மரபு கலந்தன.

'நூற்றைம்பது கலி' என்பது உரையாசிரியர் கூற்று. இதில் கடவுள் வாழ்த்துட்பட நூற்றைம்பது பாடல்களும் இன்றும் கிடைக்கின்றமை நம் தவப்பயனேயாகும். பாலையில் *35*, குறிஞ்சிக்கு *29*, மருதத்தில் *35*, முல்லைக்கு *17*, நெய்தலில் *33*, கடவுள் வாழ்த்து *1* ஆக *150*.

தன் மகள் காதலனுடன் உடன் போக்கிற் சென்று விட்டதால், தேடிச் சென்ற செவிலி வழியிடையே கண்ட முக்கோற் பகவரிடம் "என் மகளும் மற்றொருத்தியின் மகனும் இவ்வழியாகப் போகக் கண்டீர்களா!" என்று கேட்கிறாள். அதற்கு அவர்கள் 'காணேம் அல்லேம், கண்டனம்" என்று கூறி 'சந்தனம் மலையிற் பிறந்தாலும், முத்து கடலிற் பிறந்தாலும், இசை யாழிற் பிறந்தாலும் பயன்படுத்துபவர்க்கே உரியனவாதல்போல நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே' என்று அறிவுரை கூறி வழியனுப்பி வைக்கின்றனர்.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே!

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே!

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே!

தலைவியின் நலம் நுகர்ந்த தலைவன் ஒருவன், பிற்பாடு அவளை எட்டியும் பாராதிருந்தான். இதனைக்கண்ட தோழி அவனிடம் சென்று அறிவுரை கூறி இடித்துரைத்தாள். "பால் உண்டவர் பிறகு அப்பாத்திரத்தை நீக்கி விடுதல் போல, நீயும் நன்னுதல் நலனுண்டு துறத்தல்தகாது" என அவள் பேசத் தொடங்கும்போது அறிவுரைகளை ஒரு மெய்ப்பொருளுணர்ந்த சான்றோர் போலக்கூறுகிறாள்,

தாழைப்
பூ மலர்ந்தவை போலப்புள் அல்கும் துறைவ கேள்!
ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்;
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்;
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை;
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை;
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வெளவல்;
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்; (133)

கலித்தொகைப் பாடல்கள் உணர்ச்சி கொந்தளிப்பன, உள்ளத்தைத் தொடுவன எனலாம். சங்க இலக்கியத்திலிருந்து நீதியிலக்கியம் கிளைத்ததென்பதற்கு இது போன்ற பகுதிகள் சான்று.

முதலிலுள்ள கடவுள் வாழ்த்தையும் இறுதியிலுள்ள நெய்தற்கலியையும் பாடி இந்நூலைத் தொகுத்தவர் நல்லந்துவனாரே என்று நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். நச்சினார்க்கினியர் உரை இந்நூலின் முழுமைக்கும் கிடைப்பது மற்றுமொரு சிறப்பாகும்.

பெருங் கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதன் இளநாகன் மருதம் - அருஞ் சோழன்
நல்லுருத்தி ரன்முல்லை நல்லந்து வன்நெய்தல்
கல்விவலார் கண்ட கலி

என்ற வெண்பா, ஒவ்வொரு திணையையும் பாடியவர்கள் யார்யார் என்பதை விளக்கும். பாலை பாடிய பெருங்கடுங்கோ பாலையையும் கபிலன் குறிஞ்சியையும் மருதன் இளநாகனார் மருதத்தையும் சோழன் நல்லுருத்திரன் முல்லையையும் நல்லந்துவனார் நெய்தலையும் பாடியுள்ளனர். ஒருசிலர் நல்லந்துவனாரே நூல் முழுமையும் பாடியிருக்க வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர். சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் முதன்முதலில் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டார். தாழிசைகளில் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வரும் பகுதிகள் உள்ளத்தைக் கவர்வன. “கற்றறிந்தார் ஏத்தும் கலி” என்பதற்கு முற்றிலும் பொருத்தமுடைய சிறந்த பாடல்களை இதிற் காணலாம்.

## பரிபாடல்

பாடலால் பெயர் பெற்ற இத்தொகையில் *70* பாட்டுக்கள் இருந்திருக்க வேண்டும்.

திருமாற்கு இருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டு காடுகாட்கு ஒன்று - மருவினிய
வையைஇரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்ய பரிபாடல் திறம்

என்ற பழைய வெண்பாவாலும் இதை அறியலாம். திருமால் *-8;* செவ்வேள்-*31;* காளி-*1;* வையை-*26;* மதுரை-*4;* ஆக *70*. ஆனால் இன்று *22* பாடல்களே கிடைக்கின்றன. அவற்றுள் திருமாலுக்குரியவை-*6;* முருகனுக்குரியவை-*8;* வையை பற்றியன *8*. பரிபாடல் என நம்புமாறு உரை நூல்களிற் கண்டவை இரண்டு முழுப்பாடல்கள் உள. அவை திருமால் பற்றியது ஒன்று, வையை பற்றியது ஒன்று. பிறவெல்லாம் துணுக்குகள்.

விறல்மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும்
அறனும் ஆர்வலர்க்கு அருளும் நீ;
திறனிலோர்த் திருத்திய தீதுதீர் கொள்கை
மறனும் மாற்றலர்க்கு அணங்கும் நீ;
அங்கண் வானத்து அணிநிலாத் திகழ்தரும்
திங்களும் தெறுகதிர்க் கனலியும் நீ

என்று திருமாலை வாழ்த்தக் காண்கிறோம். கடுவன் இளவெயினனார் செவ்வேளிடம்.

யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே!

என வேண்டுதல் காணலாம். பக்குவப்பட்ட நல்மனப்பண்பை இது காட்டுகிறது. வையையில் நீராடும் அழகும் காதற்காட்சிகளும் கண் கொள்ளாதவையாகும். ஆற்றில் மெலியவர் துறையோரமாகக் கரையில் நின்று குளிக்க, வலியவர் புனலுள் மூழ்கித் திளைத்து நீராடி மகிழ்கிறார்களாம்; வெள்ளத்தைக் கண்டு அந்தணர் மருள்கிறார்களாம்.

வலியர் அல்லோர் துறைதுறை அயர
மெலியர் அல்லோர் விருந்து புனல் அயர
சாறும் சோறும் நெய்யும் மலரும்
நாறுபு திகழும் யாறு வரலாறு *(6)*

ஒரு துணுக்குப் பாடலில் மதுரை மாநகரைத் தாமரைப் பூவிற்கு ஒப்பிடும் அழகு படித்தும், இன்றைய நகர அமைப்பைப் பார்த்தும் ஒப்பிட்டுச் சுவைத்தற் குரியதாகும்.

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீர்ஊர்; பூவின்
இதழகத்து அனைய தெருவம்; இதழகத்து
அரும் பொகுட்டு அனைத்தே அண்ணல்கோயில்!
தாதின் அனையர் தண்தமிழ்க்குடிகள்
தாதுண் பறவை அனையர் பரிசில் வாழ்நர் (துணுக்கு *8)*

இதற்குப் பரிமேலழகர் உரை வகுத்தார். பரிபாடல் காமங் கண்ணிய நிலைமைத்தாகும் எனவும் 'இது பா என்னும் இயல் நெறியின்றிப் பொதுவாய் நிற்கும்' எனவும் தொல்காப்பியர் கூறுவர். 'இன்பத்தையே பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்து, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு முதலியவற்றைப்பற்றி இப்பாட்டு வருமெனப் பேராசிரியரும், 'தெய்வ வாழ்த்து உட்படக் காமப்பொருள் குறித்து உலகியலே பற்றிவரு' மென நச்சினார்க்கினியரும் கூறுவர். இப்பாடல்களின் அடியில் துறை விளக்கம், பாடலை எழுதிய ஆசிரியர் பெயர், இசை வகுத்தவர் பெயர், பண் ஆகிய குறிப்புக்கள் உள்ளன. பாலை யாழ், நோதிறம், காந்தாரம் முதலிய பண் வகைகளை இதனாலறிகிறோம். இந்நூல் தேவாரம் போலவே பண்முறையால் தொகுக்கப்பட்டதுடன் உரிய பண்ணுடன் பாடப்பட்டும் வந்துளது எனத் தெரிகிறது. மதுரையைச் சுற்றியுள்ள சமய, சமூகப் பழக்கவழக்கச்

சிறப்புக்களை இந்நூலிற் காணலாம். மதுரை, வையை, திருமருதந்துறை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ் சோலைமலை போல்வன இதில் பாடுபொருளாகின்றன. வையை பற்றிய பாடல்களை அகமென்றும் ஏனைய கடவுள் வாழ்த்துக்களைப் புறமென்றும் கருதுவர்.

## புறநானூறு

அகநானூறுபோல, இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டதாதலின் புறநானூறு ஆயிற்று, புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு எனவும் இது அழைக்கப்படுவதுண்டு. பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துடன் *400* பாடல்கள் இதில் காணப்படுகின்றன. தமிழர் வரலாற்றுக் களஞ்சியமாக, பழந்தமிழ் வேந்தர்கள், குறுநில மன்னர்களின் வரலாற்றை அறிவிக்கும் ஆவணமாக நாம் இதைக் கருதலாம். இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுளது. அது முதல் *266* பாடல்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. இதன் திணை துறைப்பகுப்புக்கள் பிற்காலத்தன என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை காஞ்சி, பாடாண் முதலிய புறத்திணை பலவற்றுக்கும் எடுத்துக்காட்டான பாடல்கள் இதிலுள. மன்னர் புலவர் உறவு, மக்கள் மன்னர் உறவு, புலவர் புலவர் உறவு யாவும் இந்நூலால் அறியத்தக்கன. பேகன் மனைவி கண்ணகி பற்றியும் நக்கண்ணையார் பற்றியும் அரசியற் புலவர் கோவூர்கிழார் பற்றியும் இந்நூல் பலசெய்திகளை அறிவிக்கின்றது. பாரி கபிலர் நட்பு, அதியன் ஔவை நட்பு, கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பு என்றினையனவும் உலகம் அறியத்தக்க பற்பல அரும்பொருட் செய்திகளும் தமிழ் மக்களின் பழக்கவழக்கங்களைப் பற்றிய பல உண்மைகளுமாக இந்நூலில் விரவிக் கிடக்கும் சமுதாயச் செய்திகள் கணக்கற்றனவாகும்.

**அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ**
**நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை**
**ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்**
**பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!** *(2)*

என்று முரஞ்சியூர் முடிநாகராயர் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனைப் பாடுகிறார்.

**நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக** *(66)*

என்பதனால் கரிகாற் பெருவளத்தான் முன்னோர் கப்பற் பயணம் செய்தமை அறியலாம். சங்க காலத்தில் மன்னர்களுக்கும் அறிவுரை சொல்லி வழிநடத்தும் பாங்கில் புலவர்கள் விளங்கினர். அவர்கள் அம் மன்னர்களின் வீரத்தையும் ஈரத்தையும் பாடிப் புகழை நிலைநிறுத்தினர். 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்; மெய் கூறுவல்' என்றாற்போல என்றும் உண்மையையே அவர்கள் பாடினர்.

நாடா கொன்றோ; காடா கொன்றோ
அவலா கொன்றோ; மிசையா கொன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே (187)

என ஔவையார், நாட்டின் சிறப்பு ஆங்கு வாழும் மக்களால் ஏற்படுவதே என வற்புறுத்துகிறார்.

பொருள்மொழிக் காஞ்சித் துறையில் நக்கீரனார் பாடிய புறப்பாடல் ஒன்று ஈகையின் சிறப்பைப் புதிய சிந்தனையோடு வற்புறுத்துகிறது. ஒருவர் எவ்வளவு தேடினாலும் அவருடைய அடிப்படைத் தேவைகளுக் கென்று பயன்படுவன ஓரளவே. பிறவெல்லாம் அவருக்கு எவ்வாறு பயன்படும்? செல்வத்தைப் பகிர்ந்து கொடுத்து இன்பம் பெறலே அதனாற் பெறக் கூடிய பயனாகும்.

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே (189)

இவ்வாறு நிலைத்த உண்மைகளைக் கூறுவனவும் அன்றைய சமுதாயத்தைக் கண்ணாடி போல் காட்டுவனவுமாகிய பாடல்களைக் கொண்ட புறநானூறு தமிழர்க்குக் கிடைத்த பெருங்கருவூலம் எனில் மிகையாகாது.

## பதிற்றுப்பத்து

புறநானூறு போல மூவேந்தர்களையும் குறுநில மன்னர்களையும் பொதுவாகப் பாடாமல் சேர மன்னர்களைப் பற்றியே புகழ்ந்து பாடிய தொகை நூல் இது. ஒவ்வொரு மன்னனைப் பற்றியும் பத்துப்பாடல்கள் வீதம் பத்துச் சேர மன்னர்களைப் பற்றி வெவ்வேறு புலவர்கள் பாடியிருப்பது ஒரு தனிச்சிறப்பாகும். முதற்பத்தும் இறுதிப் பத்தும் இன்று கிடைக்கப்பெற்றில. அவை கறையானுக்கு இரையாகிவிட்டன. பொதுவாகக் கறையான் மேலிருந்து கீழ் நோக்கியும் கீழிருந்து மேல் நோக்கியும் அரித்துவரும்.அதன் மேலிருந்த முதற்பத்தையும் இறுதியிலிருந்த பத்தாம் பத்தையும் தின்றுவிட்ட கறையான்களும் தமிழ்ச்சுவை அறிந்தன போலும்! இதற்கும் பழைய உரை ஒன்று உண்டு. பாடல்களின் முடிவில் துறை, வண்ணம், தூக்கு (இசை), பாடலின் பெயர் ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும்

அதில்வரும் சிறப்புடைய தொடரொன்றால் பெயர் இடுவது குறிப்பிடத்தக்கதாகும். நாலாம் பத்து அந்தாதித் தொடையால் ஆகியுளதும் ஒரு தனிச்சிறப்பாகும். ஐங்குறுநூற்றில் பதினெட்டாம் பத்து இதுபோல அந்தாதித் தொடையிலானது. தொல்காப்பியர் குறிப்பிடாத தொடை நலமாகும் இது. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் ஒன்றுண்டு. பத்தின் வரலாற்றைக் கூறுவது பதிகமாயிற்று. அது பாடினோர் பெயர், பத்துச் செய்யுட்களின் பெயர், பாடிய புலவர் பெற்ற பரிசில், அரசர் பெயர் அவர் ஆண்டகால அளவு போல்வனவற்றைத் தெரிவிக்கிறது. பிற்காலத்தில் கல்வெட்டுக்களில் இடம்பெறும் மெய்க்கீர்த்திகளின் போக்கில் இது அமைந்துள்ளது. பத்துக்களும் பாடிய புலவர்களும் பாடப்பெற்ற வேந்தர்களும் பற்றிய விவரம் வருமாறு :

| | |
|---|---|
| இரண்டாம் பத்து | - குமட்டூர்க்கண்ணனார் |
| | - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் |
| மூன்றாம்பத்து | - பாலைக் கௌதமனார் |
| | - பல்யானைச் செல்கெழு குட்டுவன் |
| நான்காம் பத்து | - காப்பியாற்றுக் காப்பியனார் |
| | - களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் |
| ஐந்தாம் பத்து | - பரணர் |
| | - கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் |
| ஆறாம் பத்து | - காக்கை பாடினியார் |
| | - ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் |
| ஏழாம்பத்து | - கபிலர் |
| | - செல்வக்கடுங்கோ வாழியாதன் |
| எட்டாம் பத்து | - அரிசில்கிழார் |
| | - தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை |
| ஒன்பதாம் பத்து | - பெருங்குன்றூர் கிழார் |
| | - இளஞ் சேரலிரும்பொறை |

மன்னர்களைத் தனித்தனிப் பாடலாகப் பாடி மகிழ்விக்காமல், பத்துப் பத்தாகப் பாடும் மரபு தோன்றிய போதே இலக்கிய வகையாக்கம் கிளைக்கத் தொடங்கியது. பத்துப் பாடலுக்கும் செய்தி வேண்டுமே என்ற நிலைவந்துற்ற போது வருணனைகள் மிகுதியாயின.

சேர மன்னன் கடற்பகைவர்களை வென்று, அவர்களை அழித்தவன் என்பதால் அவனுக்கு முருகன் உவமையாகிறான்.

**வரை மருள் புணரி வான் பிசிர் உடைய**
**வளி பாய்ந்து அட்ட துளங்கிருங் கமஞ்சூல்**
**நனியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி**
**அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்**

சூருடை முழுமுதல் தடிந்த பேரிசை
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந்தாங்கு
செவ்வாய் எஃகம் விலங்குநர் அறுப்ப
அருநிறம் திறந்த புண்ணுமிழ் குருதியின்
மணிநிற இருங்கழி நீர் நிறம் பெயர்ந்து
மனாலக் கலவை போல, அரண்கொன்று *(11)*

என்பதனால் இமய வரம்பனின் வீரத்தைக் குமட்டூர்க் கண்ணனார் மிகவும் சிறப்பித்துக் கூறுகின்றமை போதரும். இதிலுள்ள 'புண்ணுமிழ் குருதி' என்ற தொடரின் அருமை கருதி, அதனையே பாட்டின் பெயராகக் குறிப்பிட்டுள்ளனர். நூலுக்குப் பெயரிடுதல் போல், நாம் இன்று பாட்டுக்குத் தலைப்பிடுதல் போல் இப்பாட்டுக்கெல்லாம் பெயர் சூட்டப்பட்டுள்ளமை அன்றைய தமிழறிஞர்களின் திறனாய்வுத் திறத்தை விளக்குகிறது.

இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் வாழ்த்தும் பொழுது,

நின்நாள் திங்கள் அனைய ஆக! திங்கள்
யாண்டோர் அனைய ஆக! யாண்டே
ஊழி அனைய ஆக! ஊழி
வெள்ள வரம்பின ஆக!

எனக் கற்பனை நயம்படக் கூறுவது புதுமையாக உளது. இங்ஙனம் புறநானூற்றுடன் பதிற்றுப்பத்தும் கிடைத்திருப்பது புறப்பாட்டுக்களை மதிப்பிடப் பெரிதும் உதவுவதாகும். ஐங்குறுநூற்றிற் போலவே பதிற்றுப் பத்திற்கும் வரையப்பட்டுள்ள அடிக்குறிப்புத் தொன்மையுடையதாகத் தோன்றுகிறது.

இதில் சேரநாட்டு வருணனை மிகுதி. சேரமன்னர்களின் ஆற்றலையும், வீரத்தையும், இன்பச் சிறப்பையும் புகழ்ந்து வாழ்த்துவதையே நோக்கமாகக் கொண்டெழுந்தவை இவை. இவை வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டவையே. ஆனாலும் இவை அனைத்துப் பாடல்களும் ஒரு நோக்கும் போக்கும் உடையவையாகக் காணப்படுகின்றன. மரபு ஆட்சிமிக்க காலத்துப் பாடியவை அவ்வாறு தான் அமையும் என்பர்.

## பத்துப்பாட்டு

### திருமுருகாற்றுப்படை

நக்கீரர் பாடிய ஆசிரியப்பாவானமைந்த *317* அடிகளைக் கொண்ட இந்நெடும்பாட்டு முருகனின் ஆற்றலையும் அருளையும் சிறப்பித்துப் பேசுகிறது. இது ஏனைய ஆற்றுப்படைகளிலிருந்து சிற்சில கூறுகளில் வேறுபட்டுள்ளது. அவற்றுள் முதன்மையானது, பிற ஆற்றுப்படைகள் எல்லாம்

ஆற்றுப்படுத்தப்படுபவர் பெயரால் அமைந்திருக்க, இது மட்டும் பாட்டுடைத் தலைவர் பெயரால் அமைந்துள்ளது. இதனுள் முறையே திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்ற முருகனின் ஆறுபடை வீடுகளும், அங்கு முருகன் செயல்களும் அவனது பெருமைகளும் விரித்துக் கூறப்படுகின்றன.

இது சைவத்திருமுறைகளுள் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. சைவர்கள் நாள்தோறும் ஓதியுணரும் நூல் இது. இதன் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள வெண்பாக்களுள் ஒன்று இவ்வுண்மையை உணர்த்தும்.

**நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்**
**தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முற்கோல**
**மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்**
**தானினைத்த எல்லாம் தரும்**

முருகாற்றுப்படை என்ற தொடருக்கு, நச்சினார்க்கினியர் "வீடு பெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடு பெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தது" என விளக்கம் எழுதியுள்ளார். சங்க காலத்தில் ஒரு சமுதாய வழக்கு உண்டு. வெறியாட்டெடுப்போர் 'முருகாற்றுப் படுத்தல்' உண்டு. "முருகாற்றுப்படுத்த உருகெழு நடுநாள்" *(அகம்22)* என அது கூறப்படும். முருகனைத் துன்பப்படுவோரிடத்தே ஆற்றுப்படுத்தி அவரைக் காக்குமாறு வேண்டுதல் அதன் பொருளாகும். அதன் அடிப்படையில் முகிழ்த்ததே இத்திருமுருகாற்றுப்படை என்ற நெடும்பாட்டு. பெயரளவில்தான் இவ்வொற்றுமை. இந்நூலில் இரவலன்தான் முருகனிடம் ஆற்றுப்படுத்தப்படுகிறான்.

**உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்கு**
**ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி**

என்பது, மயில்மீது வரும் முருகனைக் காலைப்பொழுதில் வைத்துக் காட்டுகிறது.

முதற்பகுதியாகிய திருப்பரங்குன்றப் பகுதியில் முருகனின் திருவுருவச் சிறப்பும் சூராமகளிர் ஆடலும் சூரசம்மாரமும் முருகனிடம் செல்வார் பெறும் பரிசிலும் பரங்குன்றச்சிறப்பும் கூறப்படுகின்றன. திருச்சீரலைவாய்ப் பகுதியில் முருகவேளின் யானையூர்தி, அதில் வலம் வரும் முருகனின் ஆறுமுகம் பன்னிருகைகளின் செயல்கள், திருச்செந்தூர்ச் சிறப்பு ஆகியன பேசப்படுகின்றன. மூன்றாவதான திருவாவினன்குடிப் பகுதியில் முனிவர்களும் தேவர்களும் முருகனைப் பரவுதல் கூறப்படுகிறது. அடுத்த திருவேரகப்பகுதி அந்தணர் முருகனை வழிபடுமாற்றினைச் சுட்டுகிறது.

ஐந்தாவதாகிய குன்றுதோறாடலில் குன்றக்குரவை இடம் பெறுகிறது. இறுதியான பழமுதிர்சோலைப் பகுதியில் வெறியாட்டிழைத்தல், முருகனை ஏத்தி இசைத்தல், முருகன் அருள்செய்து பரிசில் நல்குதல், அருவியின் இயல்பு போல்வன விவரிக்கப்படுகின்றன.

## பொருநராற்றுப்படை

சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார் பாடிய இந்நெடும்பாட்டு *248* அடிகளைக் கொண்டது. நேரிசையாசிரியமாகிய இதில் வஞ்சியடிகளும் விரவி வந்துள்ளன. பரிசில் பெற விழைந்த பொருநன் ஒருவனைப் பரிசில் பெற்றுவந்த பொருநன் ஆற்றுப்படுத்துவதாக இதன் பொருள் அமைந்துள்ளது. பொருநர் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப் பலரென்பர். இது போர்க்களம் பாடும் பொருநரால் பாடப்பட்டதாகும். ஒருவரைப் போல் வேடமிட்டுப் பாடுபவரைப் பொருநர் என்பர். இப்பொருநர் கையில் தடாரிப்பறை வைத்திருந்தனர்.

ஓர் ஊரில் விழா முடிந்ததும் பொருநன் வேறோர் ஊருக்குப் புறப்படுகிறான். அவன் கையில் வைத்திருந்த பாலையாழின் ஒன்பது உறுப்புக்கள் சித்திரம் போல் தீட்டிக் காட்டப்படுகின்றன. மணங்கமழ் மாதரை மண்ணி (ஒப்பனை செய்தல்) அன்ன யாழ் என அதன் அழகு கூறப்பட்டுள்ளது. அதன் இசையைக் கேட்டால் ஆறலை கள்வர்களும், தங்கள் படைக்கலன்களைக் கீழே போட்டு விட்டு மெய்ம் மறந்து நிற்பார்களாம் *:*

**ஆறலை கள்வர் படைவிட அருளின்**
**மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை** *(21-22)*

பொருநனுடன் வரும் பாடினியின் அழகு தலைமுடி முதல் பாதம் வரை, பத்தொன்பது உறுப்புக்கள் கேசாதி பாதமாக வருணிக்கப்படுகின்றன. அரசனின் விருந்தோம்பும் பண்பு இந்நூலில் மிகவும் சிறப்பாகக் கூறப்படுகிறது. கரிகால் வளவனின் இளமை, 'தாய்வயிற்றிலிருந்து தாயம் எய்தியமை' வெண்ணிப் போர் வெற்றி என்ற வரலாற்றுச் செய்திகள் வரிசையாகக் கூறப்படுகின்றன. அவனுடைய வீரச்சிறப்பும் கொடைச் சிறப்பும் மட்டுமன்றி நாட்டுச் சிறப்பும் காவிரியாற்றின் சிறப்பும் நன்கு புனையப்பட்டுள்ளன.

**முதியோர்**
**அவைபுகு பொழுதில் தம்பகை முரண் செலவும்** *(187)*

என, நரை முடித்து முறை செய்த வரலாறு கூறப்படுகிறது. சோழ மன்னனின் நானிலவளம் திணை மயக்கமாக இப்பாடலில் கூறப்படும் அழகு கருதத்தக்கது.

## சிறுபாணாற்றுப்படை

இவ்வாசிரிய நெடும்பாட்டு *269* அடிகளைக் கொண்டது. ஓய்மான் நாட்டு நல்லியக்கோடனை இடைகழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. நல்லியக்கோடன் குறுநில மன்னனேயாயினும் அவன் மூவேந்தர்களுக்கும் கடையெழு வள்ளல்களுக்கும் நிகரானவன் என்பது இதில் மிக நயமாகக் கூறப்பட்டுள்ளது. சிறுபாணர், பெரும்பாணர், மண்டைப்பாணர் எனப் பாணர் பல வகைப்படுவர். அவர்களுள் 'சீறியாழ் இடவயின் தழுவிய' *(35)* இவர் - சீறியாழைப் பயன்படுத்தும் சிறுபாணர் ஆவர். அதனாலும், ஏனைய பெரும்பாணாற்றுப் படையை விட இது அடி அளவாற் சிறியதாகையாலும் இதற்குச் சிறுபாணாற்றுப் படை எனப் பெயர் ஏற்பட்டது. பெரும்பாணாற்றுப் படையில் 'பேரியாழ் முறையுளிக் கழிப்பி' *(462)* என வருவதால் அவர்கள் பேரியாழைப் பயன்படுத்திய பெரும்பாணர் ஆவர். எனவே பாணராலும் பாட்டு அடி அளவாலும் அப்பாடல் பெரும்பாணாற்றுப் படை எனப்பட்டது.

இப்பாடலில் வரும் விறலியர் பற்றிய கேசாதிபாத வருணனை சங்கிலித் தொடர் போன்ற தொடைநயமுடையதாகும். விறலியரின் பத்து உறுப்புகள் புனையப்படும் அழகுக்கு ஒரு சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

**ஐதுவீழ் இருபெயல் அழகு கொண்டருளி**
**நெய் கனிந்து இருளிய கதுப்பின்; கதுப்பென**
**மணிவயிற் கலாபம் பரப்பிப் பலருடன்**
**மயில் மயிற் குளிக்கும் சாயல்; சாஅய்**
**உயங்கு நாய் நாவின் நல்லெழில் அசைஇ**
**வயங்கிழை உலறிய அடியின்; அடிதொடர்ந்து** *(13-18)*

மழை மேகம் போல் எண்ணெய் தடவிக்கனிந்து இருண்ட கூந்தல்; கூந்தலைப் போன்று கலாபம் விரிக்கும் மயிலினிடத்தே சென்று, ஒளிக்கும் சாயல்; ஓடியிளைத்த நாயினது நாப்போன்ற அழகு புலர்ந்து வாடிய அடி; அடியுடன் நிலந்தோயும் யானையது துதிக்கை போன்ற தொடை.

இதில் மூவேந்தர் பெருமையும் அன்னாரின் தலைநகரச் சிறப்பும் பேசப்படுகின்றன.

பேகன், பாரி, காரி, ஆய், அதியன், நள்ளி, ஓரி என 'எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்' *(113)* பற்றி இப்பாடலிற் பேசப்படுவதே 'கடையெழு வள்ளல்கள்' என்ற சிறப்புக் கூற்றுக்கு இடமளித்திருக்க வேண்டும்.

இயற்கை வருணனை எடுத்தோதப்படும் அழகும் இதில் தனிச் சிறப்பானது.

**அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்**
**தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்**
**கடுஞ் சூல் முண்டகம் கதிர்மணி கழாஅலவும்**
**நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்** *(146-149)*

பைந்தலை அவரை பவழம் கோப்பவும்
கருநனைக் காயா கணமயில் அவிழவும்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும் *(164-169)*

தாழை, செருத்தி, முண்டகம், (கடல்முள்ளி), புன்னை, அவரை, காயா, முசுண்டை, காந்தள் ஆகியன அழகழகாகப் பூத்தன என்று கூறவேண்டும். ஆனால் நத்தத்தனார் தாழை அன்னத்தைப் பூக்கிறது என்கின்றார். தாழம்பூ அன்னப் பறவைபோல் உருக்காட்சி நல்குவது இவ்வாறு உரைக்கப்படுகிறது. அதுபோலவே செருந்தி பொன்னை மருட்டுகிறது. முண்டகம் கருமணியைப் பெறுகிறது. புன்னை முத்துக்களை எடுத்து வைக்கிறது; அவரை பவழத்தைக் கொடியில் கோக்கிறது; காயா மயிலை அவிழ்த்து விடுகிறது; முசுண்டை கொட்டமாக மாறுகிறது; காந்தள் கைவிரலாகவே பூக்கிறது.

## பெரும்பாணாற்றுப்படை

இஃது *500* அடிகளைக் கொண்ட ஆசிரிய நெடும்பாட்டு இதனைத் தொண்டைமான் இளந்திரையன் மீது கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியுள்ளார். உருத்திரன் மகன் கண்ணனார் ஐந்து நிலமக்களின் வாழ்வையும் இதில் நன்கு புனைந்துள்ளார். 'பாணாறு' என்ற பெயரும் இந்நூலுக்கு உண்டு.

உப்புவணிகர் நெடிய வழிகளில் செல்லுதலும், வணிகச் சாத்துக்கள் பொதி சுமக்கும் கழுதைக் கூட்டத்துடன் உல்குடைப் பெருவழிகளில் போய் வருதலும் போன்ற பல செய்திகளை நாம் இப்பாடலிற் காணலாம். தொல்காப்பியர் தனி நிலம் இல்லை எனத் தெளிவாகக் கூறிய பாலைநிலத்தில் எயினர்கள் வாழும் இயல்பை இவ்வாசிரியர் விரிவாகக் கூறுகிறார். ஈத்திலையும் ஊகம் புல்லும் வேய்ந்த எயினர் குடியிருப்புகளை 'ஈத்திலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை' *(88)* என்றும் 'ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பின்' *(122)* என்றும் கூறுகிறார். உழவர் தம் குடியிருப்புக்களைக் 'கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்' *(191)* எனவும் 'புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்' *(225)* எனவும் வைக்கோல் வேய்ந்த தன்மையைச் சுட்டிக்காட்டுகிறார். இங்ஙனம் ஆங்காங்கு நில இயல்பிற்கேற்பக் கிடைக்கும் பொருள்களை வேய்ந்திருப்பதாகக் குடிசைகளைக் கூறும் அழகு நுட்பமான சித்திரமாகும். அந்தணர் வீடு 'செழுங்கன்று யாத்த சிறுதாட்பந்தர், பைஞ்சேறு மெழுகிய படிவ நல்நகர்' *(297-98)* என்று கூறப்படுகிறது. பட்டினக் கரையிலுள்ள செல்வவள வீடுகள் 'முட்டில், பைங்கொடி நுடங்கும் பலர் புகுவாயில்' *(338)* எனவும் 'விண்தோய் மாடத்து விளங்கு சுவர் உடுத்த நல்நகர்' *(369)* எனவும் புகழப்படுகின்றன. குடிசைகளையும் மாட மாளிகைகளையும் காட்டும் ஓவியமாக விளங்குகிறது பெரும்பாணாற்றுப்படை.

மோர்விற்கும் ஆய்ச்சி, நெய்க்குக் கிடைக்கும் விலையைப் பொன்னாகப் பெறவும் விரும்ப மாட்டாளாம். எருமைக் கன்றுகளை வாங்கவே விரும்புவாளாம்.

நாள்மோர் மாறும் நல்மா மேனி
சிறுகுழை துயல்வரும் காதின் பணைத்தோள்
குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்
அளைவிலை உணவின் கிளையுடன் அருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம் *(160-165)*

அந்தணர் வீட்டில் கிடைக்கும் உணவைப்பற்றிப் பெரும்பாண் இவ்வாறு பேசுகிறது : கருடஞ் சம்பா அரிசிச் சோறு, நறுமணமுள்ள மோர், மாதுளங்காய்ப் பொறியல் *(மிளகு, கருவேப்பிலை சேர்த்தது)*, மாவடு ஊறுகாய் யாவும் அங்கே கிடைக்குமாம் *(அடி : 297-301)*.

இங்ஙனம் மன்னனுக்குச் சிறிதளவு இடமும் மக்களுக்குப் பேரிடமும் நல்கும் பெரும்பாணாற்றுப் படையைச் 'சமுதாயப் பாட்டு' எனலாம்.

## மலைபடுகடாம் அல்லது கூத்தராற்றுப்படை

பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் - நன்னனை இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் *583* அடிகளாலாகிய, ஆசிரிய நெடும்பாட்டாற் பாடியது. ஆற்றுப்படைகளுள் இதுவே பெரியபாட்டு. 'கண்ணுளர் ஒக்கல் தலைவ'னாகிய கூத்தனைச் சுற்றத்தொடு திரும்பும் கூத்தனொருவன் ஆற்றுப்படுத்தலால் கூத்தராற்றுப் படையான இந்நூல், மலைபடுகடாம் எனக்காரணக் குறியும்பெற்றது. மதங்கொண்ட யானை முழங்குவதுபோல், மலையில்கேட்கும் ஓசைகளையெல்லாம் *56* அடிகளில் தொகுத்துக் கூறி, 'மலைபடு கடாஅம் மாதிரத்து இயம்ப' *(348)* என வருவதால் இப்பாட்டு அப்பெயர்க்கு உரித்தாயிற்று.

கூத்தர் பலவகை வாத்தியங்களுடன் செல்லுதல், பேரியாழின் வருணனை, நன்னனின் பண்புநலன் ஆகியன முதலிற் கூறப்படுகின்றன. கூத்தன் தான் செல்லும் மலைவழி பற்றியும் நன்னன் பற்றியும் முதலில் தொகுத்துச் சொல்லிவிட்டுப் பிறகு விரித்துப் பேசுவது ஒரு புதுமையான செய்தியாகும். வழியின் வளம், விருந்து, வழியின் அருமைகள், காரியுண்டிக் கடவுளாகிய சிவனைத் தொழுது செல்லுதல், வழிபற்றிய எச்சரிக்கைகள், மலையில் தோன்றும் பல்வேறு ஓசைகள், அரிய வழியிற் செல்லும் முறை, புதியவர்களுக்காகப் புல்லை முடிந்து கொண்டே போகும் முறை, மலைவாழ் மக்கள் உபசரித்தல், நன்னனது மூதூரை அடைதல், அவனது கொடைச் சிறப்பு ஆகியன நிரலே இப்பாட்டிற் கூறப்படுகின்றன.

## முல்லைப்பாட்டு

பத்துப்பாட்டுக்களிலும் மிகச்சிறிய பாட்டாகிய முல்லைப்பாட்டும் மிகப் பெரிய பாட்டாகிய மதுரைக் காஞ்சியும் அடுத்தடுத்து இடையில் வைக்கப் பட்டுள்ளன. முன்னது *103* அடிகளாலாகிய ஆசிரியப்பாட்டு; பின்னது *782* அடிகளாலாகி, இடையிடையே வஞ்சியடி விரவிய ஆசிரியப்பாட்டு.

முல்லைப்பாட்டு அடியளவில் சிறியதே தவிர, சுவையில் மிக நுட்பமானது. முதல் *23* அடிகளில் தலைவியின் பூப்போன்ற உண்கண் புலம்பு முத்துறைக்கும் பிரிவுத் துயரைக் காண்கிறோம். பாசறையில் தலைவனிருப்பை அடுத்த *55* அடிகள் சித்திரம் தீட்டுகின்றன.

இம் மன்னவன் ‘ஒருகை பள்ளி ஒற்றி ஒருகை முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்து’ இருக்கும் காட்சி அவனுடைய கடமையுணர்ச்சியைச் சுட்டுகிறது.

அடுத்துப் பத்து அடிகளில் தலைவியின் அவலநிலை சுட்டப்படுகிறது.

**நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு**
**நீடுநினைந்தாற்றியும் ஒடுவளை திருத்தியும்** *(81-82)*

கிடக்கும் தலைவியின் ‘அஞ்செவி நிறைய ஆலின’ எனக் கூறி எவை ஆலின என்ற கேள்வியை நம் நெஞ்சில் எழுப்புகிறார் ஆசிரியர். மீண்டும் பாட்டு முடியும் வரை *23* அடிகளில் தலைவன் நிலை கூறப்படுக் கார் காலத்திற்குப் பிறகு கூதிர் காலத்தில் அவன் திரும்புவதும் அங்ஙனம் அவன் திரும்பும் போது அவனது தேரில் பூட்டிய குதிரைகளின் கழுத்து மணிகளே அவ்வாறொலித்தன என்பதும் உணர்த்தப்படுகின்றன.

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது இப்பாட்டு. ‘நெஞ்சாற்றுப்படுத்த’ என்ற தொடரை வைத்துப்போலும், இதனை ‘நெஞ்சாற்றுப் படை’ என்பாரும் உளர்.

## மதுரைக் காஞ்சி

புறத்தில் நிலையாமை உணர்த்தும் காஞ்சித் திணை சார்ந்த இப்பாடல் *782* அடிகளைக்கொண்ட, வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப்பாவாகும். அறிஞர் மு.வ. அவர்கள் தம் தமிழ் இலக்கிய வரலாற்றில். ‘இவ்வாறு *354* அடிகளில் மதுரை நகரம் சுற்றிக்காட்டப்படுகிறது. ஒருவர் ஒருநாள் காலையில் தொடங்கி மறுநாள் விடியல் வரையில் நகரத்தைச் சுற்றிவந்து கண்டவற்றை முறைப்படக் கூறுவது போல் வருணனை அமைந்துள்ளது” என்கிறார்.

பாண்டியர் பெருமை, அவர்களது நாட்டுவளம், போர் வெற்றி முதலியன முதலிற் கூறப்படுகின்றன. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார், ‘இங்ஙனம் பாராட்டிப்பாடி. அவனுக்கு அறிவுரை கூறத்தொடங்குகிறார். உலகத்தைச் சிறப்புற ஆண்டு,

மறைந்த மன்னர்கள் பலர் என்கிறார். "முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசாம்பலாவர்'' என்னும் பழமொழிப்படி, நிலையாமையை அவனுக்கு உணர்த்துகிறார்.

படுகண் முரசம் காலை இயம்ப
வெடிபடக் கடந்து வேண்டுபுலத்து இறுத்த
பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்
கரைபொரு திரங்கும் கனை யிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே *(232-237)*

மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலவளமும், மக்கள் வாழ்வும் இதில் விரித்துரைக்கப்படுகின்றன. பிற்பாடு மதுரை மாநகரத்தின் அமைப்பையும் சிறப்பையும் கூறத்தொடங்குகிறார். நாட்டின் நடுவண் விளங்கும் மதுரைமாநகரில் பெரும்பாணர் வாழும் இருக்கை பற்றியும் கோட்டை கொத்தளம் பற்றியும் கொடிகள் படைகள் பற்றியும் வாணிகம் பற்றியும் திருவிழாக்கள் பற்றியும் பல்வகைப் பள்ளிகள் பற்றியும் நாற்பெருங்குழு, அந்தி வாணிகம், பரத்தையர் வாழ்க்கை, இரவுக்கால நிலைகள், விடியற்கால நிகழ்ச்சிகள் ஆகியன பற்றியும் கூறப்படுகின்றன. மன்னனது கொடையும் அவனைப் புலவர் வாழ்த்துவதும் முடிவாக இடம் பெறுகின்றன.

பொற்பு விளங்கு புகழ் அவை நிற்புகழ்ந்து ஏத்த
இலங்கு இழை மகளிர் பொலங் கலத்து ஏந்தி
மணங் கமழ் தேறல் மடுப்ப, நாளும்
மகிழ்ந்தினிது உறைமதி பெரும!
வரைந்துநீ பெற்ற நல்லூழியையே! *(778-782)*

மதுரை மாநகரத்தைப் பாட்டின் நடுவண் பகுதியில் வைத்து நீளப் புனையும் இப்பாடலை 'மாநகர்ப்பாட்டு' என்றே சுட்டலாம். பெரும் பாணாற்றுப்படை நாட்டினை மட்டும் புனைகிறது. இப்பாட்டோ, தலைநகரை மிகச் சிறப்பாகப் புனைகிறது. மேலும் நிலையாமையை உணர்த்துவதில் ஒரு வேறுபாடு காண்க: 'தேறல் உண்டு மகிழ்ந்து வாழ்க!' என்பதால், துறவையோ காட்டிற் சென்று செய்யும் கடுந்தவத்தையோ வற்புறுத்தாத இப்பாட்டு வைதிக, சமண, பௌத்த மதக் கருத்துகளின் தாக்கத்திற்கு உட்படாதது எனலாம்.

## நெடுநல்வாடை

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் முற்கூறிய பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய பாடல்.

இது *188* அடிகள் கொண்ட அகவற்பாவால் ஆனது. அகத்திணைச் செய்திகளே இதில் இடம்பெறுவன. கூதிர் கால வருணனை,

முழுவலிமாக்களாகிய மிலேச்சர் (யவனர்) நகரைச் சுற்றிக் காவல் செய்தல், மாலைக் காலத்தில் மகளிர் வழிபாடு போல்வன இப்பாட்டின் தொடக்கமாகும். அரண்மனை வாயில், முற்றம், அந்தப்புரம், தந்தக்கட்டில் போல்வன சிற்ப நுட்பத்துடன் விளக்கப் படுதலால், இதனைச் சிற்பப்பாட்டு என்று கூறலாம். புனையா ஓவியம் அனைய தேவியின் அவல நிலையும் வேந்தனின் பாசறைத் தொழிலும் குறிப்பிடத்தக்கன.

இப்பாடலில் 'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்' என அடையாள மாலை கூறப்படுதலால் இது அகப்பாட்டு மரபில் வழுவிப் புறப்பாட்டு ஆயிற்று என்பர். ஆயினும் இக்கால ஆய்வாளர் இதனை அகப்பாட்டு என்றே ஏற்கின்றனர்.

இங்ஙனம் முல்லைத் திணை சார்ந்த இந்நெடும்பாட்டு மிகத் திறம்படப் புனையப்பட்டுள்ளது.

## குறிஞ்சிப்பாட்டு

ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடிய இவ்வாசிரிய நெடும்பாட்டு *261* அடிகள் கொண்டது. இங்கு தமிழ் அறிவித்தல் என்பது தமிழர்க்கேயுரிய அகத்திணைப் பண்பாட்டை உணர்த்துவதாகிறது. முழுக்க முழுக்கக் குறிஞ்சிக்குரிய முதல் கரு உரிப் பொருள்களைக் கொண்ட இப்பாட்டு 'அறத்தொடுநிலை'த் துறை சார்ந்தது. இதன்கண் தோழி செவிலியிடம் அறத்தொடுநிற்கும் திறம் வியக்கத்தக்கது. சுனையில் நீராடல், *99* மலர்களைக் குவித்து மகிழ்தல், தலைவனது அழகைப் புனைதல், தலைவி தலைவனின் காதலுறவு, மாலைக்கால வருணனை, தலைவன் வரும் வழியின் அருமை போல்வன காப்பியத் தன்மையுடன் இதில் விரிவாகப் புனையப்படுவதால் இதனைக் காப்பியப் பாட்டு எனலாம். தோழி சாதுரியமாகப் பேசுந்திறனை வைத்து நோக்கினால் இஃது ஓர் உளவியல் பாட்டுமாகும். நச்சினார்க்கினியர் இதனைப் பெருங்குறிஞ்சி என்று சிறப்பிப்பார். தோழியின் கூற்று நாடகப் பாங்குடையது.

இதன்கண் *99* மலர்கள் தொகுத்துக் கூறப்படும் இடம் தனிச் சிறப்புடையதாகும்.

> **ஒண்செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்**
> **தண்கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி**
> **செங்கொடுவேரி, தேமா, மணிச்சிகை** *(62-64)*

> **குருகிலை, மருதம், விரிபூங் கோங்கம்**
> **போங்கம், திலகம், தேங்கமழ் பாதிரி**
> **செருந்தி, அதிரல், பெருந்தண் சண்பகம்** *(73-75)*

என்றிவ்வாறு மும்மூன்று பூக்களாக மாறி மாறிக் கோக்குமழகு இப்பாமாலையாகிய பூமாலையைப் பொருள் மணங்கமழச் செய்கிறது.

## பட்டினப்பாலை

இடையிடையே ஆசிரியவடிகளைப் பெற்ற *301* அடிகளைக் கொண்ட இவ் 'வஞ்சி நெடும்பாட்டு' காவிரிப் பூம்பட்டினத்தை நெடிதாகப் புனைகிறது. நாம் மதுரைக் காஞ்சியில் மதுரையைக் காண்பதுபோல் இதில் காவிரிப்பூம் பட்டினத்தைக் காண்கிறோம். ஏற்றுமதி வணிகம் பற்றியும், மக்கள் பழக்க வழக்கம் பற்றியும், நகர்ப்புற நாகரிகம் பற்றியும் இப்பாட்டில் மிகுந்த குறிப்புக்கள் உள. வாணிகப் பெருமை பேசுமிடத்து.

வான் முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப் பொழிந்தநீர் கடல்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கின்நோன்
புலிபொறித்துப் புறம் போக்கி......... *(126-135)*

பெரும்பாணாற்றுப் படையில் உள்நாட்டு வாணிகச் சிறப்பைக் காணும் நாம் இதில் உள்நாட்டு வெளிநாட்டு வாணிக வளத்தைக்காண்கிறோம்.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின் *(185-193)*

ஏறத்தாழ ஏழே அடிகளில் பாலைத்திணைக்குரிய 'செலவழுங்குதல்' துறை இப்பாடலில் இடம்பெற ஏனையனவெல்லாம் காவிரிப்பூம்பட்டினப் பெருமையாகவும் திருமாவளவன் சிறப்பாகவும் உள்ளன. சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது இப்பாட்டு. இப்பாட்டால் உணரலாகும் தமிழர் வாழ்வுமுறை, பழக்கவழக்கம் பலவாகும்.

தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும் *(208-211)*

வாணிக நாகரிகம் போற்றத்தக்கதன்றோ? கடியலூரார் இப்பாட்டுக்காகச் சோழனிடம் பதினாறு நூறாயிரம் பொன் பரிசு பெற்றார் என்று பிற்கால நூல்கள் போற்றுகின்றன.

## புலவர்கள்

சமாசப் பதிப்பு ஒன்றே சங்கத் தொகைப் பாடல்கள் அனைத்தும் அடங்கிய பெரும்பதிப்பாகும். அதன்படி மொத்தப்பாட்டு எண்ணிக்கை *2381* ஆகும். மொத்தப் புலவர்கள் *473* பேர். ஆசிரியர் பெயர் காணாதவை *102*. இவற்றுள் அகப் பாடல்கள் *1861*. எஞ்சியவை புறப்பாடல்கள். நூறுபாடல்களுக்கு மேற் பாடிய புலவர்கள் ஐவராவர். கபிலர் *235;* அம்மூவனார் *127*, ஓரம் போகியார் *110* பேயனார் *105*, ஓதலாந்தையார் *103*. இவர்கள் ஐவருமே ஐங்குறுநூறு பாடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுள் கபிலரே மிகுதியாகப் பாடியுள்ளவர் எனலாம். இவர்களிலும் மிகுதியாகப் பலர் பாடியிருக்கலாம். கிடைக்கின்ற பாடல்களை வைத்தே இங்குக் குறிக்கப்படுகிறது. மற்றும் மிகுதியான பாடல்கள் கிடைக்கும் புலவர்கள் என இருவரைக் குறிப்பிடலாம். ஔவையார் *35*, மாமூலனார் *30*. அரசப் புலவர்களும் பெண்பாற் புலவர்களுமாக முறையே *31, 30* பேர் காணப்படுகின்றனர். தொடராற் பெயர் பெற்றவர் என முப்பதின்மரையும் திணைதுறைத் தொடர்பாற் பெயர் பெற்றவர் என்று இருபதின்மரையும் சுட்டிக்காட்டலாம்.

## புலவரும் புரவலரும்

ஔவையாரை அதியமான் நெடுமான் அஞ்சிபோற்றிப் புரந்தந்தான். அவனுடைய அருமை பெருமையனைத்தும் ஔவையாரால் நன்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. கபிலரைப் பாரி தன் உயிர் நண்பராகப் போற்றியதால், கபிலர் பாரி மகளிரைக் காத்ததுடன் தம் இனிய நண்பனைத் தம் சொற் சித்திரங்களால் நிலைபெறச் செய்துள்ளார். கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் இருந்த நட்பு வரலாற்றுப் புகழ் மிக்கதாகும். அச்சோழ மன்னனின் அவைக்களப் புலவர் போல் விளங்கியவர் பொத்தியார் எனவும் அறிகிறோம். மாங்குடி மருதனாரைப் பாண்டியன் நெடுஞ்செழியன் தன் அவைக்களத் தலைமைப் புலவராகவே போற்றினான். குமணன் பெருஞ்சித்திரனாரிடம் காட்டிய பேரன்பும் கருதத்தக்கதாகும்.

## புலவரும் சமுதாயமும்

கோவூர்கிழார் சோழநாட்டுப் பெரும்புலவர். நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் போர் மூண்டபோது, சந்துசெய்விக்க முயன்றார். கிள்ளி வளவன் மலையமான் மக்களை யானைக் கிடுவழி அதைத் தடுக்க முயன்றார் அப் பெரியவர். நெடுங்கிள்ளி இளந்தத்தன் என்ற புலவரை ஒற்றன் என நினைத்துக் கொல்லப் புகுந்தபோது, கோவூர் கிழார் புலவருக்காக வாதிட்டு, அவரை விடுவித்த பெருமைக் குரியவர். சேரமான் தகடூர் எறிந்த

பெருஞ்சேரல் இரும்பொறை, முரசு கட்டிலில் அறியாது ஏறி உறங்கிய மோசி கீரனாரைக் கொல்லாமல், அவர் துயில் எழுந்துணையும் கவரிகொண்டு வீசினான் என்றால் அது பெரிதும் பண்பு மிக்க செயலன்றோ? இவ்வாறு அன்றைய புலவர்கள் சிறந்து விளங்கினர்.

## தமிழறிஞர்கள் பல தொழிலினர் ஆதல்

தொல்காப்பியர் 'மக்கள் நுதலிய அகன் ஐந்திணை' என்பார். அகம்புறம் அனைத்துமே மக்கள் நுதலியதுதான். அம் மக்களை நிலமக்கள், தலைமக்கள், அடியோர், வினைவலர் எனப் பகுத்துக் காட்டுவார் அவர். அவர்களுள் அகத்திணையில் இடம் பெறுவோர் பெயர் அறியப்படாத தலைவன். தலைவி, தோழி, பாங்கன், தாய், பரத்தை, கண்டோர், இளையோர், பாகன் என்று இதுபோல் பொதுவாகக் குறிக்கப்படுபவர் ஆவர். புறப்பாடல்கள் மன்னர், புலவர், பாணர் மற்றும் அனைவரையும் பற்றியவை ஆகும். சங்கப் பாடல்களைப் பாடிய புலவர்களும் சமுதாயத்தில் பல்வேறு தொழில் செய்தவர் ஆவர். வெண்ணிக் குயத்தியார், மருத்துவன் தாமோதரனார். கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார், உறையூர் இளம்பொன் வாணிகனார், காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார். மகனார் நப்பூதனார், கணக்காயன் தத்தனார், மதுரைக் கணக்காயனார், மதுரைக் கொல்லன் வெண்ணாகனார், வடம வண்ணக்கன் தாமோதரனார் என்றினைய பெயர்கள் பலவற்றால் அன்று எல்லாத் தொழிலினரும் எல்லா நிலையினரும் தமிழறிவினராய் இருந்தமை உணரப்படும்.

### அகப்பாட்டு : முதலும் கருவும் உரிப்பொருளும்

| திணை | நிலம் | பெரும்பொழுது, சிறுபொழுது | கருப்பொருள் | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த பகுதியும் | கூதிர், யாமம், முன்பனி | புலி யானை, கிளி மயில், வேங்கை சந்தன மரம், காந் தள், குறவர், வேட்டையாடல் | புணர்தல் (கூடுதல்) திருமணத்திற்கு முந்திய களவு வாழ்க்கை |
| முல்லை | காடும், காடு சார்ந்த பகுதியும் | கார், மாலை (முன்னிரவு) | மான், முயல், பசு. கொன்றை, குருந்து, முல்லை, ஆனிரை மேய்த்தல் | போர் கருதிய கண வன்பிரிவில் தலைவி ஆற்றியிருத்தல் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த பகுதியும் (ஆற்றங்கரை) | வைகறை விடியல் | எருமை, நீர் நாய், மருதமரம், காஞ்சி, தாமரை, உழவு | பரத்தையிற் பிரிந்த போது மனைவி ஊடுத்ல் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த பகுதியும் | ஏற்பாடு (சாயுங்காலம்) | சுறா, புன்னை, நெய்தல், தாழை மீன்பிடித்தல் | காதலன் பிரிந்த போது காதலி வருந்துதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| பாலை | சுரவழி, | பின்பனி | | |
| | முல்லைக்காடும் | நண்பகல் | வாடியபுலி, யானை | பொருள்வழிப்பிரிவும் |
| | குறிஞ்சி | இளவேனில் | பருந்து, கள்ளி, | அதன் நிமித்தமும் |
| | மலையும் | முதுவேனில் | இருப்பை, வழிப்பறி, | |
| | வளமிழந்த | | கொள்ளை | |
| | காலத்து நிலை- | | | |
| | எல்லையோரப் | | | |
| | பகுதிகள் | | | |

## சங்க இலக்கியத் தனித்தன்மைகள்

சங்கப்பாடல்கள் பற்பல தனிச்சிறப்புக்களையுடையன. அவற்றுட் சிலவற்றை இங்குச் சுட்டிக்காட்டலாம்.

மிகப் பலவாய பாடல்கள், இயற்கைச் சூழலை முதல், கரு அடிப்படையிலான பின்னணி எனும் பாங்கில் உலகிடைக் காண்பன, கேட்பன, நுகர்வன அனைத்தையும் உள்ளதை உள்ளவாறு படம்பிடித்துக்காட்டுவன. சங்க இலக்கிய உவமைகள் பல நிழற்படப் பிடிப்புக்களாக விளங்கும்.

நண்டின் கண் வேப்ப அரும்புபோல் உளது. 'வேப்பு நனை அன்ன நெடுங்கண் நீர்ஞெண்டு' (அகம். *176*).

கோடையில் இலை எல்லாம் உதிர்ந்த மரத்தின் நிழல் அங்கு வலை ஒன்றைப் பின்னி வைத்தது போலக் காட்சி தருகிறது.

**இலைஇல் மராத்த எவ்வம்தாங்கி**
**வலை வலந்தன்ன வெந்நிழல் மருங்கின்** (பொருந. *50-51*)

விரல்களை நீட்டிக்கொண்டிருப்பது போன்ற செங்காந்தட் பூவில் கருவண்டு மொய்ப்பது, கையால் வட்டாடுவதுபோல் இருப்பதாகக்கூறும் 'வினை உவமை', காட்சிப் படுத்தும் ஒரு படப்பிடிப்பாகும்.

**பல்துடுப்பு எடுத்த அலங்குகுலைக் காந்தள்**
**அணிமலர் நறுந்தாது ஊதும் தும்பி**
**கையாடு வட்டின் தோன்றும்** (அகம். *108*)

புறவுலகைப் படம் பிடிப்பதைப்போல, மன உணர்வுகளைப் படம் பிடிப்பதும் சங்க இலக்கியச் சிறப்பியல்பாகும். அத்தகைய மனநிலைகள், இன்றும் என்றும் இருப்பவை.

ஒருபெண் காதலனை நெடுநாள் பிரிந்து, காமநோயால் வருந்தித் தன்னந்தனிமையில், உருண்டு புரண்டு அழுது அரற்றி எங்ஙனமெல்லாம் புலம்புவாள்? அத்தனிமைத் துன்பம், இன்றும் ஒருவரை எவ்வாறு வாட்டும்?

**முட்டுவேன்கொல்? தாக்குவேன்கொல்?**
**ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு**
**ஆஅ! ஒல்லெனக் கூவுவேன்கொல்?** (குறு. *28*)

தலைவன் இன்னும் திருமணம் செய்துகொள்ள முயலவில்லை. தலைவி மெலிகிறாள். காரணம் தெரியாத செவிலித்தாய், கட்டுவிச்சியிடம் குறிகேட்கிறாள். அவளோ, அத்தலைவனது மலையிலிருந்து வந்தவள். குறி சொல்லுமுன் தனது மலையின் வளம் பற்றிப் பாடுகிறாள்.

அப்பாடலைக் கேட்கக் கேட்கத் தலைவிக்கும் தோழிக்கும் ஆறுதலாய் இருக்கிறது; மகிழ்ச்சியாய் இருக்கிறது. இன்றும் நமக்கு வேண்டியவர்களைப் பற்றி, யாரேனும் ஏதேனும் பேசக் கேட்டால், நம் மனத்துள் மகிழ்ச்சி ஊறுகிறதல்லவா?

**அகவன் மகளே! பாடுகபாட்டே!**
**இன்னும் பாடுக பாட்டே! அவர்**
**நன்னெடுங்குன்றம் பாடிய பாட்டே!** (குறு. 23)

இப்பாடலில் ஒரு மனநிலை படம்பிடிக்கப்பட்டிருக்கிறது, வேறு குறிப்பிடத்தக்க செய்தி எதுவுமில்லை.

'மெய்ப்பாடு' என்பது, 'சொல் கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்'. அதுதான் இலக்கிய மெய்ப்பாடு. கேட்டதும் அல்லது படித்ததும், மனவுணர்ச்சி துள்ளி வெளிப்படவேண்டும்.

தலைவன் வந்துவிட்டான் என்பதை யாரோ கூறக்கேட்டுப் பாணன் கூறத் தலைவி உள்ளம் துள்ளுகிறது மகிழ்ச்சியில். அங்ஙனம் நற்செய்தியைச் சொன்னவனுக்கு, பாடலிபுத்திரத்தையே பரிசாகக் கொடுத்துவிடலாமென, ஓங்கி உலகளக்கிறது மகிழ்ச்சியுள்ளம்.

**நீகண் டனையோ? கண்டார்க் கேட்டனையோ?**
**ஒன்று தெளிய நசையினம் மொழிமோ?**
**வெண்கோட்டு யானை சோணை படியும்**
**பொன்மலி பாடலி பெறீஇயர்**
**யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே?** (குறு. 75)

சங்கப்பாடல்களில் இங்ஙனம் மெய்ப்பாடு மேலோங்கிநிற்கும் பாடல்களைத் தொகுத்தால், அது ஒரு நிலையான மானுட நாடகமாக விளங்கும்.

'உள்ளுறை' என்பது, சங்க அகப்பாடலகளில் மட்டுமே காணப்படும் தனித்திறனாகும். ஏனைய இடங்களில் இது குறிப்புப் பொருள் என்றே கூறப்படும்.

**ஒன்றேன் அல்லென் ஒன்றுவென் குன்றத்துப்**
**பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை**
**குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்**
**நின்றுகொய மலரும் நாடனொடு**
**ஒன்றேன் தோழி ஒன்றினானே** (குறு. 208)

"என்தலைவனுக்கும் எனக்கும் ஒற்றுமை இல்லை என்பதில்லை. ஒரே ஒரு செய்தியில்தான் ஒற்றுமையில்லை (மனம் ஒன்றவில்லை')'. இது தலைவி கூறுவது.

அத்தலைவன் ஆண்யானை மிதித்ததால், அடிமரம் முறிந்து விழுந்த வேங்கைமரப் பூக்களைக் குன்றத்து மகளிர் நின்ற படி கொய்து கொள்ளும்படியான மலைநாடன். இது தலைவன் பற்றிய செய்தி.

இத்தகைய தலைவனுடன் மனம் ஒன்றாததன் காரணம் என்ன? அது பாடலில் வெளிப்படையாக இல்லை; குறிப்பாக 'உள்ளுறையாக' உளது. வேங்கை எப்பாவமும் செய்யவில்லை; மதங்கொண்ட களிறு அதைச் சாய்த்து விட்டது. தலைவியைக் காதலிப்பதாகக் கூறி, துன்பம் விளைவித்துவிட்ட தலைவன் செயலை இது குறிக்கிறது. குறவர் மகளிர் எளிதில் 'அலர்' பறிக்க இது ஏதுவானது; தலைவி மீது அலர் கூறத் தலைவனின் செயல் காரணமானது. இவ்வாறு கருப்பொருள்களில் வைத்து உள்ளுறை கூறப்பட்டுள்ளது. வேங்கை - தலைவி. களிறு - தலைவன். மரத்தைச் சாய்த்ததுபோல், தலைவி துயரப்படுத்தப்பட்டாள். அலர் கொய்தல், தலைவி பற்றிக் குறவர் மகளிர் 'அலர்' கூறுவதை, பழித்துப்பேசுவதைக் குறிக்கும். இங்ஙனம் உள்ளுறை திட்டமிட்டு அமைக்கப்படும்.

இறைச்சி என்பது இதனின் வேறுபட்டது. அது கருப்பொருள்களாம் பறவை, விலங்கு, பயிரினம் என ஏதேனும் ஒன்றின் அன்பு வாழ்வைச் சுட்டி, உரிப்பொருட் கருத்துக்குத் துணையாக வரும். 'இறைச்சி' என்பது பற்றித் தொல்லாசான் தெளிவாகச் சுட்டியுள்ளார். காலப் பழைமையால் சிலர் தெளிவின்றி இடர்ப்படுகின்றனர்.

ஒரு பறவை, ஞாயிறு மறையும் சாயுங்காலத்தில் வானவெளியில், அலகில் கொத்திய தினைக்கதிர்களுடன் தன் கூட்டை நோக்கிப் பறக்கிறது. தன் கூட்டிலுள்ள பார்ப்புகளின் வாயினுள் வைத்து ஊட்டவே, மிகவிரைந்து, இரை கிடைத்த மகிழ்ச்சியில் பறக்கிறது.

**ஞாயிறுபட்ட அகல்வாய் வானத்து**
**அளியதாமே கொடுஞ்சிறைப் பறவை**
**இறைஉற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த**
**பிள்ளை உள்வாய்ச் செரீஇய**
**இரைகொண் டமையின் விரையுமால் செலவே** *(குறு. 92)*

இது பறவையின் வாழ்வைச் சுட்டுகிறது. பாடலில் மக்கள் வாழ்வு பற்றி - உரிப் பொருட்செய்தி ஏதுமில்லை. பறவைகளின் அன்பு வாழ்வைக் காட்டும் இது, தலைவனும் இதுபோல், பொருள் தேடச் சென்றவன் விரைந்து வரவில்லையே; தேடிய செல்வத்துடன் இல்லம் நோக்கித் திரும்பவில்லையே எனத் தலைவி ஏங்குவதைச் சொல்லாமற் சொல்கிறது. இறைச்சிப் பொருளில், ஒட்டு மொத்தமான 'ஏக்கவுணர்வு' வெளிப்பாடுதான் முக்கியம்.

சங்க இலக்கியமும் திருக்குறளும் சிலம்பும் மேகலையும் 'நோக்கு'க் கோட்பாடு அமைந்தவை. அதில் ஒரு மாத்திரை, ஒரு சொல், தொடர், அடி யாவும் காரணங்கருதி அமைக்கப்பட்டவை. வேறு ஒன்றை அங்குப் பெய்து எழுதலாம். ஆயின், அது இதுபோல் சிறவாது. 'நோக்கு அமையினன்றே செய்யுளாவது' என்ற பேராசிரியர் கருத்து, சங்கப் பாடல் ஒவ்வொன்றுக்கும் மிகவும் பொருந்தும்.

சங்கப் பாடல்களில் 'முன்னம்' என்ற கோட்பாடு உளது. இவ் அரிய கோட்பாட்டை, மேனாட்டார்க்குக் கூறியிருந்தால், பலபடப் பாராட்டியிருப்பர். பிறகு நம் 'கிளிப்பிள்ளைகள்' திரும்பத் திரும்ப மேற்கொள் காட்டி மகிழ்ந்திருக்கும்.

**நள்ளென் றன்றே யாமம்; சொல் அவிந்து**
**இனிது அடங்கினரே மாக்கள்; முனிவு இன்று**
**நனந்தலை உலகமும் துஞ்சும்;**
**ஓர்யான் மன்ற துஞ்சா தேனே** (குறு. *6*)

இதற்குரிய 'அடிக்குறிப்பு' ஒன்று உளது. அதைப் பாடியவரே எழுதவில்லை. சில பாடல்களுக்கு, வெவ்வேறு விதமான அடிக்குறிப்புக்கள் உள. தொல்காப்பிய உரையாசிரியர்கள் தரும் குறிப்பும், இந்நூல்களிலுள்ள அடிக்குறிப்பும் வேறுபட அமைந்துள்ளவை பலவாகும். எடுத்துக் காட்டிற்கு, மேலே உள்ள பாடலைப் பலமுறை படித்தால் இது தலைவி கூற்று என்பதும், தோழிகூட நன்கு உறங்கும்படியான நள்ளிரவு அதுவென்பதும், அந் நேரத்தும் தலைவி தன்னந்தனியளாய்த் தான் மட்டும் உறங்காது, பிரிவுத் துன்பத்தால் வருந்துகிறாள் என்பதும் படிப்போரால் உய்த்துணரப்படுகின்றன. இவ்வாறு பாடலுள் 'ஓர் இருண்மையும்' அதை வெளிப்படுத்தும் ஒரு வழிகாட்டும் உத்தியும் பொருந்தியிருப்பதைத்தான் 'முன்னம்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

சங்ககாலப் பின்னணி முழுவதும் அறியப்பட்டால், அவற்றுள் சில சமகாலப் பிரதிபலிப்பு என்பதும் சில 'மரபுக்குட்பட்டவை' என்பதும் விளங்கும். கால முன்பின் கூற மனம் தயங்கும். மரபுவழிப்பட்டவை மட்டுமே சங்க காலத்தன என்பது போன்று மருட்சி ஏற்படும்.

சங்கப் பாடல்கள் புராணச் செய்திகளைக் கருவாக உடையன அல்ல. ஆனால் அவற்றுள் வரும் புராணக் கூறுகளாம் தொன்மங்கள், சொல்ல வந்த செய்திக்குத் துணையாகவோ, உவமையாகவோ இடம் பெறுவதை ஓர் உத்தியாக நோக்குதல் வேண்டும். எடுத்துக்காட்டிற்குப் பெரிய அரண்மனையனைய இல்லங்களின் உயர்ந்த வாயில் நிலைகள் தொட்டு, மகளிரின் மார்பகங்கள் வரை ஒருவித வீற்றுத் தெய்வம் உறைவதாகவும் அஃது அணங்கு எனப்படும் எனவும் இவ்வாறு வரும் தொன்மங்கள் சில உளவியல் ஆய்வுக்கு உரியவை ஆகும்.

சங்கப் பாடல்களில் சொல்லவரும் அடிக்கருத்து, பாடலின் முதலடியிலேயே முழுமைபெற உணர்த்தப்பட்டு, பிற அடிகள் அதற்குத் துணையாய் இருக்கும். இத்தகைய கருத்தமைதி, பாடலின் இறுதியடிகளில் நிற்பதுமுண்டு.

பாடலின் மூலம் சொல்லவந்த செய்தி, பாடலுள் இல்லாமல், பாடலுக்கு வெளியே உய்த்துணருமாறு நிற்கும். எச்சம் (கூற்றெச்சம், குறிப்பெச்சம்), பயன் என இவ்வாறு வருவன, மேனாட்டார் பொதுப்படக் குறிப்புப்பொருள் (Suggestion) எனக் கூறுவனவற்றிற்குப் பொருந்திய காட்டுக்களாகும்.

மனித நேயமும் நிலைபேறுடைய மானுட விழுமியங்களும் அதன் திணை துறை கூற்றுக்களின் வாயிலாகப் பாடுபொருளாகியிருப்பதைப் பலரும் வியந்து பாராட்டியுள்ளனர்.

## பிற்காலத் தமிழிலக்கிய வளர்ச்சியில் சங்க நூற் செல்வாக்கு

சங்ககால அகம், புறம் மற்றும் அவற்றின் உட்பகுப்புக்களான திணை துறை கூற்று வகைகள் பிற்காலத்தில் ஏற்படுத்திய தாக்கத்தைச் சிற்றிலக்கியக் காலம்வரை அறியலாம்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோ, நெய்தற்கார்க்கியர் என்று ஒரேதிணையைப் பாடி, அதைத் தனி வகைமை ஆக்க முயன்றவர்கள் உண்டு. மடல் பாடிய மாதங்கீரனார், வெறி பாடிய காமக்கணியார் என ஒரு துறையைச் சிறப்புறுத்தியவர்களும் உளர்.

பதினெண்கீழ்க்கணக்கில் களவழி நாற்பது சங்ககாலக் களவழித் துறைகளின் வளர்ச்சியாகும். இவை 'பரணி' இலக்கியத்திற்குக் கால்கோளிட்டன. ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார் நாற்பது எனும் அகம் பற்றியன சங்க அகப்பாடல் தொகுப்புக்களைப் பின்பற்றிப் பத்துப் பத்தாகவும் தொகுதிகளாகவும் மீண்டும் ஒரு மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சியாகப் படுகிறது.

சங்க இலக்கியத்தில் கட்டுவிச்சி எனும் அகவன் மகள் மலைவளம் பாடும் குறிப்புளது. இவ்வாறு குறிகூறும் குறிஞ்சிநிலக் குறமகளை அடிப்படையாகக் கொண்டு குறத்திப் பாட்டு, குறவஞ்சி, குறம் என ஓர் இலக்கிய வகை பிற்காலத்தே மலர்ந்தது.

அகத்துறைகளைக் கோவைப்படுத்திச் செயற்கையாகப் பாடும் ஒரு மரபு 'கோவை' நூல்களாக வளர்ந்தது. பாட்டியல் நூல்களில் ஐந்திணைச் செய்யுள், கைக்கிளை, வளமடல் என வருவன பல அகஇலக்கிய வளர்ச்சிகளாகும்.

புறத்திணை, துறை சார்ந்த வகைகளே பிற்காலத்தில் பல்கிப் பெருகின. ஆற்றுப்படை, கையறுநிலை, துயிலெடைநிலை (திருப்பள்ளி எழுச்சி),

உழிஞை மாலை என இவ்வாறு பல சிறுநூல் வகைகள் பிற்பாடு குறிக்கப்படுகின்றன.

கலம்பகம், பரணி போன்றவற்றில் அகமும் புறமும் கலந்த வகைகளான 'கலப்பினங்களைக்' காண்கிறோம். காப்பியங்கள் ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப்படலம் எனத் தொடங்குவது, சங்க கால முதல்கரு உரி அமைப்பை நினைவூட்டுகிறது.

சங்கப் பாடல்களின் செல்வாக்குக் கம்பரது இராமாயணத்தில் மிகுதி. தமிழ் இலக்கிய முழுமையில், சங்க இலக்கிய ஆளுமை, அதன் உள்ளீடாக இழை ஓடுவது ஆழ்ந்து கற்பார்க்குத் தெற்றெனப் புலனாகும்.

# 10. திருக்குறள்

தமிழில் தோன்றிய நீதி நூல்களுக்கெல்லாம் முன்மாதிரியானது; சிந்தனை ஊற்றுப்போன்று உதவியது திருக்குறளேயாகும். அஃது உலகமொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வீரமாமுனிவரின் இலத்தின் மொழிபெயர்ப்பும் ஆங்கிலத்தில் டாக்டர் ஜி.யு. போப்பையர், வ.வே சு. ஐயர், இராஜாஜி போல்வாரின் மொழிபெயர்ப்பும் குறிப்பிடத்தக்கன. செருமன் நாட்டுப் பேரறிஞர் ஆல்பர்ட் சுவைட்சர் திருக்குறளின் பெருமையினைத் தம் 'இந்தியச் சிந்தனை வளர்ச்சி' என்ற நூலில் சிறப்பாக எடுத்து ஆராய்ந்து விளக்கியுள்ளார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை,

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக்கு ஒருநீதி

என்று பாராட்டுதலும், பாரதியார்,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று போற்றுதலும் அதன் சிறப்பை உணர்த்தும். திருவள்ளுவ மாலையில் ஔவை பாடியதாக, ஒரு குறள்வெண்பாக் காணப்படுகிறது :

அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

கல்லாடர் கூற்றாகவரும் பாட்டு திருக்குறள் எச்சமயத்தார்க்கும் எல்லா இனத்தவர்க்கும் பொதுவென்ற கருத்தை வற்புறுத்துகிறது.

மதுரைத் தமிழ் நாகனார்

எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்-சொல்லாற்
பரந்தபா வால்என் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை

என்று பாராட்டுகிறார்.

## அமைப்பும் பகுப்பும்

திருக்குறள் *133* அதிகாரங்களையும் *1330* குறள்களையும் உடையது. அதிகாரத்திற்குப் பத்துக் குறள்கள் அமைந்து, ஓரறத்தை அல்லது ஒரு

கருத்தைப் பல கோணத்தில் அலசி ஆராய்கின்றன. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பால்களையும் *8* இயல்களையும் உடையது. அறத்துப்பால், பாயிரம் தவிர்த்து இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்ற மூன்று இயல்களை உடையது. பொருட்பால் அரசியல், அங்கவியல், குடியியல் என மூன்று இயல்களை உடையது. காமத்துப்பால் களவியல் கற்பியல் என இரண்டு இயல்களையுடையது அறத்துப்பால் *38* அதிகாரம்; பொருட்பால் *70* அதிகாரம்; காமத்துப்பால் *25* அதிகாரம் என அமைந்துள்ளன.

குறட்பா தமிழ்ப் பாவினங்களிலேயே மிகச் சிறியது. ஈரடியானும் எழுசீரானும் ஆனது.

**பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற**
**சிலசொல்லல் தேற்றா தவர்** *(649)*

என்று சொல்வன்மையிற் குறிப்பிட்ட அவர், தாம் பாடும் நூலுக்கும் மிகச்சிறிய அளவான் அமைந்த பாவடிவத்தை எடுத்துக் கொண்டது பொருத்தமுடையதேயாகும்.

**உரைவளம்:** திருக்குறள் உலகமொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள் ளமை மட்டுமன்றி. ஒரே மொழியில் பல பெயர்ப்புகளும் வெளிவந்துள்ளன. அது போலவே முன்பு, பலரால் உரையெழுதப்பட்டதோடன்றி, இன்றும் பல்வேறு உரை விளக்கங்களைப் பெற்றுள்ளது அது. தமிழில் மிகுதியான ஆய்வு நூல்களைப் பெற்றவை தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் எனலாம். முற்காலத்தே திருக்குறளுக்கு உரை எழுதியவர் பதின்மராவர், தருமர், மணக்குடவர் முதலிய பதின்மர் உரையெழுதினர் எனத் தெரிய வருகிறது. இதனை நினைப்புறுத்தும் வெண்பா வருமாறு:

**தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்**
**பரிதி பரிமேலழகர்-திருமலையர்**
**மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்கு**
**எல்லையுரை செய்தார் இவர்**

இவற்றுள் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர் ஆகிய நால்வரின் உரைகளே இன்று கிடைக்கப்பெறுகின்றன. அவற்றுள்ளும் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்தது எனப் போற்றப்படுகிறது.

**பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள**
**நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ- நூலிற்**
**பரித்தஉரை எல்லாம் பரிமேலழகர்**
**தெரித்தஉரை யாமோ தெளி**

என்ற உரைச் சிறப்புப்பாயிரம் இதை வலியுறுத்தும். திருவள்ளுவரை முதற்பாவலர், தெய்வப்புலவர், பெருநாவலர், செந்நாப்போதார் என்றும்,

திருக்குறளை முப்பானூல், தெய்வ நூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை எனவும் போற்றுவர்.

## திருக்குறளின் காலம்

வி.ஆர்.ஆர். தீட்சிதர், திருவள்ளுவர் காலம் கி.மு. முதல் மூன்று நூற்றாண்டுகட்கு உட்பட்டதாகலாம் என்பர். பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்றாய திருக்குறளும், கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்து தோன்றி யிருக்க வேண்டும் என்பது பேராசியர் எஸ். வையாபுரிப் பிள்ளை கருத்தாகும். "வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில் திருவள்ளுவர் காலம் ஏறத்தாழ கி.மு. *1* முதல் *300* க்கு உட்பட்டது என்று கோடலே அமைவுடையதாகும்" என்பது மா. இராசமாணிக்கனார் கருத்தாகும்.[20] மறைமலையடிகள் கிறித்துவுக்கு *30* ஆண்டுகள் முற்பட்டவர் திருவள்ளுவர் என நிறுவுகிறார். தொல்காப்பியர்.

> அந்நிலை மருங்கின் அறமுதலாகிய
> மும்முதற் பொருட்கும் உரிய என்ப *(1363)*

எனக் கூறியதற்கு ஏற்பவே திருவள்ளுவர் தம் நூலை முப்பாலாக யாத்துள்ளார்.

> நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப *(1434)*

என்ற தொல்காப்பியர் நூற்பா

> நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
> மறைமொழி காட்டிவிடும்

எனத் திருக்குறளில் இடம் பெறுகிறது. தொல்காப்பியப் புறத்திணையியலில், "மாற்றருங்கூற்றம் சாற்றிய **பெருமையும்**" என்பது காஞ்சித்திணை பற்றிய முதல் துறையாகும். இதனைத் திருவள்ளுவர் "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் **பெருமை** உடைத்திவ்வுலகு" *(336)* என்று பெருமை என்ற சொல்லாலேயே சுட்டக் காண்கிறோம்.

தோழி தலைவியின் காதலைத் திருமணத்தில் முடித்து வைக்க வேண்டிப் பொய் கூறவும் தயங்கமாட்டாள்; "வாய்மையும் பொய்ம்மையும் கண்டோற் சுட்டி" *(அகத்திணை)* எனவும். "வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்" *(பொருளியல்)* எனவும், "மெய்யினும், பொய்யினும் வழிநிலை பிழையாது" *(களவியல்)* எனவும் தோழி பொய் கூறியும் நன்மைசெய்ய முந்துதல் கூறப்படுகிறது. "வரைதல் வேண்டித் தோழி செப்பிய, புரைதீர் கிளவி புல்லிய எதிரும்" என்புழிப் புரைதீர் கிளவி என்றது அதனையே. திருவள்ளுவர், "பொய்ம்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்" *(292)* என்கிறார். 'புரை தீர்' என்ற சொல்லாட்சி,

அவ்வாறே ஆளப்பட்டுள்ளமை காண்க. இவற்றால் தொல்காப்பியத்திற்கும் திருக்குறளுக்கும் உள்ள நெருக்கமும் திருக்குறள் அதற்கும் பிற்பட்டதாதல் கூடும் என்ற குறிப்பும் புலனாகும். முன்னரும் இது விளக்கப்பட்டது. இனிச் சங்க இலக்கியத்திற்கும் திருக்குறளுக்கும் உள்ள இயைபைக் காண்போம்.

நீரின்றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு *(20)*

என்ற குறளை

நீரின்றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி *(நற். 1)*

என நற்றிணையிற் காண்கிறோம்.

பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் *(500)*

என்ற குறளை "முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்" *(355)* என நற்றிணை மிகத் தெளிவாக எடுத்தாள்கிறது. "பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க நோதக்க நட்டார் செயின்" *(805)* என்ற குறள்தான் குறுந்தொகையில், "பேதைமையால் பெருந்தகை கெழுமி, நோதகச் செய்ததொன்று உடையேன் கொல்லோ" *(230)* என இடம் பெறுகிறது. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" *(110)* என்ற குறளை.

நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே, ஆயிழை கணவ *(புறம். 34)*

என்று அறம் என நூற்பெயரைச் சுட்டியே கூறுகிறது புறநானூற்றுப் பாடல் ஒன்று. 'செய்ந்நன்றியறிதல்' அதிகாரம் அறத்துப்பாலில் இருப்பதும் 'அறம்' பாடிற்றே என்பதற்குப் பொருத்தமாக உளது. இவ்வாறு சங்க நூல்களும் சிலப்பதிகாரமும் திருக்குறளை எடுத்தாளும் திறத்தை க. வெள்ளைவாரணர், மா. இராசமாணிக்கனார் இருவரும் தம் இலக்கிய வரலாற்று நூல்களுள் விரிவாகச் சுட்டியுள்ளனர். மேலும் நுட்பமாய்த் தேடி இதை நிறுவ வாய்ப்புளது.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய் *(சிறை. 59-61)*

என மணிமேகலை வெளிப்படையாகக் குறிப்பிடவும் காண்கிறோம். இவற்றால் திருக்குறள் மணிமேகலை, சிலப்பதிகாரம், சங்க நூல்களுக்கு முற்பட்டதென்பதும், தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டதென்பதும் போதரும். இவற்றையெல்லாம் உற்று நோக்காது சிற்சில எச்ச விகுதிகள், சிற்சில

சொல்லாட்சிகள் மட்டுமே கொண்டு ஒரு பெரு நூலைப் பிற்காலத்ததென அறுதியிடல் உறுதிப்படாது. மேற்கொண்ட யாப்பிற்கு ஏற்ப இலக்கணம், சொல்லாட்சி, நடையமைப்புப் போன்றவற்றில் வேறுபாடுகள் ஏற்படுதல் இயல்பேயாகும்.

## திருக்குறட் சிந்தனைகள்

சங்கப் பாட்டுக்களில் மதுவருந்துதல் பற்றிக் குற்றமாகவோ குறையாகவோ கூறாமல் இயல்பாகக் கூறப்பட்டுள்ளது. நிலையாமை கூறும் மதுரைக்காஞ்சி ஆசிரியரே தேறல் மாந்தி வாழ்க எனப்பாடுகிறார். பரத்தைமை வாழ்வை மருதப்பாடல்கள் படம் பிடிக்கின்றன. ஆனால் திருவள்ளுவர் இவையிரண்டையும் கடிந்து ஒதுக்குகிறார். காமத்துப்பாலில் பரத்தையிற் பிரிவை மற்றவர்போல் விரித்துப் பாடாமல் விடுகின்றார். முதலிரு பால்களிலும் ஒரு தெளிந்த அறநூற் சான்றோராகக் காட்சியளிக்கும் திருவள்ளுவர் காமத்துப் பாலில் ஒரு கவிஞராக, நாடக ஆசிரியராக, படைப்பாளியாகக் காட்சி தருகிறார்.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைனத்தறன்**
**ஆகுல நீர பிற** *(34)*

என்று அறத்திற்கு 'மிகச்சுருக்கமான, அடிப்படையான விளக்கம் ஒன்று தருகிறார். "இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல்வாருன் எல்லாம் தலை" *(47)* என்பதனால் இவர் இல்லறத்திற்குத் தரும் ஏற்றத்தை உணரலாம். சமணர் கூறும் நல்ல கருத்துக்களை ஏற்கவும் திருவள்ளுவர் தயங்குவதில்லை. அதற்காக அவரை ஒரு சமயம் சார்த்துதல் தவறு. சமணராயின் இல்லறத்திற்கு இத்துணை ஏற்றம் நல்கியிருப்பாரா, காமத்துப் பால் பாடியிருப்பாரா என்பன ஐயமே. சமயக்கணக்கர் மதிவழிகூறாதவர் வள்ளுவர் என்பதை மறத்தல் கூடாது.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியும் வாழ்ந்த தமிழகத்தில், "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று" *(259)* என அடித்துப் பேசியவர் திருவள்ளுவர்.

**ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை** *(656)*

என்பார் திருவள்ளுவர், அதற்குப் பரிமேலழகர், "இறந்த மூப்பினராய இருமுதுகுரவரும் கற்புடைய மனைவியும் குழவியும் பசியால் வருந்துமெல்லைக்கண் தீயனபலவுஞ் செய்தாயினும் புறந்தருக வென்னும் அறநூற் பொதுவிதி (மனுஸ்மிருதி) அமைச்சர்க்கு எய்தாமை பற்றி இவ்வாறு கூறினார்" என நயம்பட விளக்கக் காண்கிறோம்.

இன்றியமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல் *(961)*

இதற்கும் பரிமேலழகர், 'இறப்ப வருவழி இளிவந்தன செய் தாயினும் உய்க வென்னும் வடநூன் முறைமையை *(மனுஸ்மிருதி)* மறுத்து அவை செய்யற்க என்பதாம்' என எழுதுகிறார்.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் *(972)*

எனக் குல வேறுபாடுகளை ஒவ்வாது, தொழிலாலும் ஏற்றத் தாழ்வில்லை எனப் பாடுகிறார். "உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு" *(261)* எனத் தவத்திற்குப் புதிய விளக்கம் தருகிறார்.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும் *(298)*

மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர் *(278)*

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் *(280)*

என்றிவ்வாறு அவர் வெளி வேடங்களால் ஏமாற்றுவோரைக் கடியும் இடங்கள் பலவாகும்.

அந்தணரையும் அவர் நூலையும் முதன்மையாக்கி மற்றதனைத்தையும் அவற்றிற்குப் பின்னே தள்ளும் வடநூன் முறை போலாது, அரசனையும் அவன் ஆட்சியையும் முதன்மைப் படுத்துகிறது திருக்குறள்.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் *(543)*

மக்கள் சிறப்புற வாழ்வதற்குரிய சிந்தனைகளை மிகத் தெளிவாக வழங்கும் நூல் திருக்குறள். இடுக்கண் அழியாமை, ஆள்வினை உடைமை போன்ற அதிகாரங்கள் மனிதனை ஊக்கப்படுத்துவன; ஆக்கம்தர அழைத்துச்செல்வன.

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் *(616)*

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும் *(625)*

இக்குறள்கள் நினைத்தற்குரியன. வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல்வகை அதிகாரங்கள் இன்றைய நிருவாகத் திறன்களையும் காட்டும் சிறப்புடையன.

திருக்குறள் அழகிய உவமைகளால் நிறைந்து விளங்குவது. "பசுமட் கலத்துள் நீர்பெய்து இரீஇயற்று", உப்பமைந்தற்றால் புலவி", பெற்றம் புலியின் தோல்போர்த்து மேய்ந்தற்று" என்றிவ்வாறு, உவமைகள் பொருட் பொருத்தமுற அமையும்.

காமத்துப்பால் கற்பனைக் களஞ்சியம் போல்வது, ஒரு தலைமகன் தன் காதலியைத் தன் கண்களில் உள்ள கரு மணிபோல் காக்க விரும்புகிறான்.

கருமணியிற் பாவாய் நீ போதாய் யாம்வீழும்
திருநுதற்கு இல்லை இடம் *(1123)*

திருக்குறளில் மிக நுட்பமான மனவுணர்வுடைய காதலர்களைக் காண்கிறோம்.

கண்ணுள்ளார் காதலவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து *(1127)*

நெஞ்சத்தார் காதலவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து *(1128)*

திருவள்ளுவர் தமது காலச் சூழ்நிலையில், ஒரு புதுமைச் சிந்தனை யாளராகவும் புரட்சிச் சிந்தனையாளராகவும் கருதப்பட்டிருக்க வேண்டும். சங்ககாலம் கள் குடித்தல், மது அருந்துதலைக் குற்றமாகக் கருதாத காலம், புலாலுணவு வழக்கிலிருந்த காலம். பரத்தைமை ஒரு குறையே எனினும் குற்றமாகக் கருதப்படவில்லை. தமிழர்கள் சிறுதெய்வ வழிபாட்டிலும் மூட நம்பிக்கைகளிலும் மிகவும் ஈடுபட்டிருந்தனர்.

வைதிக சமயச் சார்பில், இங்கு மன்னர்கள் 'வேள்வி' செய்த வண்ணமிருந்தனர். பிறப்பினாலேற்படுவதாக விளக்கப்பட்ட 'வருணாசிரம தருமம்' ஏற்கப்பட்ட சூழல் தென்படுகிறது. பௌத்த, சமண, வைதிகத் துறவிகள் தமிழகம் முழுவதும் வலம் வந்தனர். இயற்கைக்கு மாறான துறவினால் 'கூடாவொழுக்கம்' பரவிக்கிடந்தது. வடவரின் பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் எனும் நான்கு நிலைகள் இங்கு பெருமையாய்ப் பேசப்பட்டு, கிருகஸ்தத்தை விட ஏனையவை கூடுதல் பெருமையுடையவையாய்க் கருதும் நிலை பரவியது. மறு உலகம் செல்லுதற்கான 'தவ'முயற்சிகள், மிகவும் சிறப்பிக்கப்பட்டு, இவ்வுலக வாழ்வு வெறுப்பிற்கும் மறுப்பிற்கும் உரியது போல மறுதலிக்கப்பட்டு, இழிவு படுத்தப்பட்டது. அரசியல் போர்களிலும் ஆட்சி நெறிகளிலும் சாணக்கியத் தனம் பெருவழக்காகிக் கொண்டு வந்தது.

பௌத்த சமண சமயங்களில் உயிர் இரக்கம், மனித நேயம் முதலிய பல நற்சிந்தனைகளிருந்தாலும் அவை கடுந்துறவைப் போதித்தன; இவ்வுலக வாழ்வை அறவே புறக்கணித்தன.

அகம் புறம் எனக்கொண்டு, இவ்வுலக மானுட வாழ்வைப் போற்றி வாழ்ந்த தமிழர்களுக்கு, முதலில் புதுமை வேட்கையில் இவற்றில் ஈர்ப்பிருந்தாலும் பிறகு ஏற்க இயலவில்லை.

காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே *(1138)*

என்பது தொல்காப்பியம்.

வாழ்க்கையை நன்கு அனுபவித்து வாழ்ந்து, இயல்பாக அதினின்றும் விடுபடுவதே துறவு என்பது இதன்சாரம். அதாவது இல்லறத்தின் தொடர்ச்சியே துறவறமன்றி, அஃது ஒரு தனி நிலை அன்று.

தானம் பெறுதலும் தருமமே என்பதும், தாய் பசித்தால் தகாதன செய்தும் காக்கலாம் என்பதும் மேலும் இது போல்வனவும் வடநூல்கள் உணர்த்துவன.

திருவள்ளுவர் தமிழரிடையே காணப்பட்ட குறை குற்றங்களையும் மறுத்து, நல்வழி காட்டினார். வடநாட்டுத் தொடர்பாலும் புறச்சமயத் தொடர்பாலும் ஏற்பட்டனவான, தமிழர் பண்பாட்டுக்கு முரண்பட்ட அனைத்தையும் மறுத்தார்.

அவர் வேள்விப் பெயரால், ஆகுதி என்று உயிரினங்கள் முதலாக, மக்களுக்குப் பயன்படும் அனைத்தையும் அக்கினியில் போட்டு, அவ்வுலகிற்கு அனுப்புவதை அறவே மறுத்தார். தமிழக மன்னர்கள் வேள்வியில் காட்டிய பேரார்வத்தைப் புறநானூற்றாலும் பதிற்றுப்பத்தாலும் நன்கு அறியலாம். இச்சூழலில் தோன்றிய திருக்குறள், கன்னத்தில் அறைந்தாற்போல், வேள்வியை மறுத்துரைத்தது. திருவள்ளுவர் தமது நூலை அரங்கேற்றச் சங்கப் புலவர்கள் முதலில் தடுத்தனர் என்ற செவி வழிக் கதையில் உண்மை இல்லாமல் இல்லை.

தன் கருமம் செய்வதே தவமென்றும், இல்லறத்திலிருந்து சிறுகச் சிறுகப் பற்றுவிடுவதே துறவென்றும், அனைத்துயிர்க்கும் அருள் காட்டுபவரே அந்தணராவர் என்றும் இங்ஙனம் அவர் கூறும் புரட்சிச் சிந்தனைகள் நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன.

வடநூல்களின் வழிப்பட்ட மரபுகளைத் தலையிலடித்தாற்போல் மறுக்கும் திருக்குறளைச் சிலர் வடநூல்களின் வழிப்பட்டதெனக் கூறிவந்தது நகைப்பிற்கிடமாகும் முடிபாகும்.

திருக்குறள் தமிழர் பண்பாட்டின் பிழிவு, தமிழர் வாழ்வு நெறிகளின் வழிகாட்டி, தமிழர்களின் அடையாளம், முகவரி என்பதே முழுமையான உண்மையாகும்.

# 11. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் தோன்றிய வரலாற்றைக் காட்சிக் காதையிற் காணலாம். மலைவாணர் பலர்கூடி வேங்கை மரத்தடியில் துயருற்றிருந்து கணவனுடன் விண்ணகம் போன ஒரு பெண்ணைப்பற்றி, பேரியாற்றங்கரைக்கு மலைவளம் காண வந்திருந்த சேரன் செங்குட்டுவனிடம் கூறினர். அம்மன்னனுடன் அவன் மனைவி வேண்மாளும் இளங்கோவும் தண்டமிழாசான் சாத்தனும், சென்றிருந்தனர். மலைவாணர் கூற்றைக் கேட்ட சாத்தனார் 'ஒண்தொடி மாதர்க்குற்றதை'யெல்லாம் எடுத்துக் கூறுகிறார். இங்ஙனம் அக்கதையைக் கேட்ட காரணத்தால், உணர்ச்சியால் உந்தப்பெற்ற இளங்கோவடிகள்,

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" (பதிகம்)

என்றார்.

சிலப்பதிகாரத்தை *30* காதைகளாகப் பகுத்து, மூன்று காண்டங்களில் அமைத்து அருளினார் அவர். புகார்க் காண்டம் *10* காதைகள், மதுரைக் காண்டம் *13* காதைகள், வஞ்சிக் காண்டம் *7* காதைகள், இவற்றுள் வேட்டுவவரி, கானல்வரி போல் வரிப்பாடல்களாக அமைந்த காதைகளும் ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவைபோல் குரவையாடல்களாயமைந்த காதைகளும் உண்டு. மங்கல வாழ்த்து முதல் வரந்தருகாதை வரை கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக்கிக் காட்டுதலே இளங்கோவின் உட்கோளாகும். அதனால் "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்பதே சிலம்பின் உயிரோட்டம் எனலாம். கோவலன் மாதவியைப் பிரியும் போதும் கோவலனும் கண்ணகியும் புகார் நகரைப் பிரியும்போதும் கோவலன் உயிர்பிரியும்போதும் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டக் காண்கிறோம். பாண்டியன் தான் செய்த தவற்றுக்காக இறப்பது "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்பதைக் காட்டுகிறது.

இளங்கோவடிகள் இந்நோக்கங்கட்காகப் பதிகத்தில் 'முடிகெழு வேந்தர் மூவர்க்குமுரியது அடிகள் நீரே அருளுக' என்றதற்கு ஒப்ப, மூன்றுநாடு, மூன்று நகரம், மூவேந்தர் என அனைத்தையும் நடுநிலைமையுடன் ஒருங்கே காட்டித் 'தமிழக ஒருமைப்பாட்டைத் தோற்றுவித்தலே' அவரது தலையாய நோக்கமாகும்.

இளங்கோவடிகள் இசைநாடகப் பண்புகள் மிளிர இதனை யாத்தமையால் இது இயலிசைநாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள் எனப்படும். இடையிடையே ஒரு சிறிது உரைநடை வரக் கோத்தமையால் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளுமாகும். நாடகக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றெல்லாம் இன்று அது சிறப்பிக்கப்படுகின்றது. "சிலப்பதிகாரம் என்று ஓர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு" என்ற பாரதியார் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" எனப் பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முழுதும் அரும்பத உரையொன்றும் முதல் *23* காதைகள் வரை *(கானல்வரி நீங்கலாக)* அடியார்க்கு நல்லார் உரையொன்றும் உள.

கோவலன் என்ற வணிக மகனை மணந்துகொண்ட கண்ணகி சில ஆண்டுகள் அவனுடன் இன்புற்று வாழ்ந்தாள். மாதவி என்ற கணிகை ஆடற்கலையரசியாய் அரங்கேறிய போது, அதனைக்கண்டு மனத்தைப் பறி கொடுத்த கோவலன் தன் வீட்டையும் மனைவியையும் மறந்து அவளுடனேயே உறைவானாயினான். பின்னர் அம்மாதவியுடனும் மனம் மாறுபட்டு, அவன் இல்லம் திரும்பினான். அப்போது எஞ்சியிருந்த சிலம்புடன் அவன் வாணிகம் செய்து பிழைத்தற்பொருட்டு மாடமதுரை நோக்கித் தன் மனைவியுடன் நடக்கலானான். கவுந்தியடிகள் என்ற சமணத்துறவி அவர்களுக்கு வழித் துணையானார். வழியிடையே எதிர்ப்பட்ட மாங்காட்டு மறையவனிடம் வழி கேட்டுக் கொண்டு நடந்து, அவர்கள் மதுரைப் புறஞ்சேரியை அடைந்தனர். அங்கே துறவிகளே தங்கலாம். ஆதலின் கவுந்தியடிகள் அவ்வழியாகப் போந்த மாதரியிடம் கண்ணகி கோவலன் இருவரையும் ஒப்படைத்து ஊருக்குள் அனுப்பிவைத்தார்.

மாதரி வீட்டில் மனைவி சமைத்த உணவினையுண்டு. கோவலன் நகருக்குள் புறப்பட்டான். வழியிடையே பொற்கொல்லன் ஒருவனைக் கண்டு சிலம்பைக் காட்டினான்; அவன் மன்னனுடைய தேவியினது காற்சிலம்பை முன்னமே திருடியவனாதலின் கோவலனைக் 'கள்வன்' என அரசனிடம் பிடித்துக் கொடுத்துவிட்டான். அரசன் ஆராயாது கொல்லும்படி கட்டளையிட்டுவிட்டதால், கோவலன் கொலையுண்டான். பின்னர் கண்ணகி பாண்டியன் அவை சென்று வழக்காடி, தன்சிலம்பு மணிப்பரல் உடையதெனக் கூறி அதனை உடைத்து மெய்ப்பித்தாள். பாண்டியன் தேவியின் காற்சிலம்பு முத்துப்பரல்களை உடையது. அதனால் தன் குற்றமுணர்ந்த பாண்டியன் அரியணையிலிருந்தவாறே விழுந்து உயிர்விட்டான்; அவன் தேவியும் உடனுயிர் நீத்தாள். சினந்தணியாத கண்ணகி மதுரையை எரியூட்டினாள். பிறகு மேற்கு நோக்கியே நடந்து, சேரநாட்டு எல்லையை அடைந்து, நெடுவேள்குன்றம் அடிவைத்து ஏறி, வேங்கைமர நிழலிலிருந்து பதினான்காம் நாள் வானவனாகிய கணவன் வந்தழைக்க, உடன் சென்றனள். இங்ஙனம் மதுரைக் காண்டத்துடன் அவலமாகக் கதை முடிகிறது. வஞ்சிக் காண்டத்தில் செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி, கோயிலெழுப்பிய செய்தி இடம் பெறுகிறது.

## தனிச் சிறப்புக்கள்

சங்க காலச் சாயலையும் சங்க இலக்கியப் பண்புகளையும் நாம் சிலம்பில் மிகுதியாகக் காண்கிறோம். சிலம்பில் காணப்படும் அகப்புறக் கூறுகள் மிகப்பல. முல்லை *(ஆய்ச்சியர் குரவை)*, குறிஞ்சி *(குன்றக் குரவை)*, மருதம் *(நாடுகாண் காதை)*, நெய்தல் *(கானல் வரி)*, பாலை *(வேட்டுவவரி)* என ஐந்து நிலப் பாங்கும் மக்கள் வாழ்வு முறையும் பற்றிய பகுதிகள் பலவுள. கானல்வரியும் குன்றக் குரவையும் போல்வன உணர்த்தும் அகத்திணைக் கூற்றுமுறைகளும் பலவாகும். புறத்திணை வளர்ச்சியையும் நாம் சிலம்பில் காண்கிறோம். "காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல், சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்........" *(1006)* என ஆறு துறைகளைத் தொல்காப்பியர் சுட்டுகின்றார். இவற்றையே காட்சிக்காதை, கால்கோள் காதை, நீர்ப்படைக் காதை, நடுகற்காதை, வாழ்த்துக் காதை, வரந்தரு காதை எனச் சிலம்பு காதைகளாக வகுத்துரைக்கிறது. சிலம்பு திருக்குறளின் வழியையும் பின்பற்றுகிறது என்பதற்குப் பல சான்றுகள் உள.

> பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
> பிற்பகல் தாமே வரும் *(319)*

என்ற குறட் கருத்தே,

> முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
> பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண் (xxi-3-3)

எனக் கண்ணகி வாயிலாக வெளிப்படுகிறது.

இங்ஙனம் தொகைப் பாடல்களோடு ஒற்றுமைப் படினும் அவற்றின் வேறுபட்டு நின்று அக்காலக் கலைகளையும் மக்கட்பழக்க வழக்கங்களையும் உணர்த்துமிடங்கள் பலவாகும். மரபு தழுவிய அகப்புறப் பாடல்களுக்கும் கதை தழுவிய சிலம்பிற்கும் இங்ஙனம் வேறுபாடிருப்பது இயற்கையேயன்றோ?

சிலப்பதிகாரம் தமிழர்களின் ''இசையிலக்கணம்'' உணர்த்தும் நூலென்று பாராட்டப்படுகிறது. மங்கல வாழ்த்துப் பாடல், அரங்கேற்று காதை, கானல்வரி, வேனில் காதை, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை, ஊர்சூழ்வரி, வஞ்சினமாலை, குன்றக் குரவை, வாழ்த்துக்காதை ஆகியன அக்காலத்து இசைக்கலை பற்றியும், இசைப்பாடல் அமைதி பற்றியும், ஆடல் வகை பற்றியும் உணர்த்தும் செய்திகள் பலவாகும். மாதவி தன் நாட்டியக் கலையை நாட்டிய ஆசிரியனிடம் மட்டும் பயிலவில்லை. அவ்வாசிரியனுடன் இசை, தமிழ், தண்ணுமை, குழல், யாழ் ஆசிரியர்களும் அவளுக்குப் பயிற்சி தந்தனர் என்பது அவள் அரங்கேறியகாலை உணர்த்தப்படுகிறது.

> **குழல்வழி நின்றது யாழே; யாழ்வழித்**
> **தண்ணுமை நின்றது தகவே; தண்ணுமைப்**
> **பின்வழி நின்றது முழவே; முழவோடு**
> **கூடிநின் றிசைத்தது ஆமந்திரிகை**

இவ்வளவு பின்னணி இசையுடன் 'நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக் காட்டினாளாம்' மாதவி.

சிலம்பு கூறும் நாட்டிய அரங்க அமைப்பு, எழினி *(திரை)* அமைப்பு, விளக்கு ஒளி அமைப்பு ஆகிய செய்திகள் சிறப்பானவை; கடலாடுகாதையில் பதினொரு வகை ஆடல்கள் சுட்டப்படுகின்றன. கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மல்லாடல், துடிக்கூத்து, குடைக்கூத்து, குடக்கூத்து, பேடிஆடல், மரக்காலாடல், பாவைக் கூத்து, கடையம் என்பன அவை. மாதவி இவற்றை எங்ஙனம் ஆடினாள் தெரியுமா?

**அவரவர் அணியுடன், அவரவர் கொள்கையின்**
**நிலையும் படிதமும் நீங்கா மரபின்**
**பதினோர் ஆடலும் பாட்டின் பகுதியும்**
**விதிமாண் கொள்கையின் விளங்கக் காணாய்** (vi)

என்று விஞ்சையன் தன் காதலிக்குக் காட்டி மகிழ்கின்றான். எண் வகை வரிக்கூத்தையும் அது விளக்குகிறது (viii).

சிலப்பதிகாரம் நாட்டுப்புறப் பாடல்களாகிய வாய்மொழி இலக்கியத்தைப் பெரிதும் போற்றி, நம் நெஞ்சையள்ளும் வகையில் வெளிப்படுத்துகிறது. வேட்டுவவரி, கானல்வரி, ஆற்றுவரி, ஊசல்வரி, கந்துகவரி, அம்மானைவரி என வருவன நாட்டுப்புறப் பாடல்களின் இலக்கிய வடிவங்களே.

**"திங்கள் மாலை வெண் குடையான்**
**சென்னி செங்கோல் அதுஓச்சி**
**கங்கை தன்னைப் புணர்ந்தாலும்**
**புலவாய் வாழி காவேரி**
**கங்கை தன்னைப் புணர்ந்தாலும்**
**புலவாதொழிதல் கயல் கண்ணாய்**
**மங்கை மாதர் பெருங் கற்பென்று**
**அறிந்தேன் வாழி காவேரி"**

என்னும் கோவலனின் ஆற்றுவரிப் பாடலில் அடி மடக்கி வந்து, அதன் வாய்மொழிப் பண்பைக் காட்டுகிறது.

**"பொன்னிலங்கு பூங்கொடி! பொலஞ்செய் கோதைவில்லிட**
**மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்**
**தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்துமே**
**தேவர் ஆர மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே"** (xxix)

இக்கந்துக வரிப் பாடலில் பந்தடிக்கும் ஓசை மிளிரக் காணலாம். நாட்டுப்புறப் பாடல்களில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தவர் இளங்கோவடிகள் என்பதற்கு ஒரு சான்று நாடுகாண் காதையில் இடம் பெறுகிறது. காவிரியாற்றங்கரையில் உழவர்கள் ஆரவாரத்தைக் கேளுங்கள்:

"கருங்கை வினைஞரும் களமரும் கூடி
ஒருங்குநின் றார்க்கும் *ஒலியே* அன்றியும்......
செங்கயல் நெடுங்கண் சில் மொழிக்கடைசியர்
வெங்கள் தொலைச்சிய *விருந்தின் பாணியும்*......
பார்உடைப்பனர் போல் பழிச்சினர் கைதொழ
ஏரோடு நின்றோர் *ஏர்மங்கலமும்*
அரிந்து கால் குவித்தோர் அரி கடாவுறுத்த
பெருஞ் செய்ந் நெல்லின் *முகவைப் பாட்டும்*
தெண்கிணைப் பொருநர் செருக்குடன் எடுத்த
மண்கணை முழவின் *மகிழிசை ஓதையும்*" (x)

ஆகியவற்றைக் காவிரியாற்றங்கரையிலே கேட்டுக்கொண்டே நடந்தார்களாம் கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளும்! அவர்கள் இப்பாட்டுக்களைக் கேட்டுக்கொண்டே. சென்றதனால்தான், 'ஆர்வநெஞ்சமோடு அவலங் கொள்ளாராய்ச்' சென்றனராம். இங்ஙனம் குறிப்பிடும் இளங்கோவடிகள் பேரவலம் நிறைந்த கதை என்பதனால்தான் போலும் இத்தனை நாட்டுப் புறப்பாடல்களுக்கு இலக்கிய வடிவம் தந்து, இடையிடையேமிடைந்து தந்துள்ளார்.

தமிழிலக்கியவுலகில் நாட்டுப்புறப்பாடல்களுக்கு மிகச் சிறந்த இலக்கிய வடிவங்களைத் தந்து நம் உள்ளங் கவர்ந்தவர்கள் இளங்கோவடிகள், மாணிக்கவாசகர், தாயுமானவர், வள்ளலார், பாரதியார் போன்றோர் ஆவர். குயில் பாட்டில் பாரதியார் இவ்வார்வத்தை வெளியிடும் இடம் ஒன்றுண்டு.

"மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்கும்
கொற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ண மிடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணைமடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணைமுதலா மனிதர்
வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்"

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம்" என்று பாரதியார் குறிப்பிடுவதன் உண்மை இதனாற் புலனாகும்.

தொன்மைக் காலத்து நாடகப் பண்புகள் கூத்து வகைகளிலிருந்து கிளைத்தவை, ஒருவரே கதைகூறி நடித்துக் காட்டுவன; ஒரு சிலர்

உரையாடியும் ஆடியும் பாடியும் உணர்த்துவன; பாத்திரங்களாக வேடமிட்டு வந்து போவன; இடையிடையே ஆசிரியனே வந்து கதை கூறுவன என இவ்வாறமைந்த திறம் பலவும் சிலம்பிலுண்டு. நாடக அங்கதம் என்பது மேலைநாட்டு நாடகவுத்தி. அவலநாடகங்களுக்கு அது மிக இன்றியமையாதது. சிலம்பின் தொடக்கத்திலேயே,

> "காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
> தீதறுக",

என்று பெண்கள் கூடி, ஆடிப்பாடி வாழ்த்தும் போது, 'ஏனிந்த மங்கலமற்ற சொற்கள்' என நம்நெஞ்சம் துணுக்குறுகிறது. முன்னுணர்த்துதல் என்பதும் நாடகவுத்தியே. கோவலன் கண்ணகி இருவரும் மதுரைக்குள் புகும்போதே, கருநெடுங்குவளையும் ஆம்பலும் கமலமும் கண்ணீர் சிந்தி காலுற நடுங்குகின்றன! போருழந்து எடுத்த ஆரெயில் நெடுங்கொடி, வாரல் என்பது போல் மறித்துக் கை காட்டுகிறது, கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும் நீருகுத்து எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடிக்கும்போது, வரப் போவது என்னவோ என்று நம் 'நெஞ்சில் ஆர்வநிலை' (Suspense) எழுகிறது. அடைக்கலக் காதையில் மாடலன் கோவலனின் இளமைக்கால நிகழ்ச்சிகளை நினைவு கூர்கின்றான். இது பின்னோக்கு உத்தி (Flashback)யின் பாற்படும். இன்பமும் துன்பமும் கலந்துவருவதும், நகையும் அவலமும் மாறிமாறி வருவதுமான முரண்சுவையே சிறந்த நாடகக்கூறு, அவலத்தில் முடியும் சிலம்பு மங்கல வாழ்த்தாகத் திருமண மகிழ்ச்சியில் தொடங்குகிறது. அடைக்கலக் காதைக்கு அடுத்துக் கொலைக் களக்காதை, நாடுகாண் காதைக்கு அடுத்துக் காடுகாண்காதை என இவற்றை எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கும். அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் மாலையும் காலையும், கூடியவரும் பிரிந்தோரும், மகிழ்ச்சியும் அழுகையும், மாதவியும் கண்ணகியும் என அதில் அமைந்துள்ள முரண்சுவைப் பாங்கு எண்ணி யெண்ணி மகிழ்தற்குரியது. நாடகப் பண்புகளின் களஞ்சியமே சிலம்பு எனலாம்.

இங்ஙனம் எண்ணிப் பார்த்தால் சிலம்பின் ஒவ்வொரு சிறப்பும் நம்மை ஒவ்வொருவகையாகச் சிந்திக்கவைக்கும். அதில் மூன்று நாடுகளாகத் திகழ்ந்த தமிழக நிலப்பரப்பைக் காணலாம். மூன்று தலைநகரங்களை அறிமுகப் படுத்திக் கொள்ளலாம். மூவேந்தர் பெருமையை உணரலாம். மூன்று நாட்டிலும் வாழ்ந்த சமுதாய மக்களைப் பற்றிக் கோடிட்டு அறிந்து கொள்ளலாம்.

தமிழரின் தேசியக் காப்பியம், வரலாற்றுக் காப்பியம், சமுதாயக் காப்பியம் என்ற பெயர்கள் பலவும் அதற்குப் பொருந்தி வருவனவே.

சங்ககால நெடும் பாடல்களாகிய பத்துப்பாட்டின் சாயலை நாம் சிலம்பில் காண்கிறோம். தலைவன் தலைவி வருணனை, நில வருணனை

ஆற்றுவருணனை, பாடினி வருணனை என்பனவெல்லாம் மரபுவழிவந்த பண்புகளாகும். எயினர்களை ஆறலை கள்வராக மட்டும் காட்டவே அகப்பாடல் இடம் தந்தது. அவர்களின் கொற்றவை வழிபாட்டைக் காட்டச் சிலம்பில் வாய்ப்பேற்பட்டது. ஆயர்களின் ஆனிரை மேய்த்தலைச் சுட்டவே அகப்பாடலில் மரபு இடந்தந்தது. கலித்தொகை மட்டும் அவர்களின் ஏறுதழுவுதலையும் உணர்த்த முற்பட்டது. சிலம்பிலோ அவர்களின் அன்றாட வாழ்வு முறை, வழிபாடுகளைக் காண்கிறோம். பெரும்பாணாற்றுப் படையில் வரும் ஆயர்முதுமகள் பற்றிய செய்தியை மாதரியுடன் ஒப்பிட்டுக் காணலாம். பிற்காலத் தமிழ்க் காப்பியங்கள் சொல்வளமும் இலக்கியப் பல்வளமும் வாய்த்துத் திகழ்வதற்கு இம்முன்னோடியான முதற் காப்பியமே அடித்தளம் அமைத்தது.

# 12. மணிமேகலை

காப்பியத் தலைவி பெயரால் இது ''மணிமேகலை' என்றும் 'மணிமேகலை துறவு' என்றும் அழைக்கப்பட்டது. சிலம்பு போலவே முப்பது காதைகளையுடைய தாயினும், வரிப்பாடல்கள், குரவைப் பாடல்கள் போல்வன இடைவிரவி வராமல் இது வேறுபட்டுள்ளது. சிலப்பதிகாரம் சமய வேறுபாடு காட்டாமல் அமைந்திருக்க, பௌத்த சமய உண்மைகளையே சார்ந்து தோன்றியுள்ள மணிமேகலை, தமிழில் தோன்றிய முதற் சமயக் காப்பியமாக அமைந்துளது என்ற கருத்துண்டு. மணிமேகலையாகிய காப்பியத் தலைவி பௌத்த சமயத்தை அழுந்தப் பற்றிப் புறச் சமயத்தாருடன் வாதிட்டவள் ஆதலின், அவள் கதையைக்கூறும் சாத்தனார் அச்சமயவுண்மைகளைப் பாடாது தவிர்தல் இயலுமோ? எனவே வைதிகம், சமணம், பௌத்தம் போன்ற பல்வேறு சமயங்களை மதுரைக்காஞ்சி போன்ற சங்க நூல்களிற் காணும் நாம், அவற்றின் நிலைபற்றிய விரிவான விளக்கங்களைக் கதை தழுவிய காப்பியங்களிற் காண்கிறோம்.

இந்நூலாசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவர். இளங்கோ கூறும் 'தண்டமிழாசான்' சாத்தனாரும் இவரும் ஒருவரே என்பதுதான் பலரது கருத்தாகும்.

**"இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப**
**வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்**
**மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு**
**ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனென்"**

என்பது மணிமேகலைப் பதிகம்,

மணிமேகலை 'விழாவறை காதை'யில் தொடங்குகிறது. காவிரிப்பூம் பட்டினத்தில் இருபத்தெட்டு நாள் நடைபெறும் இந்திரவிழா பற்றி அது விரித்துக் கூறுகிறது.

**"பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"** (I)

விழா தொடங்குகிறது. இறுதியில் 'பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை'யில் கதை முடிகிறது.

இந்திரவிழாவில் நாட்டியமாடுதற்கு மாதவியும், வரவில்லை; மணிமேகலையும் வரவில்லை. அதனால் ஊரார் பழிதூற்றுவதாக மாதவியின் தாய் சித்திராபதி வயந்தமாலையிடம் கூறியனுப்புகிறாள். அதற்கு மாதவி,

'மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்' (II)

என்று விடைகூறக் காண்கிறோம்.

மணிமேகலை தன் பெற்றோர் உற்ற துயரைக் கேட்ட அளவில் கண்ணீர் சிந்த, அதனால் அவள் புத்த பகவானுக்குத் தொடுத்த மாலை தூய்மை இழந்தது. அதனால் மணிமேகலை சுதமதியுடன் உவவனம் சென்றாள். மணிமேகலையின் அழகை வியந்த ஊரார் 'இவளை அருந்தவப் படுத்திய தாய் கொடியள்' எனத் தூற்றினர். அவள் மீது அன்பு கொண்டிருந்த, சோழ அரசன் மகனான உதயகுமரன், தேரேறி அவளைத் தொடரலாயினான். புத்த பீடிகை உள்ள பளிக்கறையில் மணிமேகலை உட்புகுந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டாள். எவ்வாறேனும் அவளை அடைவதென உறுதிபூண்டு நின்ற உதயகுமரனிடம் சுதமதி அறிவுரை கூறி அனுப்பினாள். மணிமேகலை மனமும் ஒருசிறிது உதயகுமரன்பால் சென்றது.

மணிமேகலா தெய்வம் சக்கரவாளக் கோட்டத்தில் படுத்துறங்கிய மணிமேகலையை, மணிபல்லவத் தீவிற்குத் தூக்கிச் சென்று, அங்கு வைத்து விட்டுப் போயிற்று. துயிலெழுந்த மணிமேகலை சுதமதியைக் காணாது அரற்றினாள். அப்போது புத்தபீடிகை தோன்றவே, அதனை வணங்கிய மணிமேகலைக்குப் பழம்பிறப்பு உணர்ச்சி ஏற்பட்டது. பிறகு மணிமேகலா தெய்வம் அவள் முன் தோன்றி, "நீயும் உதயகுமரனும் பழம்பிறப்பில் கணவன் மனைவியராக விளங்கியவர்கள். அதனால் உன் மனமும் அவன்பாற் சென்றது. இதனையறிந்த யான் உன்னைத் தனிமைப்படுத்தவே இங்கு தூக்கி வந்தேன்" என்று கூறியது. பிறகு வேற்றுரு எடுக்கவும் வான் வழியாகச் செல்லவும் பசியை அடக்கவும் வல்ல மூன்று மந்திரங்களை நல்கிச் சென்றது அத்தெய்வம்.

பின்னர் அத்தரும பீடிகையைக் காக்கும் தீவதிலகை தோன்றி, ஆபுத்திரன் கையிலிருந்ததும் அள்ள அள்ளக் குறையாததுமான அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரம் அன்றே மணிமேகலை கையிற் கிடைக்கும் எனக் கூறினாள். அதுபோல அதனைப் பெற்ற மணிமேகலை, அறவணவடிகளிடம் அறிவுரை பெற்றாள்; ஆதிரை என்னும் கற்புக்கரசியிடம் முதன் முதல் பிச்சை பெற்றுப்பிறகு காணார், கேளார், கால்முடப்பட்டோர் முதலிய ஏழைகள் அனைவருக்கும் பசிப்பிணி தீர்த்தாள்.

உலகவறவியில் உணவூட்டிப் பணி செய்து கொண்டிருந்த மணிமேகலையைச் சித்திராபதியின் தூண்டுகோலால் தேடிச் சென்ற உதயகுமரன், அவளுக்கு இன்னல் விளைவிக்க எண்ணினான்; இதனை உய்த்துணர்ந்த மணிமேகலை, விரைவில் காயசண்டிகை வடிவெடுத்துப் பணி செய்யலானாள். சிறைச்சாலையில் உள்ள குற்றவாளிகட்கு உணவூட்டி

அதனை அறச்சாலையாக மாற்றினாள். இதனை அறிந்த காவலர்கள் அவளைச் சோழனிடம் அழைத்துச் சென்றபோது, இவள் அம்மன்னனிடம் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றும்படி கேட்டுக் கொண்டாள்; மன்னனும் அவ்வாறே செய்தான்.

காயசண்டிகையின் யானைப்பசியைத் தீர்த்த மணிமேகலை அவள் வடிவிலேயே உலகவறவியில் நடமாடினாள். ஆண்டுக்கொருமுறை அங்கு வரும் அவள் கணவன் விஞ்சையன், மணிமேகலையை உருமாறிய நிலையில் தன் மனைவி என்றே எண்ணி அவளை நாடிவந்த உதயகுமரனை வாளால் எறிந்து கொன்றுவிட்டான். பின்னர்க் கந்திற்பாவையின் அறிவுரையால் அவன் அவ்விடம் விட்டகன்றனன்.

பின்னர் உதயகுமரன் கொலையுண்டது தொடர்பாக மணிமேகலை சிறைப்படுத்தப்பட்டாள். சோழமாதேவி மணிமேகலைக்குச் சொல் லொண்ணாத் துன்பங்களைச் செய்து வாட்டினாள். அவற்றால் எல்லாம் வாடாதிருந்த மணிமேகலையைக் கண்டு, அம்மன்னன் மனைவி அறிவு பெற்றாள். பின்னர் மணிமேகலை ஆபுத்திரனாடு அடைந்து, அவனைக் கண்டு அவனுடன் மணிபல்லவம் புகுந்து, அங்கிருந்து வஞ்சிமாநகர் சென்றாள். கண்ணகி கோவலன் படிமங்களைக் கண்டு அழுதாள். மாதவன் வடிவுபூண்டு, அவள் அங்கே சைவம், அளவை, பிரமம், வைணவம், வேதம், ஆசீவகம், சமணம், சாங்கியம், வைசேடிகம், பூதம் முதலாய நெறிகளின் கோட்பாடுகளை அவரவர் வாய்க்கேட்டறிந்தாள். பிறகு காஞ்சிமாநகர் மழையின்றி வாடுவதைக் கேள்விப்பட்டு வான்வழியாகக் காஞ்சிக்குச் சென்றாள். அங்கு தாயரையும் அறவணவடிகளையும் கண்டபின் தன் ஆண் வேடத்தை அவள் அகற்றினாள். அறவணவடிகளிடம் அவள் தவத்திறம் பூண்டு தருமம் கேட்டாள். அதனால் அவள் அக்காஞ்சியிலேயே பவத்திறம் அறுகென நோற்பாள் ஆயினாள்.

## சிறப்பியல்புகள்

மணிமேகலையைப் பற்றி முனைவர் வ.சுப.மா. குறிப்பிடும்பொழுது, "பரத்தையொழிப்போடு மதுவொழிப்பு, சிறையொழிப்பு, சாதியொழிப்பு என்றினைய சமுதாயச் சீர்திருத்தங்களின் களஞ்சியம் இக்காவியம்" என்பார். சிலம்பு போலச் சுவை மிகுமாறு எழுத வாய்ப்பின்மையின், பல கிளைக் கதைகளையும் அழகிய வருணனைகளையும் நடையெளிமையையும் காட்டி மனத்தை ஈர்க்கப்பார்க்கின்றார் சாத்தனார்.

புத்தமதக் கருத்துக்களை அழகிய தமிழில் மொழிபெயர்த்துத்தரும் இப்பெருங்காப்பியத்தில் வடமொழி, பாலிமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்து வந்துள்ளன. முனைவர் உ.வே.சா. அவர்கள், "சமய சம்பந்தமான சில சொற்களையும் தொடர்களையும் வேறு சிலவற்றையும் இடத்திற்கேற்ப இவர் மொழிபெயர்த்து அமைத்திருத்தல் மிகப்பாராட்டற்கு உரியதொன்றாம்", என்று குறிப்பிட்டுள்ளமை கொண்டும் இதை அறியலாம்.

இதன்கண் சிறந்த அனுபவ உரைகளையும் அறிவுரைகளையும் காணலாம். மணிமேகலை தன்மனம் தன்னையும் அறியாமல் உதயகுமரனிடம் செல்லக்கண்டு, கீழ்வருமாறு வருந்தியுரைக்கிறாள்;

"கற்புத் தானிலள் நற்றவ உணர்விலள்
வருணக் காப்பிலள் பொருள்விலை யாட்டி என்று
இகழ்ந்தன னாகி நயந்தோன் என்னாது
புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்
இதுவோ அன்னாய் காமத் தியற்கை" *(V)*

உலகியல் யாரையும் வழுவவைக்க முயலும் என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

பசிப்பிணியின் கொடுமையையும் அதைத்தீர்ப்பதன் நன்மையையும் இந்நூலிற்போல எடுத்துரைக்கும் இடங்களை வேறு எந்நூலிலும் காண்டலரிது.

"பசிப்பிணி என்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது" *(XI)*

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே" *(XI)*

"மக்கள் தேவர் எனஇரு சார்க்கும்
ஒத்த முடிவின் ஓரறம் உரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்
தவப்பெரும் நல்லறம் சாற்றினர்......" *(XII)*

"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது, கண்டதில்......" *(XXV)*

இவ்வாறு மணிமேகலை முழுவதும் பொதுளிக் கிடக்கும் செய்தி இதுவாகும். இத்தகையதொரு சிறந்த சமுதாய அறநூல், அதன் சமயச்சார்பு கருதிப் போலும் பலராலும் போற்றிக் கற்கப்படாதுபோயிற்று, காமங்கொண்டு மணிமேகலையைப் பின்தொடர்ந்த உதயகுமரனுக்குச் சுதமதி அறிவுரை கூறி, இவ்வுடம்பின் இழிவைச் சுட்டுமிடம் சிந்தனையைத் தூண்டுவதாகும்.

"யான் ஒன்று கிளப்பல்;
வினைவிளங்கு தடக்கை விறலோய்! கேட்டி!
வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கில் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி இருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்

புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா உள்ளம் தன்பாலுடையது
மக்கள் யாக்கை" (IV)

அருவருப்பு என்னும் சுவையைத் தோற்றுவித்து உடம்பின் இழிதகவை இவ்வடிகள் நன்கு புலப்படுத்துகின்றன.

இந்நூலில் உவவன வருணனை, புகார் நகர வருணனை, அந்திப் பொழுதின் வருணனை எனப்பல வருணனைகளும், அழகிய உவமைகளும் இடம்பெற்றுக் காப்பிய நலன் சிறக்கச் செய்கின்றன. சுதமதி தன்னுடன் மணிமேகலை மலர்கொய்யப் புகுந்த உவவனம் சித்திரப்படாம் போர்த்தது போல இருந்ததாகப் புனையும் திறம் அழகிது.

"குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமும் தளவமும் முடமுள் தாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங்கால் அசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்........" (III)

## இரட்டைக் காப்பியம்

சிலம்பும் மேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனப்படும். கண்ணகி, மாதவி, கோலவன், கதையைச் சிலம்பு கூறும்; கோவலன் மாதவி இருவரின் மகளான மணிமேகலை கதையை மேகலை கூறும், "மணிமேகலை மேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்', என்பது சிலம்பில் இறுதிக் கட்டுரை வாக்கியமாகும். இரண்டு பதிகங்களும் இளங்கோவும் சாத்தனாரும் ஒருவர் கேட்க ஒருவர் நூலரங்கேற்றியமையை விளக்குகின்றன. முனைவர் வ.சுபமா. தம் 'இரட்டைக் காப்பியங்கள்' என்ற நூலில், இவ்விரண்டினிடையே காணப்படும் சொல்லொப்பு, தொடரொப்பு, இலக்கண ஒப்புமைகளைச் செவ்விதின் எடுத்துக் காட்டியுள்ளார்.

சிலர் இவை இரட்டைக் காப்பியங்கள் அல்ல எனவும் மணிமேகலை பிற்பட்ட காலத்தது எனவும் சாதிப்பர். சிலம்பு சமயம் சாராதது. மேகலையில் 'குச்சரக் குடிகை' என்ற சொல்லாட்சி வருகிறது. இது வடநாட்டுக் கூர்ச்சரத்தைக் குறிப்பதாகக் கொண்டு, அதன் காலம் கி.பி.6ஆம்

நூற்றாண்டு ஆதலால், மணிமேகலையின் காலம் அதற்குப் பிற்பட்டதென்பர். குச்சரக் குடிகை என்றால் சிறிய கோட்டம் என்பது பொருள். குச்சு என்பது இன்றும் உலகவழக்கில் சிறிய குடிசையைக் குறித்தல் காண்க.

மேகலை குறிக்கும் 'மகாயான புத்த சமயம்' காலத்தால் முற்பட்டது என்பர் முனைவர் மா. இராசமாணிக்கனார். பிற பல வலுவான சான்றுகளிருக்கவும் ஓரிரு சொற்களைக் கருதியோ, சமயச் சார்பு கருதியோ மணிமேகலையைப் பிற்காலத்தது எனக் கூறுதல் பொருத்தமன்று.

தமிழ் இலக்கியங்களை முழுமையாகப் பழுதறக் கற்ற பிறகே, அவை பற்றிய ஆய்வுரைகளை மட்டும் முன்வைக்க வேண்டும். எதனிலும் ஆழ்ந்த கல்வியின்றிக் கருத்துக் கூறுதல் *(Opinion)* பழிக்கத் தக்கதாகும். இதுகாறும் ஒருவர் ஒன்றைக் கூறிவைத்து விட்டுப் போய்விட்டால், பின்னே வருபவர்கள் அந்நூல்களையோ, நூற்பகுதிகளையோ படிக்காமல், தாமும் உள்நுழைந்து பயிலாமல், திருப்பி ஒப்பிப்பது பழக்கமாயிற்று. இதுவே நடுவுநிலை எனவும், வாதிக்கப்படுவது, 'வெண்மைஎனப்படுவது யாதெனின்..........' என்ற குறளை நினைப்பூட்டுகிறது.

சிலப்பதிகாரத்திற்கும் மணிமேகலைக்கும் உள்ள 'இரட்டைக் காப்பிய' ஒப்புமைகளை, வ.சுப. மாணிக்கம் தமது 'இரட்டைக் காப்பியங்கள்' பதிப்பின் *(செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1958)* ஆய்வு முன்னுரையில் தந்துள்ளார். பதிக ஒப்புமை, சொல்லொப்பு, தொடர் ஒப்புமை, அடி ஒப்புமை, இலக்கண ஒப்புமை, திருக்குறள் மேற்கோள் ஒப்புமை, உவமையொப்பு, உருவகநடை, நூல்நயம், கற்பியல், வினையியல் முதலாயவை எளிதில் மறுக்கக் கூடியன அல்ல.

அக்காலப் புலவர்கள், தாம் பாட எடுத்துக்கொண்ட பொருளுக்கு உண்மையானவர்கள். ஒரு புத்தமதக் கதையை, வரலாற்றுவழிக் கதையைக் காப்பியமாகப் படைக்கும் ஒருவர், அத்துறையை ஐயமறக் கற்று, அறிந்த பின்னர் அதனைப் படைக்கப் புகுவர். கவுந்தியடிகளைப் படைக்கும் இளங்கோவடிகள் சமண மதக் கருத்துக்களை, அவர் வழி முழுமையாய்த் தருதல் இயல்பேயாம். அவர் குணவாயிற் கோட்டத்து அரசு துறந்து இருந்தமை அறியப்படுதலால், அவரைச் சமணர் எனலாம். எனினும் நூல் முழுவதும் அக்காலச் சூழலையும், சமய நிலைகளையும் அவரால் தெளிவுபடக் கூறமுடிந்துளது. ஆய்ச்சியர் குரவையில் ஆழ்வாராகவும், குன்றக் குரவையில் சிவனியச் செல்வர் போலவும் அவர் மாறுவதன் நுட்பம், ஒரு படைப்பாளிக்கு வேண்டிய முன்னுதாரணம் அன்றோ? ஏனைய அகப்பாடல்கள் மரபுக்குட் பட்டவை. சிலம்பு அகம், புறம் இரண்டின் பரிணாமமே. அதைப் பிற்காலத்தது என்பதால், யாரும் நடுநிலைமிக்கவர் ஆகிவிடுதல் இயலாது. வேட்டுவ வரியை ஒரு காட்டாகக் கூறலாம்.

தொல்காப்பியத்தால் குறிப்பால் உணரப்படும் பாலை நிலம் பற்றி

> **வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்**
> **தானலம் திருகத் தன்மையிற் குன்றி**
> **முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
> **நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
> **பாலை என்பதோர் படிவங் கொள்ளும்** *(11-62:66)*

என இளங்கோ தரும் விளக்கம், சங்க காலப் பின்புலமான நிலத்தையே காட்டுகிறது. வேட்டுவ வரி, இந்நிலக் கலப்பால் ஏற்படும் கொற்றவை வழிபாடு, சேயோனையும் மாயோனையும் இணைக்கும், ஆணும் பெண்ணுமாய் ஒருருவில் மாறியமையும் தன்மையைச் சுட்டுகிறது.

சிலம்பு காப்பியமாக உருவானதால் *1.* சமயம் சார்ந்த செய்திகளை விரித்துக் கூற முடிந்தது. *2.* அகப் புறத் திணை, துறைகளைக் கதைவடிவப் படுத்த இயன்றது. *3.* முற்றிலும் சங்க காலச் சமுதாயமே - மாடல மறையவன் ஊடாடுதல், மாங்காட்டுப் பார்ப்பனன், மூவேந்தர் மனநிலை, தமிழ் மன்னர் வேள்வி வேட்கை, தமிழ் மக்களின் செல்வச் செழிப்பும் காமக் களியாட்டமும் வரம்புமீறிய வாழ்வும், அந்தணரும் புறச்சமயத்தவரும் போதகர்களாக - அறவுரை கூறுபவராக - மதிக்கப்படுபவராக - வழிகாட்டுபவராக ஆன நிலைமை, புறப் பண்பாட்டுக் கலப்புக்கள் என இவை வெளிப்படையாகப் படம்பிடித்துக் காட்டப்படுகிறது. நுணுகிக் கற்பார் சிலம்பு காட்டும் ஒவ்வொரு நிலவழி, இயற்கை வண்ணனை வழி, மக்கள் வாழ்வு வழிச் சமுதாயம், சங்கப் பாடல்கள் காட்டும் சமுதாயமே என ஐயமற உணர்வர். *4.* சிலம்பு அக்காலக் கூத்து முறைப்படி அமைந்த நாடகக் காப்பியம், மலையாளத்தில் இன்றும் வழங்கும் 'அச்சன் கூத்துப்' போன்றது அது. *5.* சிலம்பின் காப்பியக் கட்டமைப்பு உலகம் வியந்து போற்றத்தக்க ஒன்றாகும்.

மணிமேகலை, முற்றிலும் சமயம் சார்ந்த ஒருத்தியின் வரலாற்றைக் காப்பியமாக்கியதால், அதற்கேற்ப அமைந்தது. புறச் சமய மெய்யியலையும் கலைச் சொற்களையும் எவ்வாறு 'தமிழ்மைப்' படுத்துவது என வழிகாட்டிக் கம்பரைப் போன்றவர்க்கு அடியெடுத்துக் கொடுத்த சாத்தனார் போற்றுதலுக்குரியவர்.

இக்காப்பியங்கள் எதிர்காலத்தில் இன்னும் ஆழமாய்க் கற்கப்பட்டு ஒப்பியல் பார்வை மூலம் பல உண்மைகளை உலகிற்குணர்த்தும் என்பதுறுதி.

# 13. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் முத்தொள்ளாயிரமும்

பதினெண் கீழ்க்கணக்கு எனும் பெயர், பிற்கால உரைநூல்களில் காணப்படுகிறது. சங்க காலத்தில் 'கணக்காயர்' எனும் பெயர், மொழி கற்பிக்கும் ஆசிரியரைக் குறித்தது. கணக்கு - இலக்கிய இலக்கண நூல் எனப் பொருள்பட்டது. நெடுங்கணக்கு என அகரவரிசை குறிக்கப்பட்டதும் காண்க. பத்துப்பாட்டையும் எட்டுத்தொகையையும் காலத்தால் முற்பட்டவை எனும் பொருளில் பதினெண் மேற்கணக்கு எனக்கொண்டு, இவை 'பதினெண் கீழ்க்கணக்கு' எனப்பட்டன. இவ்வாறு தொகுத்துப் பெயரிட்டது, கி.பி. 5ஆம் நூற்றாண்டினதாகிய, வச்சிரநந்தி என்ற சமண முனிவரின், தமிழ்ச் சங்கத்தில் நடந்திருக்கலாம் என்பர்.

இவற்றுட் சில காலத்தால் சிறிது முற்பட்டவையாயும், மற்றும் சில ஐந்தாம் நூற்றாண்டினவாயும் இருக்கக் கூடும். இவற்றுள் திருக்குறள் சேர்க்கப் பட்டது, நீதி நூல் என்பது கருதியேயாம். ஏனையவற்றுள் ஒரு நூல் மட்டும் புறத்திணை பற்றியது. அது களவழி நாற்பதாகும். ஆறு நூல்கள் அகம் பற்றியன. திருக்குறள் உட்பட, எஞ்சிய பதினொன்றும் அறம், நீதி பற்றியன.

கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை என்பன அகம் பற்றியன.

அறம் பற்றியதில் 'முதுமொழிக் காஞ்சி' காலத்தால் சிறிது முற்பட்டதென எண்ணப்படுகிறது. புறத்திணையில், நிலையாமையைச் சுட்டி அறம் போதிக்கும் துறை சார்ந்தது இது.

சங்க இலக்கியப் பயிற்சி குறைந்தும் மறைந்தும் இருந்த காலத்தில், முற்பட்ட காலம் போலத் திணை இலக்கிய வகைகளைப் பாடியுள்ளனர். இவர்களின் நினைவில் சங்கப் பாடல்கள் பல இருந்துள. இதனை ஒப்பீட்டு ஆய்வு மூலம் அறியலாம்.

தமிழ்ப் புலவர்கள், பாடம் சொன்னவர்கள் 'பாட நூல்கள்' போல எழுதி, தமிழிலக்கியத்தைக் கற்பிக்க முயன்றனர் என இந்நூல்களும், பிற்கால இலக்கண நூல்களும் உணர்த்துகின்றன. சங்க இலக்கியத் திறன்களை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்தத் தோன்றிய இவை, தமிழிலக்கியத்தின் இடையறவு படாத வளர்ச்சிக்கும் உதவின எனலாம்.

## களவழி நாற்பது

புறம் பற்றியது, *40* வெண்பாக்களால் ஆனது; சேரமான் கணைக்கா-லிரும்பொறை சோழன் செங்கணானுடன் கழுமலம் என்னுமிடத்தில் பொருது தோற்றகாலை அவனைச் சிறை மீட்கப் பொய்கையார் என்ற புலவர் பாடியது இந்நூல். களவழி ஏர்க்களம் பாடுதல், போர்க்களம் பாடுதல் என இரண்டாகும். அதில் இரண்டாவது வகையைச் சார்ந்தது இது. முழுவதும் யானைப்போர் பற்றியே அழகிய வீரக் கற்பனைகளைத் தரும் இந்நூல், பிற்காலத்தில் பரணி போன்ற இலக்கியங்கள் உருவாகத் துணை நின்றது எனலாம்.

## கார் நாற்பது

கார் காலம் பற்றியே திரும்பத் திரும்பக் கூறப்படும் நாற்பது வெண்பாக்கள் இதில் உள. ஐங்குறுநூற்றில் 'இளவேனிற் பத்து' இத்துடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது. முல்லைத் திணைக்குரிய அகப்பொருள் இதில் சித்திரிக்கப்படுகிறது. போர் கருதிப் பிரிந்த தலைமகன் திரும்பி வருவதை எதிர்நோக்கியிருக்கும் தலைவி, அவனை ஆற்றுவிக்கும் தோழி, கூறியபடி திரும்பிவரும் தலைமகன், அவனுக்குதவும் பாகன் போன்றோர் கூற்றுக்களை இதிற் காணலாம். மதுரைக் கண்ணங்கூத்தனார் பாடியது இது. இவர் தம் நூலின் முதற் பாடலில் திருமாலையும் பத்தொன்பதாம் பாடலில் பலராமனையும் கூறியிருத்தலால் இவர் வைணவராதல் கூடும் என்பர். கருப்பொருள் எனும் வகையில் முல்லைப் பாடல்களில் திருமாலும் பலராமனும் இடம். பெறுதல் இயல்பே. இவர் கார்த்திகை விழா பற்றி இருபத்தாறாம் பாடலில் கூறுகிறார்.

> **நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட**
> **தலைநாள் விளக்கில் தகையுடைய வாகிப்**
> **புலமெலாம் பூத்தன தோன்றி, சிலமொழி**
> **தூதொடு வந்த மழை**

சங்ககாலப் புலவர் போல் சமயப் பொறுமையுடைய இவர் கிபி. நான்காம் நூற்றாண்டினராதல் வேண்டும் என்பர் சதாசிவ பண்டாரத்தார் அவர்கள்.

## ஐந்திணை ஐம்பது

ஒரு திணைக்குப் பத்துப்பாடலாக ஐந்திணைக்கும் ஐம்பது வெண்பாக்கள் இதிலுள. சங்க நூல்களுள் ஆசிரிய வடிவில் விளங்கும் அகப்பாடல்கள் பின்னர் இவ்வாறு வெண்பா யாப்பை ஏற்றன. பத்துப் பத்தாகப் பாடுவது முன்னைய மரபேயாகும். இதன் ஆசிரியர் மாறன் பொறையன் என்பர்.

> **மல்லர்க் கடந்தான் நிறம்போன்று இருண்டெழுந்து**
> **செல்வக் கடம்பமர்ந்தான் வேல்மின்னி-நல்லாய்**

இயங்கெயில் எய்தவன் தார்பூப்ப ஈதோ
மயங்கி வலனேருங் கார்

என்ற முதற் பாடலில் திருமால் நிறம்போலக் கருத்தெழுந்து, முருகன்வேல் போல் மின்னி, சிவன் மாலையாகிய கொன்றைப்பூக்கள் மலர, மேகம் எழுந்தது என்று கற்பனை செய்வதிலிருந்து இவருடைய சமயப் பொதுமையுணர்வு உணரப்படும். இந்நூலும் கி.பி.நான்காம் நூற்றாண்டினது என்பர். காதலுணர்வை நுட்பமாக வெளிப்படுத்தும் கீழ்வரும் பாடல் அறிஞர்களால் அடிக்கடி எடுத்தாளப்படுவதாகும்.

சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென்று எண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக் கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி (38)

## ஐந்திணை எழுபது

திணைக்குப் பதினான்கு வீதம் ஐந்திணைக்குமாக எழுபது வெண்பாக்கள் கொண்ட நூல் இது. இதற்குப் பிள்ளையார் வணக்கம் ஒன்று நூலின் புறத்தே அமையப்பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. மூவாதியார் என்ற இதன் ஆசிரியரைச் சிலர் சமணர் எனக் கருதுவர். இவர் காலம் கி.பி.5ஆம் நூற்றாண்டாதல் கூடும்.

குறையொன் றுடையேன்மன் தோழி நிறையில்லா
மன்னுயிர்க் கேமஞ் செயல்வேண்டும்-இன்னே
அரா வழங்கும் நீள்சோலை நாடனை நம்இல்
இராவாரல் என்ப துரை

என்ற பாடலில் தலைவி தோழியிடம் கெஞ்சிக் கேட்கும் பாவனை நன்கு அமைந்துள்ளமை காணலாம்.

## திணைமொழி ஐம்பது

ஐந்திணை ஐம்பது போலத்திணைக்குப் பத்து வெண்பாக்கள் கொண்டது. சங்கப் பிற்காலத்தே திணைப் பாடல்களைத் தொகுதி தொகுதியாகப் பாடுவதில் ஆர்வம் மிக்கு விளங்கியுள்ளது எனலாம். சங்க நூல்களில் அருகிக் காணப்படும் இம்மரபு பின்பு தலையெடுத்தது. கண்ணன்-சேந்தனார் இதனாசிரியர். அவர் சாத்தந்தையாரின் மகனாவார். கடைச்சங்க காலத்தில் சோழன் போர்வைக் கோப்பெருநற் கிள்ளியைப் பாடிய சாத்தந்தையாரும் இந்நுலாசிரியரின் தந்தையாரும் ஒருவரே எனத் துணியப் போதிய சான்றுகளில்லை. இந்நூல் கி.பி.4ஆம் நூற்றாண்டினதாதல் கூடும் என்று சதாசிவ பண்டாரத்தார் கூறுகிறார். தலைவனை இரவில் வர வேண்டாம் என வற்புறுத்தும் தோழி, அருவி ஓசையை வருணிக்கும் அழகு கருதத்தக்கது.

யாழுங் குழலும் முழவும் இயைந்தென
வீழும் அருவி வியன்மலை நன்னாட!
மாழைமான் நோக்கியும் ஆற்றாள் இரவரின்
ஊரறி கெளவை தரும். *(7)*

## திணைமாலை நூற்றைம்பது

இதில் திணைக்கு முப்பது பாடல்கள் என நூற்றைம்பது வெண்பாக்கள் இருக்க வேண்டும். கலித்தொகை போல *150* பாடல்களைக் கொண்டிருப்பது கருதத்தக்கது. ஆனால் இன்று குறிஞ்சி நெய்தல் முல்லை மூன்றிற்கும் *31* பாடல்கள் வீதம் இருப்பதால் மொத்தம் *153* பாடல்கள் அந்நூலிற் காணப் படுகின்றன. ஏலாதி என்ற அறநூலை எழுதிய கணிமேதாவியாரே இதன் ஆசிரியருமாவார். இவர் சமண சமயத்தவர். கி.பி.*5*ஆம் நூற்றாண்டினர். இவர் காலத்தே ஒரு சிலர் களவியலை வெறுத்தனர் எனவும் அவர்க்கு அதன் அருமையை விளக்கி அவ்வெறுப்பினைப் போக்கவே கணிமேதாவியார் இந்நூலை இயற்றினார் எனவும் இந்நூற்பாயிரம் உணர்த்துகிறது.

முனிந்தார் முனிவுஒழியச் செய்யுட்கண் முத்துக்
கனிந்தார் களவியற் கொள்கைக்கு-அணிந்தார்
இணைமாலை இன்தமிழால் யாத்த
திணைமாலை கைவரத் தேர்ந்து

உடன்போக்கில் சென்ற தலைவியையும் தலைவனையும் தாய் தேடி வருகிறாள். அப்பொழுது வழியிடை எதிர்ப்பட்ட ஓர் இளைஞன், அத்தாயிடம் தான் ஓர் ஆடவனைக் கண்டதாகவும் தன் மனைவி அதுபோல் தான் பெண்ணொருத்தியைக் கண்டதாகக் கூறினாள் என்றும் சொல்வதாக ஒரு பாடல் உள்ளது.

நண்ணிநீர் செய்மின் நமர்அவர் ஆபவேல்
எண்ணிய எண்ணிய எளிதரோ-எண்ணிய
வெஞ்சுடர் அன்னானை யான்கண்டேன்; கண்டாளாம்
தண்சுடர் அன்னாளைத் தான் *(89)*

இப்பாட்டுத் திருக்கோவையாரில், 'அருவரை யாளி அன்னானைக் கண்டேன், அயலே தூண்டா விளக்கனையாய் என்னையோ அன்னை சொல்லியதே" *(244)* என்று வரும் பாடலுடன் ஒப்பிடற்பாலது. இத்தகைய அரியபண்புகளைக் காட்டியே, அகத்திணைக் களவு ஒழுக்கம் அறனுடையார் அனைவராலும் ஏற்கற்பாலது என மேதாவியார் வற்புறுத்தினாராதல் வேண்டும்.

## கைந்நிலை

திணைக்குப் பன்னிரண்டு வெண்பாக்களாக அறுபது பாடல்களை யுடையதிது. இந்நூல் வெண்பாக்கள் பல சிதைந்துள்ளன. இதன் ஆசிரியர்

மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார் புல்லங்காடனார் ஆவார். "இவர் காலம் கி.பி.5ஆம் நூற்றாண்டு; இந்நூலில் பாசம், ஆசை, இரசம், கேசம், இடபம், உத்தரம் ஆகிய வடசொற்கள் வந்துள. தென்பாண்டி நாட்டில் கொற்கைக்கு அண்மையில் இவர் வாழ்ந்தாராதல் வேண்டும்" எனப் பேராசிரியர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் இவரைப் பற்றிக் கூறியுள்ளார்.

பதினெண் கீழ்க்கணக்கில் 'கைந்நிலை'யை ஏலாதவர், 'இன்னிலை' என்ற அறநூலை ஏற்பர். வ.உ.சி. அவர்கள் இன்னிலையை உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். இது பொய்கையார் எழுதியது. இதில் *46* வெண்பாக்கள் உள.

## முதுமொழிக் காஞ்சி

மதுரைக் கூடலூர் கிழார் எழுதிய இந்நூல் பத்து அதிகாரங்களையும் அதிகாரத்திற்குப் பத்துக் குறட்டாழிசைகளாக நூறு செய்யுட்களையும் உடையது. நிலையாமை பற்றிய காஞ்சித் திணையில் 'முதுமொழிக் காஞ்சி' என்பது ஒரு துறையாகும். உலக நிலையாமையை எடுத்துக்காட்டிச் சான்றோர் தம் அறிவுடைமையால் கூறும் அனுபவ உரைகளே முதுமொழிக் காஞ்சியாகும். முதுமொழி -அறிவு முதிர்ந்த சொற்கள். துறைப் பெயரைத் தாங்கிய இது, சங்க காலத்தை ஒட்டியதாகலாம். எட்டுத் தொகையுள் ஒன்றான ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். அவரது பெயரைத் தாங்கிய இவரும் கூடலூரில் வாழ்ந்த வராதல் கூடும். 'ஆர் கலி உலகத்து மக்கட்கெல்லாம், ஓதலில் சிறந்தன்று ஒழுக்கமுடைமை' என்பது ஒழுக்கத்தை வற்புறுத்துகிறது. பிறரது பழக்கங்களைப் பழிக்கக்கூடாது என்பதை, 'அறியாத் தேசத்து ஆசாரம் பழியார்' எனும் தொடரால் அறியலாம். 'அச்சமே கீழ்களது ஆசாரம்' எனும் குறளை ஒப்புநோக்குக.

பதினெண் கீழ்க்கணக்கில் பெரும்பான்மையானவை, 'வெண்பா' யாப்பால் ஆனவை. சங்க காலத்தில் ஆசிரியமே கோலோச்சுகிறது. அடுத்த சில நூற்றாண்டுகளில் முத்தொள்ளாயிரம், காரைக்காலம்மையாரின் அந்தாதி, முதலாழ்வார் மூவரின் அந்தாதிகள் போல்வன பலவும் வெண்பாவால் பாடப்பெற்றிருப்பதால், இவற்றின் கால அணிமை புலனாகும். தமிழிலக்கிய வரலாற்றில் ஒவ்வொரு காலப் பகுதியில், குறிப்பிட்ட யாப்பு வடிவமே மேலோங்கித் திகழ்வது ஒரு மரபாகவே காணப்படுகிறது.

## முத்தொள்ளாயிரம்

மூவேந்தரைப் பற்றித் தொள்ளாயிரம் பாடல்கள் கொண்ட நூல் இது. சிலர் மூன்று தொள்ளாயிரம் எனக் கொண்டு ஈராயிரத் தெழுநூறு வெண்பாக்களை உடையதென்பர். அத்தனையும் முத்து முத்தான வெண்பாக்களாக இதில் அமைந்துள்ளன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. புறத்திரட்டு என்ற நூலிலிருந்து கிடைத்துள்ள *109* பாடல்களே எஞ்சி யுள்ளவையாகும். ரா. இராகவையங்கார் புறத்திரட்டிலிருந்து *105* பாடல்களைத்

தொகுத்து 'முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்' என்ற பெயரால் மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பாக வெளியிட்டார். பேராசிரியர் கருத்துப்படி இந்நூலாசிரியர் 'பிற்சான்றோர்' ஆவார். அதாவது அவர் சங்க காலத்திற்குப் பிற்பட்டவர் ஆவார். அன்னாருடைய பெயர் நமக்கு இன்று கிடைத்திலது. இந்நூலாசிரியர், பழமொழி நானூற்றுத் தொடர்களையாள்வதால், அதன் ஆசிரியராகிய முன்றுறையரையனாருக்குப் பிற்பட்டவர்; நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும் இவர் கருத்தை மறுத்தும் எடுத்தும் மொழிந்திருப்பதால் இவர் அவர்கட்கு முற்பட்டவர். அஃதாவது கி.பி.5ஆம் நூற்றாண்டிற்குப் பிறகும் கி.பி.8ஆம் நூற்றாண்டிற்கு முன்னரும் இவர் இருந்திருக்க வேண்டும். சதாசிவ பண்டாரத்தார், "பிற்காலத்தில் தமிழ் வேந்தர்களின் குதிரைகளுக்கு வழங்கிய கனவட்டம், பாடலம் ஆகிய பெயர்களை இவர்தம் நூலில் கூறியிருத்தலாலும், நாமம், பூமி, பரிசயம், ஒசை, திலகம், வீதி, சாலோகம், சேலேகம், சேனை, உதிரம், விசயன், உபாயம், ஆகம், நேமி, சமம் முதலான வடசொற்களை எடுத்தாண்டிருத்தலாலும் தமிழகத்தில் வடமொழி பரவிப் பெருமையெய்தி யிருந்த கி.பி.6ஆம் நூற்றாண்டில் இவர் இருந்திருத்தல் வேண்டும் என்று கொள்வது எல்லாவற்றானும் பொருந்தும் எனலாம்" என்று குறிப்பிடுகிறார்.

ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன்-நாணிப்
பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேரும் என் நெஞ்சு

கண்டன உண்கண் கலந்தன நல்நெஞ்சம்
தண்டப் படுவ தடமென்தோள்-கண்டாய்
உலாஅ மறுகில் உறையூர் வளவற்கு
எலாஅ முறைகிடந்த வாறு

இவ்வாறு திட்பம் செறிந்த, மெய்ப்பாடுமிக்க பாட்டுக்களை இதிற்கண்டு படித்து மகிழலாம்.

## இயற்கையும் செயற்கையும்

மிக இயல்பாக மக்கட் சமுதாயத்தையும் நில அமைப்பையும் பருவ வேறுபாடுகளையும் நேரில் கண்டு அனுபவித்துப் பாடியவை சங்கத் தொகைப் பாடல்கள். பிற்காலத் திணைப் பாடல்கள் எல்லாம் யாப்பில் வேறுபட்டன. ஆசிரியத்தை விட்டு வெண்பாவைப் பின்பற்றின. இவை மரபு அடிப்படையை உணர்ந்து, இலக்கணத்தைப் பார்த்து அதற்கு எடுத்துக்காட்டாகப் பாடப்பட்டவை. இவை செயற்கைத் தன்மைமிக்கவை. புலவர்களின் நேரிடையான அனுபவத்தை இவற்றில் அருகியே காணலாம். தன்னுணர்ச்சி வெளிப்பாடு இவற்றில் மிகையாக இருக்கும்; செயற்கையாகவுமிருக்கும். சங்க அகப்பாடல் ஒவ்வொன்றும் தனி நாடகம் போன்றது. கோவை நூல்கள் கதை போலச் சங்கிலித் தொடராக அகத்துறைகளைக் கூறுவன. முன்னைய மரபுக்கு இது வேறுபட்டதாகும்.

# 14. வச்சிரநந்தியின் 'திரமிள சங்கம்'

வச்சிர நந்தியின் 'சங்கமே' தமிழ்ச் சங்கமெனவும் முன்பு சங்கங்களே இருந்ததில்லை எனவும் சிலர் எழுதிவைத்துள்ளனர். இதற்காக, முன்னைய கால நிலையையும் வச்சிரநந்தியின் கால நிலையையும் மீண்டும் ஒருமுறை ஒப்பிட்டறிதல் இன்றியமையாததாகிறது. சங்க காலம் தமிழர்களின் தன்னரசுக் காலம். தங்களுக்குள் நாள்தோறும் போர் புரிவதே தொழிலாகக் கொண்டிருந்தாலும் தம்மைத் தாமே ஆண்டுகொண்டிருந்த காலம். சங்க காலத்திற்கும் தொல்காப்பியர்க்கும் முன்பே வைதிக சமயத் தொடர்பும் வேத வேள்விகள் செய்யும் பேரார்வச் சூழல்களும் இங்கே புகுந்து, வளர்ந்து, வேரூன்றிவிட்டன. ஆரியக் கலப்புடைய பார்ப்பனர், இங்குள்ள அறிவுவாணர், கலைவாணர்களுடன் கலந்தும் இங்கிருந்த மகளிரை மணந்தும் தமிழரொடு தமிழராகிப் போயின காலம் அது. அங்ஙனம் மாறினும் தம் தனித்தன்மை, வேதம் ஓதுதல், வேள்வி செய்தலை அவர் கைவிடாதிருந்தனர். அதற்குக் காரணம் தமிழ் மன்னர்களின் வேள்வி வேட்கையால், தங்கட்கு வருமானம் தரும் துறையாக அவ்வேள்விகள் அமைந்தமையேயாம்.

மற்றபடி அது தமிழ் வேந்தர், குறுநில மன்னர் ஆட்சிக் காலம். அகப்புறத்திணை இலக்கியம் வளர்ந்தது. இயற்கையுடன் இயைந்த வாழ்வு நடந்தது. இயல்புணர்ச்சி மேலோங்கியிருந்தது. செவ்வியல் இலக்கியக் காலம் அது. எனினும் தமிழர்களின் பொற்காலத்தின் பிற்காலமாகவும் தமிழ்ப் பண்பாட்டு வீழ்ச்சிக்கு வித்திட்ட காலமாகவும் அக்காலச் சூழல்களைக் கருத இடமுளது. வைதிகமே அன்றி, பௌத்த சமணக் கருத்துக்கள் இங்கு ஊடுருவி வளர்ந்தன. பிறமொழித்தாக்கம், புறப் பண்பாட்டுத்தாக்கம் அடுத்துத் தொடர இக்காலப்பகுதி வழி அமைத்துக் கொடுத்தது. ஏனெனில் அயலவர் வரவும் அயன்மொழித் தொடர்பும் புதுமையுடன் வரவேற்றுப் போற்றப்பட்ட காட்சிகள் இங்கு மிகுதியாய்க் காணப்படுகின்றன. அங்ஙனமாயினும் அப்புறப் பண்பாடுகள் ஆட்சியிலேறி அமராத-தமிழை அடக்காத காலம் அது. வேள்விகள் செய்யினும் அவ்வந்தணர்கள் தமிழ் வேந்தர்களின் ஆதரவை நாடியே வாழ்ந்த காலம் அது. தமிழ்க் குடும்பத்தில் பார்ப்பனன் ஒரு பாங்கனாகப் பாணனைப்போல் துணையாக வாழ்ந்தனன்.

முன்னரே விரிவாக விளக்கியது போலச் சங்க காலத்திலேயே, அனைத்துக் கலப்பும் உண்டாகத் தொடங்கிவிட்டது. இப்பின்னணியிலும், மரபைக் காத்து, கட்டுப்பாட்டுடன் பாடிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு

அவற்றிலுள்ள 'மரபு' அடிப்படை காரணமாக, அவற்றிற்கு முற்பட்ட காலத்தைப் பிரதிபலிக்கிறது. அவற்றுள்ளும் பரிபாடல், கலித்தொகை போலச் சமகாலத்தைப் பிரதிபலிக்கும் தொகைகளும் உள. இப்பின்னணியில், பிறமொழித் தாக்கங்களைப் புறந்தள்ளி, தமிழ்மொழியின் வழிவழி மரபைக் காக்க யாக்கப்பட்டது தொல்காப்பியம். பிற இலக்கியங்களின் வேறுபட்ட தமிழ் இலக்கியத்தின் தனித்தன்மைகளை உலகிற்குணர்த்தி நிலைநாட்டத் திட்டமிட்டுத் தொகுத்தவை சங்க இலக்கியம். புறப்பண்பாட்டுத் தாக்கம்-புறச் சமயச் செல்வாக்குகளை அறவே அகற்றித் தமிழர் பண்பாட்டை நிலைநிறுத்த வந்தது திருக்குறள். தமிழரின் இலக்கியமனைத்தின் விளக்கமாக, வளர்ச்சியாக, நிரல்படத் தொகுத்த கதையடிப்படை நாடகமாக வடிக்கப்பட்டது. சிலப்பதிகாரம். சங்க காலச் சமண சமயச் செல்வாக்கு மரபுப் பாடல்களில் குறிப்பாக உணரப்படுகிறது. சிலம்பு அக்காலநிலையை வெளிப்படையாகக் கூற, காப்பிய வடிவம் துணைசெய்தது. சங்க காலத்தின் சமகாலப் புத்தமதச் செல்வாக்கை முழுமையாக மணிமேகலை வெளிப்படுத்துகிறது.

சங்கம் மருவிய காலம் எனப்படும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுத் தொடக்கம் முதலான காலப் பகுதியில் களப்பிரரும் தொடர்ந்து பல்லவரும் புகுந்து, தம்முள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டிருந்த தமிழக மன்னர்களை அடக்கி, தமது ஆட்சியைப் புகுத்தத் தொடங்கினர். தொடக்கத்தில் பிறர் வரவால் ஒரே குழப்பநிலை. அதனால் அது இருண்ட காலம் ஆனது. புத்த சமண முனிவர்கள், போரே தொழிலாகவும் மதுவும் புலாலும் வாழ்வாகவுமிருந்த தமிழரிடையே அறநெறிகளைப் போதித்து, அமைதி உண்டாக்க முயன்ற காலம் இது. இதனால் தமிழர்கள் அப்பிற சமயத்தவரைப் போற்றி, வரவேற்றுப் பின்பற்றத் தொடங்கினர். முதன்முதலாகப் பிற மொழியினர், பிற சமயத்தினர், பிற பண்பாட்டினர் தமிழரை ஆளத் தலைப்பட்டனர். பல இனக்குழுக்களாகக் கிடந்த தமிழரும் பிறநாட்டவருமாகப் போரிட்டு உழன்ற இக்காலம் இருண்ட காலமாகிப் போனதில் வியப்பில்லை.

சங்க காலத்தில் அயலவர் இங்கு விருந்தினராய், தூதுவராய் குடிமக்களாய், தமிழருக்குப்பணிவு காட்டுபவராய் இருந்தனர். ஆனால் அயலவர் தமிழகத்தை வடதிசையிலிருந்து மெல்ல மெல்ல, போரில் வெல்லவும் ஆட்சியில் ஏறி அமரவும் தொடங்கியதால் நிலைமை இன்றையக் கட்சி ஆட்சி மாற்றம்போல் மாறியது.

தமிழர்கள் வடமொழி கற்பதற்கெனக் கிரந்த எழுத்துக்கள் தோற்று விக்கப்பட்டன. ஐந்து கிரந்த எழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கில் புகுத்தப்பட்டன.

வடமொழி கற்பதற்கு உதவியும் ஊக்கமும் நல்கப்பட்டன. வடமொழி கற்றோர்க்குத் தலைமையும் மேன்மையும் தரத் தொடங்கினர். தமிழர்

கலைகளும் அறிவியல் துறைகளும் வடமொழிப் பெயர்ப்படுத்தப்படவும் வடமொழி மூலப்படுத்தப்படவும் வடமொழி வண்ணம் அல்லது சாயல்படுத்தப் படவும் தொடங்கின.

தமிழகப் பழங்குடிகளாகிய பாணன், பொருநன், துடியன், பறையன் அனைய யாவரும் பிற்படுத்தப்பட்டவராகி, அவர்களது கலைகளைக் கற்றுக்கொண்ட பார்ப்பனர் முற்படுத்தப்பட்டு, மன்னர்களால் மதிக்கப்பட்டு எல்லாம் திசை திரும்பின. ஆசான், கணி, குருக்கள், பட்டர், பூசாரியர் என்ற தமிழக அறிவுடைச் சான்றோர் பலரும் தங்களை 'அந்தணர்' போல ஆக்கிக்கொள்ள வடமொழி கற்று, வருமானம் தேடி வாழவேண்டிய சூழலும் தொடங்கியது. 'பார்ப்பனியம்' பார்ப்பனரோடு நில்லாமல் தச்சர், குயவர், சிற்பியர் முதலாய இங்கிருந்த கைவினைக் கலைஞர்களும் பூணூல் அணிந்து கொண்டு, சமற்கிருதம் பயின்று அம்மொழியில், தமது கலைகளைப் பற்றி எழுதி, சொல்லி மேன்மை தேடவேண்டிய கட்டாயம் எற்பட்டு, எங்கும் பிறமொழி மேன்மை தேடும் படலமாயிற்று.

இதுகாறும் தமிழரொடு தமிழராய் இருந்த அயலவர்கள், வடவர் ஆட்சி இங்கு புகவே, வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொள்வதுபோல், மீண்டும் அயலவராகித் தம்மைத் தமிழுக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் இயன்றவரை அயன்மைப்படுத்திக் கொண்டு, வேற்றுமை பாராட்ட முற்பட்டனர்.

இக்காலத்தே பௌத்த, சமண சமயத்தினர், தமிழ்ப் பொதுமக்களைத் தங்கள் சமயத்திற்கு ஈர்ப்பதற்காகத் தமிழ் கற்றும் தமிழ் இலக்கிய இலக்கணம் படைத்தும் ஈடுபடலாயினர். இச்சூழலில் கி.பி.470இல் பூஜ்ய பாதரின் மாணவராகிய வச்சிரநந்தி என்ற சமண முனிவர் மதுரையில் 'திரமிள சங்கம்' ஒன்றை நிறுவினார். அவர் நினைவு, முற்பட்ட காலத்தில் பாண்டியர் நிறுவிய தமிழவையங்கள் போலத் தாமும் ஒன்றை நிறுவித்தமிழ் வளர்ப்பதாகும். இச் சங்கத்தில் சமணத் தமிழிலக்கியங்கள் சிலவும் சமண சமயம் சார்ந்த நீதி நூல்களும் பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள சில நூல்களும் அரங்கேற்றப்பட்டன.

கா.பொ. இரத்தினம் இவ்விருண்ட காலப் பகுதியை விளக்கும் பொழுது, "வடநாட்டிலிருந்து தங்கள் மதங்களைப் பரப்புவதற்குச் சமணர்களும் பௌத்தர்களும் பிராமணர்களும் தமிழ்நாட்டுக்கு வந்தார்கள். காஞ்சிபுரம் பல்லவர்களுடைய தலைநகரமாகவும் வடமொழிக் கல்வியின் தலைநிலைய மாகவும் விளங்கிற்று. ஆரியருடைய மதக்கொள்கைகள் தமிழ்நாட்டில் இக்காஞ்சிபுரம் வாயிலாகவே பெரும்பாலும் பரவின" எனவும் "இதனால் இக்காலத்திலே தமிழகத்தின் பெரும்பகுதி களப்பிரர், பல்லவர் எனும் அரசர்களுடைய ஆட்சிக்குட்பட்டு அவலப்பட்டது. கொங்கு நாட்டில் இராட்டிர கூடர் ஆட்சி ஒழியக் கங்கர் ஆட்சி தொடங்கிற்று. சமண சமயம் தமிழ்நாட்டில் நிலைபெற்று ஓங்கிற்று. வடமொழிச் சொற்கள் அளவின்றித் தமிழிலே புகுந்தன. வடமொழி நூல்கள் தமிழ்நாட்டிலே மிகுதியாகப் பரவின. சாதி

வேற்றுமை பாராட்டல் தமிழ்நாட்டிலே தலைகாட்டத் தொடங்கிற்று. சைவ சமயமும் வைணவ சமயமும் பார்ப்பனீயத் தொடர்பு பெற்றன" எனவும் குறிப்பிடுகின்றார்.[23]

மா. இராசமாணிக்கனார், "பல்லவர் முதலில் (கி.பி.3, 4-ஆம் நூற்றாண்டுகளில்) பாலி மொழியில் பட்டயங்களை வெளியிட்டனர்; பின்பு வடமொழியில் வெளியிட்டனர்; வடமொழியில் வல்லவர்க்கு நிலங்களும் ஊர்களும் மானியமாக வழங்கினர்; வடமொழிப் புலவர்களை ஆதரித்தனர்; பாகூர், திருப்பாதிரிப் புலியூர், கடிகாசலம் (சோழ சிங்கபுரம்), காஞ்சி, காவேரிப் பாக்கம் முதலிய ஊர்களில் வடமொழிக் கல்லூரிகள் இருந்தன. இவ்வாறு தமிழ்மொழிக் கல்லூரிகள் இருந்தன என்பதற்குச் சான்று இல்லை. தமிழ் நாட்டு மொழியானதால் அரசாங்க உதவி இல்லாமலேயே வளர்ந்தது போலும்" என மனம் நொந்து, மிகப் பண்போடு தம் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.[24]

சங்க காலத்தில் பாணரும் பாடினியரும் புலவரும் பொன்னும் பொருளும் கொடுத்துப் போற்றப்பட்டனர். யானைப் பரிசில் அளித்துச் சிறப்பிக்கப் பெற்றனர். 'பாண் கடன்' என்று பாணன் பொற்பூ அணியவும் பாடினி பொன்னரி மாலை அணியவும் அவர்களுக்கு நிலமும் செல்வ வளமும் அளித்த காலம் போய், அவர்கள் மீன்பிடிப்போராகவும் பிச்சை எடுப்போராகவும் இழிகுலத்தவராகவும் ஆகும் நிலை மெல்ல மெல்ல உருவானது. மலையமான் திருமுடிக்காரி மிகப் பெரிய போர் மறவன், அவனைக் கபிலர் பாடும் பொழுது, 'காரி! நின் நாடு, அழல்புறந்தரூஉம் அந்தணரதுவே' என்று (புறம் 122) குறிப்பிடக் காண்பதிலிருந்து, பண்டையப் பாணர், புலவரை விடுத்து, அந்தணர்கள் அந்த இடத்தில் வைத்துப் போற்றப் பெற்றமை அன்றே தொடங்கிவிட்டது என்பதை அறிகிறோம். மூவேந்தரும் ஒற்றுமையால், ஓரிடத்தில் இருக்கக் கண்ட ஔவையார் 'ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப் பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து' தானங் கொடுப்பதைச் சிறப்பித்துப் பாடுகிறார். மூவேந்தரையும் 'ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர் முத்தீப் புரையக் காண்தக இருந்த கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்! (367) என்று பாடுகிறார். சங்க காலத்திலேயே இவ்வாறு தடம் மாறிச் சென்றதற்கு நூற்றுக்கணக்கான சான்றுகள் உள. பிற்காலத்தில் இது பெருவீழ்ச்சியானதற்கு, வேற்றவர் ஆட்சி இங்குக் காலூன்றியதே காரணமாகும். இதுபற்றி தி.வை. சதாசிவ பண்டாரத்தார் விளக்கும் சில கருத்துக்கள் மனங்கொளத்தக்கன: "இரண்டாம் சிம்ம வர்மன் என்னும் பல்லவ மன்னன் காஞ்சியிலிருந்து அரசாண்டு கொண்டிருந்த காலத்தில் அவனது ஆட்சியின் இருபத்திரண்டாம் ஆண்டாகிய கிபி.458இல் திருப்பாதிரிப்புலியூர் என்று இக்காலத்தில் வழங்கிவரும் பாடலிபுத்திரத்தில் இருந்த ஓர் அமண் பள்ளியில் 'லோக விபாகம்' என்ற திகம்பர சைன நூல் படி எடுக்கப்பெற்றது என்னும் செய்தி அந்நூலில் காணப்படுகிறது. எனவே அந்நூலின் ஆசிரியர்

அவ்வாண்டிற்கு முன்னரே தம் நூலை எழுதி முடித்திருத்தல் வேண்டும் என்பது திண்ணம்.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் பிராகிருதத்திலும் வடமொழியிலும் பெரும்புலமை எய்தியிருந்த சிம்மசூரி ரிஷி, சர்வநந்தி என்ற இரண்டு அறிஞர்கள் அவ்வமண் பள்ளியில் தங்கி அவ்விருமொழிகளையும் பலர்க்கும் கற்பித்து வளர்த்து வந்தமை அறியத் தக்கது. கி.பி.6ஆம் நூற்றாண்டில் காஞ்சியிலிருந்து ஆட்சி புரிந்து கொண்டிருந்த சிம்ம விஷ்ணு என்ற பல்லவ அரசனுடைய அவைக்களப் புலவராக விளங்கியவர் பாரவி என்னும் வடமொழிப் புலவர் ஆவர். அம்மன்னனால் நன்கு ஆதரிக்கப்பெற்று நல்வாழ்வு பெற்றிருந்த இப்புலவர் தலைவர் வடமொழியில் கிராதார்ச்சுனீயம் முதலான நூல்கள் இயற்றித் தம்புகழையாண்டும் பரப்பியிருத்தல் உணரற்பாலதாம். இச்செய்திகளெல்லாம் கிபி. மூன்றாம் நூற்றாண்டின் இடையில் தமிழகத்தின் வடபகுதியைக் கைப்பற்றிக் காஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்த பல்லவ அரசர்கள் கி.பி. 7ஆம் நூற்றாண்டு வரையில் வடமொழிப் பயிற்சி எங்கும் பரவும்படி செய்து வந்தமையோடு, அம்மொழியில் வல்லுநரைப் போற்றிப் புரந்தும் வந்தனர் என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துதல் காண்க. எனவே அவ்வேந்தர்கள் பொது மக்களின் தாய்மொழியாகிய தமிழ் மொழியின் வளர்ச்சியில் சிறிதும் ஈடுபடவில்லை என்றும், தமிழ்ப் புலவர்களை ஆதரித்துச் சிறந்த தமிழ் நூல்கள் தோன்றும்படி செய்யவில்லை என்றும் ஐயமின்றிக் கூறலாம்.[25]

பண்டாரத்தார் குறிப்பிடும் இக்காலத்தில்தான் சமற்கிருதமயமாக்குதலும் உச்சநிலையை அடைந்தது. இது அன்றும் மானஉணர்வுள்ள தமிழ்ப் புலவர்களிடமும் பொதுமக்களிடமும் ஒருவித வெறுப்பைத் தோற்றுவித்தது. பௌத்தமும் சமணமும் முதலில் வரவேற்கப்பட்டனவாயினும் இப்பிற மொழி ஆதிக்கத்தால், சிறிது சிறிதாக வெறுக்கப்படலாயின. இதனால் வைதிக சமயமும் பார்ப்பனரும் தமிழரின் நிலத்தெய்வ வழிபாடு, சிற்சில முக்கிய சடங்குகள், குருதிக் கலப்பு முதலியவற்றால், தமிழ்மொழிச் சார்பாளர்களாக வெளிவந்து, தமிழ் மக்களிடம் நற்பெயர் பெற முயன்றனர்.

வடவரின் வேதாந்தமும் தமிழரின் சித்தாந்தமும் கொள்கையில்லாக் கூட்டணி அமைத்துக் கொண்டு, பௌத்த சமண சமயத்துடன் போராடி, அச்சமயங்களை விரட்டியடித்தனர்.

பக்தி இயக்கம் ஒன்று பெரும்புரட்சி இயக்கமாக வெடித்தது. திருநாவுக்கரசர் முதலில் சமணத்தைத் தழுவினும் பிறகு சிவநெறி.க்கு மாறி, மகேந்திரப் போத்தரையன் என்ற மாமன்னனையே எதிர்த்து நின்றார். அவரும் திருஞான சம்பந்தரும் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினர்'. இதனால் தமிழகத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டு இடைக்காலச் சோழப்பேரரசு உருவாயிற்று. பழந்தமிழ் நூல்கள் மீண்டும் படிக்கப்பெற்றன. அவற்றுக்கு உரைகள்

எழுந்தன. இவ்வாறு மூல நூல்கள் அழியாமல், புலவர்களால் படி எடுக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டன.

புதிய காப்பியங்கள் தோன்றின. கம்பர் தமிழ் மரபு வழுவாமல் இராமாயணத்தைத் தமிழில் எழுதி, வடமொழியின் செல்வாக்கைக் குறைத்தார். இதனால் வடநாட்டுப் பண்பாடு இங்கு புகுந்துவிடாமல், தமிழ்ப் பண்பாடும், மரபும் காக்கப்பட்டன. தமிழ் பயிலும் முயற்சிகள் பல்கின. இலக்கண நூல்கள் பல, பாடநூல்களாகச் சிறுசிறு வடிவத்தில் யாக்கப்பட்டன. சிற்றிலக்கியங்கள் தோன்றத் தொடங்கின.

தமிழுக்கு மீண்டுமொரு பொற்காலம் தொடங்கியதால் மொழியும் இலக்கியமும் இடையறவு படாமல் காக்கப்பட்டன. பெரிய புராணம் சேக்கிழாரால் பாடப்பெற்று, மொழி, இலக்கிய விடுதலை வரலாறு அக்காப்பியத்தில் பதிவு செய்யப்பட்டது. அக்காப்பியம் தமிழர் தேசியக் காப்பியம் எனப் புகழப்படுகிறது.

"அலகில் கலைத்துறை தழைப்ப, அருந்தவத்தோர் நெறி வாழ, உலகில் வரும் இருள் நீக்கி ஒளிவிளங்கு கதிர் போல்" திருநாவுக்கரசர் எழு ஞாயிறாகத் தோன்றிய பெருமையைச் சேக்கிழார் கூறுவதில், பொருள் ஆழம் உளது. திருஞான சம்பந்தர் தோற்றத்தையும் இவ்வாறு சிறப்பித்துப் பாட எண்ணிய சேக்கிழார், 'வண்டமிழ் செய்தவம் நிரம்ப' எனவும் 'திசை யனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேற" எனவும் "அசைவில் செழுந் தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல'' எனவும் குறிப்பிடுகிறார்.

இங்ஙனம் சிவனியச் செல்வர்களும் மாலியப் பேரருளாளர்களும் கி.பி.5ஆம் நூற்றாண்டு தொடங்கித் தமிழையும் தமிழிசையையும் தமிழிலக்கியத்தையும் தமிழர் பண்பாட்டு நாகரிகத்தையும் காத்தளித்தனர். ஆளவந்தவர்கள் தடுமாறினும் புலவர்களே, மக்கள் துணையுடன், அடுத்த பரம்பரைக்கு இவை சென்றடைய வழிவகுத்தனர்; 'என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டனர்.

## அடிக்குறிப்புகள்

1. Hephzibha Jesudasan, Count Down from Solomon, Vol I, Chennai 1999, Introduction, p.viii.
2. P.T. Srinivasa Iyyangar, 'History of the Tamils from the earliest times to 600 A.D., Madras, Reprint 1995, pp.70-71.
3. வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பரிதிமாற் கலைஞர், தமிழ் மொழியின் வரலாறு, சென்னை, *1968*, ப.*33*.
4. Prof. Thaninayakam, Landscape and Poetry, Chennai.

5. P.T.S. Ibid., p.iv.
6. மு. வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, புதுதில்லி, *1980*, பக்.*10,11*.
7. P.T.S. Ibid., pp.62,63.
8. வே. அண்ணாமலை, சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம், சென்னை, *2000*.
9. S. Ratnaswami, A Short History of the Ancient Tamils and their literature, A. Nagar, 1978, pp.7-8.
10. மு.வ., மேலது, ப.*2*.
11. P.T.S., Ibid., pp.2-3.
12. Mrs. Jesudasan, Ibid., pp.6-7 and 2-3.
13. P.T.S., Ibid.
14. இராபர்ட் கால்டுவெல், கால்டுவெல் ஒப்பிலக்கணம் (தமிழாக்கம், கழகப் பதிப்பு, சென்னை, *1941*, ப.*4*)
15. மேலது, பக்.*66-67*.
16. க. வெள்ளைவாரணர், தொல்காப்பியம், அ. பல்கலைக்கழகம், *1970*.
17 C.M. Bowra, Ancient Greek Literature, NewYork, 1967, p.ix.
18. Ibid., p.x.
19. மு.வ. மேலது, ப.*59*.
20. மா. இராசமாணிக்கனார், தமிழ் மொழி இலக்கிய வரலாறு, சென்னை, *1963*, பக்.*122-123*.
21. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு (கிபி.*250-600*), அ.நகர், *1955*, ப.*58*.
22. மேலது, ப.*87*.
23. கா.பொ. இரத்தினம், நூற்றாண்டுகளில் தமிழ், சென்னை, பக்.*66,68*.
24. மா. இராசமாணிக்கனார், தமிழக வரலாறு, சென்னை, *1959*, பக்.*87-88*.
25. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், மேலது, பக்.*18-20*.

# பார்வை நூல்கள்

## இலக்கிய வரலாறு

அப்பாத்துரை கா., தென்னாட்டுப் போர்க்களங்கள், *1957*.

இராகவையங்கார் ரா., தமிழ் வரலாறு, *1941*.

கந்தையா பிள்ளை ந. சி., தமிழர் சரித்திரம், *1939*.

சூரிய நாராயண சாத்திரியார், தமிழ் மொழியின் வரலாறு.

சூரியநாராயணன் பா., தமிழ்நாட்டு வரலாற்றில் இலக்கிய ஆதாரங்கள், *1998*.

தேவநேயப் பாவாணர், ஞா., தமிழிலக்கிய வரலாறு, *1979*.

பிள்ளை, கே.கே., தென்னிந்திய வரலாறு, *1958*.

மயிலை சீனி. வேங்கடசாமி, பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும்.

George L. Hart III, Poets of the Tamil Anthologies.

George L. Hart III, The Poems of Ancient Tamil, 1975.

Hephzibah Jesudasan, Count-Down from Solomon, Vol. I, 1999.

Kamil Veith Zvelebil, A History of Indian Literature, Vol. X, Tamil Literature, 1974.

Kamil V. Zvelebil, Literary Conventions in Akam Poetry, 1986.

Kanakasabhai, V., The Tamils eighteen hundred years ago, 1904.

Krishnaswami Iyyangar, S., Beginnings of South Indian History.

Manickam V. Sp., Tamil Concept of Love in Akattinai, 1962.

Manickam V.T., Marutam, 1982.

Meenakshisundaram T.P., Mullaipattu, 1956.

Meenakshisundaran, T.P., Tamil - A Bird's Eye view, 1976.

Nagu, R.K., Palaittinai in Sangam Literature, 1983.

Natana Kasinathan, Date of Sangam Literature, 1995.

Puranalingam Pillai M.S., Tamil India, 1926.

Puranalingam Pillai M.S., Tamil Literature, 1929.

Ramachandra Dikshidar V., Studies in Tamil Literature and History, 1930.

Ramanujan A.K., Poems of Love and War.

Shanmugam Pillai M., and David E. Ludden, Kuruntokai, 1976.

Sesha Iyengar, T.R., Dravidian India, 1933.

Srinivasa Iyengar P.T., History of the Tamils from the earliest Times to 600 A.D., 1929.

Sundaram M., Sangakalattamilarin Kadarcelavu, 1965.

Takanobu Takahashi, Poetry and Poetics, 1989.

Thaninayagam, Xavier, S., Landscape and Poetry, 1965.

Thamizhannal, Periakaruppan R.M., Tradition and Talent in Cankam Poetry, 1976.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| இலக்கிய இதழ்கள் | 110.00 |
| தொல்லியல் நோக்கில் சங்ககாலம் | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி.501 - கி.பி.900) | 70.00 |
| பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் | 35.00 |
| திருமணம் செல்வக்கேசவராய முதலியார் | 30.00 |
| அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார் | 55.00 |
| சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார் | 40.00 |
| மூதறிஞர் மு. இராகவையங்கார் | 40.00 |
| ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை | 50.00 |
| தட்சிணாமூர்த்தி குருமுகம் - 100 | 50.00 |
| நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1 | 80.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2 | 85.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3 | 95.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 180.00 |
| நாவல்கலையியல் | 50.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| நாடகவியல் | 70.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| வ. உ. சி. வளர்த்த தமிழ் | 20.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| கருவூரார் பல திரட்டு | 70.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |

---

Pub.No. 489 **உலகத் தமிழிலக்கிய வரலாறு** **45.00**
(தொன்மை முதல் கி.பி.500 வரை)